# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30/= பக்கங்கள்: 56 | சுடர் 31 | கதிர் 290 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 26, ஞாயிற்றுக்கிழமை 11.09.2016



மகாராஜா பொதிகள் சேவை

இந்தாலியில் உள்ள உங்கள் உறவுகளுக்கு பொதிகளை விரைவாக அனுப்ப நாடவேண்டிய ஒரே இடம்

800/=

GTV Enterprises (Pvt)Ltd.

இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024

www.parcel.lk


## தனியார் காணியில் கிளைமோர் மீட்பு



யாழ்ப்பாணம், செப். 11
வல்வெட்டித்துறை வேவில் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 2 கிளைமோர், 212 டெற்றனேற்றர்கள் என்பனவற்றை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அங்குள்ள சிவசம்பு சிவனேஸ்வரன் என்பவரின் காணியிலுள்ள கிணறு நேற்றுமுன்தினம்

>> 53ஆம் பக்கம்

# தீர்வுக்கான பயணம் ஆரம்பம்

### பிரிந்துபோவதை விட இணைந்து செல்வதே நல்லது ஐ.தே.க. மாநாட்டில் நேற்று பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, செப்ரெம்பர் 11
அரசியல் தீர்வை எட்டும் பயணத்தை தற்போது நாம் ஆரம்பித்துள்ளோம். இதற்கு இணையாக அரசமைப்பு தயாரிப்புப் பணி இடம்பெறுகின்றது. இன்னும் பேச்சு மட்டத்திலான நடவடிக்கையே இடம்பெறுகின்றது. அரசமைப்புப் பற்றி இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை. வரைவு நகலை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதன் அனுமதி கிடைத்த பின்னரே இறுதிப் பணி இடம்பெறும்.
இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

>> 04ஆம் பக்கம்

## கொழும்பில் இருந்த தலைமைகளே கொடிய போர் வலுக்கக் காரணம்

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 11
கொழும்பில் இருந்த அரசியல் தலைமைகளினதும் அதே தலைமைகளின் வடக்கிலிருந்த முகவர்களினதும் அடக்கு முறைகளுக்கு எதிராகவே இங்குள்ள இளைஞர், யுவதிகள் வெகுண்டெழுந்தனர். அதன் விளைவாகவே கொடிய நீண்ட காலப் போர் வலுப்பெற்றது. ஆயிரக்கணக்கான உயிர்களைக் காவு கொண்டது.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

>> 53ஆம் பக்கம்

## கோத்தா கடற்படை முகாமின் கொண்டாட்டம் வட்டுவாகலில்

### பெரும் எடுப்பில் நடத்த ஏற்பாடுகள்

முல்லைத்தீவு, செப். 11
முல்லைத்தீவு, வட்டுவாகலில் அமைந்துள்ள கோத்தபாய கடற்படை முகாமின் 7ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது.
வட்டுவாகல் கிராமத்தில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான 469 ஏக்கர் காணி உள்ளடங்கலாக மொத்தம் 617 ஏக்கர்

>> 53ஆம் பக்கம்

## பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் விளக்கம் கோரும் மனித உரிமைக் குழு

யாழ்ப்பாணம், செப். 11
உடுவில் மகளிர் கல்லூரியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட போராட்டத்தின்போது, சுன்னாகம்

>> 53ஆம் பக்கம்

## சிறுபான்மை கட்சிகள் போர்க்கொடி

### புதிய தேர்தல் முறைமையின் கீழான ஆசன ஒதுக்கீட்டில் முரண்பாட்டால்

கொழும்பு, செப். 11
புதிய தேர்தல் முறைமையின் கீழ் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில்

>> 53ஆம் பக்கம்

## வடக்கு விவசாய அமைச்சில் நிரப்பப்படாத 476 வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், செப். 11
வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கு உட்பட்ட திணைக்களங்களில் 476 வெற்றிடங்கள் இன்னமும் நிரப்பப்படாமல் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
வடக்கு மாகாண விவசாய அமைச்சு, வடக்கு மாகாண விவசாயத் திணைக்களம், வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்கு மாகாணக் கூட்டுறவுத் திணைக்களம்; வடக்கு மாகாணக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு, வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் ஆகியவற்றிலேயே இந்த வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

>> 53ஆம் பக்கம்

## புனே வானூர்தி தளத்தில் கைதானவர் இலங்கைக்கு

யாழ்ப்பாணம், செப். 11
போலி இந்தியக் கடவுச்சீட்டு மூலம் ஜேர்மனிக்குச் செல்ல முயன்றபோது, புனே வானூர்தித் தளத்தில் கைது செய்யப்பட்ட சுதன் சுப்பையா இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். முதலாம்

>> 53ஆம் பக்கம்

## ஐ.நாவுடன் இணைந்து செயற்பட அரசு யோசனை

### காணாமற்போனோர் தொடர்பில்

கொழும்பு, செப். 11
காணாமற்போனோர் தொடர்பான ஐ.நா. செயலணியுடன் இணைந்து செயற்படுவது குறித்து ஆராய்ந்து வருவதாக இலங்கை அரசு, ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு அறிவித்துள்ளது.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 33ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நாளைமறுதினம்

>> 04ஆம் பக்கம்

## கண்டறிவுகளை ஜெனிவாவில் எடுத்துரைப்பார் அல்–ஹுசேன்

### இலங்கை மனித உரிமை நிலைமைகள் தொடர்பில்

கொழும்பு, செப். 11
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 33 ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நாளைமறுதினம் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் 30ஆம் திகதிவரை இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை தொடர்பான விவகாரங்கள் எதுவும்

>> 53ஆம் பக்கம்

## மெதடிஸ்த பெண்கள் தேசியத்தில் சம்பியன்

கரணவாய், செப். 11
பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டக் கபடித் தொடரில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சம்பியனானது. மாத்தறை நகரசபை மைதானத்தில் நேற்று இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. மட்டக்களப்பு பளுத்துகம மகா வித்தியாலயத்தை வீழ்த்தியே மெதடிஸ்த பெண்கள் சம்பியனானது.

(விரிவு: பக். 54)

## வடக்கு அரசுக்கு 2017 இல் ரூ.10,200 மில்லியன் தேவை

### நடப்பு ஆண்டுக்கு ஒதுக்கிய நிதியில் 22 சதவீதமே செலவு

யாழ்ப்பாணம், செப். 11
2017 ஆம் ஆண்டுக்கு, வடக்கு அரசுக்கு அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மேற்கொள்ள 10 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா நிதி தேவை என்று கொழும்பு அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கொழும்பு அரசினால் நடப்பு ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட 4 ஆயிரத்து 695 மில்லியன் ரூபா மூலதன நிதியில் ஜூலை

>> 53ஆம் பக்கம்


சணச அபிவிருத்தி வங்கியின் 19வது ஆண்டு விழாவை முன்னிட்டு

ஆறு மாத நிலையான வைப்புக்களுக்கு விஷேட வட்டி

12%

(வ.தே.வ. 12.36%)

ஏனைய வைப்பக்களுக்கும் கவர்ச்சிகரமான வட்டி

011 5 411 411

சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ

# அடாத்தாகப் பிடித்த கால்நடைகளை வழங்காத கடற்படை

## வட்டுவாகல் முகாம் அதிகாரிகள் மீது பாதிக்கப்பட்ட மக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 11

வட்டுவாகல் கடற்படை முகாமில் உள்ள மக்களுக்குச் சொந்தமான கால்நடைகளை ஒரு வாரத்தில் வழங்குகின்றோம் என்று முகாம் அதிகாரிகள் மாவட்டச் செயலாளர் முன்னிலையில் தெரிவித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டினர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

வட்டுவாகல் கடற்படை முகாமுக்காக மக்களின் 617 ஏக்கர் நிலத்தை அபகரித்து முகாம் அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் காணியை அபகரிக்கும் நோக்கில் கடந்த 2ஆம் திகதி அளவீடு செய்ய முயன்றபோது அது தொடர்பில் முதலாம் திகதி மாலையில் மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் ஓர் அவசர கலந்துரையாடல் நடைபெற்றது.

கலந்துரையாடலில் காணி உரிமையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், கடற்படையினர், பொலிஸார் ஆகியோருடன் பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதி ஒருவரும் பங்கு கொண்டார்.

எமது வாழ்வாதாரத்துக்காக எம்மால் வளர்க்கப்பட்ட கால்நடைகள் நாம் இடம்பெயர்ந்து சென்ற சமயம் இங்கிருந்தன. நாம் மீளக் குடியமர வரும்போது எமக்கு முன்னர் அங்கிருந்த கடற்படையினர் எமது கால் நடைகளை அடாத்தாகப் பிடித்து தமது முகாம்களுக்குள் முட்கம்பி வேலிகளை அமைத்துத் தடுத்துள்ளனர். படையினர் முதலில் எமது கால்நடைகளை வழங்க வேண்டும் என்று அதில் கோரினோம்.

அங்கிருந்த கடற்படை அதிகாரி முகாமில் நூற்றுக் கணக்கான கால் நடைகள் இல்லை. இருப்பினும் அங்கு உள்ள கால் நடைகளை ஒரு வாரத்தில் ஒப் படைக்கின்றோம் என்றார். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் இதற்குச் சாட்சியாகவுள்ள னர். கூட்டம் இடம்பெற்று இன்றுடன் 10 தினங்கள் கடந்துவிட்டன. கடற்படையினர் அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. நாம் எவ்வாறு கடற்படையினர் மீது நம்பிக்கை கொள்வது? - என்றனர். (ற-101)

# சுயதொழில் முனைவோருக்கு பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், செப்.11

இளைஞர் தொழில் முனைவு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் முகாமையாளர் சங்க அனுசரணையில் வழங்கப்படவுள்ள இலவச சுயதொழில் முயல்வோருக்கான பயிற்சிப்பட்டறை ஆரம்ப நிகழ்வும், முதலாம் நாள் பயிற்சிப்பட்டறையும் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வில் தலைமை விருந்தினராக யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்வார். பயிற்சிப் பட்டறையைத் தொடர்ந்து இதன் இரண்டாவது பயிர்ச்சிப்பட்டறை ஒக்ரோபர் மாதமும், மூன்றாவது பயிற்சிப் பட்டறை நவம்பர் மாதமும் இடம்பெறும் என யாழ்ப்பாணம் முகாமையாளர் சங்க ஒருங்கிணைப்பாளர் வி.நிரஞ்சன் அறிவித்தார். (ற-4)



# மரக்காலையில் திருடியவர் பணத்துடன் பிடிபட்டார்

மன்னார், செப். 11

மன்னார் அரச பஸ் நிலையத்துக்குப் பின்புறமாகவுள்ள மரக்காலையில் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து ஒரு தொகைப் பணம் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த புதன்கிழமை இந்தத் திருட்டு இடம்பெற்றது. 5 லட்சம் ரூபா திருடப்பட்டதாக முறையிடப்பட்டது.

சந்தேகநபர் வவுனியா வைரவப் புளியங்குளம் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 4 இலட்சத்து 32 ஆயிரம் ரூபா பணம் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவர் மன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் கூறப்பட்டது. (த-4-56)

# கொலைக் குற்றம் சாட்டப்பட்ட பொலிஸ் அதிகாரி இடமாற்றம்

யாழ்ப்பாணம், செப். 11

யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற சித்திரவதைக் கொலை ஒன்றுடன் தொடர்புடையதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சுன்னாகம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டாரவுக்கு குடாநாட்டுக்கு வெளியே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. பொலிஸாரால் கைது செய்யப்பட்ட ஒருவர் சித்திரவதையின் பின்னர் கொலை செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்படும் வழக்கில் நேரடியாகத் தொடர்புடையவர் எனக் குற்றம்சாட்டப்பட்ட சுன்னாகம் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டார தற்போது கொடிகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக உள்ளார். அவருக்கே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பொலிஸ் அதிகாரி மீது மல்லாகம் நீதிமன்றம் மற்றும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் ஆகியவற்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவர் புத்தளம் மாவட்டத்துக்கு இடமாற்றம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அவர் உள்ளிட்ட 8 பேர் மீதான வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது. ஆயினும் சந்தேக நபர்கள் முன்னிலையாகியிருக்கவில்லை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேலதிக அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4-101)

# விபத்தில் படுகாயமுற்ற வயோதிபப் பெண் சாவு

விபத்தில் படுகாயமடைந்த வயோதிப்பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனளிக்காது நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

காரைநகர் மணியம் வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் பிரப்பம்குளம் லேன், ஓட்டுமடத்தைச் சேர்ந்த தங்கராஜா நாகேஸ்வரி (வயது -63) என்பவரே உயிரிழந்தார்.

கடந்த 20ஆம் திகதி தனது மகனுடன் மோட்டார் சைக்கிளில் காரைநகர் சென்றுகொண்டிருந்த போது பின்னால் வந்த முச்சக்கர வண்டி மோதியதில் இவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. வலந்தலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் அவர் உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார், பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். பின்னர் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (த-4-ரி)

## சின்மயானந்தரின் வரலாற்றுத் திரைப்படம் இன்று

பூஜ்ய குருதேவர் சுவாமி சின்மயானந்தரின் பிறந்த நூற்றாண்டை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட நீண்ட தேடலில் எனும், சுவாமி சின்மயானந்தரின் வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படம் தமிழில் இன்று ஞாயிற்றுக்கிழமை கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள ராஜா திரையரங்கில் காலை 9.30 மணிக்கு காண்பிக்கப்படவுள்ளது. இத்திரைப்படத்தை கண்டுகளிக்கமுடியும் என்று யாழ்ப்பாணம் சின்மயா மின் தெரிவித்தது. (த-4)

# மோதலுக்கான காரணிக்கு தீர்வு காணத் தவறிவிட்டோம்

## அமைச்சர் மங்கள தெரிவிப்பு

கொழும்பு, செப். 11

மோதல்களுக்கான காரணிகளுக்குத் தீர்வு காண இலங்கை தவறியுள்ளது என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஸ்லோவெனியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அவர், அங்கு உரையாற்றும்போதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தனது உரையில், நிலையான அமைதி, அர்த்தமுள்ள நல்லிணக்கம், மீளநிகழாமையை உத்தரவாதப்படுத்துவதன் மூலமே மோதலுக்கான காரணிகளுக்குத் தீர்வு காண முடியும். சமூகத்தில், மத மற்றும் இன ரீதியான பிளவுகள் கூர்மை பெற்றிருக்கின்றன - என்று கூறியுள்ளார். (த-4)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 11

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. கடந்த 32 வருடங்களாக இடம்பெயர்ந்து தற்காலிகமாக யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த தொண்டமானாறு வெளிக்கள நிலையமானது தற்பொழுது தொண்டமானாற்றில் திறக்கப்படவுள்ளது.

நிலையத்தின் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்தும் இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கல்விச் செயலாளர் அனுப்பிய சுற்றறிக்கைக்கு அமைவாகவே இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டது.

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் போசகரும், வடமாகாணக் கல்விப் பணிப்பாளருமான செ.உதயகுமாரின் நெறிப்படுத்தலுக்கு அமையவே இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. (ற-ரி)

# மக்கள் வாழும் பகுதிகளை விடுவிப்பது குறித்து ஆய்வு

## வன வளத் திணைக்கள அதிகாரிகள் குழு மேற்கொள்கிறது

கிளிநொச்சி, செப்.11

கிளிநொச்சி மாவட்டத்தில் மக்களின் நீண்ட காலப் பாவனையில் உள்ள வன வளத் திணைக்களத்தின் நிலப்பரப்புக்களை விடுவிப்பது தொடர்பில் நேற்றுமுன்தினம் அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மக்கள் வாழும் பகுதிகள் இன்னமும் வன வளத் திணைக்களத்தின் ஆளுகையில் உள்ளன. அதனால் அபிவிருத்தித் திட்டங்கள் தடைப்படுகின்றன. பல மக்கள் குடியிருப்புக்கான வதிவிட அனுமதிகள் கிடைப்பதில்லை எனவும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

இந்தப் பிரச்சினை கிளி நொச்சியில் மட்டுமன்றி வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் நிலவுகின்றது. குறித்த பகுதிகளை விடுவிக்க வனவளத் திணைக்களம் ஆவன செய்ய வேண்டும் என்று பலரும் கோரிக்கை விடுத்தனர்.

மன்னார் மாவட்டத்துக்கு அண்மையில் வந்த வன வள அமைச்சரிடமும் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. பல வீதிகள் கூட வன வளத் திணைக்கள ஆளுகைப் பிரதேசத்துக்குள் அடங்குவதால் சீரமைக்க முடியாத நிலமை உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டது. அதையடுத்து மாவட்டம் தோறும் நேரில் சென்று வனவளத் திணைக்களத்தினர் நீண்ட காலம் மக்கள் பயன்பாட்டில் உள்ள நிலங்களை விடுவித்து அவற்றை முதற்கட்டமாக பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைக்கும் வகையில் அமைச்சரவைப் பத்திரத்தைத் தயாரிக்கும் வகையில் கொழும்பில் இருந்து மூத்த அதிகாரிகள் அடங்கிய குழுவினர் மேற்படி ஆய்வில் ஈடுபட்டுள்ளனர். (ற-101)

# மயிலிட்டித் துறையை முதலில் விடுவியுங்கள்

*பின்னர் அதுபற்றிப் புரிந்துகொள்வீர்கள் என்று ராணுவத் தளபதிக்கு மீள்குடியேற்றக் குழு பதில்*

யாழ்ப்பாணம், செப். 11

மூதாதையர் சொல்லித் தந்த முறையில் நாம் இப்போதும் மீன்பிடிக்கத் தயாராக இருக்கின்றோம். எங்கள் மயிலிட்டித் துறைமுகத்தை முதலில் விடுங்கள். நாம் மயிலிட்டிக்குச் செல்வதற்காகக் கேட்டோமா அல்லது மீன்பிடியில் நாட்டை உயர்த்துவதற்குக் கேட்டோமா என்பது பின்னர் உங்களுக்குப் புரியும்.

இவ்வாறு மயிலிட்டி மீள்குடியேற்றக் குழுவின் தலைவரும், வலி. வடக்கு மீள்குடியேற்றப் புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவருமான அ.குணபாலசிங்கம் தெரிவித்தார்.

மயிலிட்டி துறைமுகத்தை விடுவிக்குமாறு கோரும் தற்போதைய தலைமுறையினருக்கு ஆரம்பகால மீன்பிடி முறைகள் தெரியாது என்றும், மயிலிட்டியை விடுவிப்பதற்காகவே அவர்கள் அவ்வாறு கோருவதாகவும், யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க கொழும்பைத் தளமா கக் கொண்ட ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இராணுவத் தளபதியின் கருத்துக்கு மறுப்புத் தெரிவித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே குணபாலசிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் தெரிவித்துள்ளதாவது:

வலி. வடக்கு மக்களை மீள்குடியமர்த்துவதில் அரசும் இராணுவமும் ஏமாற்று வித்தையையே காண்பித்துக் கொண்டு இருக்கின்றன. விடப் போகின்றோம் வாருங்கள் என்று அழைத்துப் படம் போட்டுக் காட்டினார்கள். படத்தில் காட்டியதில் ஒரு பகுதியை வாகனத்தை நிறுத்தாது ஊர்வலமாகக் கொண்டு சென்று காட்டினார்கள். ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனின் வருகைக்காகவே இராணுவத்தினரும், அரசும் இவ்வாறு படம் போடுவதாக மக்கள் அப்போதே கூறினார்கள். அது உண்மையாகியுள்ளது.

மயிலிட்டி மக்களுடனும் என்னுடனும் இராணுவத் தளபதி இரு முறை உரையாடினார். இப்பொழுது விடப்படும் நிலம் விடுவிக்கப்பட்டதும் அடுத்த கட்டமாக மயிலிட்டி கடற்கரையோரமும் மீன்பிடித் துறைமுகமும் விடுவிக்கப்படும் என்று தெரிவித்திருந்தார். உங்கள் இடங்களில் இடையிடையே இராணுவ முகாம்களும் இருக்கும் என்று கூறினார்.

இடையிடையே இராணுவ முகாம்கள் இருப்பதால் பிரச்சினை இல்லை. எமது நிலத்தில் எம்மைக் குடி அமர்த்துங்கள் என்று கூறி சம்மதித்தோம். ஒரு வாரத்தின் பின்பு எமக்கு விடப்படும் இடத்தை வாகனத்தில் கூட்டிச் சென்று காண்பித்தார். பொன்னாலை – பருத்தித்துறை வீதிக்கு வடக்கே மயிலிட்டி தொடங்கி ஊறணி வரை காண்பித்தார்கள். வீதிக்குத் தெற்கே உடனடியாக விடும் சாத்தியமில்லை என்று தெரிவித்தார்.

தென்னிலங்கை ஊடகவியலாளர்களுக்கு இராணுவத் தளபதி கூறிய செய்தி எம்மைக் கவலைக்கும் விசனத்துக்கும் உள்ளாக்குகின்றது. நாங்கள் எங்கள் நிலத்தைத் தான் கேட்கின்றோம். வேறு எவரது நிலத்தையும் கேட்கவில்லை. துறைமுகம் என்பது, படகுகளைப் பாதுகாப்பாகக் கட்டுவதற்கும், மீன்களை இறக்குவதற்கும், தொழில் உபகரணங்களை ஏற்றுவதற்குமாகும். மீன்பிடிப்பது ஆழ்கடலில்தான். இந்திய இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப்பால் நாம் ஆழ்கடல் மீன்பிடியை நிறுத்தியிருக்கின்றோம்.

இந்திய இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப்பை நிறுத்த உங்களால் முடியவில்லை. எங்களுக்கு மீன்பிடி முறை தெரியாது என்று கூறுவது எந்த வகையில் நியாயம். தென்பகுதியில் இந்திய மீனவர்கள் அத்துமீறியிருந்தால் இவ்வாறு பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்திருப்பீர்களா ?

தற்போது எதிலும் நவீனம் வந்து கொண்டிருக்கின்றது. நாங்கள் நவீன முறைகளிலும் மீன்பிடிக்கத் தகுதியானவர்கள். எம்மை மயிலிட்டியில் குடியமர்த்தி எமது முயற்சின் முன்னேற்றத்தைக் கண்டுகளிக்க ஆயத்தமாயிருங்கள் – என்றுள்ளது.

(த-5)

## பாதயாத்திரைக் குழு சாவகச்சேரியை வந்தடைந்தது

தென்மராட்சி செப். 11

மட்டக்களப்பு சித்திரவேலாயுதர் ஆலயத்திலிருந்து தொண்டமானாறு செல்வச்சந்நிதிக்கான பாதயாத்திரைக் குழு சாவகச்சேரி சங்கத்தானை முருகன் ஆலயத்தை நேற்று வந்தடைந்தது. தொடர்ந்து ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணம் சென்று ஆலய தரிசனங்களுடன் செல்வச்சந்நிதியை நாளைமறுதினம் சென்றடையுமென குழுவின் தலைவர் வெருக்கலம்பதி வேலுச்சாமி சுரேஷ் தெரிவித்தார்.

(9)

## பகிடிவதைக் கொடுமையால் படிப்பை நிறுத்திய இளைஞர்

### கூலி வேலைக்குச் செல்லும் அவல நிலை

யாழ்ப்பாணம், செப். 11

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பகிடிவதைக் கொடுமையால் மாணவன் ஒருவர் தனது பல்கலைக்கழகக் கல்வியை இடைநிறுத்தி கூலிவேலைக்குச் செல்லும் அவலம் இடம்பெற்று வருகின்றது.

ஏற்கனவே போரினால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சியைச் சேர்ந்த மாணவனே பகிடிவதைக் கொடுமை தாங்க முடியாமல் பல்கலைக்கழகக் கல்வியை வெறுக்கும் நிலைக்கு ஆளானதாகத் தெரிவிக்கிறார்.

முதலாம் ஆண்டு முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த மாணவனே இந்த நிலையை எதிர்கொண்டுள்ளார்.

குறித்த மாணவன் பல்கலைக்கழகத்தில் இணைந்த நாள் தொடக்கம் ஒரே பகிடிவதைக் கொடுமை. அதனால் தான் மோசமாகப் பாதிக்கப்பட்டதாக அவர் தெரிவிக்கிறார். பகிடிவதை என்னும் பெயரில் அவர் கடும் தாக்குதலுக்கு உள்ளானதாகக் குறிப்பிடும் மாணவனின் உறவினர், மனம் மற்றும் உடலியல் உளைச்சலை எற்படுத்தும் அளவுக்கு பகிடிவதை காணப்பட்டதாகவும் கூறுகின்றனர்.

கஸ்டப்பட்டுப் படித்து உயர்கல்வியை எதிர்பார்த்து பல்கலைக்கழகத்தில் இணைந்த அவருக்கு (மாணவன்) வெறும் 3 மாத காலத்தில் கல்வியைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது. தற்போது அவர் கல்வியை இழந்து வீட்டில் தவிக்கும் அவலம் தொடர்கின்றது. இடையிடையே கூலி வேலை செய்ய அவருக்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

இத்தகைய தாக்கங்கள், விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய அளவுக்குப் பல்கலைக்கழகங்களில் தொடரும் பகிடிவதைக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும். மாணவன் விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாணவனது உறவுகள் தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு சம்பவம் இதுவரை எமது கவனத்துக்குக் கொண்டு வரப்படவில்லை. இருப்பினும் உடனடியாகக் குறித்த மாணவன் நிர்வாகத்துடனோ அல்லது பீடாதிபதியுடனோ தொடர்பு கொண்டு தனக்கான பாதுகாப்பான கல்வியைப் பெற முடியும்.

மாணவர்கள் தமக்கான இடையூறுகளையும் நிர்வாகத்துக்கு தெரியப்படுத்த முன்வரவேண்டும். ஏனெனில் இது ஒரு மாணவனை மட்டும் பாதிக்கும் விடயமல்ல. மாணவர்களின்எதிர்காலத்தை வளப்படுத்தவே நிர்வாகம் காத்திருக்கும் நிலையில் இவ்வாறான சம்பவங்களினால் ஒரு மாணவன் வீதியில் நிற்பதை அனுமதிக்க முடியாது என்று பல்கலை. நிர்வாகம் தெரிவித்தது.

(த-4-101)

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 548
சீட்டிழுப்பு திகதி 2016.09.10
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
02 03 13 34 S
சுப்பர் ஜக்பொட்
ரூ.49,576,000/=
வெல்லப்படவில்லை

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2799 திகதி 10.09.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
11 12 18 53 N 05
ரூ. 16,578,700/-

மீண்டும் எமது மண்ணில் உதயமாகிறது
வாணி சர்வதேச திருமண நிலையம் 47 வருடங்களுக்கு மேலாக சேவை புரிந்து நாட்டின் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த அலுவலகம் மீண்டும் எமது நாட்டில் இன்னும் திருமணமாகாதவர்களுக்கு பதிவு (ஏற்கனவே பதிவு செய்யப்பட்டவர்களுக்கு) கட்டணம் இலவசம் உள்நாட்டு, வெளிநாட்டு, அரச,தனியார் மணமக்கள் விவரங்கள் எம்மிடம் உண்டு.
தொடர்புகளுக்கு- 077 2734703, 077 5221132
தலைமை அலுவலகம் வவுனியா. கிளை அலுவல்கங்கள் வெள்ளவத்தை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், தீவகம், வடமராட்சி தென்மராட்சி, வலிகாமம் ஆகிய இடங்களில்

J/UDUVIL GIRLS' COLLEGE TEACHERS' FORUM
பாடசாலை நலன் மீது அக்கறை கொண்டவர்களுக்கு.
எமது ஆசிரியர் குழாம் மாணவர்களை தாக்கியதாகவும் மேலும் பல அடக்கு முறைகளை பிரயோகித்ததாகவும் சிலர் உண்மைக்கு புறம்பான செய்திகளை வெளியிடுவதையிட்டு மனம் வருந்துகிறோம். இவ்விதமான எந்தவித சம்பவங்களும் இடம் பெறவில்லை என்பதை நாம் அனைவருக்கும் வெளிப்படுத்தி நிற்கிறோம்.
தலைவர். செயலாளர்.

இலங்கையில் முதல் தடவையாக பெண்களுக்கான அழகுக்கலை கல்லூரி
Olialankan Studio British College of Beauty Studies
இணைந்து நடத்தும் பெண்களுக்கு பொருத்தமான துறைசார் பாடநெறிகள்
*தையல்கலை, *அழகுக்கலை, *கேக்ஐசிங், *கணினி *ஆங்கிலம் ஆகிய பாடநெறிகளும் நடைபெறுகின்றன.
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பயிற்சி வகுப்புக்களின் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.
குறிப்பிட்ட மாணவர்களே சேர்த்துக் கொள்ளப்படுவர்.
பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி, யாழ்ப்பாணம். 076 7011645
கஸ்தூரியார் றோட் (உதயன் பணிமனை அருகில்) யாழ்ப்பாணம்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வடக்கு மருத்துவர்களை உள்ளடக்கி மருத்துவர் மன்றம் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 11

வட மாகாண மருத்துவர்களை உள்ளடக்கிய மருத்துவர் மன்றம் நேற்று அறிமுகம் செய்யப்பட்டது.

வட மாகாண வைத்தியர்களுக்கான ஒரு மன்றம் ஆரம்பிக்கப்பட்டு அதன் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 14ம் திகதி இடம்பெறவுள்ளது.

அறிமுக நிகழ்வு நேற்று நாவலர் மண்டபத்தில் அதன் தலைவரின் தலைமையில் இடம்பெற்றது.

அறிமுக நிகழ்வில் உரையாற்றிய மன்றத்தின் தலைவர் தெரிவித்ததாவது:

மருத்துவர்களுக்கு என பல தொழிற் சங்கங்கள் உள்ளபோதிலும் வடக்கில் உள்ள பல பிரத்தியேக பிரச்சினைகளை அவர்கள் புரிந்து கொள்ள முடிவதில்லை. வடக்கு மருத்துவர்களின் பிரச்சினைகளை பொதுவாக உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அணுக முடியாது என்பதையும் குறித்த தொழிற் சங்கங்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

அதனால் அனைவருக்கும் ஒரே அளவில் என்ற போலிச் சமத்துவம் மூலம் உண்மையான நியாயத்தை வடக்கு மருத்துவர்களுக்கும் அதன் மூலம் மக்களுக்கும் மறுக்கும் நிலை உள்ளது.

அவற்றை அவதானித்தே இந்த வட மாகாண மருத்துவர் மன்றம் உருவாக்கப்பட்டது. இது ஒரு தொழிற் சங்கம் அல்ல. நாம் எந்தக் காலத்திலும் தொழிற் சங்கப் போராட்டங்களில் ஈடுபடும் அமைப்பும் அல்ல.

மருத்துவர்கள் , வைத்தியசாலைகள் , மக்களின் தேவைகள் மட்டுமன்றி தாதியர்களின் விடயங்களுக்கும் எமது மன்றம் உரிய தீர்வைப் பெறுவதற்காகப் பாடுபடும்- என்றார். (ர-101)

## தீர்வுக்கான...

பிரிந்து செல்வதைவிட, இணைந்து செல்லும் பயணமே சிறப்பாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 70ஆவது தேசிய மாநாடு கெம்பல் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. அதில் தலைமையுரை ஆற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தெரிவித்ததாவது:

இலங்கை அரசியல் வரலாற்றில் ஐக்கிய தேசியக் கட்சி முக்கியத்துவம் மிக்க அரசியல் சக்தி. ஆட்சியைப் பிடிப்பதற்கு மட்டுமல்லாது, நாட்டின் அபிவிருத்தி உள்ளிட்ட ஏனைய விடயங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கிய கட்சி என்ற பெருமையும் இருக்கின்றது.

கட்சி வரலாற்றைப் பற்றிப் பேசும்போது, முக்கிய நபர் ஒருவருக்கு சிறப்பாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அவர் இல்லாதிருந்தால், இந்தக் கட்சியை வளர்ப்பதற்குத் தலைவர்கள் இருந்திருக்கமாட்டார்கள். 1915ஆம் ஆண்டுகளில் சிங்கள, பௌத்த தலைவர்களுக்கு நெருக்கடி - சிக்கல்நிலை ஏற்பட்டபோது, அவர்கள் சார்பாகக் குரல் கொடுத்தவர்தான் பொன்னம்பலம் இராமநாதன். அவரை ஒருபோதும் மறந்துவிடமுடியாது.

கட்சியைப் பாதுகாப்பதற்காக ஆதரவாளர்கள் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். ஆதரவாளர்கள்தான் கட்சியின் உயிர்நாடி என்பதை ஒருபோதும் மறந்துவிடமாட்டோம்.

கட்சிக்குள் முன்னர் சில முரண்பாடுகள் ஏற்பட்டன. ஆதரவாளர்கள் நொந்துபோனார்கள். இதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன். அரசியல் பழிவாங்கலுக்குள்ளான ஆதரவாளர்களை மறந்துவிடமாட்டோம். இனிவரும் நாள்களில் அரசியல் பழிவாங்கலுக்கு இடமளிக்கப்படாது.

சகல இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சி உதயமானது. அதே கொள்கையிலேயே கட்சி இருக்கின்றது. இனவாதமோ, மதவாதமோ எம்மிடம் கிடையாது.

அரசியலுக்காக நாட்டுக்குத் துரோகமிழைத்த வரலாறும் கிடையாது. தேர்தலுக்காகப் புலிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடவில்லை. ஒப்பந்தம் கைச்சாத் திட்டவரைத் தான் தேசப்பற்றாளர் எனக் கூறி சிலர் தூக்கி வைத்து ஆடுகின்றனர்.

ராஜபக்ச படையணியை விரட்டியடித்து நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய சகல அமைப்புக்களுக்கும் நன்றி. தேசிய அரசு தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். இறந்த காலம் பற்றி யோசிக்காமல், எதிர்காலம் பற்றி அனைவரும் சிந்திப்போம். பிரிந்து செல்வதைவிட, இணைந்து செல்லும் பயணமே சிறப்பாக இருக்கும்.

அரசியல் தீர்வை எட்டும் பயணத்தை நோக்கித் தற்போது நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். இதற்கு இணையாக அரசமைப்பு தயாரிப்புப் பணி இடம்பெறுகின்றது. இன்னும் பேச்சு மட்டத்திலான நடவடிக்கையே இடம்பெறுகின்றது. அரசமைப்புப் பற்றி இன்னும் இறுதி முடிவு எதுவும் எட்டப்படவில்லை. நாடாளுமன்றத்துக்கு முதலில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதற்கு நாடாளுமன்றம் இணக்கம் தெரிவித்த பின்னரே அரசமைப்பு வரைவு தயாரிக்கும் இறுதிப் பணி இடம் பெறும்- என்றார். (த-4)

## ஐ.நாவுடன்...

ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த அறிவிப்பை இலங்கை அரசு வெளியிட்டுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குச் சமர்ப்பித்த அறிக்கை தொடர்பில் இலங்கை அரசு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில்,

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக ஆராயும் ஐ.நா. செயலணி சுமார் 16 ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 9ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை இலங்கைக்கு பயணம் செய்திருந்தது. மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், ஜனநாயகத்தைப் பலப்படுத்தவும், நல்லாட்சியை ஏற்படுத்திச் சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தவும், நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி தொடர்பாடுகளை முன்னெடுக்கவும் இலங்கையின் தற்போதைய அரசு தன்னை அர்ப்பணித்துள்ளது.

காணாமற்போனோர் குறித்த ஐ.நா. செயலணியுடன் இணைந்து செயற்படுவது தொடர்பாக இலங்கை அரசு ஆலோசனை நடத்தி வருகின்றது.

நல்லிணக்கச் செயற்பாட்டிலும், அனைத்து மக்களினதும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் ஒரு முக்கியமான அம்சமாக அமையும் என்று இலங்கை அரசு நம்புகின்றது.

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து ஆராயும் ஐ.நா. செயலணியுடன் தொடர்ச்சியாகவும், நெருக்கமாகவும் செயற்படுவதற்கு இலங்கை அரசு தன்னை அர்ப்பணிக்கின்றது.

இலங்கைக்குப் பயணம் செய்த, பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்து ஆராயும் ஐ.நா. செயலணி முன்வைத்துள்ள பரிந்துரைகளையும் இலங்கை அரசு விரிவான முறையில் ஆய்வு செய்து வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் முகாமைத்துவ
உதவியாளராகக் கடமையாற்றும்
திரு.ச. ரவிகரன் அவர்களின் அன்புத்
தந்தையார்
பொன்னையா சபாரட்ணம்
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மாசாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஊழியர் நலன்புரி சங்கம்,
நல்லூர் பிரதேச சபை.

கண்ணீர் அஞ்சலி



இலங்கைவங்கி வன்னி பிரதேச முகாமையாளர்
பொன். பாலகுமார்
(Bank of Ceylon, Area Manager, Vanni)
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
இலங்கை வங்கி
முகாமையாளரும், ஊழியர்களும்.
முள்ளியவளை கிளை, முல்லைத்தீவு கிளை, புதுக்குடியிருப்புக்கிளை.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக்கிருத்திய அழைப்பும்
நன்றிநவிலலும்

அமரர்
இரட்ணசிங்கம்
இரமணதாசன்



தோற்றம்
07.06.1976

மறைவு
12.08.2016

கடந்த 12.08.2016 வெள்ளிக்கிழமை சிவபதமெய்திய அமரர் இரட்ணசிங்கம் இரமணதாசன் அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து எமது துயரத்தில் பங்கெடுத்தவர்களுக்கும் நேரிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி, பதாகைகள் துண்டுப் பிரசுரங்கள் மூலம் தங்கள் துயரங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் அன்னாரது இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் அன்னாரது வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஐயனார் கோயிலடி,
மல்லாகம்.
குடும்பத்தினர்.

### வலய மட்ட மழலைகள் விளையாட்டுவிழா

சாவகச்சேரி, செப்.11

தென்மராட்சி பிரதேச முன்பள்ளிச் சிறார்களுக்கிடையிலான வலய மட்ட மழலைகள் விளையாட்டு விழா எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப .2 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

தென்மராட்சி கல்வி வலய கல்வி முகாமைத்துவப் பிரிவுப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவப்பிரிவுப்பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையாவும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலனும் கலந்து கொள்வர்.

சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய பிரதேச முன்பள்ளி விளையாட்டு விழாக்களில் முதலிடம் பெற்ற சிறார்கள் வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர். (ற-9)

### தங்க ஆபரணம் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்ப்பாணம் நொதேர்ன் சென்றல் வைத்தியசாலை வளாகத்தில் சிறிய தங்க ஆபரணம்ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ள முடியும் என்று வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்தது. (ற-ரி3)


## வீடு விற்பனைக்கு

கட்டுடை, மானிப்பாயில் 08 பரப்பும் 7/16 குளியும் உள்ள காணியும் அதில் உள்ள நான்கு அறைகளும் இரண்டு குளியலறைகளும் அடங்கலாக உள்ள வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 729 8108

## Vacancies

01. Technical Officer (Trainee also welcome)
02. Account Assistant
03. Plant Supervisor
04. Drivers (heavy vehicle)
05. Labours

Closing date (25.09.2016)
Contact No - 021 205 0999, 077 114 4025

MARUTHY REDYMIX (Pvt.) Ltd.
Keratheevu Road,Navatkuli,Jaffna.
021 205 0999 Fax:021 205 0998
E- mail: maruthyreadymix@gmail.com

## தேவை

யாழ் நகரில் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வரும் ஆங்கில மருந்தகத்திற்கு தராதரமுள்ள மருந்தாளர் தேவை. Pharmacist Certificate உள்ள மருந்தாளர் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இல - 5113
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வட இலங்கை சுதேச வைத்தியசபை விசேட பொதுச்சபைக்கூட்டம்

காலம்: 14.09.2016 புதன்கிழமை
முற்கல் 10.00 மணி
இடம்: லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக்கல்லூரி மண்டபம், சுன்னாகம்.

மேற்படி பொதுச்சபைக் கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெறவுள்ளதால் அனைத்து DAM வைத்தியர்கள், சுதேச வைத்தியர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் கலந்து கொள்ளும்படி வேண்டப் படுகின்றீர்கள்.

குறிப்பு: மேற்படி திகதி எக்காரணம் கொண்டும் மாற்றப்படாது.
வட இலங்கை சுதேச வைத்தியசபை.

## வேலைவாய்ப்பு

எமது முன்னணி நிறுவனத்துக்கு எழுதுவினைஞர்கள் (Clerk) உடனடியாகத் தேவை. இம்முறை A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களிலிருந்து சிங்களம் பேசக்கூடிய, தமிழ் யுவதிகள். வயது 35 வரை. திருமணமாகாதவர்கள் தேவை. 15,000/= வரை சம்பளம். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வெல்லம்பிட்டிய, வத்தளை, மட்டக்குளி, மாளிகாவத்தை, வெள்ளவத்தை, பேலியகொடை, ஒருகொடவத்தை, களுத்துறை, பொரள்ளை, நாரஹன்பிட்டி போன்ற பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது. தனியார் வகுப்புக்குச் செல்லாதவர்கள் தொடர்பு கொள்ளவும்.

075 399 9991, 077 799 9159

## வேலைவாய்ப்பு

இதுவரை தொழில் ஒன்றை அமைத்துக் கொள்ளாதவர்களுக்கு இதோ ஒரு வாய்ப்பு. நாடுபூராகவும் உள்ள ஜாம், பிஸ்கட், சொக்லேட், கையுறை போன்ற எமது தொழிற்சாலைகளில் உற்பத்தி / பொதியிடல்/ லேபல் பிரிவுகளுக்கும், Hotel களில் Room boy, Kitchen - Helper, Western - Cook, Cleaner, வாகன சாரதிகள், பணிப்பெண்கள். Clerk, Supervisor, Field Officer மற்றும் விமான நிலையம், துறைமுகங்களில் வேலை வெற்றிடம் உண்டு. வயது 18 - 55. ஆண் / பெண் இருபாலாரும் சேர்த்துக்கொள்ளப்படுவர். உணவு, தங்குமிடம் வழங்கப்படும். 18,000/=, - 55,000/=. திறமைக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படும்.

075 399 9991, 077 799 9159

## வேலைவாய்ப்பு

பொய்யான விலாசத்தைக் கொண்ட விளம்பரங்களைக் கண்டு ஏமாறாதீர்கள். நாம் நாடுபூராகவும் உள்ள தொழிற்சாலைகளில் லேபல், பொதியிடல், தயாரிப்பு, களஞ்சியப் பிரிவு, பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள், மேற்பார்வையாளர்கள், கணக்காளர், QC, Clerk, கனரக / மென்ரக சாரதிகள், உதவியாளர்கள், மேசன்மார்கள் மற்றும் Hotel களில் Room Boy, Steward, Cook, Kitchen - Helper போன்ற பிரிவுகளுக்கு வெற்றிடம். வயது 18 - 55. ஆண் / பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் 18,000/= - 46,000/= வரை தொழிலடிப்படையில் உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

077 788 2417

## இரும்பு சுருக்குக்கேற் விற்பனைக்குண்டு

10அடி அகலம் 8 அடி உயரமுடைய 95 வீதம் புதியதான இரும்புச் சுருக்குக் கேற் விற்பனைக்கு உண்டு.

077 742 0240

## காணி உடனடி விற்பனைக்கு

A9 வீதியில் கைதடியில் பனம் பொருள் அபிவிருத்தி சபையை அண்மித்த 4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. இது வட மாகாண சபைக்கு முன்பாக அமைந்துள்ளது. தரகர் தேவையில்லை. நேரடியாக பேசி தீர்மானிக்கலாம்

இ.நடேசன் 021 222 4531

## அமெரிக்க வீஸா லொத்தர்

BBS Netting மூலம் விண்ணப்பியுங்கள்

14ஆவது வருட சேவையில்
எமது விண்ணப்பம் பெற ரூ15/- முத்திரை, பெயர், விலாசத்துடன் எழுதவும்

Single - 475/-
Family - 975/-

BBS Netting,
3/14 Pinwatta Road,
Dehiwala.
0775811106


யாழ்ப்பாணத்தில் விண்ணப்பம் பெற: உமா ஸ்ரோர்ஸ், இல: 378 (260), கே.கே.எஸ் வீதி (சிவன் கோவிலடி).
www.bbsnetting.com

## காணி விற்பனைக்கு

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை கடற்கரை வீதி பொலிகண்டியில் கடற்கரைக்கு முன்பாக 8 பரப்பு 14.60 குளி காணி உடைந்த வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. உல்லாச ஹோட்டல் கட்டுவதற்கு உகந்த இடம்

077 742 0240

## OFFSET அச்சு இயந்திரம் விற்பனைக்குண்டு




KORD 64
Gray, GTO 52,
Victoria 32
inch Cutter

## Vacancy for Data Processing Analyst

USA-based company with offices in Colombo and Jaffna is looking for a Data Processing Analyst to work in the Jaffna office. Candidate should have a degree or diploma in the field of Computer Science/IT and should possess strong technical and analytical skills.

Excellent opportunity for motivated candidates to work with a strong team on challenging projects and establish long-term careers. Fluency in English is a must.

**Send your CV to:**
siva@monthlywarranty.com or siva.monthlywarranty@gmail.com




## பதவி வெற்றிடம் - VACANCIES

ஐரோப்பாவிற்கு மரக்கறி மற்றும் பழவகைகளை ஏற்றுமதி செய்யும் கந்தானையில் அமைந்துள்ள முன்னணி நிறுவனமான VEGILAND EXPORTERS (PVT) LTD இற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆள்கள் தேவை.

வேலை இடம் :- கந்தானை
பதவி :- பொதியிடல் உதவியாளர்கள் (மரக்கறி)
பெண்கள் - (05) ஆண்கள் - (05)
வாகன சாரதி - (01) (A & D Heavy vehicle license)

வேலை இடம் :- யாழ்ப்பாணம்
பதவி :- 1. Stores Assistant (01) 2. Data Collectors (02)
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
E.P.F. / E.T.F மற்றும் Shop & office ACT இற்கு அமைவானது உணவு, தங்குமிட வசதி வழங்கப்படும்.

மேலதிக விவரங்களுக்கு-
**Vegiland Exporters (Pvt) Ltd.**
No:54, St.Theresa Mawatha, Rilaulla, Kandana.
E-mail-vegi.vacancy2016@yahoo.com
TP: 0773405974 / 0112248516

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ்.
## கலாலயா
பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். **(கிழமை நாட்களில் மட்டும்)**

**சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 18.09.2016 (ஞாயிறு)**
**கிழமைநாள் பிரிவுகள்: 19.09.2016 (திங்கள்)**
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

# போர்க்குற்ற நீதிச் சபைக்கு ஐ.நா. ஆவணங்கள் தயார்

## கூறுகிறார் கெஹலிய ரம்புக்வெல

கொழும்பு, செப். 11
இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்ற மீறல்களை விசாரிக்க, போர்க்குற்ற விசாரணைக்கான நீதிச் சபையை உருவாக்குவது தொடர்பான ஆவணங்கள் ஐ.நாவினால் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியிட்டுள்ளார் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கெஹலிய ரம்புக்வெல.
அவர் தெரிவித்ததாவது:
இங்கு வந்து சென்ற பின்னர் அனைத்துலக அரங்கில், இலங்கையைப் பான் கீ மூன் புகழ்கிறார். ஆனால் மறுபுறத்தில் போர்க்குற்ற விசாரணைகளுக்கான தயார்படுத்தல்களை முன்னெடுத்து வருகின்றார்.
இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் என்பவற்றை விசாரணை செய்வதற்கான நீதிச் சபையை அவர் பெயரிட்டு ஆவணப்படுத்தியுள்ளார் என ஐ.நாவின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இன்னும் மூன்று மாதங்களே உள்ள அவரது பதவிக் காலம் முடிவதற்குள் இந்த நீதிச் சபையைப் பரிந்துரைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
பான் கீ மூனின் பாராட்டுக்களின் பின்னணியில் ஆபத்துகளே நிறைந்துள்ளன–என்றார். (த-4)

# வைத்திய பரிசோதனை அனைவருக்கும் கட்டாயம்

கொழும்பு, செப். 11
நாட்டிலுள்ள சகலருக்கும் வைத்திய பரிசோதனை யொன்றைச் செய்து கொள்வது கட்டாயப்படுத்தப்படவுள்ளது.
இதற்கான சகல ஏற்பாடுகளும் இலவசமாகச் செய்து கொடுக்கப்படவுள்ளன என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.
உலக சுகாதார அமைப்பின் 69 ஆவது கிழக்காசிய பிராந்தியத்தின் கூட்டத்தொடரில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் கூறியுள்ளார்.
இவ்வாறான பரிசோதனையின் மூலம் 2020 ஆம் ஆண்டில் 10 வீதமான தொற்றாத நோய்களைக் கட்டுப்படுத்த முடியும் என எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார். (த-4)

# உடுவில் ஆசிரியரின் வீட்டு கேற் சேதம்

யாழ்ப்பாணம், செப்.11
உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரின் வீட்டின் பிரதான நுழைவாயில் கேற்றிலிருந்த தகரம் இனந்தெரியாதோரால் கொத்தி சேதமாக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
நேற்று முன்தினம் தினம் மாலை 3.15 மணியளவில் சம்பவம் இடம்பெற்றது.
இது தொடர்பாக குறித்த ஆசிரியரால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.(ற-ரி3)

# சு.கவுடன் இணைந்து செயற்பட கூட்டு எதிர்க்கட்சியினர் மறுப்பு

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினருக்கு சிறிலங்கா சுதந்திர கட்சியுடன் இணைந்து செயற்படுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளபோதிலும் அவர்கள் வேறு காரணங்களுக்காக அதனை மறுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே கட்சியின் இளைஞரணித் தலைவர் ஷாந்த பண்டார இதனைத் தெரிவித்தார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கான அங்கீகாரத்தைக் கொண்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவானவர்களுக்குக் கட்சியைக் கட்டி எழுப்பும் அவசியம் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.
எப்படியிருப்பினும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன், ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் இணைவார்கள் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும் ஷாந்த பண்டார கூறினார். (த-4)

# விவாதத்துக்கு வருமாறு அமைச்சருக்கு அழைப்பு

## அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்தது

கொழும்பு, செப். 11
தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பில் உயர்கல்வி அமைச்சரை விவாதம் ஒன்றுக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
அண்மையில் நாடாளுமன்றில் உரையாற்றிய உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, சைட்டம் நிறுவனத்துக்குக் கடந்த அரசினாலேயே பட்டப்படிப்புக்கான அனுமதி வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டிருந்தார்.
அத்துடன் அவ்வாறு வழங்கப்பட்ட பட்டப்படிப்புக்கான அங்கீகாரத்தைத் தம்மால் ரத்துச் செய்ய முடியாது என்றும் கூறியிருந்தார்.
இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து றாகம மருத்துவக் கல்லூரி மாணவர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)


**சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம்**

பிரபல நிறுவனத்தின், 20 லீற்றர் குடிநீர் போத்தல்கள் நிறுவனங்கள் மற்றும் வீடுகளுக்கு கொண்டு வந்து தரப்படும்.

077 354 9092

**வேலையாள் தேவை**

சுன்னாகத்திலுள்ள மின்பொருள் விற்பனை நிலையத்துக்கு வேலையாள் தேவை. சுன்னாகப் பிரதேசத்தை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 077 505 7371

**IPS**

இலவச கணினி வகுப்புக்கள்
Free ICT Skill Development Programme-Batch IV

க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றிய அனைத்துத்துறை மாணவர்களுக்கான
- Diploma in ms-office
- Diploma in Internet Technology

ஆரம்பம்: 16,17,18-09-2016 காலை 10.00 Am
• பெறுமதிமிக்க சான்றிதழ் • காலம்: 3மாதங்கள்

IPS கல்வி நிறுவனம் Thirunelvely (சாயி சமித்திக்கு அண்மையில்)
Hot line: 076 6852529
(ICT உலகின் புதிய சாம்ராஜ்யம்- IPS கல்வி நிறுவனம்)

**வேலைவாய்ப்பு**

இளைஞர் யுவதிகளுக்கு பாதுகாப்பான தங்குமிடம். உணவு வசதியுடன் தொழில் வாய்ப்பு பெற்றுத்தரப்படும். வாகன சாரதிகள். சாரதி உதவியாளர்கள். பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள். விமான நிலையம்/ துறைமுகம். மேசன். உதவியாளர்கள் மற்றும் ஜஸ். ஜாம். பிஸ்கட். பால்மா. கையுறை தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கு லேபல், பொதியிடல்.
தயாரிப்பு. வயது 18 - 55 வரை. ஆண். பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் கிழமை. மாத 25.000/= - 30.000/= வரை சம்பளம்.

077 683 8226/ 077 799 9159
No: 103/1, Station Road, Vavuniya

**வேலைவாய்ப்பு**

கொழும்பை அண்மித்த நிரந்தர தொழில் வாய்ப்பு நாள்.கிழமை. மாத சம்பளம் (1000/=. 1500/=. 2000/=) உணவு பொருள்கள். பிளாஸ்டிக் பொருள்கள், விளையாட்டு பொருள்கள் பலசரக்கு பொருள்கள். வாசனை திரவியங்கள். ஆடை உற்பத்திகள் மற்றும் பாதுகாப்பான உணவு. தங்குமிடம் உண்டு. கல்வி கற்ற அற்ற அனைவருக்கும் மொழி அவசியமில்லை. அழையுங்கள்.

077 843 0179,
No: 435 2/18, Fountun Plasa, Borella Road, Maradana.

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



| மஜெஸ்டிக் ப்ளாட்டினம் | ப்ரொன்ஸ் |
|---|---|
| 10.00 a.m / 1.00 p.m<br>4.00 p.m / 7.00 p.m | 10.30 a.m / 1.30 p.m<br>4.30 p.m / 7.30 p.m |

Fri/Sat/Sun 9.30 p.m



சில்வர் 10.15 / 1.15 / 4.15 / 7.15
Fri/Sat/Sun 9.30 p.m
விசாரணை 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk

**வீடு வாடகைக்குத் தேவை**

ஓய்வுபெற்ற ஆசிரியைக்கு (சைவபோசனம்) கே.கே.எஸ். வீதியினை அண்மித்ததாக (கொக்குவில் - தெல்லிப்பழை) வீட்டின் ஒரு பகுதி (அனெக்ஸ்) வாடகைக்குத் தேவை.

077 188 2545, 072 442 2486

**தவறிவிட்டது**

சந்திரசேகரம் இராஜகுமார் மற்றும் சின்னராசா வள்ளிநாயகம் ஆகியோர்களது தேசிய அடையாள அட்டையும் வாகன அனுமதிப்பத்திரமும் நல்லூர்ப் பிரதேசத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்

077 854 3191, 077 310 1263

**தேவை**

விற்பனை மேற்பார்வையாளர் / Sales Supervisor
வட மாகாணத்துக்கு விற்பனை மேம்பாட்டாளர் தேவை. சுயவிவரத்துடன் 05 (ஐந்து) வருட அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிக்கவும்.

Mic Mac Ceylon Confectionery (Pvt) Ltd.
Digana, Rajawella
077 356 7733, 081 237 5342

**வேலைவாய்ப்பு**

எமது பிரபல தொழிற்சாலைகளுக்கு நாடுபூராகவும் சிங்கள, தமிழ், முஸ்லிம், / ஆண் / பெண் வேலையாள்கள் தேடித் தரும் திறமையுடைய முகவர்கள்/ நிறுவனங்கள் / அதிகாரிகள் (தரகர்கள்) தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கலாம்.

075 217 0286, 077 799 9159

**வேலைவாய்ப்பு**

நீங்களும் வங்கிக் கணக்குகளுக்குப் பணத்தைச் செலுத்திப் பொய்யான வேலை பெற்றுத்தரும் நிறுவனங்களில் உள்ளவர்களுக்கு ஏமாற்றம் அடைந்தவரா? பணத்தை வங்கி கணக்குகளுக்குச் செலுத்த வேண்டாம். உங்களுக்குத் தேவையான தொழிலைப் பெற்றுக் கொள்ள இன்றே அழையுங்கள்.

075 217 0286

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
09.09.2016 | 2028 | சிவப்பு
மிதுனம் 17 25 54 56
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 27,61,280 /-

**வேலைவாய்ப்பு**

உழைப்புக்கு ஏற்ப ஊதியம் 1000/=, 1500/= நாள், கிழமை, மாத சம்பளம். நண்பர்கள், தம்பதிகள் ஒரே இடத்தில் பிரசித்தி பெற்ற தொழிற்சாலைகளில் லேபல் பொதியிடல் மற்றும் ஹொட்டல்களில் O/L, A/L தகைமைக்குத் தொழில். தொழில் அடிப்படையில் உணவு / தங்குமிடம் இலவசம். வயது 18-50 வரை. ஆண். பெண் இருபாலாரும் சேர்த்துக்கொள்ளப்படுவர். கதுருவெல. மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று, திருகோணமலை, வவுனியா, நாவலபிட்டிய, கண்டி, நுவரெலிய, ஹட்டன்.

077 126 2571
No.40, Bus Stand, Upstaire, Kadurawela

**வேலைவாய்ப்பு**

கவர்ச்சிகரமான சம்பளம் பெற்றுக்கொள்ள எம்முடன் இணையுங்கள். இம்முறை A/L பரீட்சைக்குத் தோற்றிய உங்களுக்கு நிரந்தர தொழில் வாய்ப்பு. தொழிற்சாலைகள், தனியார்துறை, ஹொட்டல் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள், கன்டேனர் சாரதிகள், உதவியாளர்கள் மற்றும் கனரக / மென்ரக சாரதிகள். வயது 18 - 55. ஆண்/ பெண் இருபாலாரும் தேவை. தொழில் அடிப்படையில் 48,000/= வரை. தம்பதிகள் ஒரே இடத்தில் ஆள்சேர்ப்பு தற்போது. சிங்களம் பேசக்கூடியவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

077 556 1277

## கர்ப்பிணிகளுக்கு பழுதடைந்த பொருள் விற்றவருக்கு தண்டம்

வவுனியா, செப். 11

கர்ப்பிணிக்கு பழுதடைந்த உலர் உணவுப் பொருள்களை விநியோகம் செய்த வர்த்தகருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட கர்ப்பிணிக்கு 2 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்கவேண்டும் என்றும், கர்ப்பிணிகளுக்கு உலர் உணவு வழங்கும் ஒப்பந்தத்தை வர்த்தகருக்கு இரத்துச் செய்ய வேண்டும் என்றும் மன்று உத்தரவிட்டது.

வவுனியா, செட்டிகுளம் பிரதேசத்துக்குட்பட்ட கர்ப்பிணிகளுக்கு வர்த்தகர் ஒருவரால் பழுதடைந்த சத்துணவுகள் வழங்கப்படுகின்றன என்று செட்டிகுளம் பொதுச் சுகாதார பரிசோதகருக்குத் தகவல் கிடைத்தது. குறித்த வர்த்தக நிலையம் சோதனையிடப்பட்டது. அங்கு பழுதடைந்த மற்றும் வண்டு புகுந்த உலர் உணவு விற்கப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. வர்த்தகருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய் யப்பட்டது.

நேற்றுமுன்தினம் வழக்கு வவுனியா மாவட்ட நீதிவான் மன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குற்றம் ஏற்றுக் கொள்ளப் பட்டதை அடுத்து தண்டம் விதிக்கப்படடது. 300 மணித்தியாலங்கள் சமூக சேவையில் ஈடுபடுத்துமாறும் உத்தரவிடப்பட்டது. (ம-4,21,422)

## திருட்டுச் சந்தேக நபர்களுக்கு மறியலை நீடித்தது நீதிமன்று

தென்மராட்சிப் பிரதேச ஆலயங்கள் மற்றம் வீடுகளில் இடம் பெற்ற திருட்டுக்கள் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரு சந்தேக நபர்களின் விளக்க மறியலை சாவகச்சேரி நீதிமன்று கடந்த வியாழக்கிழமை நீடித்தது.

கொடிகாமம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து இருவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணை நடத்தியபோது ஆலயங்கள் மற்றும் குடியிருப்புகளில் இடம்பெற்ற திருட்டுக்களுடன் தொடர்புடைய நீரிறைக்கும் இயந்திரங்கள், மோட்டர்கள், ஒலிபெருக்கிச் சாதனங்கள், குத்துவிளக்குகள், சாமரங்கள் உள்ளிட்ட 5 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்களைக் கச்சாய், மீசாலை வடக்கு, கொடிகாமம் ஆகிய பகுதிகளில் மீட்கப்பட்டன என்றுபொலிஸார் தெரிவித்தனர். ஆலய பரிபாலன சபையினர், குடியிருப்பாளர்களால் ஏற்கனவே பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாடுகளுக்கமைய மீட்கப்பட்ட பொருள்கள் அடையாளம் காணப்பட்டன.

இரு சந்தேக நபர்களுக்கும் எதிராக தலா எட்டு வழக்குகள் வீதம் சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. அவர்களை நீதிமன்றில் முற்படுத்தியபோது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. கடந்த வியாழக்கிழமை மறியல் நீடிக்கப்பட்டது. (ம-4,9)

# மூன்று பாடசாலைகளுக்கு நேரில் சென்று ஆராய்ந்தார் கல்வி இராஜாங்க அமைச்சர்

### சரவணபவன் எம்.பியின் அழைப்பின் பேரில்



யாழ்ப்பாணம், செப். 11

வலிகாமம் வலயத்துக்குட்பட்ட மூன்று பாட சாலைகளுக்கு கல்வி இராஜாங்க அமைச்சர் இராதா கிருஷ்ணன் நேற்றுச் சென்றார். பாடசாலைகளின் தேவைகள் குறித்து அவர் ஆராய்ந்தார்.

மெய்கண்டான் மகா வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்த வரோதய கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கே இராஜாங்க அமைச்சர் சென்றார். நாடாளு மன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் அழைப்பின் பேரிலேயே அவர் அங்கு சென்றார்.

> மெய்கண்டான் மகா வித்தியாலயம், சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்த வரோதய கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கே இராஜாங்க அமைச்சர் சென்றார். நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் அழைப்பின் பேரிலேயே அவர் அங்கு சென்றார்.

பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையின் பிரதான மண்டபமான கந்தையா மண்டபத்தின் திருத்த வேலைகள், மலசல கூடம் அமைப்பது மற்றும் புதிதாக மூன்று மாடிகளைக் கொண்ட வகுப்பறைக்கட்டடம் அமைப்பது தொடர்பாக கல்லூரி நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார். மூன்று மாடிக் கட்டடம் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எதிர் வரும் மூன்று மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்படும் என்றார்.

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரின் பழைய மாணவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் ஆகியோர் அவர்களைச் சந்தித்தனர். சந்திப்பு வட்டுக் கோட்டையில் நடைபெற்றது. சந்திப்பில் கல்லூரியின் பௌதிக வளங்கள் மற்றும்அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரிக்குச் சென்ற அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினரும் கல்லூரியில் கலந்துரையாடல்கள் நடத்தினர். கல்லூரியின் சார்பில் கல்லூரி அதிபர், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். கல்லூரிக்கு அத்தியாவசியமாக ஒரு கேட்போர் கூடமும், வகுப்பறை மற்றும் விளையாட்டு அரங்கு உள்ளடக்கியதாக இரண்டு மாடி கட்டடங்கள் வழங்கப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தார். (ம-21)




edexcel PEARSON WOLVERHAMPTON CIOB RICS

BM Business Management
CSD Computing & Systems Development
CE Civil Engineering
QS Quantity Surveying
BMS Biomedical Science
LLB Law

BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

JAFFNA 077 710 2131
077 960 3753
COLOMBO 077 283 4595

UGC Recognized TVEC Approved

18 YEARS

BUILDING CAREERS - TRANSFORMING LIVES

Jaffna Campus
16, Point Pedro Road,
Jaffna

ISO 9001:2008 CERTIFIED

HOTLINE : 021 2219910 Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

# கல்வியைத் தொடர முடியாதுள்ள மாணவர்களுக்கு தொழில்துறை வழிகாட்டல் கண்காட்சி பக்கபலம்

## வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.11

கல்வியைத் தொடர முடியாத மாணவர்களுக்கும், எந்தத் துறையைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதில் குழப்பமடையும் மாணவர்களுக்கும் பக்கபலமாக அமையும் வகையில் தொழில்சார் வழிகாட்டல் கண்காட்சி அமைந்துள்ளது. இன்றும் கண்காட்சி நடைபெறவுள்ளதால் மாணவர்களும் பெற்றோர்களும் அனைவரும் சென்று பார்வையிட்டுப் பயனடைய வேண்டும்.

இவ்வாறு வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்தார்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் தொழில்சார் வழிகாட்டல் கண்காட்சி நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஆரம்பமானது. கண்காட்சியை வடக்கு மாகாண கல்வித் திணைக்களம், உளசமூக வளத்திணைக்களத்தின் ஊடாக ஏற்பாடு செய்தது. மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

எனது துணைவியார் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை சுட்டிக்காட்டி அங்கு வாழ்கின்ற மாணவர்கள் கசிப்புக் காய்ச்சி வியாபாரம் செய்ததன் காரணமாகப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தற்போது அவர்கள் வெளியில் வந்துள்ளனர். இவ்வாறன மாணவர்களை யார் கவனிக்கப் போகிறார்கள்?. அவர்களின் எதிர்கால நிலை என்ன? என அண்மையில் என்னிடம் கேட்டார். இங்கு எவ்வளவு பாடசாலைகள் இருந்தும் அவை என்ன செய்கின்றன என்ற கேள்வி கூட எழுகின்றது.

அவ்வாறான மாணவர்கள் ஏன் பாடசாலைக்கு வரவில்லை என்று சக மாணவர்கள் ஏன் அவர்களிடம் கேட்கவில்லை?. மாணவர்கள் ஏன் வகுப்பாசியரிடம் தெரிவிக்கவில்லை. வகுப்பாசிரியர்கள் பாடசாலைக்கு வராத மாணவர்கள் தொடர்பில் ஏன் அதிபர்களிடம் கூறவில்லை. அந்த மாணவர்களின் பெற்றோர்களிடம் அதிபர்கள் சென்று ஏன் உங்களது பிள்ளைகள் பாடசாலைக்கு வரவில்லை என ஆராயவில்லை?

மாணவர்கள் வழிதவறும் பட்சத்தில் பாடசாலைகளே பதில் சொல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அனைத்து பாடசாலைகளும் தமது மாணவர்களின் விவரங்களை இணையம் (online system) மூலமாகக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். நாம் மாணவர்களின் விவரங்களை ஒரு தொகுதிக்குள் கொண்டு வருவோமானால் எவ்வளவு மாணவர்கள் கல்வியில் ஈடுபடுகின்றனர்?. எத்தனை மாணவர்கள் ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தேர்ச்சி அடைந்து தமது கல்வியை தொடர்கின்றனர்?. எத்தனை பேர் ஜீ.சீ.ஈ.சாதாரண பரீட்சையுடன் கல்வியை இடைநிறுத்துகின்றனர் என்பனவற்றை இலகுவாக அறிய முடியும்.



எமது மாகாணத்தில் 13 ஆம் தரம் வரை கட்டாயக் கல்வி என்பதைக் கூறியிருக்கிறோம். இந்த இணையத் தொகுப்பை யாராவது வலயக்கல்விப் பணிப் பாளர்கள் அல்லது அதிகாரி கள் நடைமுறைப்படுத்தியிருக்கிறீர்களா?

இன்னும் சில மாதங்களில் தரம் 11 மாணவர்கள் சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ளனர். அவர்களில் எத்தனை பேர் தேர்ச்சியடையவுள்ளனர்?. பெரும்பாலும் ஒரு தொகுதி மாணவர்கள் மட்டுமே சித்தியடைகின்றனர். மற்றையவர்கள் பரீட்சையின் பின்னர் தமது கல்வியை விட்டு விலகுகின்றனர். விலகும் மாணவர்கள் என்ன செய்கிறார்கள்? எங்கு போகிறார்கள்? என்று யாருக்கும் தெரியாது. இவர்கள் தொடர்பில் வலயக் கல்விப் பணிப்பாளர்களும், பாடசாலை அதிபர்களும் அக்கறை எடுக்க வேண்டும். அதற்கான அதிகாரங்களும் உரிமைகளும் அவர்களுக்கு உண்டு. இந்தக் கண்காட்சி அவ்வாறான மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்.

தற்காலத்தில் மாணவர்கள் சாதாரணப் பரீட்சையில் தேர்ச்சி அடையாவிட்டாலும் அவர்களும் பட்டதாரிகளாக மாறக்கூடிய சூழ்நிலையை அரசு ஏற்படுத்தியுள்ளது. கண்காட்சியில் அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்கள் பல கலந்து கொண்டிருக்கின்றன. அனைத்து மாணவர்களும் கண்காட்சியில் கலந்து கொண்டு ப்யன்பெற வேண்டும். முக்கியமாக பெற்றோர்களும் கலந்து கொள்ளவேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு சிறந்த வழிமுறைகளை எடுத்துச் சொல்ல இது ஒரு நல்ல சந்தர்ப்பம். அனைவரும் கண்காட்சியில் கலந்துகொண்டு பயன்பெற வேண்டும்.- என்றார்.

நிகழ்வில் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் செல்வின் இரேநியஸ், கல்வி அபிவிருத்தி பிரதிப் பணிப்பாளர் பிரட்லி ஜனாத், கல்லூரி அதிபர் வேணுகா சண்முகரட்ணம், அரச மற்றும் தனியார்துறை அதிகாரிகள், பல பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(ற-4,ரி)

# இணைந்த நேர அட்டவணைக்கு இணங்குவதற்கு தயாராக இல்லை

## வடமாகாண இலங்கைப் போக்குவரத்துச் சபையின் இணைந்த தொழில்சங்கத்தினர் திட்டவட்டம்

வவுனியா, செப். 11

வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சால் தயாரிக்கப்படும் இணைந்த நேர அட்டவணை பக்கச்சார்பானது. அதற்கு இணங்கத் தயாரில்லை. தொழிற்சங்கத்தின் அனுமதியின்றி இணைந்த நேர அட்டவணையில் கைச் சாத்திடும் பிராந்திய முகாமையாளர், பிராந்திய செயலாற்று முகாமையாளர், சாலை முகாமையாளர்கள் எந்தச் சாலையிலும் பணியாற்ற முடியாது.



இவ்வாறு வடக்கு மாகாண இலங்கைப்போக்குவரத்துச்சபை சபையின் இணைந்த தொழில் சங்கத்தினர் தெரிவித்தனர்.

இணைந்த தொழிற்சங்கத்தினரின் ஏற்பாட்டில் வவுனியா, இலங்கைப் போக்குவரத்துச் சபை சாலையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர் சந்திப்பு நடத்தப்பட்டது. அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அங்கு தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாண சபையால் ஒரு பாதையில் தனியார் பஸ் ஸுக்கு 60 வீத சேவையும் இலங்கைப் போக்குவரத்து சபை பஸ்ஸுக்கு 40 வீத சேவையும் வழங்கப்பட்டுள்ளது. இலங்கைப் போக்குவரத்துச் சபை சிறந்த சேவையை வழங்கிவரும் வவுனியா-யாழ்ப்பாணம், வவுனியா-மன்னார், மன்னார்-யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் - முல்லைத்தீவு போன்ற சில பாதைகளுக்கு மட்டுமே பாதை அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த அட்டவணையால் எமது சாலைக்கு வருமான வீழ்ச்சி ஏற்படும். 2ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட எமது குடும்பத்தின் நிலை கேள்விக் குறியாகின்றது. பருவகால சீட்டு பெற்று உரிய நேரத்துக்கு செல்லவேண்டிய மாணவர்கள், உத்தியோகத்தர்களின் பயணங்களிலும் தாமதம் ஏற்படும். நாம் சேவையாற்றிய முக்கிய நேரங்கள் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளன.

தனியார் பஸ்கள் அதிகம் பயணிக்கும் வழித் தடங்களுக்கு நேர அட்டவணை தயாரிக்கப்படவில்லை. ஏனைய இடங்களைப்போல் 50க்கு50 என்ற வீதத்தில் சேவையில் ஈடுபடும் வகையில் அட்டவணை தயாரிக்கப்பட்டால் மாத்திரமே நாம் இணைந்த நேர அட்டவணைக்கு ஒத்துழைப்போம். பிராந்திய முகாமையாளர், பிராந்திய செயலாற்று முகாமையாளர், சாலை முகாமையாளர்களுக்கு நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிப்பதாவது உங்கள் பதவிக்காகவோ வேறு பதவிக்காகவோ தொழிற் சங்கத்தின் அனுமதி இன்றி இணைந்த சேவைக்கு கையொப்பமிட்டால் பதவிகளில் இருக்க முடியாது என்பதுடன் வட மாகாணத்தில் எந்த சாலையிலும் நீங்கள் பணியாற்ற நாம் அனுமதிக்கப் போவதில்லை.

இணைந்த நேர அட்டவணை பக்கச் சார்பானதாக காணப்படுவதனால் நாம் அதற்கு இணங்கத் தயாராக இல்லை.- என்றனர்.

(ற-21)

# மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமங்களுக்கு விரைவில் மின்

முல்லைத்தீவு, செப். 11

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட - இதுவரை காலமும் மின் இணைப்பு வழங்கப்படாத ஏழு கிராமங்களுக்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மாங்குளம் பிரதேசத்துக்குப் பொறுப்பான மின்அத்தியட்சகர் செந்தில்செல்வன் தெரிவித்தார்.

எமக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்பட்டவில்லை. இரவு வேளைகளில் பல இடர்களை சந்திக்கின்றோம். பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் விடியற்காலையில், இரவு வேளைகளில் தங்களுடைய கல்வியைத் தொடரமுடியாது பின்தங்குகின்றனர். ஏனைய மாணவர்களைப் போல் அவர்களும் பரீட்சைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும். மிக விரைவாக எங்களது கிராமங்களுக்கும் மின்சாரத்தைப் பெற்றுத் தாருங்கள்- என்று முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக மாங்குளம் மின் அத்தியட்சகர் செந்தில் செல்வன் தெரிவித்ததாவது-

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இளமருதங்குளம், வீரப்புராயன்குளம், மூன்றுமுறிப்பு, பொன்னகர், பூவரசங்குளம், விநாயகபுரம், ஒட்டங்குளம் ஆகிய கிராமங்களுக்கும், நெடுங்கேணி வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அனந்தபுளியங்குளம், நொச்சிக்குளம், சின்னப் பூவரசங்குளம் ஆகிய கிராமங்களுக்கும் தற்போது மின் சாரம் வழங்கப்பட்டுள்ளது. இதுவரைக்கும் மின்னிணைப்பு வழங்கப்படாது உள்ள சில கிராமங்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெறுகின்றன. அவற்றிற்கும் விரைவில் மின்னிணைப்பு வழங்கப்படும்.- என்றார்.

(ற-21,ரி7)

> “பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் விடியற்காலையில், இரவு வேளைகளில் தங்களுடைய கல்வியை தொடரமுடியாது பின் தங்குகின்றனர். ஏனைய மாணவர்களை போல் அவர்களும் பரீட்சைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும்.”

# மல்லாவி, மாங்குளம் பகுதிகளில் படைகளால் காணிகள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், செப். 11
முல்லைத்தீவு மாவட்டத்தில் மல்லாவி மற்றும் மாங்குளம் பகுதிகளில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த காணிகள் பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டன.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் மாங்குளம் துணுக்காய் வீதியில் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த பொதுக் காணி நேற்றுமுன்தினம் பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டு உத்தியோக பூர்வ விடுவிப்புப் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டது.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ்வரும் மல்லாவி நகரின் மத்தியில் இருந்த நிலம் நீண்ட காலமாகப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தது. அந்தக் காணி படையினரால் கடந்த வாரம் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.

மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள வன்னிவிளாங்குளம் பகுதியில் 10 ஏக்கர் நிலப் பகுதியில் அமைந்திருந்த துயிலும் இல்லக் காணி முழுமையாக நேற்றுமுன்தினம் விடுவிக்கப்பட்டது. வடக்கு மாகாணத்தின் அதிக நிலம் படையினரின் கட்டுப்பாட்டில்உள்ளமாவட்டமானமுல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போதே நிலவிடுவிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம-101)

# மூப்பன்குளத்தை விவசாயத்துக்கு பயன்படுத்தத் தடை

## வனவளத் திணைக்களம் மீது பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, செப்.11
முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள மூப்பன்குளம் 2013ஆம் ஆண்டு 25 மில்லியன் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டது. அந்தக் குளத்தைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதற்கு வனவளத் திணைக்களத்தினர் தடையாக இருக்கின்றனர்.

இவ்வாறு குற்றஞ்சாட்டினார்கள் பிரதேச மக்கள்.

சிறாட்டிக்குளத்தில் வசிக்கும் விவசாயிகள் இது குறித்துத் தெரிவித்ததாவது:

சிராட்டிக்குளத்தில் 46 குடும்பங்கள் வசிக்கின்றன. போருக்கு முன்னர் 90 குடும்பங்கள் இருந்த போதும் இப்போது குறைவானோரே வசிக்கின்றனர். மூப்பன்குளப் பகுதியில் விவசாயம் செய்தே நாம் எமது வாழ்வைக் கொண்டு நகர்த்தினோம்.

குளத்தைச் சீரமைத்துத் தர வேண்டும் என்று நாம் விடுத்த கோரிக்கைக்கு அமைய 2013 ஆம் ஆண்டு சீரமைப்புப் பணிகள் ஆரம்பமாகின. 2014ஆம் ஆண்டு சீரமைப்பு முடிந்தது. 25 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது. இப்போது குறித்த பிரதேசம்தமது ஆளுகைக்குட்பட்டது என்றுவனவளத்திணைக்களத்தினர் தெரிவிக்கின்றனர். விவசாயம் செய்வதற்குத் தடை விதித்துள்ளனர். நாம் விவசாயம் செய்வதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுக்க வேண்டும் - என்று தெரிவித்தனர்.

இது தொடர்பில் விவசாயிகள் எனது கவனத்துக்கு கொண்டு வந்தனர். குறித்த பிரதேசம் பெரும் காடு அல்ல. நாயுருவி பற்றைகளால் சூழப்பட்டுள்ளது. அந்தப் பகுதி விவசாயிகளின் நன்மைகருதி முன்னர் பதவியில் இருந்த பிரதேச செயலாளரால் தொண்டு நிறுவனம் ஒன்றின் உதவியுடன் 2 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் குளம் சீரமைக்கப்பட்டது. தற்போது குறித்த பகுதியில் விவசாயம் செய்ய வனவளத் திணைக்களம் தடை விதித்துள்ளது. குளத்தின் பயன்பாடும் அற்றுப் போயுள்ளது. இந்தப் பிரதேசத்தில் முன்னர் 130 ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யப்பட்டது - என்று மாந்தை கிழக்குப் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ம-101)

# குற்றங்களை தெரியப்படுத்த தொலைபேசி இலக்கங்கள்

வவுனியா, செப்.11
குற்றச் செயல்கள் மற்றும் விபத்துக்கள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு வவுனியா பொலிஸார் புதிய தொலைபேசி இலக்கங்களை அறிமுகப்படுத்தினர்.

இந்த நிகழ்வுபிரதிப்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தலைமையில் நேற்றுமுன்தினம்வவுனியாபொலிஸ் நிலைய அத்தியட்சகர் அலுலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்ட பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தொலைபேசி இலக்கங்களை உத்தியோக பூர்வமாக வெளியிட்டார். வவுனியா மாவட்டத்துக்குட்பட்ட பகுதிகளுக்கு 0766224949 என்ற இலக்கமும், மன்னார் மாவட்டத்துக்குட்பட்ட பகுதிகளுக்கு 0766226363 என்ற இலக்கமும் அறிமுகப்



படுத்தப்பட்டது.

நிகழ்வில் வவுனியா மாவட்ட உதவிச் செயலர் திரேஷ்குமார், வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் கே.கே.மஸ்தான், வட்க்கு மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன், நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினர் கிஷோர், வவுனியாதெற்குதமிழ் பிரதேச சபைச் செயலாளர் திருமதி சுகந்தி கிஷோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-21)

## வருடாந்த பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.11
யாழ். சைவ பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பொதுச் சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் செல்வவடிவேல் கேட்டுள்ளார். இந்தக் கூட்டம் நேற்றைய உதயனில் நேற்று நடைபெறும் என்று தவறாகப் பிரசுரமாகியுள்ளது. (ம-ரி)

## அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு தண்டம்

சாரத்திய அனுமதிப் பத்திரமின்றியும், அனுமதிப் பத்திரமின்றியும் வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்ற சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முன்தினம் 38 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் வரணியில் கொடிகாமம் பொலிஸாரால் குறித்த சாரதி கைது செய்யப்பட்டார். அவருக்கு எதிராக அனுமதிப் பத்திரம் இன்றி மண் ஏற்றியமை, சாரத்திய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியமை ஆகிய இரு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. சாரதி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சாரதி தன்மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டார். இரு குற்றங்களுக்கும் தண்டம் விதிக்கப்பட்டது. (ம-9)

## மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு உதவிகள்

வலி.வடக்கில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கும்செயற்பாட்டைகொழும்பு கொட்டாஞ்சேனை கிழக்கு லயன்ஸ் கழகத்தினர் லயன்ஸ் கழக பிராந்தியம் 7, 8, 9, 10 ஆகியவற்றுடன் இணைந்து முன்னெடுக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் வீமன்காமம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொட்டாஞ்சேனை கிழக்கு லயன்ஸ் கழகப் பிரதிநிதி லயன் பீ.மகேந்திரன், சர்வதேச லயன்ஸ் கழக 306 பி 1 மாவட்டத்தின் உள்ளக கழக நட்புறவுப்பிரிவு பிரதம இணைப்பாளர் லயன் சி.சுந்தரேஸ்வரன் ஆகியோரின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக 306 பி 1 மாவட்ட ஆளுநர் லயன் மருத்துவர் வை.தியாகராஜா கலந்து கொள்வார்.

நிகழ்வில் வலி. வடக்குப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள 400 இளம்பெண்களுக்கு உடுபுடைவைகளும், பார்வைக் குறைபாடு காணப்படும் 350 பேருக்கு மூக்குக்கண்ணாடிகளும், 115 முன்பள்ளிச் சிறார்களுக்கு கற்றல் உபகரணங்களும், 100 கர்ப்பிணிகளுக்கு போசாக்கு உணவுப் பொதிகளும், 100 குடியிருப்பாளர்களுக்கு தென்னம் பிள்ளைகளும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)





## தீர்த்திடுவாய் அன்னையே!

தெல்லிநகர் துர்க்கையின்
தெவிட்டா இன்பம் பெற்றிடவே
தெளிந்தோர் நாள்தோறும்
மகோற்சவம் காணவென்றே
திரள்கின்றனர் தெல்லியில் துர்க்கையே
தீர்த்திடுவாய் அவர் துன்பதுயரங்கள்

- தெல்லியூர்த் தேவி

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
இன்று (11.09.2016)
ஞாயிற்றுக்கிழமை
பத்தாம் திருவிழா



சப்பைரதம் தனிலேறி வருவாயம்மா!
அடியவர் கரங்களில் வடம்பிடித் திழுத்திட
அழகுறு சப்பரம் தனிலேறி
அங்கையில் சூல கபாலம் அபயம்
பாசாங் குசமும் ஏந்தியுமே
இடியென எம்மை வாட்டிடும் துயரம்
இடும்பைகள் யாவையும் ஓட்டியுமே
இனிதே வருவாய் எந்தாய் நீயே!
தேவியே விஷ்ணு துர்க்கையம்மா
அனுசரணை: வ.ஆறுமுகம் குடும்பத்தினர்
தெல்லிப்பழை
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்:
தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம்.




## சந்நிதியானே அருள்வாய்!

கண்குளிரக் காட்சியது தரும்வடி வேலனே!
காக்கும் திருமாலின் மருகனே, முருகனே!
சண்முகனே சரவணப் பொய்கையில் உதித்தவனே!
சாதனைகள் செய்த சூர சங்காரனே குகனே!
தண்டாயுதங்கொண்ட திருக்குமர குருபரனே!
தாண்டிட வேண்டுமையா தரணியில் நாம் துயரமதை
பண்டைப் பெருமை மிகு தொண்டமான் ஆற்றூரில்
பாடுகள் போக்கியருள் பாலிக்கும் பெருமானே!

– நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்



செல்வச்சந்நிதியானுக்கு
இன்று (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை
பதினொராம் திருவிழா
திருவிழா சிறப்புற வாழ்த்துவோர் :
அன்னை முத்துமாரி பஸ்சேவை
கொழும்பு ⇄ யாழ்ப்பாணம் ⇄ பருத்தித்துறை
நான்கு புதிய A/C பஸ்களுடன்
இரு வழிச் சேவையை பகல்,
இரவு என வழங்கிவருகிறது




வீட்டில் இருந்தவாறே பயணச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
உடனடித் தொடர்புகளுக்கு

| | |
|---|---|
| கொழும்பு | + 94 77 544 9251 |
| யாழ்ப்பாணம் | + 94 77 544 8503 |
| வல்வெட்டித்துறை | + 94 21 226 1977 |
| | + 94 77 544 7359 |
| நெல்லியடி | + 9477 285 0285 |
| பருத்தித்துறை | + 9477 555 2973 |

| | காலை | இரவு |
|---|---|---|
| பருத்தித்துறை | 7.00 am | 7.00pm |
| யாழ்ப்பாணம் | 8.00 am | 8.00pm |
| வெள்ளவத்தை | 7.30 am | 7.30pm |
| கொட்டஹேனா | 8.30 am | 8.30pm |

Web www.annaimuthumari.com
www.valvaitourism.com


எம்மை விடவும் விலை குறைவா?
நாமும் அதே விலைக்கு.
வேறு சுப்பர் மார்கட்டுகளில் கீழுள்ள உற்பத்திகளின் விலைகள் எம்மை விட
குறைவெனின் நாம் தருவோம் அதே விலைக்கு.*
அனைத்து சலுகைகளும் 2016 செப்டெம்பர் 09 முதல் 14 வரை மட்டுமே.
ரூ.167/- ரூ.162/-
மைசூர் பருப்பு 1kg**
ரூ.88/- ரூ.75/-
ஸ்டீம்ட் சம்பா அரிசி 1Kg**
ரூ.258/- ரூ.249/-
கடலை 1kg**
Classic
ரூ.186/- ரூ.166/-
கிளாஸிக் மெக்கரல் 425g
RATTHI
ரூ.325.00 ரூ.299.00
ரத்தி ஸ்மார்ட் பக்கற் 400g**
Astra
Good Start
Fat Spread
ரூ.375.00 ரூ.329.00
அஸ்ட்ரா மாஜரின் 500g
Fortune
ரூ.400.00 ரூ.339.00
Fortune மரக்கறி எண்ணெய் 1Ltr
Sprite
ரூ.210.00 ரூ.189.00
ஸ்பிறைட் 2Ltr
ரூ.215.00 ரூ.169.00
வட்டவல கஹட்ட 200g
Maggi
Real Coconut Milk Powder
ரூ.320.00 ரூ.288.00
மெகி கொக்கனட் மில்க் பவுடர் 300g
SODA
ரூ.140.00 ரூ.109.00
எலிபன்ட் சோடா 1.5Ltr
KIST
Mango Nectar
ரூ.240.00 ரூ.189.00
கிஸ்ட் மாம்பழ நெக்டார் 1Ltr
Stella
CURRY
ரூ.50.00 ரூ.42.00
ப்ரிமா ஸ்டெல்லா கறி நூடுல்ஸ் 75g
Ensure
Life
ரூ.4390.00 ரூ.3949.00
என்சுவர் மில்க் பவுடர் வெனிலா 850g
ரூ.325.00 ரூ.259.00
கிஸ்ட் டுமாட்டோ சோஸ் 400g
ரூ.215.00 ரூ.189.00
வெஸலின் ஹெல்தி வைட் க்ரீம் 100ml
Clogard
ரூ.130.00 ரூ.109.00
க்லோகார்ட் பற்பசை 160g
**அதிகபட்சம் 3 அலகுகள் / Kg மட்டுமே. இருப்பு உள்ளவரை மட்டுமே.
இப்பொழுதே காகில்ஸ் லோயல்டி மெம்பராகினால்
ரூ.500 பெறுமதியான ஷொப்பிங்
இலவசம்
Cargills
STAR
Cargills
food city
வீடு செல்லும் போது

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு





## தேவை



### வீடு விற்பனை

மாடி வீடு நான்கு பரப்பு காணியுடன் பூந்தோட்டம் வவுனியாவில் விற்பனைக்கு உண்டு. இக்கட்டடம், நில தளத்தில் ஒரு வீடும், கடையும் மற்றும் முதலாம் மாடியில் இரண்டு வீடுகளும் கொண்டது. தொடர்பு கொள்ள

077 3783305 / 077 798 1995 அனுகவும்

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Honda CD 200 மற்றும் CD 125 Twin மோட்டார் சைக்கிள்கள் விற்பனைக்குண்டு.

077 985 0005

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் பார்மசி ஒழுங்கை. சாத்தாவத்தை வைரவர் கோயில் முன்பாக 8½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

077 365 5824

### காணி விற்பனைக்கு

யாழ். கொக்குவில் கிழக்கு. இல. 60. உடையார் லேனில் 3¾ பரப்பு வெற்றுக்காணி சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு.பகுதியாகவும் கொடுக்கப்படும்

021 221 3632, 077 751 3872

### வாகனம் விற்பனைக்கு

Toyota Townace CR 27 Model வாகனம் விற்பனைக்குண்டு.

077 757 1931, 077 563 1415

### காணி வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில். யாழ் பல்கலைக்கழகம். நொதேர்ன் சென்றல் வைத்தியசாலைக்கு மிக அருகில் அமைந்துள்ள 1½ பரப்புக் காணியோடு நான்கு(04) அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உள்ளது.

076 975 4410, 076 977 0175

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், துரையப்பா லேன், ஈச்சமோட்டை வீதி, 27/2ஆம் இலக்கத்தில் உள்ள நிலப்பரப்பு 2 குளி 0.25 உம் வீடும் விற்பனைக்குண்டு.

077 022 9762

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் செல்லர் வீதியில் நிலப்பரப்பு 4 குளி 04.36 வெற்று ஆதனம் விற்பனைக்குண்டு.

072 437 0172

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர், கோயில் வீதியில் வீட்டுடன் கூடிய 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

076 857 3798, 077 871 5430

### காணி விற்பனை

நல்லூர்,செல்லர் வீதியில் 5 - 1/4 பரப்பு விசாலமான சதுரக்காணி விற்பனைக்குண்டு (செம்மணி வீதியிலிருந்து 100 யார் தூரத்திலுள்ளது)

0776033311

### வீடு விற்பனை

கொக்குவில் சந்திக்கு அருகாமையில் (Opposite to Kamala Hospital & Near Hindu College) K.K.S வீதியில் 2 பரப்பு காணியுடன் கூடிய மாடி வீடு விற்பனைக்கு உண்டு

076 726 9953

### தேவை

19 லீற்றர் வெற்றுத் தண்ணீர் போத்தல்கள் தேவை. (நல்ல நிலையிலுள்ள)

தொடர்பு: 077 8585348

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. (கொக்குவில், தாவடி, சுதுமலை)

077 204 8541

### வீடு வாடகைக்குத் தேவை

நல்லூரில் வீடு வாடகைக்குத் தேவை. கோயில் வீதி, நாவலர் வீதி, பருத்தித்துறை வீதி மற்றும் பிரதான வீதிகளில் விரும்பத்தக்கது.

077 362 7055, 077 468 2951

### வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல புடைவையகத்துக்கு 30 வயதுக்குட்பட்ட அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் இருபாலாரும் தேவை.

077 352 6957, 077 465 2744

### தேவை

- Assistant Accountant
- Accounts Clerk

தகுதியானவர்கள் சுயவிவரக்கோவையுடன் 12.09.2016 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு நேரில் வரவும்.

31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
076 987 3520

### வேலையாள்கள் தேவை

அம்பனை, தெல்லிப்பழையில் அமைந்துள்ள அலுமினியம் தொழிற்சாலைக்கு பானை உற்பத்தி செய்யும் இயந்திர வேலை பழகுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. பயிற்சிக் காலத்தில் ரூபா 9000/- வழங்கப்படும் ஞாயிற்றுக்கிழமைகளில் நேரில் வரவும்.

077 348 3557/ 021 224 3338

### தேவை

பருத்தித்துறை வடை தேவை. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தரமான பருத்தித்துறை வடை தேவை. சப்ளை செய்யக்கூடிய தயாரிப்பாளர்கள் தொடர்பு கொள்ளவும்.

075 491 8984

### மணமகன் தேவை

யாழ். இந்து 1975 திருவாதிரை 38 பாவம் Bsc (Maths) ஆசிரியைக்கு சொந்த வியாபாரம் அரச தொழில் புரிபவர்கள் விரும்பத்தக்கது. (விவாகரத்து செய்து பிள்ளைகள் அற்றவரும் விண்ணப்பிக்கலாம்) வெள்ளவத்தை சாயிநாதன் திருமண சேவை

Email: saainathan.lk@gmail.com 0112364146, 0777 355 428

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 ஆம் ஆண்டு பிறந்த 22 பாவக்கிரகமுடைய லக்கினத்தில் செவ்வாயும் அனுசநட்சத்திரமும் உடைய சொந்த தொழிலிலுள்ள மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

தொடர்பு: 077 822 2446

### மணமகன் தேவை

யாழ் இந்து 1990 ஆம் ஆண்டு மூல நட்சத்திரம் 4ஆம் பாதத்தில் பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை. வெளிநாடு விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை.

தொடர்பு: 077 480 9230

### உதவியாளர் தேவை

யாழ் நகரில் உள்ள வயதான குடும்பத்திற்கு பெண் உதவியாளர் தேவை.

தொடர்பு: 021 221 7074

### தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நோயாளர் பராமரிப்புச் செய்து வரும் நிறுவனத்துக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. வயது 20-45 வரை. சம்பளம் 20.000/= இற்கு மேல் வழங்கப்படும். மேலதிக தொடர்புகளுக்கு.

077 700 6803, 077 374 6448

### வேலையாள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் மொத்த, சில்லறை வணிக நிலையத்துக்கு வேலை செய்வதற்கு ஆண் வேலையாள் தேவை. யாழ்.நகரை அண்மித்த பிரதேசத்தில் வசிப்பவராகவும், வேலை அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

077 728 3811

## ஏனையவை

### விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### வீடு வாடகைக்கு

யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையாக சிவகுருநாதர் வீதியில் இரண்டு அறைகள் கொண்ட A/C வசதி, இணைந்த குளியலறை வசதி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

076 601 8862, 077 082 2707
ஞாயிறு பகல் ஒரு மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும்.

### பெயர்மாற்றம்

புங்குடுதீவு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **ஸ்ரீரங்கன்** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **தியறி ஸ்ரீரங்கம்** என பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

தியறி ஸ்ரீரங்கம்.

### மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1983 ஆம் ஆண்டு பிறந்த ரேவதி நட்சத்திரம் செவ்வாய் தோசமற்ற சொந்த தொழிலிலுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 076 579 1987

### MIS Security Services

கொழும்பு MIS Security Serviue இற்கு உடனடியாக Security officers தேவை. கொடுப்பனவு மாதம் ரூபா 30.000 இற்கு மேல். தங்குமிடம் இலவசம்.

077 767 2057 பாக்கியநாதன்
077 767 2098 M.I. Samath

### வகுப்பு

பல வருட அனுபவமிக்க ஆசிரியரால் O/L பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கான கணிதம் 3 மாத மீட்டல் வகுப்புக்கள் (பழைய/ புதிய பாடத் திட்டம்) வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் கற்பிக்கப்படும். அத்துடன் தரம் 4 முதல் தரம் 10 வரையான வகுப்புக்களுக்கும் கற்பிக்கப்படும்.

077 937 0228

### வீடு வாடகைக்கு

கிளிநொச்சி A9 வீதியில் மக்கள் வங்கி, இலங்கைவங்கிக்கு எதிராக மூன்று அறை, கோல், சமையல் அறை கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 326 8381

### வீடு வாடகைக்கு விடப்படும்

உதயநகர் மேற்கு, கிளிநொச்சியில் சோழவளம் ஹொட்டலுக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

077 635 1876

### மணமகள்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1970, விசாகம் 2ஆம் பாதம். 8இல் செவ்வாய் கி.பா 55 உடைய தொழிலதிபர் மணமகனுக்கும்

1980 அனுசம் 2ஆம் பாதம். கி.பா -33. லண்டன் PR. கொம்பியூட்டர் இஞ்சினியர் மணமகனுக்கும்

1983 ஆம் ஆண்டு மணமகனுக்கும்

ஓரளவு படித்த குடும்பப்பாங்கான மணமகள்மார் தேவை.

தொடர்பு:VIMB
077 273 4703

### Physics Personal Class

A/L Physics வகுப்புக்கள் குழுவாகவும் மற்றும் தனியாகவும் யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய இடங்களில் கற்பிக்கப்படும்.

Teached By: V.Thusananth (BSc.Eng)
077 565 9959, 077 078 2730

### வீடு வாடகைக்கு

யாழ் நகரின் மையப்பகுதியில் (பிறவுண் வீதி) சகல வசதிகளுடன் கூடிய 4அறைகள். இணைந்த குளியலறை. 2பெரிய விறாந்தை வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய புதிய வீடு வாடகைக்கு.

072 699 5175 / 077 382 0866

### காணிகள் விற்பனைக்கு உண்டு

தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் (துர்க்கை அம்மன் கோயிலுக்கு அருகில் உள்ள வீதியில்) வீடு கட்டக்கூடிய 3 பரப்புக் காணியும், அம்பனைச் சந்திக்கு சிறிது தூரத்தில் அளவெட்டி றோட்டிற்கு கிட்டவாக 6பரப்பு வயல் காணியும் விற்பனைக்குண்டு.

011 250 0021/ 077 025 2391

### மணமகள் தேவை


யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981 ஆம் ஆண்டு பிறந்த 20 பாவக்கிரகமுடைய 4இல் செவ்வாயும் மிருகசீரிட நட்சத்திரமும் உடைய யாழ் நகரில் இயங்கும் பிரபல நிறுவனத்தில் முகாமையாளராகக் கடமையாற்றும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

தொடர்பு: 077 672 0527

# மரண அறிவித்தல்

## சின்னத்துரை கந்தசாமி

(கொழும்பு பொன்னுதுரை & கோ முன்னாள் உத்தியோகத்தர்)



சங்கானை மேற்கு, வடலியடைப் பைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கு, கொடிகாமத்தை வதிவிடமாக வும் கொண்ட சின்னத்துரை கந்தசாமி 09.09.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - காமாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் (ஓய்வுநிலை ஆசிரியை - கச்சாய் தமிழ்க்கலவன் பாடசாலை) அன்புக் கணவரும், மதிவதனி, மனோரமணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், அகிலானந்தன், கீதாம்பிகை ஆகியோரின் அன்பு மாமனாரும், தனிஷா, லவின் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் நவமணி (ஓய்வுநிலை ஆசிரியை - இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம்), காலஞ்சென்ற தவமணி ( ஓய்வுநிலை ஆசிரியை - பண்டத்தரிப்பு மகளிர் ம.வி) மற்றும் கனகமணி, கலாதேவி, சுதந்திராதேவி (ஓய்வுநிலை ஆசிரியை - சுழிபுரம் விக்டோரியா கல்லூரி), ஞானதேவி (ஓய்வுநிலை ஆசிரியை - திருகோணமலை), லீலாவதி (ஆசிரியை - பண்டத்தரிப்பு கலைமகள் வித்தியாலயம்), சிவநிதி (ஆசிரியை திருகோணமலை) ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

**021 205 0368** (J/4509) (11,18)

# மரண அறிவித்தல்



## திருமதி புவனேஸ்வரி (செல்லம்) பன்னிருகரம்

அல்வாய் வடக்கு வயலைப் பிறப்பிடமாகவும், ஆழக்கிணற்றடி, பொலிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புவனேஸ்வரி (செல்லம்) பன்னிருகரம் 09.09.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அருமைப் புதல்வியும், பன்னிருகரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வடிவேலின் (இராசையா) அன்புச் சகோதரியும், ஜெயக்கொடி (சுவிஸ்), மின்னொலி (சுவிஸ்), வெண்ணிலா ஆகியோரின் அன்புத் தாயும், தெய்வநாயகி, திருநாவுக்கரசு, இராசநாயகம் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான இராசா, நாகமுத்து மற்றும் நல்லையா, அஞ்சுகம், இராசம் ஆகியோரின் மைத்துனியும், குந்தவி, வைஸ்ணவி, பிரேந்திரா, திருசிகா, வைசிகன், தாயகன், நிலாஜினி, நிதார்ஜன், காலஞ்சென்ற நிரோச் மற்றும் நிலான், தனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆழக்கிணற்றடி, பொலிகண்டி,**
**கொற்றாவத்தை.**
**0775261769**

(N/135)(10.18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி சின்னத்தம்பி

சாவகச்சேரி, தனங்கிளப்பைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, டச்சு வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சின்னத்தம்பி நேற்று (10.09.2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - பொன்னாச்சி தம்பதியரின் ஏக புத்திரியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கமுத்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் பாசமிகு மனைவியும், தேவயோகம் (உப அதிபர் கலைமகள் தமிழ் வித்தியாலயம் கொழும்பு - 14), சிவயோகன் (ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ் யாழ்ப்பாணம்), நாகராசா (ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ் யாழ்ப்பாணம்), மல்லிகா (முன்னாள் ஆசிரியை - நல்லயான் மகளிர் வித்தியாலயம்), தவமலர் (கொ/இந்துக் கல்லூரி), தவராணி (லண்டன்), சிவகுமாரன் (VSS ரேடர்ஸ், VSS அரிசி ஆலை வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயும், இராஜவனிதை, இராஜேஸ்வரி, சிவராசா ( STC சிவா ரேடிங் கம்பனி கொழும்பு - யாழ்ப்பாணம்), தயாபரன் (கொ/இந்துக் கல்லூரி - பம்பலப்பிட்டி), சிவகுமார் (லண்டன்),கேதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், சுஜிகரன் (STC ரேடர்ஸ்), யதுர்சன், மதுசா, டூபிகா, ரூபினி, கோபிலன், டினோஜா, சேந்தன், கஜானா, ஷியாம் சஜீவன், கீர்த்தனா, பிரிண்தா, தர்ஷிகா, யதுர்ஷிகா, பிரவீணன், பிரணவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், வருணி, ஹாசிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2016) ஞாயிற்றுக் கிழமை டச்சுவீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் சாவகச்சேரி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்



மலர்வு
22.05.1942

உதிர்வு
10.09.2016

**டச்சு வீதி,**
**சாவகச்சேரி**

(சி.26136) (13.18)

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## புரொஸ்ரேட் சுரப்பியை பாதுகாப்போம்


### புரொஸ்ரேட் பிரச்சிகைள்
### PROSTATE TROUBLE

வயதான ஆண்களில் வயதுடன் புரொஸ்ரேட் சுரப்பியானது பெரிதாகி அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டிய நிலை, குறிப்பாக இரவில் கூடுதலாக காணப்படும்.

சிறுநீர்ப்பையில் மீதமாகும் சிறுநீர் சேகரிப்பால் அழற்சி, அடிக்கடி ஏற்படும் சிறுநீர் தொற்று, புரொஸ்ரேட் புற்று நோய் ஆகியவை மேலும் ஏற்படும் பிரச்சினைகளாகும்.

மைது உன்னத நிரூபிக்கப்பட்ட ஆயுர்வேத மருந்து குணம்குறிகளை மாற்றி தொழிற்பாட்டை சீராக்கி சிக்கலான சிகிச்சையையும் தவிர்த்துக்கொள்ள வைக்கிறது

**Hotline: 0777555600**
**0777708310**
**0777708330**



FAIR PHARMA (PVT) LTD

செலிங்கோ ஹவுஸ், 10வது மாடி கிழக்கு, இல:69, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01.

**Tel:0114 388200, 4 388 100, 4 388 101, 4 388 102**

Web: www.ayurveda.lk E-mail: fairpharmasrilanka@yahoo.com

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA, BOI & ISO 9001: 2008 QMS CERTIFIED COMPANY

## ஜீவகவாத நிவாரணி

தலைவலி, காதுவலி, பல்வலி, தடிமல், இடுப்பு வலி, முதுகு வலி, தசை வலி, கெண்டை பிறள்வு, முழங்கால் வலி மற்றும் வீக்கம், முடக்கு வாதம், விரல்கள் கைகால் விறைப்பு, உளுக்கு, வீக்கம், கழுத்துச் சுழுக்கு, குத்துவலி, கொழுக்கல், நரம்புசார் வலிகள், பக்கவாதம், கீழ் பாதம் அரிப்பு மற்றும் வீக்கம், வாதம், விறைப்பு வாதம் என்பவற்றின் போது வெளிப்பூச்சுக்குப் பொருத்தமான உடன் நிவாரணம் தரும் கை கண்ட ஒளடதமாகும்.

கண்களிலோ, புண்களிலோ பூசுவதைத் தவிர்க்கவும்

**Manufactured by:**
**Jeewaka Herbal Products (pvt)Ltd, Yakkala.**

சந்தைப்படுத்துவோர் - சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்தி சிக்னல் லைற்றுக்கு அருகில்)
**021 222 2567**

## Diamond Cement Block Machines
## கொங்கிரீட் கல் இயந்திரங்கள்





சகல விதமான கொங்கிரீட் கற்களையும் அதிவிரைவாகவும் தரமானதாகவும் தயாரித்துக் கொள்ள Diamond இயந்திரங் களைப் பயன்படுத்துங்கள்.

Diamond high quality Cement Block Machineries

No.112, Pahala Bomiriya, Kaduwela, Sri Lanka
P.No: 011 2539 155, Tamil - 076 994 6575, English - 077 750 7024

## TERASAKI TECS

**டெக்ஸ் MCB ஸர்கிட் பிரேக்கர்...**
இப்போது,
**மேலதிக பாதுகாப்புக்கான**
மேம்படுத்தப்பட்ட
தொழில்நுட்பங்களுடன்.




இந்தோனேசியாவில் தயாரிக்கப்பட்டது
(MCB'S AND ISOLATORS)
விலை ரூபா. 370/= முதல்.

Rated Current – 2A - 63A
Short circuit level –
6kA ( Ex-stock)
10kA (Import & Supply)
Number of Poles – 1P – 4P
Tripping Class (curve) – C , D

ELCB's - பெற்றுக்கொள்ளலாம்.

டெக்ஸ் MCB ஸர்கிட் பிரேக்கர்கள் IEC 60898 தராதரத்துக்கு அமைய தயாரிக்கப்படுபவை. இவற்றை போதிய இடைவெளி இல்லாது வாடிக்கையாளர் பொருத்தும் போது ஏற்படக்கூடிய மேலதிக வெப்பத்துக்கு ஈடு கொடுக்கும் வண்ணம் இவற்றின் தொழில்நுட்ப தன்மை இப்போது மேலும் மேம்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏக விற்பனை பிரதிநிதி

Rotax Limited

332, காலி வீதி, கொழும்பு 04
தொ: +94 -115 574000 / 112 556750
மின்: rtx@rochegroup.lk

## வீடு, கடை வாடகைக்கு விடப்படும்

இல.85, மில் வீதி, வவுனியா வில் 2 மாடி கடையுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**077 440 3260- கிருஷ்ணா**

## வாடகைக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு முன்பாக இல.8, புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள் இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்குண்டு.

**011 250 4281, 071 299 1256**

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகரசபைக்கு உட்பட்ட கடற்கரை வீதியையும், கடற்கரையையும் முன்புறமாகக் கொண்டு வதிவிடத்துக்கும் உல்லாச விடுதிக்கும் சிறந்ததான ஒரு ஏக்கர் நிலம் உண்டு.

**021 226 4202 / 011 267 4599**

## உடற்பருமன் கொண்டோருக்கு ஓர் அற்புதமான செய்தி (2 வாரங்களில்)

ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது. 2 வாரத்தில் நல்ல அழகான மேனியுடன் திகழ

**ஆயுர்வேத கெர்வல் ஒளடதம்**
**(பால்மா, குளிசை, டொனிக், கிறீம்)**
**விலை 3500/=, 5500/=, 9000/=**

உடல் எடை கூட்டுதல், குறைத்தல், ஊளைச்சதை, மார்பு கூட்டுதல், குறைத்தல், வயிற்றுக் கோளாறு, நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் அனைத்துக்குமான ஆயுர்வேத மருந்து விற்பனைக்கு உண்டு.

ஆச்சரியம் வயிறு, மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எம்மிடம் உண்டு

எங்களிடம்

மேலும், முகப்பரு, கண்கருவளையம், முகச்சுருக்கம், உதடு கறுப்பு, முதுகு, கழுத்து, கை, கால், கறுப்பு நீக்கும் கிறீம், முகம் தாடைகளில் தேவையற்ற ரோமங்கள் மற்றும் காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.

**விலை 2500/= 5500/=**

**தலைமுடி வளரச்செய்யும் ஆயுர்வேத எண்ணெய் விற்பனைக்குண்டு.**

**077 210 6155,**
221, நாவலர் றோட் (பிறவுன் றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

## வேலைவாய்ப்பு


### உயர்தர பரீட்சை முடிந்த உங்களுக்கான தொழில்வாய்ப்பு

விவசாயத் துறையில் முன்னிலை வகிக்கும் பியூச்சர் கிறீன் வேல்ட் எமது நிறுவனத்துக்கு வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- அடிப்படைச் சம்பளம்
- போக்குவரத்து
- தரகுப்பணம்
- தொலைபேசிக் கட்டணம்
- EPF, ETF
- வெளிநாட்டு சுற்றுப்பிரயாண வாய்ப்பு

கீழ்வரும் முகவரிக்கு 25.09.2016 இற்கு முன்னதாகத் தங்களது சுயவிபரக் கோவைகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**No.32, Old Park Road, Chundukuli, Jaffna.**



## கைத்தொழில் வியாபாரம் விற்பனைக்கு

பெயின்டுகளையும் அதனுடன் தொடர்புள்ள பொருட்களையும் தயாரித்து சந்தைப்படுத்தும் முழு அளவிலான செயற்பாட்டில் உள்ள கைத்தொழில் வியாபாரம் உடனடி விற்பனைக்கு உண்டு.

மேல் மாகாணத்தில் அமைந்துள்ள நவீன தொழில்நுட்பத்திலான உற்பத்தி ஆலை உயர் தரத்திலான Emulsion, Enamel, Anti-Crossives மற்றும் இவற்றுடன் தொடர்புள்ள பொருட்களை உற்பத்தி செய்து வருகிறது. இந்த ஆலை ISO, SLS சான்றிதழ் பெற்ற ஆலையாகும்.

கம்பனியின் உற்பத்திப் பொருட்கள் சந்தைப் படுத்தப்படும் வணிக நாமம் கடந்த 37 வருட கால செயற்பாட்டில் பெரும் பிரபல்யத்தை சம்பாதித்துள்ளது. கடந்த நான்கு வருடங்களாக புதிய இயந்திர சாதனங்களும் தொழில்நுட்பமும் அறிமுகம் செய்யப்பட்டதிலிருந்து உச்ச கட்டத்தில் நாடு பூராவும் பெயரும் புகழும் பெற்றுள்ளது.

சாத்தியமான முதலீட்டாளர்கள் மேலும் தகவல்களை அறிவதற்கு அல்லது நேரில் சந்திப்பதற்கு 0774 772 777 தொலைபேசி இலக்கத்தில் உரிய அதிகாரியுடன் தொடர்பு கொள்ளவும்.

கருத்து வெளிப்பாடுகளை கீழ்காணும் முகவரிதாரருக்கு கைப்பேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி ஆகியன உள்ளிட்ட தொடர்பு விபரங்களுடன் இந்த விளம்பரம் வெளியாகி 10 நாட்களுக்குள் தபால் மூலம் அனுப்பி வைக்கவும். கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் "Expression of Intent" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

The Advertiser
5th Floor, No.10, R. A. De Mel Mawatha
Colombo 3.

# வியாபார உரிமம் பெறத் தவறிய கல்வி நிலையங்கள் மீது வழக்கு


கிளிநொச்சி, செப். 11
கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபைக்கு உட்பட்ட 9 தனியார் கல்வி நிறுவனங்கள் வியாபார உரிமம் பெறவில்லை. அவற்றின் இயக்குநர்களுக்கு எதிராக கிளிநொச்சி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
இவ்வாறு கரைச்சி பிரதேச சபை செயலாளர் கம்சநாதன் தெரிவித்தார்.
கரைச்சி பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற தனியார் கல்வி நிலையங்களுடனான கலந்துரையாடலின்போது கரைச்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் இயங்குகின்ற தனியார் கல்வி நிறுவனங்கள் வியாபார உரிமம் பெற்றே இயங்க வேண்டும் என்று கரைச்சி பிரதேச செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை குறித்து பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்ததாவது:
பிரதேச செயலகத்தில் அண்மையில் நடந்த கூட்டத்தின் போது பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இயங்குகின்ற தனியார் கல்வி நிறுவனங்கள் வியாபார உரிமம் பெற்றே இயங்க வேண்டும் என்றும் ஓகஸ்ட் 31 ஆம் திகதி வரை வியாபார உரிமம் பெறமுடியும் என பிரதேச சபையால் தெரிவிக்கப்பட்டது. குறித்த காலப்பகுதிக்குள், இந்தப் பகுதிக்குள் இயங்கும் 9 தனியார் நிறுவனங்கள் வியாபார உரிமம் பெறவில்லை. அவற்றின் இயக்குநர்களுக்கு எதிராக கிளிநொச்சி நீதிவான் மன்றில் நேற்றுமுன்தினம் வழக்கு தொடரப்பட்டது - என்றார். (ற-21,ரி3)

# இன்று மின் தடை

யாழ்ப்பாணம், செப்.11
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணி வரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர்அறிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் வில்லூன்றி, பண்ணைப்பிரதேசம், கோணாந்தோட்டம், சிவன் பண்ணைவீதியில் ஒரு பகுதி, கே.கே.எஸ். வீதியில் முட்டாசுக்கடை சந்தியிலிருந்து துரையப்பா விளையாட்டரங்கு வரை, யாழ்ப்பாணம் 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் குறுக்குதெருக்களின் ஒரு பகுதி, சப்பல் வீதி, வேம்படி வீதியின் ஒருபகுதி, யாழ்.பிரதான வீதியில் துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து விஜிதா கபே வரை, உரும்பிராய், விளாத்தியடி, அங்கிலிப்பாய், கோண்டாவில், கோண்டாவில் போக்குவரத்துச் சபை பஸ் தரிப்பிடம், குமரக்கோட்டம் (இணுவில்), இராச வீதி (கோப்பாய்), கோப்பாய் கிருஷ்ணன் கோயில் பிரதேசம், பொற்பதி புகையிரத வீதிச் சந்தி, திருநெல்வேலி ஒரு பகுதி, கோப்பாய் கல்வியியற் கல்லூரி, கோப்பாய் இராணுவ முகாம், கோண்டாவில் வோட்டர் வேர்கஸ், இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், யாழ்.பொது நூலகம், மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தொகுதி, தேசிய நீர்வழங்கல் வடிகால் சபையின் பிராந்தியமுகாமையாளர் அலுவலகம் ஆகிய இடங்களிலும் -
கிளிநொச்சியில் அறிவியல்நகர், விவேகானந்தநகர், பாரதிபுரம், மலையாளபுரம், டொன்பொஸ்கோ, வன்னி விளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஐம்பது வீட்டுத்திட்டம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான் , தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதிநகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், கரைச்சிக்குடியிருப்பு, முல்லைத்தீவு நகரம், உன்னாப்புலவு, வட்டுவாகல், செல்வபுரம், முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் (கச்சேரி), முல்லைத்தீவு வைத்தியசாலை, கூள்மென் ஐஸ் தொழிற்சாலை, MAS Intimate, MAS Active, பெறியியல் பீடம், விவசாய பீடம், பார்ம் கவுஸ் North Cargill's Agrifoods, 66ஆம் இராணுவ படைமுகாம், பிள்ளையார் அரிசி ஆலை, துணுக்காய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை அகிய இடங்களிலும் -
வவுனியாவில் தோணிக்கல் சிவன்கோயில் பிரதேசம், குட்செட்வீதி ஆகிய இடங்களிலும் -
மன்னாரில் உயிலங்குளத்திலிருந்து அடம்பன் வரை, இத்திக்கண்டல், நிலாச்சேனை, வேட்டையன்முறிப்பு, மினுக்கன், பாப்பாமேட்டை, பரப்பாங்கண்டல், வட்டக்கண்டல், ஆண்டாங்குளம், கண்ணாட்டி, பரப்புக்கடந்தான் ஆகிய பிரதேசங்களிலும் மின் .விநியோகம் தடைப்படும். (ற-ரி)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா சிவலிங்கம்




யாழ்.வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும், லண்டன் Croydon ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்லையா சிவலிங்கம் 06.09.2016 செவ்வாய்க்கிழமை லண்டனில் சிவபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சவுந்தரம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சபாரட்ணம் - சிவ்முத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் (லண்டன்) அன்புக் கணவரும், ஷியாமா (லண்டன்), மாயா (லண்டன் ) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜ்குமார், ஆனந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிவசின்னம், தட்சணாமூர்த்தி (கொக்குவில்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், சண்முகநாதன் செல்வா (ஐக்கிய அமெரிக்கா), பரமேஸ்வரி (திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரஜித்தா றூமல், சஜித்தா, கிருஷ்ணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 (லண்டன் நேரப்படி) மணியளவில் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

மகேஸ்வரி - 0044 208 655 3967,
ஷியாமா - 0044 203 4412 305,
மாயா - 0044 208 6567 518 (J/4510) (11,18)

## மரண அறிவித்தல்

### தியாகராஜா செலஸ்ரின்( விமல்/ குஞ்சு)




வீரபத்திரர் கோயிலடி, கச்சாய் வீதி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராஜா செலஸ்ரின்(விமல்) 07.09.2016 புதன்கிழமை அகால மரணமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் தேவபாலன் காலஞ்சென்ற மாத்திரா தம்பதிகளின் அன்பு மருமகனும் மரிஸ்ரலா டெய்சியின் பாசமிகு கணவரும் அஜித்தா, செபஸ்தியான், விஜித்தா,விதுனிசியா, அனிஸ்ரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற செபஸ்தியான் மற்றும் செல்வஸ்ரின், செலஸ்ரின், செபஸ்ரின், அன்னமேரி, அனஸ்ரின், அன்னமலர், மறிஸ்றெலா ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வராசா (சின்ராசா), தவராசா(தேவன்) ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (12.09.2016) திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் லிகோரியா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு லிகோரியா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வீரபத்திரர் கோயிலடி,
கச்சாய்றோட், சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

077 104 2842/ 077 283 0313

### தம்பிஐயா தர்மகுலசிங்கம்(அப்பு)



சரவணையைப் பிறப்பிடமாகவும் இல.31.சிவபுரம், வவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் வவுனியா, தவசிகுளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா தர்மகுலசிங்கம் 09.09.2016 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா மற்றும் பாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற பரநிருபகுலசிங்கம் மற்றும் லோகேஸ்வரி, சோதியம்பாள், தங்கேஸ்வரி, லோகநாதன் (சுவிஸ்), பஞ்சரத்தினம்(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கணேசலிங்கம், சண்முகநாதன், சித்திரவேல், அருளழகன்(சுவிஸ்), கலாறஜனி(சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் சுபாஜினி, செல்வக்குமார் - கஸ்தூரி, அனுசா, பிரகாஸ்(இத்தாலி), பிரதாபன், ஜெயக்குமார்- கார்த்திகா(கனடா), திவாகரன்(பிரான்ஸ்), பிரசாளன்(சுவிஸ்), கேஸவநேசன், சஞ்சீவன், சகிர்தன் ஆகியோரின் மாமனாரும் கௌசிகா(சுவிஸ்), தர்சிகா(சுவிஸ்), கௌதமன்(சுவிஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும் அகரனின்(கனடா) பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(12.09.2016) திங்கட்கிழமை அவரது வவுனியா தவசிகுளம் இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தோணிக்கல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தவசிக்குளம்,
வவுனியா.

(J 4155) (14,17,18)

தகவல்:
குடும்பத்தினர்.

024 205 1264/ 077 789 4883

## மரண அறிவித்தல்

### திருமதி புஸ்பவதி வாமதேவன்



உரும்பிராய் கிழக்கு, சிவன் வீதியைச் சேர்ந்த திருமதி புஸ்பவதி வாமதேவன் 07.09.2016 புதன்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ் சென்ற வாமதேவனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திலகவதி, மகேஸ்வரி, மற்றும் குகனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற நாகராசா மற்றும் வேதாரணியம், ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான அருளானந்தம், கனகரட்ணம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரியும் சியாமளா(லண்டன்), சுரேஷ் (லண் டன்), சியாதா(ஆசிரியை-கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயும் மோகனகுமார் (லண்டன்), மனோஹரி (லண்டன்), ஆனந்தஜோதி ஆகியோரின் அன்பு மாமியும் சூரியமோகன் (லண்டன்), பிரியந்தி (லண்டன்), ஆரபி (லண்டன்) வராஹி (லண் டன்), வித்தியாஷாகர், அபிஷாகர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காந்தரூபன், குமுதினி, சயந்தினி, சிவதக்ஷினி, சுவேந்திரனி, சிவாஜினி, ஸ்ரீகரன், சுதாகரன்,ஸ்ரீஜனனி ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 223 0616

# முதலாம் தர அனுமதிக்கு இன விகிதாசாரம் இல்லை

கொழும்பு, செப். 11
பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிக்கின்றபோது இனவிகிதாசாரம் பேணப்பட வேண்டும் என கல்வி அமைச்சால் சுற்றறிக்கை வெளியிடப்படவில்லை என கல்வி அமைச்சு நேற்றுச் சபையில் தெரிவித்தது.
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச். எம்.சல்மான், பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை அனுமதிக்கின்றபோது இன விகிதாசாரம் பேணப்பட வேண்டும் என கல்வி அமைச்சால் சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளதா என எழுப்பிய கேள்விக்கு கல்வி அமைச்சால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதிலிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. (ற-4)

## அத்தநாயக்கவுக்கு எதிராக மேல் நீதிமன்றில் வழக்கு

கொழும்பு, செப். 11
போலி ஆவணங்கள் தயாரித்தமை உள்ளிட்ட மூன்று குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராகச் சட்டமா அதிபரினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் போலி ஆவணங்கள் தயாரித்தமை, இனங்களுக்கு இடையில் வைராக்கியத்தை ஏற்படுத்தியமை மற்றும் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளுக்கு அழுத்தங்களைப் பிரயோகித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ளன.

குறித்த குற்றச்சாட்டுக்களின் கீழ் திஸ்ஸ அத்தநாயக்கவுக்கு எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

## மூன்று பேருக்கு சாவுத் தண்டனை

கொழும்பு, செப். 11
டயகமவில் சந்தனம் மைக்கல் (வயது - 39) என்ற குடும்பஸ்தரை 2003 ஓகஸ்ட் 6ஆம் திகதியன்று படுகொலை செய்த 3 பேருக்கு நுவரெலியா மேல் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் சாவுத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி லலித் ஏக்கநாயக்க முன்னிலையில் வழக்கு தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது, இவ்வாறு தீர்ப்பளித்தது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 60 வயதான பெருமாள் மகாலிங்கம் (தந்தை), 37 வயதான மகாலிங்கம் சிவனேஸ்வரன் (மகன்) மற்றும் உறவுமுறையான பாலகிருஷ்ணன் சுவனேஸ்வரன் (வயது-32) ஆகியோருக்கே இவ்வாறு சாவுத் தண்டனை விதிக்கப்பட்டது. (த-4)

## கூட்டு எதிரணி தனித்துப் போட்டி

### கூறுகிறார் மகிந்த

கொழும்பு, செப். 11
எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் கூட்டு எதிரணி தனித்துப் போட்டியிடும் என்பதை முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச உறுதிப்படுத்தியுள்ளார். தாமதிக்காமல் தேர்தல்களை நடத்துமாறு அரசுக்குச் சவால் விடுத்துள்ள அவர், எந்த நேரத்திலும் தேர்தலை எதிர்கொள்வதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டு எதிரணி குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெறும் என்றும் மகிந்த ராஜபக்ச குறிப்பிட்டார். (த-4)









# மக்கள் வங்கி முறைகேடு அரசின் நிலைப்பாடு என்ன?

## அடுத்த அமர்வின்போது பதில்

கொழும்பு, செப். 11

மக்கள் வங்கியை டிஜிற்றல் மயப்படுத்துவதற்காக வன் பொருள் தொழில்நுட்பத்தைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரலில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று சுட்டிக்காட்டி, பிரதமர் அலுவலகத்துக்குக் கையளிக்கப்பட்டுள்ள எழுத்துமூல ஆவணம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்னவென்று நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன கேள்வி எழுப்பினார்.

இதற்கு அடுத்த நாடாளுமன்ற அமர்வின்போது பதிலளிக்கப்படும் என அரச தரப்பில் அறிவிக்கப்பட்டது.

ஊடகங்களில் வெளியாகியிருந்த செய்திகளை மேற்கோள்காட்டி 23/2ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் தினேஷ் குணவர்தன இந்த வினாவை எழுப்பியிருந்தார்.

மக்கள் வங்கியை டிஜிற்றல் மயப்படுத்தும் நோக்கில் வன் பொருள் தொழில்நுட்பத்தைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுக் கோரலில் 4.5, 5.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதிகளுக்கிடையில் தளம்பல் நிலை பேணப்பட்டுள்ளது. சுமார் 70 கோடி ரூபா பெறுமதியான இந்த விலைமனுக் கோரல் நடவடிக்கை 5 நாள்கள் என்னும் குறுகிய காலப் பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் எழுத்துமூல ஆவணங்களும் மக்கள் வங்கியின் இரு பணிப்பாளர்களால் பிரதமர் அலுவலகத்துக்கு கையளிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கையொன்றை நாடாளுமன்றத்துக்கு அரசு சமர்ப்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அதுமட்டுமல்லாது, இந்த ஊடகச் செய்தியை அடுத்து மக்கள் வங்கியால் மேற்படி விடயத்துடன் சம்பந்தப்படும்வகையில் அனைத்துப் பிரதான ஊடகங்களிலும் விளம்பரமொன்று வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

ஊடகங்களில் வெளியானமை பற்றி நாடாளுமன்றத்தில் பேச வேண்டுமா என்பதை அமைச்சர்தான் தீர்மானிக்கவேண்டும் என்று தெரிவித்த பிரதி அமைச்சர் எரான் விக்கிரமரட்ன, சம்பந்தப்பட்ட விளம்பரம் உள்ளிட்ட அனைத்து விடயங்கள் பற்றியும் ஆராய்ந்து பதிலொன்றை வழங்குவதாகவும் கூறினார். (த-4)

# தஸ்மேனிய பிரதமர் கொழும்பு வருகை

கொழும்பு, செப். 11

தஸ்மேனியாவின் பிரதமர் வில்லியம் எட்வார்ட் பீலிக்ஸ் ஹொட்ஜ்மேன் தலைமையிலான அந்நாட்டு உயர்மட்டத் தூதுக்குழு இலங்கை நாடாளுமன்றத்துக்கு நேற்றுமுன்தினம் சென்றது.

தஸ்மேனிய பிரதமர் மற்றும் அவரது அமைச்சரவை உறுப்பினர்கள் உள்ளிட்ட தூதுக்குழுவினர் சபைக்கு வருகை தந்தபோது அவர்களை பிரதிச் சபாநாயகர் வரவேற்றார். சபாநாயகர் கலரியில் அமர்ந்திருந்து சபை நடவடிக்கைகளை அவர்கள் அவதானித்தனர்.

தஸ்மேனிய பிரதிநிதிகள் குழுவுடன் இலங்கைக்கான ஆஸ்திரேலியத் தூதுவர் பிரைஸ் ஹட்சிசனும் வருகை தந்திருந்தார். (த-4)



# பைசர் முஸ்தபா–விஜேசிறி சபையில் கடும் வாய்த் தர்க்கம்

கொழும்பு, செப். 11
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா மீது ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி நேற்றுமுன்தினம் சபையில் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியதால் இருவருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.
ஊவா மாகாண முதலமைச்சரின் சார்பில் வழக்கு ஒன்றில் அவரின் சட்டத்தரணியாக நீதிமன்றில் முன்னிலையாவதால் முதலமைச்சரின் ஊழல் மோசடிகளை மூடி மறைக்க அமைச்சர் பைஸர் முஸ்தபா முயற்சிப்பதாகவே நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி குற்றஞ்சாட்டினார்.
நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற வாய்மூல வினாக்களுக்கான கேள்வி நேரத்தின்போது ஊவா மாகாண முதலமைச்சரின் நிதி முறைகேடுகள் தொடர்பில் அந்த மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜேசிறி, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸார் முஸ்தபாவிடம் கேள்வி எழுப்பினார்.
மாகாணப் பாடசாலை மாணவர்களுக்குப் புத்தகப் பைகளை வழங்க வங்கிகளிடம் பெற்ற 35 இலட்சம் ரூபா பணத்தை முதலமைச்சர் தனது பெயரிலுள்ள மன்றக் கணக்கில் வைப்பிலிட்டமை தொடர்பிலேயே கேள்வி எழுப்பினார்.
இந்தக் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் பைஸர் முஸ்தபா
நீங்கள் எப்போதும் ஊவா மாகாண முதலமைச்சரைப் பற்றி குற்றஞ்சாட்டியே கேள்வி கேட்கின்றீர்கள். ஆதாரம் இல்லாமல் குற்றஞ்சாட்டாதீர்கள். நீங்கள் அந்த மாகாணத்தைச் சேர்ந்தவர் என்பதால் ஊவா முதலமைச்சரை வீட்டில் சந்தித்துப் பிரச்சினையைப் பேசித் தீர்த்துக் கொள்ளுங்கள்–என்றார்.
இதன் பின்னர் கருத்து வெளியிட்ட சமிந்த விஜேசிறி, ஊவா முதலமைச்சரின் வழக்கொன்றில் நீங்கள் தான் அவர் சார்பு சட்டத்தரணியாக உள்ளீர்கள். அதனால் தான் அவரின் நிதி முறைகேடுகளை மூடி மறைக்கின்றீர்கள். ஆதாரம் இல்லாமல் நான் எதையும் கூறுவதில்லை– என்றார்.
இதனால் சற்றுச் சினம் அடைந்த அமைச்சர் பைஸர்முஸ்தபா, நான் ஊவா மாகாண முதலமைச்சரின் வழக்கு தொடர்பான சட்டத்தரணியாக இருந்தாலும் இதற்கும் அதற்கும் தொடர்பில்லை. நீங்கள் எப்போதும் ஊவா முதலமைச்சரை குற்றம் சாட்டுவதிலேயே குறியாக இருக்கின்றீர்கள்–என்றார்.
இதன்போது எழுந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குக் கேள்வி கேட்கும் உரிமை உள்ளது. ஆனால் அமைச்சர் ஒருவர்மீது ஆதாரத்துடனேயே குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவேண்டும். அதே சமயம் பதிலளிக்கும் அமைச்சரும் கேள்விக்கு மட்டும் பதிலளிக்கவேண்டும்–என்றார்.
இதனையடுத்து எழுந்த எதிர்க்கட்சிகளின் பிரதான கொறடாவான நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க,
ஊவா மாகாண முதலமைச்சரின் நிதி முறைகேடுகள் பற்றி எனக்குத் தெரியும். இது குறித்து சமிந்த விஜேசிறி கேட்டால், ஊவா முதலமைச்சரை வீட்டில் சென்று சந்தித்துப் பிரச்சினையைப் பேசித் தீருங்கள் என அமைச்சர் கூறுகின்றார். இதற்கு அர்த்தம் என்ன? வீட்டில் போய் 35 இலட்சம் ரூபாவை இரண்டாகப் பங்கிட்டுக் கொள்ளுங்கள் என்றா அமைச்சர் கூறுகின்றார் எனக் கேட்டார்.
பின்னர் பதிலளித்த அமைச்சர் பைபர் முஸ்தபா,
ஊவா மாகாண முதலமைச்சர் மீதானகுற்றச்சாட்டுக்குஎந்தஆதாரமும் இல்லை. அதேவேளை, ஊவாமாகாணசபைக்குரியநிதியை முதலமைச்சர் தனது பெயரிலுள்ள மன்றக் கணக்கில் வைப்பிலிட்டிருந்தால் அது தவறுதான். மாகாணசபையால்எனக்குஅனுப்பிய பதிவையே இங்கு நான் வழங்குகின்றேன்–என்றார். (த–4)

# 140 பழைய துப்பாக்கிகள் மாவட்ட செயலக வளவில்

## மாத்தளையில் மீட்கப்பட்டன

கொழும்பு, செப். 11
மாத்தளையில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள மாவட்ட செயலக காரியாலயத்துக்கான காணியில் மேற்கொள்ளப்பட்ட துப்புரவுப் பணிகளின்போது, 140 பழைய துப்பாக்கிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த பகுதியில் நேற்றுமுன்தினம் பெக்கோ இயந்திரம் மூலம் மண் அகற்றும் நடவடிக்கை இடம்பெற்றபோதே இவை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.
இந்தத் துப்பாக்கிகள் அனைத்தும் பல ஆண்டுகள் பழைமை யானவை எனத் தெரிவிக்கப்படுகின்றது.
துருப்பிடித்த நிலையில் காணப்பட்ட இந்த ஆயுதங்களை அரச இரசாயனப் பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பவுள்ளதாக பொலிஸார் கூறினர்.
கண்டெடுக்கப்பட்ட துப்பாக்கிகளை மாத்தளை நீதிவான் எஸ்.பீ.எச்.எம்.சேறி ஹேரத் பார்வையிட்டார்.
குறித்த துப்பாக்கிகள் அங்கு எப்படிப் புதைக்கப்பட்டன என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.
1971ஆம் ஆண்டு ஏப்ரல் கலகம் மற்றும் 1988, 1989 ஆண்டுகளில் இரண்டாவது கலகம் என்பன மாத்தளை மாவட்டத்தில் ஏற்பட்டிருந்தன.
இதேவேளை, கடந்த சில வருடங்களுக்கு முன்னர் மாத்தளை வைத்தியசாலை நிலத்திலிருந்து, பல வருடங்களுக்கு முன்னர் புதைக்கப்பட்ட சடலங்கள் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த–4)




# இலங்கைப் பெண்ணின் சிறுநீரகம் அகற்றப்பட்டது

கொழும்பு, செப். 11
குவைத் நாட்டில் பணி புரிந்த இலங்கைப் பணிப்பெண்ணொருவரின் சிறுநீரகம் ஒன்று நிர்ப்பந்தத்தின் பேரில் அகற்றப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஹொரண புலத் சிங்கள பிரதேசத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பெண்ணின் கணவரால் காவற்துறையில் இது தொடர்பான முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த பெண் கடந்த 2014 ஆம் ஆண்டு பணியின் நிமித்தம் குவைத்துக்குச் சென்றிருந்தார். பின்னர் சுகவீனம் காரணமாக மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் அறுவைச் சிகிச்சை ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–4)

# புகைப் பரிசோதனையை இ.போ.சவிடம் வழங்குக

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, செப். 11
சகல வாகனங்களுக்கும் வாகன வரி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு முன்னோடியாக நடத்தப்படும் புகைப் பரிசோதனை சான்றிதழ் வழங்கும் உத்தியோகபூர்வ உரிமையை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வழங்குமாறு அகில இலங்கை போக்குவரத்துச் சேவை சங்கம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.
அகில இலங்கைப் போக்குவரத்து சேவை சங்கத்தின் செயலாளர் சேபால லியனகே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.
2008 மற்றும் 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியில் குறிப்பிட்ட இரு சங்கங்களுக்கு மாத்திரமே இந்தச் சான்றிதழ் வழங்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இதனால் குறித்த நிறுவனங்கள் 860 கோடி ரூபா இலாபம் உழைத்துள்ளதாகவும், இந்த நிதியில் அரசுக்கு வெறும் 89 கோடி ரூபா மாத்திரமே கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் சேபால லியனகே சுட்டிக்காட்டியுள்ளார்.
இதனால், இ.போ.சவுக்குக் கிடைக்க வேண்டிய வருமானம் வெளி நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதை நிறுத்துமாறும் குறித்த சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (த–4)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நோயற்ற வாழ்வு வாழ உகந்த உணவுப் பழக்கமே தேவை

தென்மராட்சிப் பிரதேசத்தில், குருதிச் சோகையால் பீடிக்கப்படும் கர்ப்பிணிகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக "அபாய அறிவிப்பு" விடுக்கப்பட்டிருக்கிறது.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த வெளிக்கள அலுவலர்களுக்கு, போசாக்குத் தொடர்பாக நடத்தப்பட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கின்போதே, மேற்படி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதாரப் பகுதியினர்ரின் மேற்குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில், கண்ணுக்குத் தெரியாத பெரும் ஆபத்துக் குறித்து எடுத்து இயம்பப்பட்டது.

இரும்புச் சத்து உள்ள உணவு வகைகளை உட்கொள்ளத் தவறி வருவதனாலேயே உயிருக்கு ஆபத்து ஏற்படத்தக்க இந்த நிலை உயர்ந்து வருவதாகவும் அங்கு ஆழமாகத் தொட்டுக் காட்டப்படுகிறது.

கிருமிநாசினிகள் மற்றும் உரவகைகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளை உண்பதாலேயே, மேற்சொன்ன பாதிப்புகள் உண்டாகுவதாகவும் விழிப்புணர்வுக் கருத்தரங்கில் விவரமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தென்மராட்சிப் பிரதேசத்தில், தோட்டப் பயிர்களை வீட்டு வளவுகளில் பயிர்செய்வதற்கு உகந்த காணி வசதிகள் அமைந்துள்ள போதிலும், அதில் போதிய அக்கறை கொள்ளாது;--

சேதனப் பசளையைப் பயன்படுத்தி, கிடைக்கும் இலைக்கறி வகைகளையும் மற்றும் மரக்கறிகளையும் உண்ணும் பழக்கம் அருகிவிட்டதால், குருதிச்சோகை நோய் அதிகமாகப் பரவுகிறது-- என்ற "அபாயஅறிவிப்பும்" கருத்தரங்கில் விடுக்கப்பட்டுள்ளது.

மற்றொரு புறத்தில்--

கிளிநொச்சி மாவட்டத்தின் போசாக்கு மட்டம், இப்போது மிகப்பெரிய அளவில்,முன்னேற்றம் கண்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர், 2012ஆம் ஆண்டில், போசாக்கு மட்டத்தில் முழு இலங்கையிலும் கடைசி இடத்தைப் பெற்றிருந்த மாவட்டமாக கிளிநொச்சி இருந்த போதிலும் --

அதன் போசாக்கு மட்டம் இப்போது முன்னேற்றம் கண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்டச்செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலொன்றின்போது, கிளிநொச்சி மாவட்டம் போசாக்கு மட்டத்தில் முன்னேற்றம் கண்டுள்ளதாக, மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர், மருத்துவர், எஸ்.மைதிலி சுட்டிக்காட்டி உள்ளார். அந்த நிலையை மேன்மேலும் உயர்வதற்காக உழைப்பதே உகந்தது.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களைப் பெரிய அளவில் கொண்டுள்ள, கிளிநொச்சி மாவட்ட மக்களில் பெரும்பாலோர் வறுமையின் பிடியில் அகப்பட்டு, தொழில் வாய்ப்பு இன்றி இருந்து வருவது கருத்தில் கொள்ளப்பட வேண்டியது அவசியம்.

கூட்டிக் கழித்துப் பார்த்தால், போசாக்கு மட்டத்தில், கிளிநொச்சிமாவட்டம் உரிய படிநிலையை எட்டவில்லை என்பது புலனாகிறது.

அதனைக் கருத்தில் கொண்டு, சிறுவர்களினதும், கர்ப்பிணிப் பெண்களினதும் போசாக்கு நிலையை மேம்படுத்துவதற்கு, ஆக்கபூர்வமான திட்டங்களை வகுத்துச் செயற்படும் காலம் விரைந்து கனிவதற்கு, போதிய ஊக்கமும் உழைப்பும் அவசியம்.



அனேகமான விடயங்களில் மஹிந்தவை மீறிச் செயற்பட்டு வந்த கோத்தா தனது செல்லப் பிள்ளையான துமிந்தவை கொலன்னாவை தேர்தல் தொகு திக்குள் நுழைத்தார். இதனால் பாரத லக்ஷ்மனுக்கும் துமிந்தவுக்கும் இடையில் பனிப்போர் தொடங்கியது. கொலன்னாவையின் அதிகாரத்தை எவர் கைப் பற்றுவது என்ற போராட்டம் வெடித்தது.

எம்.ஐ.முபாறக்

கொலைகள், ஆள்கடத்தல்கள், கப்பம், நிதிமோசடி, அதிகார துஷ்பிரயோகம் மற்றும் போதைப் பொருள் வர்த்தகம் போன்ற ஏகப்பட்ட சட்டவிரோதச் செயற்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டதுதான் மகிந்தவின் ஆட்சி. போர் வெற்றியை வைத்துக் கொண்டு எதையும் செய்யலாம்;எல்லா விதமான அநியாயங்களையும் நியாயப்படுத்தலாம் என்ற பிழையான நிலைப்பாட்டில்தான் அந்தச் சர்வாதிகார அரசை நடத்திக் கொண்டு சென்றார் மகிந்த.

தனது விசுவாசிகள் எதைச் செய்தாலும் மகிந்த கண்டு கொள்ளவேமாட்டார். அவர்களின் உதவி அவருக்குத் தேவையாக இருந்ததால், அவர்களின் அட்டூழியங்கள் அனைத்துக்கும் இடங்கொடுத்தே வந்தார்.

தனது அரசியலுக்கு சவால் விடுக்கும் அனைவரையும் ஒழித்துக் கட்டுவதற்கு மகிந்த இந்தக் காடையர்களின் உதவியைப் பெற்றார். இதற்குப் பரிகாரமாகத்தான் அந்தக் காடையர்களின் அட்டூழியங்கள் அனைத்தையும் கண்டும் காணாமலும் இருந்தார்.

ஆயுள்முழுக்க தனது ஆட்சியே நிலைக்கப் போகின்றது என்று மகிந்த தப்புக் கணக்குப் போட்டமைதான் இந்த அநியாயங்கள் அனைத்தும் இடம்பெற்றமைக்குக் காரணம்.

போர் என்ற போர்வையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டதுபோக, அந்தக் கொலைகளுக்கு எதிராக எழுந்த குரல்களும் நசுக்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரவிராஜ், மகேஸ்வரன் மற்றும் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க உள்ளிட்ட பலர் இவ்வாறு கொல்லப்பட்டனர். மற்றுமோர் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டார். ஆனால், அவரும் உயிருடன் இருப்பது சந்தேகம்தான்.

இவ்வாறு மகிந்தவின் ஆட்சிக்கு சவாலாக இருந்த அத்தனைபேரும் கொல்லப்பட்டனர். இந்தக் கொலைகளில் இருந்து மாறுபட்டதுதான் பாரத லக்ஷ்மனின் கொலை.ஒரே கட்சிக்குள் எழுந்த அதிகாரப் போட்டியின் விளைவாகத்தான் இந்தக் கொலை இடம்பெற்றது.

ஒருகாலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டையாகத் திகழ்ந்தது கொழும்பு மாவட்டத்தின் கொலன்னாவை தேர்தல் தொகுதி. அதை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கோட்டையாக மாற்றும் முயற்சியில் வெற்றி கண்டவர் தான் இந்த பாரத லக்ஷ்மன். மகிந்தவின் நெருங்கிய நண்பரும்கூட. இவருக்கு வீண் பிரச்சினையை ஏற்படுத்தும் வகையில் அந்தத்தொகுதிக்குள் துமிந்த சில்வா புகுத்தப்பட்டார்.

பாரத லக்ஷ்மன் சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தர்- அக்கட்சியின் தொழிற் சங்க ஆலோசகர் என்பதற்கு மேலாக, மகிந்தவின் நண்பராகத் திகழ்ந்தார் என்பது தான் உண்மை.ஆனால், துமிந்த சில்வாவோ முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் செல்லப் பிள்ளையாவார். கோத்தாவை அப்பா என்றும், அவரது மனைவியை அம்மா என்றும் செல்லமாக அழைத்து வருபவர். அவர்களின் சொந்தப்பிள்ளை போன்றே துமிந்த பழகுகிறார்.

அனேகமான விடயங்களில் மகிந்தவை மீறிச் செயற்பட்டு வந்த கோத்தா, தனது செல்லப் பிள்ளையான துமிந்தவை கொலன்னாவை தேர்தல் தொகுதிக்குள் நுழைத்தார்.இதனால் பாரத லக்ஷ்மனுக்கும் துமிந்தவுக்கும் இடையில் பனிப்போர் தொடங்கியது.கொலன்னாவையின் அதிகாரத்தை எவர் கைப் பற்றுவது என்ற போராட்டம் வெடித்தது. இதன் உச்சக்கட்டமாக 2011 ஆம் ஆண்டு கொழும்பு மாவட்ட உள்ளூராட்சித் தேர்தல் தினத்தன்று கொலன்னாவையில் வைத்து பாரத லக்ஷ்மன் துமிந்தவால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த இருவர் தலைமையிலான குழுக்கள் எதிர் எதிரே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதில் பாரத அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.துமிந்த பலத்த காயங்களுக்கு உள்ளாகி சிங்கப்பூரில் சிகிச்சை பெற்று உயிர் பிழைத்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து மகிந்த-பாரத லக்ஷ்மன் உறவு கேள்விக்குறியாக்கப்பட்டது.தனது சகோதரனின் விருப்பத்துக்கு அடிபணிந்து தனது நெருங்கிய நண்பன் பாரதவை மகிந்த அநியாயமாகப் பலி கொடுத்து விட்டார் என்ற குற்றச் சாட்டுக்கள் எழுந்தன. நட்பை மதிக்கும் வகையில் குற்றவாளிக் குத் தண்டனையேனும் மகிந்த வழங்குவாரா என்ற கேள்வியும் முன் வைக்கப்பட்டது.ஆனால், அதுவும் நடக்கவில்லை.

மகிந்தவின் மகன் நாமலுக்கும், பாரதவின் மகள் ஹிருணிகாவுக்கும் திருமணம் முடித்து வைத்து இருவரும் சம்பந்திகளாக ஆகுவதற்குக்கூட ஏற்பாடுகள் நடந்தன.ஆனால், பாரத கொல்லப்பட்டதால் அந்த முடிவும் மாற்றப்பட்டது.

துமிந்தவைக் காப்பாற்றுவதற்கு கோத்தா அதிக சிரமம் எடுத்துக் கொண்டார். அவரைச் சிங்கப்பூர் அனுப்பி வைத்து சிறப்புச் சிகிச்சையைப் பெற்றுக் கொடுப்பதற்கான உதவிகளையும் திரை மறைவில் இருந்து செய்தார். ஆனால், மகிந்தவால் இவற்றையெல்லாம் தடுக்க முடிய



## நல்லாட்சி அரசின் மானத்தைக் காத்த

# பாரத கொலை வழக்கின் தீர்ப்பு

வில்லை. துமிந்தவுக்கு எதிராக மகிந்தவால் நடவடிக்கை எடுக்க முடியாதவாறு கோத்தா பிடிவாதமாக நின்றார். அந்த விடயத்தில் மகிந்த தோற்றுப் போனார்.


இருந்தாலும். நண்பனின் இழப்புத் தொடர்பான கவலை மகிந்தவுக்கு இருக்கவே செய்தது. துமிந்த சிகிச்சை முடிந்து நாடு திரும்பியபோதும்கூட அவருக்கு எதிராக மகிந்தவால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. கோத்தா தொடர்ந்தும் துமிந்தவுக்கு பாதுகாப்பு அரணாக நின்றார்.

நடந்த சம்பவம் எதுவும் தனக்கு நினைவில்லை என்றொரு நாடகத்தை துமிந்த நடத்தினார். எல்லா விடயங்களிலும் சுய நினைவுள்ள மனிதராகவே துமிந்த செயற்பட்டார். நாடாளுமன்ற அமர்வுகளில்கூடக் கலந்து கொண்டார். ஆனால், பாவம் பாரதவின் கொலைச் சம்பவம் மாத்திரம் அவருக்கு நினைவில்லை.

இந்த நிலையில் பாரதவின் கொலைக்காக அவரது குடும்பத்துக்கு ஏதாவது நட்டஈடு வழங்க வேண்டும் என்பதற்காக பாரதவின் மகள் ஹிருணிகாவை அரசியலுக்கு இழுத்து வந்து மேல் மாகாண சபை உறுப் பினராக்கினார் மகிந்த. விரும்பியோ? விரும்பாமலோ? மகிந்தவுடன் இணையும் நிலைக்கு ஹிருணிகா தள்ளப் பட்டார். இருந்தாலும், தனது தந்தையின் கொலையாளிக்கு தண்டனை பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற வெறி ஹிருணிக்காவுக்குள் இருக்கவே செய்தது. கொலையாளிக்கு தண்டனை வழங்குவதில் இருந்து தவிர்த்துக் கொள்வதற்காகவே தனக்கு அரசியல் அதிகாரம் லஞ்சமாகத் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் ஹிருணிகா உணர்ந்தே இருந்தார்.

இருந்தும்,அதிகார வர்க்கத்தைத் தாண்டி தன்னால் எதுவும்செய்ய முடியாது என்பதால் உரிய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துப் பொறுமையாக இருந்தார் ஹிருணிகா. இந்த நிலையில்தான் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலும் வந்தது. மகிந்தவைவிட்டு மைத்திரி பக்கம்

> துமிந்த சிகிச்சை முடிந்து நாடு திரும்பிய போதும் கூட அவருக்கு எதிராக மகிந்தவால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. கோத்தா தொடர்ந்தும் துமிந்தவுக்கு பாதுகாப்பு அரணாக நின்றார்.



தாவினார் ஹிருணிகா. மகிந்தவின் ஆட்சியும் கவிழ்ந்தது. ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து பாரதவின் கொலை வழக்கு சரியான முறையில் விசாரிக்கப்பட்டதால் துமிந்த சில்வா உண்மையான கொலையாளியாக அடையாளம் காணப்பட்டு அவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் சாவுத் தண்டனை வழங்கியுள்ளது. இந்தத் தீர்ப்பு மகிந்தவுக்கு உள்ளூர மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது என்றே அவரைச் சூழவுள்ள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.பாரத கொல்லப்பட்டது முதல் மகிந்த, துமிந்தவை வெறுத்தே வந்தார். அவரது சகோதரர் கோத்தாவின் நெருக்குதலால் துமிந்தவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாமல் போனது. இப்போது துமிந்த வுக்கு சாவுத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதால் மகிந்த மகிழ்ச்சியடைந்துள்ளார்.

ஆனால்,கோத்தாவோ இந்தத் தீர்ப்பால் மிகவும் உடைந்துபோயுள்ளார்.கண்ணீர் சிந்தியதாகவும் தகவல். எது எப்படியோ, நல்லாட்சி அரசின் மானம் இந்தத்தீர்ப்புமூலம் காப்பாற்றப்பட்டுள்ளது என்றுதான் சொல்ல வேண்டும்.

### உரிய தரப்பினர் தேவையான நடவடிக்கை மேற்கொள்வார்களா?

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வர ஆலயவீதியின் ஓரங்களில் பிளாஸ்ரிக் போத்தல்கள்,சிகைஅலங்கரிப்புநிலையங்களின் கழிவுகள், விலங்குகளின் தோல்கள், பழைய துணிமணிகள் ஆகியவை வீசப்படுவதால், தினமும் அந்த வழியால் செல்பவர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு செல்லும் அளவுக்கு கெட்ட நாற்றத்தைச் சுவாசிக்க நேர்கிறது. இது உடல் நலக்கேட்டுக்கும் வழி வகுக்கிறது.

தினமும் பாடசாலை மாணவர்களும், தொழில் நிமித்தம் வேறு இடங்களுக்குச் செல்வோரும் கூடுதலாக இந்த வழியால் செல்லுகின்ற வேளை, மேற்குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் ஆலயத்தை ஒரு சில நிமிடங்கள் நின்று தரிசிக்க இயலாத சிரம நிலை இங்கு நிலவுகிறது. ஆலயச்சூழலுக்கு மிக அண்மையில் உள்ள இந்தக் கழிவுகள், நாலாபுறமும் சிதறுண்டு தெரு நாய்களால்மேலும் வீதிகளிலும்பரவப்படுகின்றன. ஆலயச் சூழலையே புனிதமற்றதாக்கும் இந்தக் குப்பை கூளங்களை அகற்றக் கோரி வலி. மேற்குப் பிரதேச சபையினிடம் பல தடவைகள் கோரிக்கைகள் விடுத்தும், எந்தப் பயனும் ஏற்படவில்லை. இந்தக் குப்பை கூளங்களை அந்த இடத்தில் இருந்து அகற்றி சுகாதாரமான சூழலை ஏற்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

ஸ்ரீவித்தியாதரன்
வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.

### குறைபாடுகளை இ.போ.ச. நிவர்த்தி செய்யுமா?

உதயன் பத்திரிகையில் வெளிவரும் வாசகர் திருமுகம் பகுதியில் வழித்தடம் மாறிச்செல்லும் இ.போ.ச. பஸ் சேவை பற்றி வாசித்தேன். இப்படியான செயற்பாடுகளால் பலர், குறிப்பாகப் பெண்கள் பாதிக்கப்படுகின்றனர். தினமும் மாலையில் வேலை முடிந்து வீட்டுக்குச் செல்வதற்காக வண்ணை சிவன் கோயிலுக்கு முன்பாக காத்திருந்தால் நாங்கள் பயணிக்க வேண்டிய 782, 784, 785, 786, வழித்தட பஸ்கள் சிலசமயங்களில் அந்த வழியால் வராது நேராக மானிப்பாய் வீதிவழியாகவே சென்றுவிடுகின்றன. வேலை முடிந்து களைத்துப் போய் வீட்டுக்குச் செல்வதற்காக காத்திருந்து பஸ்ஸை தவறவிட்டு, அடுத்த அரை மணிக்குப் பின்னர் வரும் பஸ் மூலமாக இருட்டிய பின்னரே வீடு செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இது எம் போன்ற பல பெண்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாக உள்ளது. அதுமட்டுமல்லாது, இந்த வழித் தடங்களில் சேவையில் ஈடுபடும் சில பஸ்களில் வழித்தட இலக்கங்கள் பெயின்ற்றினால் எழுதப் படாமல், வெண்கட்டியினால் எழுதியிருப்பதால் மாலை மங்கும் நேரத்தில் வழித்தட இலக்கத்தைத்தெரிந்துகொள்ள பெரிதும்கஷ்டமுறுகிறோம். எல்லாமே கணினி மயமாகிவரும் இன்றைய கால கட்டத்தில், இப்படி வெண்கட்டியால் வழித்தட இலக்கத்தைக் குறிப்பிட்டு இ.போ.ச. பஸ்கள் சேவையில் ஈடுபடுவது பெரிதும் விசனத்துக்கு உரியது. இ.போ.சவின் காரைநகர் சாலை அதிகாரிகள் இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்து உதவ வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

ஸ்ரீதேவி, காரைநகர்.

### பொட்டுக் கேடுகள் வெளிவருமா?

போலிச் சான்றிதழ் சமர்ப்பித்து நியமனம் பெற்றவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டமை தொடர்பான செய்தியைப் பார்த்தோம்.

இதேவேளை-கடந்தகாலங்களில் வெவ்வேறு குறித்த பதவிகளுக்கான அடிப்படைக்கல்வித் தகைமை இல்லாதோரும், பல்வேறு செல்வாக்குகளின் அடிப்படையில் அரச நியமனங்கள் பெற்றிருக்கலாம் அல்லவா? இத்தகைய் செயற்பாட்டால் தகுதி வாய்ந்தவர்கள் புறந்தள்ளப் பட்டிருக்கலாம் அல்லவா? இது தொடர்பாகவும் வடக்கு மாகாண சபை சார்ந்தவர்கள் ஓர் ஆய்வைச் செய்து பாக்கலாமே? அப்படிச் செய்தால் கடந்த காலப் பொட்டுக் கேடுகள் வெளிவர வாய்ப்புண்டல்லவா?

வாமனன்
ஆனைக்கோட்டை.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு. புனை பெயரையும் எழுதி அனுப்பலாம்; ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.




# சிரியாவில் நாளைமுதல் போர் நிறுத்தம் அரச படை- கிளர்ச்சிக் குழு இணக்கம்

சிரியாவில் நடைபெற்றுவரும் உள்நாட்டுப் போர் நாளை முதல் கைவிடப்படும் என அமெரிக்கா, ரஷ்யா, ஐ.நா. என்பன அறிவித்தன.
சிரிய ஜனாதிபதி ஆசாத்தை பதவி நீக்கம் செய்யும் முனைப்பில் அவரது அதிருப்தியாளர்கள் தொடங்கிய போராட்டம் உள்நாட்டுப் போராக உருவெடுத்தது. ஒன்றன் பின் ஒன்றாக ஏராளமான கிளர்ச்சிக் குழுக்கள் செயற்பட ஆரம்பித்தன. சிரிய அரசுக்கு ஆதரவாக ரஷ்யாவும், கிளர்ச்சிப் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்காவும் செயற்பட்டன.
ஐக்கிய நாடுகள் சபையின் கருத்தின்படி கடந்த ஐந்து வருடங்களாக இடம்பெற்ற இந்தப் போர்களால் கிட்டத்தட்ட 3 லட்சம் மக்கள் சாவடைந்தார்கள் என அறியவருகிறது.
இந்த வருடத்தின் ஆரம்பத்தில் ஐக்கிய நாடுகள் சபையுடன் அமெரிக்கா இணைந்து போர் நிறுத்தத்தை ஏற்படுத்த முனைப்புக் காட்டியது.
ஆனால் ரஷ்யாவின் சில நிபந்தனைகளால் போர் நீண்டு கொண்டே சென்றது. ஜேர்மனியின் முனிச் நகரில் நேற்றுமுன்தினம் உயர்மட்டப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.
இதில் அமெரிக்கா, ரஷ்யா இடையே இணக்கம் ஏற்பட்டதன் அடிப்படையில் இந்த இரு நாடுகளும் இணைந்து சிரியாவில் நாளை சூரியன் அஸ்தமித்த பின்னர் சிரிய அரச படையும் கிளர்ச்சிக் குழுக்களும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என அறிவித்தன. இதற்கு சிரிய அரச படையும் கிளர்ச்சிக் குழுக்களும் சம்மதம் தெரிவித்தன.
சிரிய அரசு, தனக்கு எதிரான கிளர்ச்சிக் குழு மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு என இருமுனைப் போராட்டத்தில் சிக்கித் தவித்தது. தற்போது கிளர்ச்சிக் குழுவுடன் போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டதால் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் தீவிரமாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் தாக்குதல் முயற்சி பிரான்ஸில் நேற்றுமுன்தினம் முறியடிப்பு

பிரான்ஸின் தலைநகரான பரிஸில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரின் தாக்குதல் முயற்சியொன்று நேற்றுமுன்தினம் முறியடிக்கப்பட்டதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. பரிஸ் நகரில் உள்ள தேவாலயம் ஒன்றுக்கருகில் எரிவாயு கலன்களை நிரப்பியவாறு சந்தேகப்படும் வகையில் கார் ஒன்று நின்றதை பொலிஸார் அவதானித்தனர். துரிதமாக விசாரணைகள் பரவலாக்கப்பட்டன.
இதில் குறித்த கார் 19 வயதுடைய ஐனஸ் மதானி என்ற பெண்ணின் தந்தைக்கு சொந்தமானது என தெரியவந்தது. இதனையடுத்து ஐனஸ் மதானியிடம் மேற்கொண்ட விசாரணைகளில் அவர், தான் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடையவர் என்பதும் சிரியாவுக்கு செல்ல பலமுறை முயன்றமையையும் வெளிப்படுத்தினார்.
பின்னர் அவரும் அவருடன் தொடர்புடைய மேலும் இரு பெண்களும் கைது செய்யப்பட்டனர். எரிவாயுவுடன் காரைக் கொண்டு சென்று மக்கள் கூட்டத்திடையே விபத்துக்குள்ளாக்குவது அவர்களது திட்டம் என அம்பலமானது. (ம)



இம்முறை சம்பத் e ரெமிட்டன்ஸ் கேஷ் வாசி - 4 சீட்டிழுப்பினூடாக 10 இலட்சம் ரூபாய் வெற்றியாளர் மற்றும் 10 பேருக்கு மாதாந்தம் தலா 1 இலட்சம் ரூபாய் பரிசு




உங்கள் பணத்தை சம்பத் e ரெமிட்டன்ஸ் ஊடாக 2016 மார்ச் மாதம் 1ம் திகதி முதல் 2017 ஜனவரி மாதம் 31ம் திகதி வரை இலங்கையில் பெற்றுக்கொண்டு இறுதி சீட்டிழுப்பில் பரிசுகளை வென்றிடுங்கள்.

10 இலட்சம் ரூபாய்

ஹொண்டா டியோ ஸ்கூட்டர் ஒன்று. வீட்டு மின் உபகரணங்கள் ஏராளம்.

• 32" LED TV • இரு கதவுகளை கொண்ட குளிர்சாதனப் பெட்டி • முழு தன்னியக்க சலவை இயந்திரங்கள் • Hifi setup • Home theater system

மேலும் மாதாந்த சீட்டிழுப்பின் மூலம் 10 பேருக்கு தலா 1 இலட்சம் ரூபாய்.

Sampath remittance service
அக்கரையின் அன்பு உடனேயே இக்கரைக்கு
MoneyGram. money transfer
சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்
Sampath Bank Fitch Ratings A+(lka) 0112 30 30 50 www.sampath.lk

# சூரியகாந்தி

உதயன்




பக். 42

தங்கம் வென்ற தமிழன்

மழைநீர் காப்போம்



பக். 33




வலிகள்

பக். 30

பிரபாகரன் பற்றிய கதைகளுக்கு அவர் இருந்த காலத்திலும் சரி, இப்போதும் சரி இலங்கை முழுவதும் பெரும் மதிப்பு இருக்கிறது என்பது அண்மையில் நிரூபணமாகி இருக்கிறது.

ஆனையிறவுப் போர் வெற்றியில் முக்கியமானதாக இருந்தது குடாரப்புத் தரையிறக்கம். அதனைச் சாத்தியமாக்கிக் காட்டிய புலிகளின் தளபதி பால்ராஜ்.போர்க் களத்திலிருந்து திரும்பியபோது, அவரைப் பற்றி இலங்கை இராணுவத் தளபதி ஒருவர் பாராட்டும் விதத்தில் தனது மேலதிகாரியிடம் உரையாற்றும் இறுவட்டைத் தலைவர் பிரபாகரன் வழங்கினார் என்றொரு கதை புலிகளின் காலத்தில் மிகப் பிரபலமானதாக இருந்தது.

# பிரபாகரன் என்னும் பிம்பம்



உண்மையை தமிழர்களும் அறிய நூல் எழுதினாராம் கமால் குணரத்ன



இன்று அதே பிரபாகரன் தனது எதிரியினால் மிகச் சிறந்த ஒழுக்கமுள்ள தலைவர் எனப் புகழப்பட்டமை, சமூக வலைத் தளங்களிலும் விவாதப் பரப்புகளிலும் பரவலான கவனிப்பைப் பெற்றிருக்கின்றது.

அதனைச் சொல்லியவர் இறுதிச் சண்டையில் முக்கியபணியாற்றிய இலங்கை இராணுவத் தளபதிகளில் ஒருவரான மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன. 'நந்திக் கடலுக்கான பாதை' என்கிற அவரது புத்தகம் அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவால் வெளியிடப்பட்டது. அந்தப் புத்தகம் தொடர்பில் ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியின் முக்கிய பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

உள்ளூரிலும் புலம்பெயர்ந்தும் வாழும் தமிழர்களும் போரில் நடந்த உண்மைகளை அறிந்துகொள்வதற்காகத் தனது நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

*"புலிகள் அமைப்புத் தோற்கடிக்கப்பட்டு 7 ஆண்டுகளின் பின் உங்கள் போர் நினைவுகளைப் பதிவு செய்யக் காரணம் என்ன?"*

"புலிகளைத் தோற்கடிப்பது மிகவும் கடினமானதாக இருந்தது. 2 ஆண்டுகள் 10 மாதங்களாகத் தொடர்ந்த இறுதிப் போரின்போது இராணுவ அதிகாரிகளும் சிப்பாய்களுமாக 5,600 பேர் உயிரிழந்தனர். மேலும் பல ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் தற்போதும் சிகிச்சை பெற்று வருகின்றனர். சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் மக்கள், கடந்த காலப் போரையும் அழிவுகளையும் மறந்து வாழத் தொடங்கிவிட்டனர். 30 ஆண்டுகாலப் பயங்கரவாதத்தால் தாம் பட்ட துன்பங்களையும் போரை வெல்வதற்காக இராணுவத்தினர் புரிந்த தியாகங்களையும் மக்கள் மறக்கின்றனர். இது ஒரு கெட்ட செய்தி. நான் ஒரு அனுபவம் வாய்ந்த எழுத்தாளர் அல்ல. ஆனால் 1983 தொடக்கம் 2009 மே வரை களத்தில் பணியாற்றியவன் என்ற வகையில் என் அனுபவத்தைப் பதிவுசெய்கிறேன்.

கமால் குணரத்ன என்கின்ற தனிப்பட்ட நபர் எதனைச் செய்தார் என்பதைப் பதிவு செய்வது எனது நோக்கல்ல. புலிகளிடமிருந்து நாட்டை விடுவித்து அமைதியை நிலைநாட்டுவதற்காகப் பாதுகாப்புப் படையினர் எதைச் செய்தார்கள் என்பதைப் பதிவு செய்வதே எனது நோக்கம்."


*"800 பக்க நூலை எழுதுவது இலகுவானதல்ல. இராணுவத்தில் பணியாற்றும்போதே இதற்கு எப்படி நேரம் கிடைத்தது?"*

"நான் எனது ஓய்வு நேரத்தை இந்த நூலை எழுதுவதில் செலவிட்டேன். போர் தொடர்பாக எழுதப்பட்டுள்ள பெரும்பாலான நூல்கள் போரில் பங்குபற்றாதவர்களாலேயே எழுதப்பட்டுள்ளன. நான் உண்மையான அனுபவங்களைப் பதிவு செய்துள்ளேன்."

*"நூல் சிங்களம் மற்றும் ஆங்கிலம் இரண்டிலும் வெளியிடப்படக் காரணம்?"*

''கிராமப்புற மக்களிடம் பெற்றுக்கொண்ட ஆதரவும் மனிதவலுவுமே சிறிலங்கா இராணுவமானது. இறுதிப் போரில் நிலைத்து நிற்க அதுவே காரணமாகும். ஆனால் பிரபாகரன் தனது மக்களின் ஆதரவைப் பெறவில்லை. ஆகவே இந்தப் பெற்றோர்களுக்காகவும் அவர்களது உறவுகள் மற்றும் இராணுவத்தினர், போரில் உயிர் நீத்தவர்களுக்காகவும் இந்த நூலை நான் சிங்களத்தில் எழுதினேன். தமது பிள்ளைகள் எவ்வாறு போராடினார்கள், சமாதானத்தைக் கொண்டு வர என்ன செய்தார்கள் என அவர்கள் வாசித்தறிய முடியும்.

அந்த நாள்களில் நாங்கள் ஓட்டமெடுக்கும் இராணுவமாகவே இருந்தோம். இவ்வாறு பின்வாங்கி ஓடிக்கொண்டிருந்த எமது இராணுவம் நான்காம் கட்ட ஈழப் போரில் எவ்வாறு வெற்றியை ஈட்டித் தரும் இராணுவமாக வளர்ச்சியடைந்தது என்பதை நான் எனது நூலில் கூற முயற்சித்துள்ளேன்."




இறுதிப் போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் குறித்துப் பதிலளிப்பதற்காகவே நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதெனத் தீர்மானித்தேன். எமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழ்ச் சமூகத்தினர் உண்மை என்ன என்பதை அறிவதற்காகவும் இந்த நூல் ஆங்கிலத்திற்கு மாற்றப்பட்டது. உண்மையில் என்ன நடந்தது என்பதையும் போர் எவ்வளவு கடினமானது என்பதையும் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறிய இடம்பெயர்ந்த மக்களை நாங்கள் எவ்வளவு தூரம் மனிதாபிமானத்துடன் வரவேற்றோம் என்பதையும் ஏனைய சமூகத்தினருக்குத் தெரியப்படுத்த விரும்பினேன்."

*"இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட ஈழப்போரில் நீங்கள் பங்குபற்றியவர் என்ற வகையில் உங்களிடமிருக்கும் ஞாபகங்கள் என்ன?"*

"புலிகள் 50 இராணுவத்தினரைக் கொன்றபோதுகூட மக்களுக்குக் கோபம் வந்ததில்லை – அந்த நாள்களில். ஆனால் கிரிக்கெட் ஆட்டத்தில் தோல்வியுறும்போது மட்டும் முழு நாடுமே துக்கம் கொண்டாடியது. இராணுவத்தினர் போர்க்களங்களில் தொடர்ந்து தோல்வியுற்றபோது மக்களும் நம்பிக்கை இழந்திருந்தனர். போரில் எம்மை விடப் பலம் பொருந்தியவர்கள் புலிகள் என மக்கள் கருதினர். ஆனையிறவை விடுவிப்பதற்கான 'பலவேகய' நடவடிக்கை மற்றும் யாழ்ப்பாணக் கோட்டையை மீட்பதற்கான 'திரிவிடபாலய' போன்ற சில இராணுவ நடவடிக்கைகள் தவிர பெரும்பாலான இராணுவ நடவடிக்கைகளில் பெரும் இழப்புக்களுடன் நாங்கள் தோல்வியுற்றதால் மக்கள் எம் மீது நம்பிக்கை இழந்திருந்தனர்.

இரண்டரை ஆண்டுகளாக நாங்கள் முன்னெடுத்த 'ஜெயசிக்குறு' நடவடிக்கையில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர். நாங்கள் மாங்குளத்தை அடைந்த போதிலும் எம் மீது புலிகள் சரமாரியாகத் தாக்குதல் நடத்தியதால் எங்களால் எமது நிலைகளைத் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை. வெறும் இரண்டரை நாள்களில் மீண்டும் தாண்டிக்குளம் நோக்கி ஓடினோம். கைப்பற்றிய நிலைகளைத் தக்கவைத்திருப்பதற்கான ஆளணிப் பற்றாக்குறையே அதற்குக் காரணம். அந்த நாள்களில் நாங்கள் ஓட்டமெடுக்கும் இராணுவமாகவே இருந்தோம். இவ்வாறு பின்வாங்கி ஓடிக்கொண்டிருந்த எமது இராணுவம் நான்காம் கட்ட ஈழப் போரில் எவ்வாறு வெற்றியை ஈட்டித் தரும் இராணுவமாக வளர்ச்சியடைந்தது என்பதை நான் எனது நூலில் கூற முயற்சித்துள்ளேன்."

*"போர்க் களங்களில் ஏன் இராணுவம் தோற்றது?"*

"காரணங்களை எனது நூலில் விவரித்துள்ளேன். 1983 தொடக்கம் 2005 வரை ஒரு தெளிவான அரசியல் நோக்கம் இல்லாமலிருந்தமையும் பயங்கரவாதத்தைத் தோற்கடிப்பதற்கான உறுதியையும் கொண்டிராதமையுமே முக்கிய காரணங்கள். இதற்கு மிகச் சிறந்த உதாரணம் நன்கு திட்டமிடப்பட்ட வடமராட்சி இராணுவ நடவடிக்கையாகும். அதைத் தொடர்ந்தும் மேற்கொள்வதற்கான அரசியல் உறுதிப்பாடு இல்லாததால் இடைநடுவில் இந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டது. இராணுவத்தின் போரிடும் பலத்தை அதிகரிப்பதற்கான எந்தவொரு திட்டங்களும் இல்லாதது அடுத்த காரணம். தொடர்ச்சியான ஆயுத வழங்கலும் இல்லாதிருந்தது. பயங்கரவாதத்துக்கு எதிராகப் போரிடுவதற்கான தேசிய மூலோபாயம் இருக்கவில்லை. புலிகள் எம்மைத் தாக்கிக்கொண்டிருந்த அதேவேளையில் முன்னைய அரசுகள் தொடர்ந்தும் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தன. பேச்சு முறிவடைந்தபோது, எம்மிடமிருந்த ஆள்பற்றாக்குறையைக் கருத்திலெடுக்காது போரை நடத்துமாறு கட்டளையிடப்பட்டது. இராணுவ அதிகாரிகளின் திறமைகள் மதிக்கப்படவில்லை. உரியவர்களுக்குப் பதவி உயர்வுகள் கொடுக்கப்படவில்லை.

படையினர் பிழையான முறையில் போர்க்களங்களுக்கு அனுப்பப்பட்டனர். எடுத்துக்காட்டாக, கட்டளை அதிகாரிகள் மற்றும் சிறப்புப் படையினர் மிக இலகுவாக காலாற்படைகளால்

(38 ஆம் பக்கம் பார்க்க)



# கேள்விக்குள்ளாகும் தமிழ் ஆளுமைகள்

அன்ரன்

பிரச்சினைகளைக் கையாள்வதிலும் அவற்றுக்குத் தீர்வு காண்பதிலும் தமிழ்த் தலைமைகளுக்கு இருக்கக் கூடிய ஆளுமை குறித்த கேள்வியை உடுவில் மகளிர் கல்லூரி விவகாரம் மீண்டும் ஒரு தடவை எழுப்பியுள்ளது.

இந்தப் பாடசாலையின் மொத்தச் சர்ச்சைக்கும் அதிபர் நியமனமே காரணம் என்பது வெளியே தெரிகிறது. ஆனால், அதனைத் தாண்டி தென்னிந்திய திருச்சபையின் உள்முரண்பாடும் கட்சி அரசியலுமே இதில் ஆழ வேரோடியிருக்கும் காரணங்கள். மாணவர்கள் இந்தத் தரப்புகளால் பயன்படுத்தப்படுகிறார்கள். பின்புலங்களைப் புரிந்து கொள்ளவும் கிரகித்துச் சிந்திக்கவும் அவர்களுக்கு அவகாசம் இல்லை. தூண்டப்பட்ட நிலையில் எதிர் வினையாற்றிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள், பாவம்.

### அதிபர் நியமன அரசியல்

அதிபர் நியமனம் என்பது நிர்வாகத்தின் ஒரு பகுதி. ஆனால், வடக்கில் உள்ள பிரபல பாடசாலைகளில் அவை பெரும்பாலும் அரசியலுக்குரியதாக மாறி விட்டன. அதிகாரிகளால் காட்டப்படும் நேர்மையீனங்களுடன், ஒவ்வொரு பள்ளிக்கூடத்தையும் சுற்றியிருக்கும் பழைய மாணவர்கள் வகுத்துக்கொள்ளும் விதிமுறைகளும் அதிபர் நியமனங்களைச் சர்ச்சைகளின் மையமாக்கி விட்டன.

அதிலும் பழைய மாணவர் சங்கங்களுக்கு இடையே ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்கள் இருந்துவிட்டால், நிலைமையே தனி. அந்தந்தக் குழுக்கள் எல்லாமும் ஒவ்வொரு அரசியல் கட்சிகளிடமும் செல்ல, பிரச்சினை உச்சத்தை எட்டி விடும்.

வேம்படி மகளிர் கல்லூரி மற்றும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைகளிலும் கடந்த காலங்களில் இதேபோன்று அதிபர் நியமனங்கள் பட்டபாடுகள் மறக்கப்படக்கூடியனவல்ல. சில பிரச்சினைகள் குழு மோதல்களுடன் முடிந்துபோயின. சில ஊடகங்கள் வரை பரபரப்பாகியதுடன் முடிந்து போயின. சில நீதிமன்றங்களின் படியேறியே முடிவுக்கு வந்தன. இவை மிகச் சில உதாரணங்கள் மட்டுமே. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வன்னியிலும் இதுவேதான் நிலைமை.

பெரும்பாலான பிரபல பாடசாலைகளில் அதிபர் கதிரையைப் பிடிப்பது என்பது அரசியல் தலைமையைக் கைப்பற்றுவதற்கு ஒப்பானதொரு மோதலாகவே உருவெடுத்து வருகிறது. இங்கே தகுதியும் தராதரம் மட்டும் போதுமானதல்ல. அரசியல் ஆசியும் வேண்டும். அந்த அரசியல் ஆசி, அதிகாரத்திலுள்ள ஆட்சியின் ஆசியாக இருந்தால் இன்னமும் நன்மை பயக்கும்.

உடுவில் மகளிர் கல்லூரி அதிபர் நியமன சர்ச்சையில்கூடக் கடைசியில் அதிகார ஆட்சியின் கால்களிலேதான் கிளர்ச்சிக் குழுவினர் விழுந்தனர். அது அவர்களுக்கு நன்மை தரும் தாராது என்பதற்கு அப்பால், மாணவர்களையும் அவர்களது கல்வியையும் இந்த விவகாரம் நிச்சயம் பாழடிக்கும். இத்தனை வருடங்களாகக் கட்டிக் காக்கப்பட்ட பாடசாலையின் மதிப்பை அதன் மீதான நம்பகத்தன்மையை நிச்சயம் கேள்விக்குள்ளாக்கும். பாடசாலையின் எதிர்காலத்தை நிச்சயமற்றதாக்கும். ஆனால், இது பற்றியெல்லாம் போட்டிக் குழுக்களுக்கு அக்கறையில்லை. அவற்றுக்கு தத்தம் தரப்புகளின் வெற்றி மட்டுமே குறி. மாணவர்களின் நலனின் பேரால் தங்கள் நலன்களைப் பேணிக்கொள்வதே அவற்றின் தேவை.

### ஆளுமையற்ற தலைமைகள்

இந்தப் போட்டிக் குழுக்களின் நோக்கமறிந்து, அவற்றின் ஆதிக்கத்தில் பிடியிலிருந்து மாணவர்களை விடுவித்துக் கல்வியைப் பாதுகாக்க வேண்டியது அரசியல்தலைமையின்கடமை. ஆனால், அத்தகைய ஆளுமை உள்ள தலைமை தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பது பெரும் கவலை. இருக்கும் தலைமைகளால் இந்தச் சிறு பிரச்சினையைக்கூட சுமுகமாகத் தீர்க்க முடியவில்லை. குறிப்பாக வடக்கு மாகாண சபை இந்த விவகாரத்தை மிக மோசமான முறையில் கையாண்டு சொதப்பியது. உள்வீட்டு விவகாரங்களில் மத்தி தலையிடக்கூடாது என்று கூறும் வடக்கு மாகாண சபை இந்தச் சிறிய விடயம் மத்தியின் காலடியில் விழும் வரைக்கும் விட்டு வைத்தது.

தென்னிந்தியத் திருச்சபையின் ஆயர் டானியல் தியாகராஜாவின் தரப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவுடன் செயற்படுவதாக – நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் தலையீடு – கிளர்ச்சிக் குழு கூறிக்கொண்டதில் எதிர்த் தரப்பினரான முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அமைச்சர் இராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ஆகியோரும் இந்த விடயத்தில் மூக்கை நுழைத்துக்கொண்டார்கள். மாணவிகள் ஜனாதிபதியின் கால்களில் விழ வைக்கப்பட்டார்கள். குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது மட்டுமே அவர்களின் நோக்கம்.

பிரச்சினையைச் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் இருந்து பேசி சுமுகமாகத் தீர்ப்பதற்கு அவர்கள் முயற்சிக்கவேயில்லை. பிளவுபட்டு நிற்கும் ஏதாவது ஒரு தரப்புக்கு ஆதரவளிப்பதன் மூலம் அந்தத் தரப்பை வெற்றிபெற வைத்து தமது அரசியல் வயிற்றை வளர்த்துக் கொள்ளப் பார்த்தார்கள், பார்க்கிறார்கள்.

### திருச்சபையின் பொறுப்பற்ற தன்மை

இந்த அரசியல் தலைமைகள் மட்டுமல்ல, தென்னிந்தியத் திருச்சபையின் தலைமையும் இதே தவறைத்தான் விட்டது. பாடசாலையின் உள் விவகாரம் வீதியில் இறங்கியபோதே, தான் இறங்கி வந்து பேசி நிலமையைக் கட்டுக்குள் கொண்டுவந்திருக்கவேண்டும். ஆனால், அரசியலின் கைகளிலும் அகப்பட்டுச் சின்னாபின்னப்படும் வரையில் அதனை வளரவிட்டு வாளாவிருந்தது மிகப் பெரிய தவறு. மாணவர்களை வழிநடத்தும் ஒரு தலைமை எதேச்சாதிகாரப் போக்குடன் நடந்துகொள்ள முடியாது. அது அவர்களுக்கு வழி காட்டியாக இருக்க வேண்டும்.

பிரச்சினைகளும் முரண் பாடுகளும் ஏற்படும் இடங்களில் அவற்றை எப்படி நல்ல முறையில் தீர்த்துக்கொள்வது என்பதை கற்றுக் கொடுப்பதாக இருக்கவேண்டும். தான் எடுத்துவிட்ட முடிவு சரியானதாகவே இருந்தாலும் அதனை நடைமுறைப் படுத்தியே ஆகப்போகிறேன் கிளர்ச்சி செய்பவர்கள் பற்றிக் கவலையில்லை என்று இருந்துவிட முடியாது. எதிர்ப்புக் குரல்களுக்கும் செவிசாய்க்க வேண் டும். அவற்றிலுள்ள நியாயங்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். ஆனால், தென்னிந்தியத் திருச்சபையின் தலைமை, கிளர்ச்சியில் ஈடுபட்ட மாணவிகளை ஒரு தடவையேனும் சந்தித்துப் பேசவில்லை. அவர்கள் தரப்பு நியாயத்தைக் கேட்கவில்லை.

மாணவிகளின் கோரிக்கை நியாயமற்றதாக அடிப்படையற்றதாக இருக்கலாம், அதிபர் ஷிராணி மில்லிஸின் ஓய்வு ஏற்கனவே அவரது சம்மதத்துடன் தீர்மானிக்கப்பட்ட விடயமாகக்கூட இருக்கலாம். ஆனால், மாணவர்கள் ஏன் அந்தக் கோரிக்கையை முன்வைக்கிறார்கள், அதன் பின்னணி என்ன, அவர்களின் கேள்வியிலுள்ள நியாயமற்ற தன்மை என்ன, அவர்களைத் தூண்டுபவர்களின் நோக்கம் என்ன என்பவை பற்றி அவர்களுக்கு விளக்கமளித்திருக்கலாம். அவர்களையும் மதித்து நடந்திருக்கலாம்.

ஏனெனில் திருச்சபைக்குள் இருக்கும் உள்முரண்களால்தான் இந்த அப்பாவி மாணவிகள் பகடைகளாக உருட்டப்படுகிறார்கள் என்பது ஆயர் தியாகராஜாவுக்குத் தெரியாததல்ல. அதன் உள், வெளி தாற்பரியங்களை வேறு எவரையும்விட நன்கு அறிந்தவர் அவர். இறங்கி வந்து பேசியிருந்தால் இந்தப் பிரச்சினை இத்தனை வஞ்சமிக்கதாக மாறாதிருந்திருக்கக்கூடும்.

அதனால்தான் பிரச்சினைகளைக் கையாள்வதிலும் அவற்றைத் தீர்ப்பதிலும் தமிழ்த் தலைமைகளுக்கு இருக்கக்கூடிய ஆளுமை குறித்துச் சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததாகின்றது.





# சத்துருக்கொண்டான்

## கொலைக்களம் - 1990

யாதுமாகி

அன்றைய ஆட்சியில் தமிழர்கள் பயத்துடன் நடமா டிய காலம். மக்களை அல்லோலகல் லோலப்படுத்தும் படையினரின் சுற்றி வளைப்பு வழமையான ஒன்றென எண்ணி நகர்ந்த மக்கள் கொல்லப் பட்டும் இதுவரை காணாமல் ஆக்கப்பட்டிருந்த கொடூரம் நிறைந்த நாள்களில் ஒன்று. அவை திரு கோணமலை-மட்டக்களப்பு வீதி யிலிருந்து சில கிலோ மீற்றர்கள் தொலைவிலுள்ள சத்துருக் கொண்டான் என்ற தமிழ்க் கிராமத்தில் நடந்தேறிய கொடூரங்கள் தான் அவை.

அப்போது. ஜனாதிபதியாகவிருந்த ஆர்.பிரேமதாச வின் ஆட்சிக் காலத்தில் 1990ஆம் ஆண்டு செப் ரெம்பர்மாதம்9ஆம்திகதியன்றுநூற்றுக்கணக்கான படையினரால் சிவில் உடை அணிந்தவர்களோடு சத்துருக்கொண்டான் கிராமம் ஆக்கிரமிக்கப் படுகின்றது. கைகளில் ஆயுதம் ஏந்திய படையி னரால் குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், இளையவர்கள், முதியவர்கள் என்ற பாகுபாடு இன்றி கிராமங்களில் இருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்படுகின்றனர். வெளியேற்றப் பட்டவர்கள் அனைவரும் விசேட அதிரடிப் படையி னராலும் இஸ்ரேலிய மொசாட் அமைப்பினால் பயிற்சியளிக்கப்பட்ட முஸ்லிம் ஊர்காவல் படை யினராலும் அருகிலுள்ள பாடசாலைக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். அங்கே சிறிய கட்டடப் பகுதி ஒன்றுள்அடைக்கப்பட்டவர் கள் "என்ன நடக்கப்போ கின்றதோ..." என்ற ஏக்கத் துடன் காத்திருக்கின்றார் கள். மெல்லமெல்ல இருள் சூழ ஆரம்பிக்கும் மாலைப் பொழுதில் படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட மக்களைத் தவிர்த்து, கிராமத்தில் மீதமிருந்த மக் கள் மன் ரேசா அகதி முகா முக்குள் தஞ்சமடைகின்ற னர். அந்தக் கிராமத்தில் எஞ்சியிருந்த இன்னொரு பகுதியினரை பெரிய ஐயா கூட்டத்துக்கு அழைத்து வரச் சென்னதாகக்கூறி, சத்துருக்கொண்டான் இராணுவ முகாமுக்கு படையினரால் அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

அவர்களுடன் கிழக்குப் பல்கலைக்கழக அகதி கள் முகாமிலிருந்த 174 பேரும், சித்தாண்டி முரு கன் ஆலய முகாமிலி ருந்த 33 பேரும், அடங்கு கின்றர்.

குறித்த பகுதிகளிலிருந்து கொண்டு செல்லப்பட்ட வர்களுள் படையினரால் பிரித் தெடுக்கப்பட்ட 186 பேர் தனித்து வகைப்படுத் தப்பட்டனர். சில நிமிடங் கள் கழித்து அவரவர் அணிந்திருந்த மேற் சட்டைகளைக் கொண்டு பின்புறமாக அவர்களின் கைகள் கட்டப்பட்டு தனி யாக வேறிடம் நோக் கிக் கொண்டு செல்லப்படுகின்றனர்.



நள்ளிரவுடன் முடிவடைந்த இவற்றையெல்லாம் பார்த்திருந்த ஏனையவர்கள் விடிந்ததும் படை யினரால் பிரித்துக் கொண்டு செல்லப்பட்டவர்களை மீட்டு வரலாம் என்று எண்ணியிருந்தனர். ஆனால் அன்றிரவே அவ்வாறு பிரிக்கப்பட்டவர்களின் கதறல் களை மட்டுமே உறவினர்களால் கேட்க முடிந்தது. தூரத்திலிருந்து கேட்ட அந்தக் குரல்களை வைத்தே அவரவரால் தமது உறவுகளுக்குரியவை அந்தக் குரல்கள் என்று ஊகிக்க முடிந்தது. அவ்வாறு கேட்ட வர்கள் கதறியழுத காட்சிகளுடனும் கண்ணீருடனும் நிறைந்தி ருந்தது அந்தக் கிராமம். எனதுபிள்ளைக்கு என்ன நடந்தது? எனது கணவருக்கு என்ன நடந்தது? எனது தந்தைக்கு என்ன நடந்தது? அந்தக் கொடூரக் கொலைகளைக் கண்கொண்டு பார்க்கா விட்டாலும் , கதறல்களைக் காதுகளால் உண்ர்ந்து கதறி அழுகின்றனர். காற்றோடு கலந்து வந்த மரண ஓலங்கள் மூலமாகத் தங்கள் உறவுகள் கொலை செய்யப்படுகின்றனர் என்பதை உணர்ந்த வர்களின் கண்ணீரும் நிறைகின்றது கிராமத்தில். விடிந்ததும் மயான அமைதி கொள்கின்றது சத்துருக் கொண்டான் கிராமம். கொக்குவிலைச் சேர்ந்த 47 பேரும், சத்துருக்கொண்டானைச் சேர்ந்த 38 பேரும், பனிச்சையடிக் கிராமத்தைச் சேர்ந்த 37 பேரும், பிள்ளையாரடிக் கிராமத்தைச் சேர்ந்த 62 பேருமாக 184 தமிழர்கள் தான் அன்று அங்கு கொல்லப் பட்டவர்களாவர்.

விடுதலைப் புலிகளுடன் போர் புரிந்து தோல்வி கண்ட சமயங்கள் பலவற்றில் இவ்வாறு தான் தமிழ் மக்கள் படையினரால் கெல்லப்பட்டு வந்துள்ளனர்.

1983இல் இருந்து 2007 வரை நடைபெற்ற தமிழினப் படு கொலைகளில் பெரும் தொகைத் தமி ழர்கள் சத்துருக்கொண்டான் கிராமத்தில் நிகழ்ந்த கெலைகளிலேயே கொல்லப்பட்டனர். இவை நிகழ்ந்து 26 வருடங்கள் கடந்து விட்டன. இதுவரை அவர்களின் சடலங்களைக் கூடக் கண்டிராத உறவு கள் அவர்கள் கொல்லப்பட்டு, புதைக்கப்பட்டும் எரிக்கப் பட்டும் இருக்கலாம் என்ற சந்தேகங்களுடன் கண் ணீர்விடுகின்றனர். இவைஎந்த ஆட்சியாளர்களாலும் தீர்வு காணப்படாத கொலைகளாகி விட்டதால் தமது உறவுகளைக்கொன்ற பெரும்பான்மை அரசியல்பிடிக் குள்ளே தான் தொடர்ந்தும் இருக் கின்றோம் என்றுணர்ந்து கொல் லப்பட்ட தமது உறவுகளை இன்று வரைநினைவுகூர்ந்துவருகின்றனர்.

“நள்ளிரவுடன் முடிவடைந்த இவற்றையெல்லாம் பார்த்தி ருந்த ஏனையவர்கள் விடிந்த தும் படையினரால் பிரித்துக் கொண்டு சென்றவர்களை மீட்டு வரலாம் என்று எண்ணி யிருந்தனர். ஆனால், அன்றி ரவே அவ்வாறு பிரிக்கப்பட்ட வர்களின் கதறல்களை மட்டுமே உறவினர்களால் கேட்க முடிந்தது.”



# குற்றமே தண்டனை

விதார்த்துக்குக் கண்ணில் பிரச்சினை. அவரது பார்வை வீச்சின் சுற்றளவு மிகவும் குறைவு. குழாய் வழியாகப் பார்ப்பதைப்போலதான் அவரால் பார்க்க முடியும். பக்கவாட்டுக் காட்சிகள் தெரியாது. படிப்படியாக அந்தப் பார்வைத் திறனும் மறைந்து விடும், கண் மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொள்வது மட்டுமே தீர்வாக இருக்கும் என்கிறார் மருத்துவர். இதற்கு அவரது வருமானத்துக்கு மீறிய பெரும் தொகை தேவைப்படுகிறது.

விதார்த் வசிக்கும் குடியிருப்பில் எதிரே கீழ்த்தளத்தில் வசிக்கிறார் ஐஸ்வர்யா. அவரது வீட்டுக்கு ரஹ்மானும் மற்றொரு இளைஞரும் அவ்வப்போது வந்து போகின்றனர். திடீரென ஒரு நாள் ஐஸ்வர்யா கொலை செய்யப்படுகிறார். அதன் பின்பு என்ன நடந்தது? கொலை செய்தது யார்? இதற்கும் விதார்த்தின் கண் பிரச்சினைக்கும் என்ன சம்பந்தம் என்பது தான் மீதிக் கதை.

படத்தில் கதை என்று சொல்லப் பெரிதாக எதுவும் இல்லை. ஒரு கொலை. அதையடுத்த விசாரணைகள், சந்தேகங்கள், காய் நகர்த்தல்கள் என்று போகிறது திரைக்கதை. குற்றத்தை மையமாகக் கொண்டதுபோலத் தோற்றமளித்தாலும் உண்மையில் இந்தப் படம் மனித இயல்பையே தன் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. மனிதர்களின் நுட்பமான குணாதிசயங்களை வெளிக்கொணரும் காட்சிகள் மற்றும் சம்பவங்களின் தொகுப்புத்தான் படம். நியாயம், தர்மம் பேசும் அளவுகோல்களுக்கு இந்தப் படத்தில் இடமில்லை. பாடல் கிடையாது. முத்திரை வசனம் கிடையாது. நாயகன், வில்லன் போன்ற வழக்கமான சங்கதிகள் எதுவும் கிடையாது.

விதார்த்தைப் பின்தொடரும் திரைக்கதையின் போக்கில் ரஹ்மான், நாசர், பூஜா தேவ்ரியா, சோமசுந்தரம், ஐஸ்வர்யா ஆகியோரின் பாத்திரங்கள் வழியாக அவரவர் இயல்பை அப்படியே காட்டியிருக்கிறார் இயக்குநர் மணிகண்டன். ஆசைகள், கனவுகள், ஏக்கங்கள், பொய்மை, கயமை, காதல், துரோகம் என ஒவ்வொரு பாத்திரங்களையும் சூழல்களே வடிவமைக்கின்றன. அவர்களது மாற்றங்களையும் சூழல்களே தீர்மானிக்கின்றன.

திரைக்கதையில் அழுத்தம் பெறும் மானுட வாழ்வின் எதிர்மறை அம்சங்களுக்கிடையே நாசரின் தார்மிகக் குரலும் பூஜாவின் களங்கமற்ற அன்பும் இயல்பாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது. நாசரின் குரல் படத்தின் அறக் குரலாக ஒலிக்கிறது. மனிதர்கள் எவ்வளவு சீரழிந்தாலும் இந்த உலகில் மெய்யான அன்பு எப்போதும் மிச்சமிருக்கும் என்பதைச் சொல்கிறது பூஜாவின் பாத்திரம். விதார்த்தின் குற்ற உணர்வின் இறுக்கம், நிலத்தின் மீது படரும் பனிப் படலம்போலப் படத்தின் மீது படர்ந்து புதியதொரு காட்சி அனுபவத்தை அளிக்கிறது. பெரிய திருப்பங்களோ, விறுவிறுப்பான ஓட்டமோ அற்ற திரைக்கதையாக இருந்தாலும் சின்னச் சின்னத் திருப்பங்கள் மூலம் சுவாரசியப்படுத்துகிறார் இயக்குநர். வசனங்கள் சிக்கனமாக, இயல்பாக உள்ளன.

விதார்த் தொடங்கி காவல்துறை ஆய்வாளர் மாரிமுத்து, பசி சத்யா வரை எல்லா நடிகர்களும் தங்கள் பங்களிப்பை இயல்பாகவும், கச்சிதமாகவும் செய்திருக்கின்றனர். மிகை என்பது எவரிடமும் துளியும் இல்லை. விதார்த்துக்கு நடிக்க அருமையான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. பார்வைக் குறைபாடும் குற்ற உணர்வுமாக நடமாடும் பாத்திரத்தை நன்கு கையாண்டிருக்கிறார். பார்வைக் கோளாறை மறைக்கச் சிரமப்படுவதையும் சிறப்பாகச் செய்திருக்கிறார். பார்வையிலும் சிரிப்பிலும் அன்பைப் பொழிகிறார் பூஜா தேவ்ரியா. ஒரு சில காட்சிகளில் மட்டுமே வரும் ஐஸ்வர்யா ராஜேஷ் படத்தின் பின்னணிக்கு வலுச் சேர்க்கிறார்.

தான் ஏற்கும் ஒவ்வொரு வேடத்துக்கும் பிரத்தியேகமான அடையாளத்தை ஏற்படுத்தி விடும் கலைஞன் குரு சோமசுந்தரத்துக்கு இந்தப் படமும் அதற்கு விலக்கல்ல. அமைதியும் ஆழமும் கொண்ட பாத்திரத்தை முழுமையாக உள்வாங்கி அற்புதமாக வெளிப்படுத்தியிருக்கிறார் நாசர். ரஹ்மானின் பக்குவமான நடிப்பும் படத்துக்கு வலுச் சேர்க்கிறது.

திரைக்கதையின் ஒலிப் பரிமாணமாக அமைந்திருக்கிறது இளையராஜாவின் இசை. பின்னணி இசையின் ஓசை தூக்கலாக அமைந்திருப்பது சில இடங்களில் உறுத்துகிறது. என்றாலும், உணர்வுகளை இசையாக மொழி பெயர்க்கும் இளைய ராஜாவின் படைப்பாற்றல் படத்தின் மதிப்பைக் கூட்டுகிறது.

மனித நடத்தை, மனிதர்களின் செயல்பாடுகளில் சூழலுக்கு இருக்கும் பங்கு ஆகியவற்றைச் சித்திரித்த விதத்தில் வெற்றி பெற்றிருக்கும் இயக்குநர், படத்தைப் பார்வையாளர்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வந்து நிறுத்துவதில் சற்றே பின்தங்கியிருக்கிறார். காதல் பிரச்சினைகளில் சிக்கி இளம்பெண்கள் கொலையாவது அதிகரித்துள்ள நிலையில் அது போன்றதொரு கொலையைக் கையாளும் இந்தப் படம், அதுகுறித்த கேள்வி எதையும் எழுப்பவில்லை. பாதிக்கப்பட்ட பெண் என்ற கோணம் படத்தில் இல்லை.

நாயகன், நாயகி, வில்லன் முதலான சட்டகங்களைக் கழற்றி எறிந்துவிட்டு, உண்மைக்கு நெருக்கமாக நின்று வாழ்வின் சலனங்களைப் பதிவுசெய்யும் இந்தப் படத்தின் அணுகுமுறை தமிழுக்குப் புதிது. மனிதர்களின் பிறழ்வுகள், குற்றங்களை இயல்பாகச் சித்திரிக்கும் இந்தப் படம், அறத்தின் குரலை மிகையற்ற அழுத்தத்துடன் முன்வைத்திருப்பது படத்தை வேறொரு தளத்துக்குக் கொண்டுசெல்கிறது.

"ஆசைகள், கனவுகள், ஏக்கங்கள், பொய்மை, கயமை, காதல், துரோகம் என ஒவ்வொரு பாத்திரங்களையும் சூழல்களே வடிவமைக்கின்றன. அவர்களது மாற்றங்களையும் சூழல்களே தீர் மானிக்கின்றன."



## மண மகள் தேவை



மாமியார் கேட்கிறார்
"மனம் குளிரச் சீதனம்"
மாமனார் கேட்கிறார்
"இருப்பதைவிட நல்ல சமையல்காரி"
மாப்பிள்ளை கேட்கிறார்
"அக்கா, தங்கை நிறைந்தவள்"
அடுப்படியில் காய்ந்து,
அடிமாடாய் உழைப்பதற்கும்
அந்தரங்க வேலைகளுக்கும்
அழகிய மணமகள் அவசரமாகத் தேவை.
பிற்குறிப்பு:
மனம் குளிர்பவர் முடிவே இறுதியானது.

ஞி.சந்திரவதனா



# 11 ஆண்டுகளுக்குப் பின்னர் மிரட்ட வரும் ரிங்ஸ்

குறிப்பிட்ட ஒரு வீடியோ ரேப்பின் காட்சிகளைப் பார்ப்பவர்கள், எண்ணி ஏழே நாள்களில் சாவடைகிறார்கள். இதனைக் கருவாகக் கொண்டு, உலகத் திகில் பட வரிசையில் நிலையான இடம் பிடித்த கொலிவூட் திரைப்படம் தான் 'த ரிங்' . 2002இல் வெளியான இந்தப் படத்தைத் தொடர்ந்து 2005இல் 'த ரிங் - 2' வெளியானது. அதன் பின்னர் 11 ஆண்டுகள் கழித்து வரவிருக்கிறது 'ரிங்ஸ்' இத்தனை வருட இடைவெளியில் ஒரு திரைப்படத்தின் அடுத்த பாகம் வெளியாவதும், அதற்கான எதிர்பார்ப்புக்கள் அதிகரித்து இருப்பதும் திகில் படவரலாற்றில் குறைவானாலும் இந்தப் படம் அதிலிருந்து விலகியுள்ளது.

**'த ரிங்'**

இறுவட்டுகளுக்கு முன்பு புழக்கத்திலிருந்த வி.சி.ஆர். சாதனத்தையும் அதற்கான வீடியோ கேசட்டையும் நினைவிருக்கிறதா? அப்படியொரு வீடியோ ரேப்பில் மர்மமான காட்சிகள் பதிவாகியிருக்க, அதைப் பார்ப்பவர்களின் இறப்பு 7 நாள்களில் உறுதிசெய்யப்படுகிறது. வீடியோ ஓடி முடிந்ததும் வீட்டில் அடிக்கும் தொலைபேசியில் 7 நாள்கள் என்கின்றது ஓர் அமானுஷ்யக் குரல். அதன்பின் முதல் நாள், இரண்டாவது நாள் எனத் திரையில் அறிவிப்பு ஒளிர, லப்டப் எகிறல்களோடு தங்களது கொடூர இறப்பை நோக்கிக் கதாபாத்திரங்கள் செல்லும். உறவுப் பெண்ணின் மர்ம இறப்பைத் துலக்க முற்படும் ஒரு பெண் பத்திரிகையாளர் அந்த வீடியோக் காட்சிகளைப் பார்க்க நேரிடுகிறது. அவளுடைய மகன், முன்னாள் கணவர் ஆகியோரும் இந்த வரிசையில் சேர, ஏனையவர்களும் தங்களைக் கொல்ல வரும் ஆவியை முந்திக் கொண்டு இறப்பை வெல்ல, ஓடுகிறார்கள். தொடர்ந்து நடப்பவைதான் 2002இல் வெளியான 'த ரிங்'.

**திகில் பட வரலாற்றில் புதுமை**

80 மற்றும் 90களின் கொலிவூட் திகில் படம் என்றால் திரையிலும், படம் பார்ப்பவர் முகத்திலும் குருதி தெறிக்க விடுவார்கள். 'த ரிங்' படம் அப்படியான திகில் படப் பாணிக்கு முற்றுப்புள்ளி வைத்து, இருக்கை நுனியில் இருத்தும் திகில் படமாக மட்டுமல்லாது, கதையோட்டத்துடன் சிக்கும் முடிச்சுக்கள், அவற்றை அவிழ்க்கும் விவேகப் பாணியால் ரசிகர்களைக் கவர்ந்தது. இந்தப் படத்தில் ரசிகர்களின் ரசனைக்கு ஏற்றவாறு அமைந்த அமானுஷ்யக் காட்சிகள் ரசிகர் களின் உள்வாங்கும் திறனின் கதவுகளை இன்னும் அகலமாகத் திறந்து விட்டதால், இத்தனை வருடங்களாக அதன் அடுத்த பாகத்துக்காக ரசிகர்கள் காத்திருக்கிறார்கள்.

ஜப்பானின் கோஜி சுஸுகி என்ற நாவலாசிரியர் அந்த நாட்டின் பிரபலமான ஆவி பழிவாங்கும் நாட்டுப்புறக் கதை ஒன்றில், அறிவியல் ஆய்வுகளையும் கலந்து எழுதிய நாவல் 1998இல் 'ரிங்கு' என்ற பெயரில் அங்கு படமானது. ஜப்பான் சினிமா வரலாற்றில் சாதனை படைத்த அதன் கொலிவூட் ஆக்கமே 2002- த ரிங். படம் வெளியான 24 மணி நேரத்தில் மட்டும் 20 இலட்சம் பிரதிகள் விற்றுத் தீர்ந்தன. தாறுமாறாகப் பிரபலமான இந்தப் படத்தின் வசூல் சாதனை திகில் பட வரிசையில் 2010வரை முன்னின்றது.

**த ரிங் - 2**

'த ரிங்' தொடர்ச்சியாக 2005இல் ஒரு குறும்படமாகவும், இரண்டாம் பாகமாக 'த ரிங் 2' திரைப்படமும் வெளியாகின. முதல் படம் போல் நன்றாக இல்லை என விமர்சகர்கள் எச்சரித்தும், இரண்டாம் பாகம் வசூலில் குறை வைக்கவில்லை. இவ்வரிசையில் தற்போது வெளியாகும் 'ரிங்ஸ்' மூன்றாம் பாகமல்ல. முதல் படத்தின் இரண்டாம் பகுதி. அதாவது, 'த ரிங் - 2' படத்தைப் புறக்கணித்துவிட்டு, முதல் படத்தின் எதிர்ப்பார்ப்புக்களோடும் அக்கதையின் தொடர்ச்சியாகவும் 'ரிங்ஸ்' படம் தயாராகியுள்ளது.

**நவீனத்துடன் ரிங்ஸ்**

10 ஆண்டுகளுக்கு மேலான இடைவெளியில் அடுத்த பாகத்தைக் கொடுப்பதில் எக்கச்சக்க சிக்கல்கள் எழுந்தன. முந்தைய பாகத்தை நினைவுபடுத்தும் திரை நட்சத்திரங்கள் இதில் இல்லை. முதலாவது படத்தின் பிரதான கதாபாத்திரமாக வரும் வீடியோ கேசட் தற்போது வழக்கொழிந்துள்ளது.

எனவே நவீன யுகத்துக்கு ஏற்ப இணையப் பெருவெளியில் உலவும் வீடியோவைத் தரவிறக்கிப் பார்ப்பவர்களைக் கொத்துக் கொத் தாகச் சாவு துரத்தியடிப்பதாகக் கதை மாறியுள்ளது.

கடந்த நவம்பரில் வெளியாக வேண்டிய இந்தப் படம் முப்பரிமாண ஆக்கத்துக்காகத் தள்ளிப்போடப்பட்டு, பின்னர் அந்த முயற்சி கைவிடப்பட்டது. இந்த ஊசலாட்டங்களுக்குக் காரணம், தனது 'ரிங்கு' என்ற முதல் நாவலுக்குக் கிடைத்த வெற்றியால் கோஜி சுஸுகி அதன் முன்பின்னான காலத்தில் பல்வேறு நாவல் களை எழுதினார். கொல்லப்பட்ட சிறுமி சமாரா ஆவியின் சக்தி மேகக் கணினியத்தின் வழி ஊடுருவும் அவரது 2012 இல் வெளியான நாவலின் பாதிப்பு தற்போது வரப்போகும் 'ரிங்ஸ்' இல் இருப்பதாலாகும்.



**கொலிவூட் பேய்களுக்கு சவால்**

சர்வேதசத் திகில் பட ரசிகர்களின் 11 ஆண்டுக் காத்திருப்புக்கு 'ரிங்ஸ்' நியாயம் சேர்க்குமா? என்பது படம் வெளியாகும் ஒக்ரோபர் 28இல் தெரிந்துவிடும். நம்மூரில் பேய்ப் படங்களின் வரிசை கொலிவூட்டிலும் தொடர்வதால், ரிங்ஸ் ஆவியின் உடனடித் தமிழ் மிரட்டலுக்கு நாமும் காத்திருக்கலாம்.



# டீப்வாட்டர் ஹொறைசான்

உண்மைச் சம்பவங்களை அடிப்படையாக வைத்துத் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் எப்போதும் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தத் தவறுவதில்லை. அந்த வகையில் ஓர் உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக வைத்துப் பிரம்மாண்டமாகத் தயாரிக்கப்பட்டுள்ள டீப்வாட்டர் ஹொறைசான் படமும் உலகெங்கும் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஆறு ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்கா அருகே மெக்சிக்கோ வளைகுடாவில் மனிதத் தவறால் கடலில் ஏற்பட்ட மிகப் பெரிய எண்ணெய்க் கசிவு விபத்துச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் படம் உருவாக்கப்பட்டுள்ளது.

2010 ஏப்ரல் 20 அன்று மெக்சிக்கோ வளைகுடாவில் எண்ணெய் துப்புரவுப் பணி நடக்கும் இடத்துக்கு ஊழியர்கள் வேலைக்குப் போகிறார்கள். மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டும், குடும்பத்தினருடன் அரட்டை அடித்தபடியும் வேலை செய்துகொண்டிருக்கிறார்கள். அப்போது திடீரென எண்ணெய்க் கசிவு ஏற்படுகிறது. எல்லா இடங்களிலும் எண்ணெய் மிக வேகமாகப் பீய்ச்சி அடிக்கிறது. ஊழியர்கள் அதில் சிக்கிச் சின்னாபின்னமாகிறார்கள். அத்தோடு தீயும் பற்றி நடுக்கடலில் கொழுந்துவிட்டு எரிகிறது.

இந்தச் செய்தி வெளியே தெரிந்ததும் ஊழியர்களின் குடும்பத்தினர் சோகத்தில் மூழ்குகிறார்கள். ஒட்டுமொத்த எண்ணெய்க் கட்டமைப்புக்களையும் தீ விழுங்கும் தருணத்தில், உயிர் பிழைக்க நாயகனும் பிற ஊழியர்களும் செய்யும் பரப்பரப்பான முயற்சிகளை, விறுவிறுப்புடன் படமாகச் சொல்லும் கதைதான் டீப்வாட்டர் ஹொறைசான்.

இந்தப் படத்தை பீட்டர் பெர்க் இயக்கியிருக்கிறார். காட்சிகளைத் தத்ரூபமாக உருவாக்கியிருப்பதில் இயக்குநருக்கு நிச்சயம் பெயர் கிடைக்கும். படத்தின் டிரெயிலர் அதற்குக் கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது. நாயகனாக மார்க் வால்பெர்க் நடித்திருக்கிறார். மிகப் பெரிய விபத்தில் சிக்கிக்கொள்ளும்போது வலியுடன் நகரும் ஒவ்வொரு நிமிடத்தையும், அதிலிருந்து தப்புவதற்கு நாயகன் செய்யும் சாகசங்களையும் உள்வாங்கி பிரமிப்பு ஏற்படும் வகையில் நடித்திருக்கிறார். படத்துக்கு இசையின் மூலம் ஸ்டீவ் ஜப்லோன்ஸ்கை உயிரூட்டியிருக்கிறார். சுமார் மூவாயிரம் கோடி ரூபாய் பொருட்செலவில் மிகப் பிரமாண்டமாகத் தயாரிக்கப்பட்ட இந்தப் படம் செப்ரெம்பர் 30 அன்று வெளியாக உள்ளது.

# கலைஞர் தம் பெருமை ஓங்க!



■ செ.மகேஷ்

கலைவிழாவிலேகலைஞர்களுக்குக் கொடுக்கும் கௌரவத்துக்கும் மேலாக, கலை கலாசாரம் பற்றிக் கனவுகூடக்காணும் தகுதியில்லாத பலரும் கலைஞர்களைப் புறம் ஒதுக்கி மேடைகளில் முன்னுரிமை பெற்று விடுகிறார்களே என்று கவலை தெரிவித்தார் சிவபாதத்தார். அதனைச் செவிமடுத்த செல்லத்தம்பியார் ஒருகணம் வேதனையோடு சிவபாதத்தாரை நோக்கினார். அவர் சொன்ன வார்த்தைகளில் நிறைந்த உண்மைகள் இருப்பதை வெளிப்படுத்தும் வகையில் செல்லத்தம்பியாரின் பார்வை சிவபாதத்தாரின் மேலே படர்ந்தது. ஆனால் அவரின் வாயினின்றும் வார்த்தைகளோ வெளிவரவில்லை.

நாடகம், நடனம் என்றும் சங்கீதம், வில்லுப்பாட்டு, கவியரங்கம், பட்டிமன்றம் என்றெல்லாம் பல்வகைக் கலாசார நிகழ்வுகள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. இந்தக் கலைகளையும் கலாசார வளங்களையும் பாதுகாக்கவும் பகிர்ந்து கொள்ளவும் ஆர்வமுள்ளோர் பலரும் எமக்கு மத்தியிலே உள்ளனர். கோயில் முன்றில்களிலும் கொட்டகைகளிலும் மக்களைக் கூவி அழைத்துக் கூட்டி நடத்தப்படும் இத்தகைய கலாசார நிகழ்வுகளில் சில பணக்காரர்களும் அரசியற் பிரமுகர்களும் தம்மை முன்னிறுத்திக் கலைஞர்களைப் புறமொதுக்கித் தமக்குப் பெயர் தேடிக் கொள்வதற்கு முந்தி விடுகிறார்கள். அதனால் கலைஞர்கள் ஒதுங்கி நின்று வேதனைப்படுவது உண்மையே!

எந்தக் கலை அரங்கானாலும் தமக்கு இலாபம் தேடிக் கொள்வதிலேயே கண்ணும் கருத்துமாகச் செயற்படும் இராஜதந்திரிகள் ஆங்காங்கே இருக்கவே செய்கிறார்கள். ஆனால் இவர்கள் எண்ணுவது போல் மக்கள் மடையர்களல்லர். எவரேனும் கூடுகின்ற அல்லது கூட்டுகின்ற பெரியார் ஒருவரின் பிறந்த நாள் கொண்டாட்டமானாலென்ன? கலியாணவீடு, பூப்புனித நீராட்டு விழா என்றாலென்ன? ஏன் சாவுச் சடங்கே ஆனாலென்ன? முந்திக் கொண்டு வலிந்தழைக்கப்படும் வகை தெரிந்து அங்கே தோன்றித் தமது அரசியலையும் சுய விளம்பரத்தையும் மேம்படுத்திக் கொள்ள நினைக்கிறார்கள். கலைஞர்களைப் புறந்தள்ளி இவர்கள் போடும் ஆட்டங்களெல்லாம் இவர்களின் உண்மையின் தோற்றங்களா? அல்லது போலியானவையா? என்பதை மக்கள் கண்டறியமாட்டார்கள் எனக் கற்பனை செய்வது அவர்களின் அறியாமையல்லவா? செல்லத்தம்பியர் நினைத்தார் சொல்லவில்லை.

மக்களை என்றுமே மடையர்களாகக் கருதும் நடிப்புக் கலை தெரிந்த ஒரு சிலர் அதிகாரிகளாக இருந்து கொண்டு உண்மைக் கலைஞர்களின் முன்னிலையில் நாடகமாடுதல் வழக்கமாகிவிட்டது. கலை கலாசாரப் பாரம்பரியங்களைப் பேணவும் பாதுகாக்கவும் பணந்தரும் அமைச்சின் கண்களில் கணக்கைக் காட்டிக் கொண்டே கலை வளர்ப்பதாகக் காரியம் ஆற்றுவது முறையல்லவே! தகுதியான தரமான கலைஞர்களைத் தேர்ந்து அவர்களின் மனங்கோணாது தரும் உதவியுடன் கலை வளர்க்க உற்சாகப்படுத்துவது அழகல்லவா? செல்லத்தம்பியார் சிந்தித்தார்.

இன்று எல்லாக் கலைத்துறைகளிலேயும் யாரை எங்கே வைப்பது என்ற தேர்விலே தகுதியானவர்கள், பல வேளைகளில் கண்டறியப்படாதிருப்பது எமது துரதிர்ஷ்டமே! நிர்வாகத் திறமை உள்ளோரைக் கொண்டே கலைகளை வளர்த்தெடுத்து விடலாம் எனக் கருதுதல் பொருத்தமானதாகத் தோன்றவில்லையே!

சான்றிதழ்களுக்கும் திறமைக்கும் மேலாக ஈடுபாடும் விருப்பும் இணைந்த தொழில் மேன்மையும் அவசியமல்லவா? சங்கீதம், நடனம், சித்திரம் ஆதியாம் கவின்கலைகளைப் பற்றிய அறிவும் பேச்சும் அவற்றினை விளக்கும் வகை தேர்ந்த எழுத்தும் பலரிடத்தில் சேர்ந்திருக்கலாம். ஆனால் அந்தந்த ஆளுமைகளிலிருந்து நுண்ணிய கலை மிளிரும் ஆக்கங்கள் வெளிப்படாதவரையில் எவருமே கலைஞர்களாகிவிட இயலாது. அத்தகைய திறமையில்லாதோரால் இந்தக் கலைகளின் மகத்துவமும் உணரப்படப் போவதில்லை. எமது கலைகளும் கலைஞர்களும் வளர்வதற்கும் எமது கலாசாரத்தைப் பேணி உன்னத கலைத்துவம் மேலோங்குவதற்கு வழி காண்பதற்கும் இந்தக் கலாசாரப் பணிப்பாளர்கள் பணியாளர்களாக முயல்வதற்கு முந்துதல் நல்லதல்லவா? சும்மா மேடையில் நின்று இவன் அவனைப் புளுகுவதும் அவன் இவனைப் புளுகுவதும் வேண்டாமே! உண்மைக் கலைஞர்களை அணைத்துக் கொண்டு கலைஞர்தம் பெருமை ஓங்கக் கலைத்துவம் மிளிரும் ஆக்கங்களுக்கு ஊக்கம் தர முந்துங்கள். அதுவே எமது கலைகள் வாழவும் வளரவும் வழி சமைக்கும். செல்லத்தம்பியார் நினைத்தார் சொல்லவில்லை.




"ஐயாமாரே
கேளுங்கோ
அப்பாமாரே
கேளுங்கோ
உங்கள் பிள்ளைகளுக்
கொரு நல்ல காலம் பிறந்
திருக்கு. மனிசிமாரோட
சண்டை பிடிக்காமல்
மனசுக்கு
விடுதலை
கொடுங்கோ...."



# ஒரு வகைத் தொற்றுநோய்

தாத்தாமாரிடமிருந்து பேரப்பிள்ளைகளுக்கு அப்படியே மரபுரிகளைக் கடத்துவது மனித உயிரியலில் அடிப்படையான ஒன்று. உருவத்தில் மட்டுமல்ல, குணத்திலும் பிள்ளைகள் அவர்களின் அப்பா, தாத்தாவைப் போலவே இருப்பார்கள். நல்ல குணங்களும், கெட்ட குணங்களும் மட்டும் அவர்களைப் போய்ச் சேருவதில்லை. உங்களின் மன நிலையும் அவர்களை ஆக்கிரமித்துக் கொள்கின்றன. புரியவில்லையா?

தாத்தா எப்போதும் மன அழுத்தத்துடனோ, அல்லது தந்தைமார் மன அழுத்தத்துடனோ இருந்தால், அது அவர்களின் அடுத்து வரும் சந்ததியினருக்கும் ஒரு பிரச்சினையாக நீடிக்கும். இது கொலம்பியப் பல்கலைக் கழகம் ஒன்றின் ஆய்வு முடிவு. சுமார் 19 வயதுள்ள 251 பேர் அடங்கிய இளமைப் பருவத்தினரையும் அவர்களின் சென்ற இரு தலை முறைகளையும் உட்படுத்தியதாய் இதுபற்றிய ஆய்வை மேற் கொண்டபோது, இந்த புதுவிதத் தகவல் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இதில் மன அழுத்தம், நம்பிக்கையின்மை, எதிர்மறை எண்ணங்கள், தற்கொலைக்குத் தூண்டப்படும் எண்ணம் ஆகியவை பெற்றுள்ள பிள்ளைகளை ஆராய்ந்த போது, அவர்களின் தாத்தாவுக்கோ, அல்லது தந்தைக்கோ இது மாதிரியான பிரச்சினைகள் இருந்தது தெரிய வந்தது.

"மன அழுத்தம் தாத்தாவுக்கு இல்லாமல் அப்பாவுக்கு மட்டும் இருந்தால், அது குழ்ந்தையின் மனோ நிலையைப் பாதிக்கலாம். ஆனால் தாத்தாவுக்கும் இருந்து, அப்பாவுக்கும் இருந்தால் கட்டாயமாகப் பேரனுக்கும் வர வாய்ப்புள்ளது" என்று வெயிஸ்மான் என்ற அந்தக் கொலம்பிய பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களுள் ஒருவர் கூறுகிறார்.

எனவே மன் அழுத்தம், மனநிலை சார்ந்த பிரச்சினைகள் என்பது உங்களோடு முடிந்துவிடுவதில்லை. உங்களையும் தாண்டி உங்கள் தலைமுறைகளையும் பாதிக்கிறது. நாம் விதைப்பதைத்தான் அறுவடை செய்ய முடியும். நல்ல விடயங்களை நீங்கள் குழந்தைகளுக்கு கற்றுக்கொடுக்காவிட்டாலும். தன்னிச்சையாக உங்களிலிருந்து அவர்கள் கற்றுக்கொள்ளும் இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு உங்கள் கைகளில்தான் உள்ளது. இதிலிருந்து தெளிவாவது என்னவெனில், சொல்வதை அவர்கள் செய்வதைவிட நாம் செய்வதைத்தான் அவர்கள் செய்வார்கள் என்பதே.



# வேண்டாமே மணமுறிவு

எஸ்.மல்லிகா

**எதிர்ப்பாலார் கவர்ச்சி**

திருமணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்றும் அது சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது என்றும் பெரியவர்கள் கூறுகின்றனர். ஆனால், அநேகமான திருமணங்கள் அவ்வாறு இல்லை. காரணம், திருப்தியற்ற மனநிலை. போதும் என்று கூறும் மனங்களை இன்று காண்பது அரிது. இதுவும் மணமுறிவுகள் ஏற்படுவதற்குக் காரணமாகின்றது.

இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான கணவன்- மனைவியர் வேலை செய்பவர்களாக உள்ளனர். இவர்களில், ஆணாயினும் சரி அல்லது பெண்ணாயினும் சரி தமது இணை தவிர்ந்த எதிர்ப்பாலாருடன் பழகும் சந்தர்ப்பங்கள் அதிகம். இது அலுவலகம் மற்றும் வெளியிடங்களில் சாதாரணமானது. நாளடைவில், இந்த எதிர்ப்பாலார் மீது இனம்புரியாத ஒரு கவர்ச்சி ஏற்படும். அது தம் இணை களைப் பிரிந்து, மாற்று இணையுடன் இணையும் அளவுக்குப் பிரியங்களை வளர்த்துவிடும். காரணம்- தத்தம் இணைகளிடம் கிடைக்காத அன்பு, தாம்பத்திய இன்பம் அந்த எதிர்ப்பாலாரிடம் கிடைக்கும் என்று நினைப்பதே.

இன்றைய இயந்திர உலகில், அதிகமானவர்கள் இயந்திரங்களுடன் வேலை செய்கின்றனர். இதனாலோ என்னவோ, பாதிக்கும் மேற்பட்டோரின் இதயங்கள் இயந்திரம் போல் மாறிவிட்டன. அங்கே அன்புக்குப் பஞ்சம். இவ்வாறு இணைவோர் மத்தியில் அன்புக்குப் பஞ்சம் ஏற்படும் பட்சத்தில், அன்புக்கு ஏங்கும் உள்ளங்கள் அதனைக் கொடுக்கும் உறவுகளுடன் ஒட்டிக்கொள்கின்றன. இது இருபாலார்க்கும் சமம்.

மேலும், பெண்ணுக்குக் கணவன் வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்திருப்பது- அதுபோல் ஆணுக்கு மனைவி வேறு ஆணுடன் தொடர்பு வைத்திருப்பது என்ற உண்மை தெரியவந்ததும், மன விரிசல்கள் ஏற்பட்டு- ஈற்றில் மணமுறிவுகளுக்கும் வித்திடுகின்றன. இவர்களால் பெரிதும் பாதிக்கப்படுவது பிள்ளைகளே.

உண்மையான திருமணத்திற்கு ஆதாரம் நம்பிக்கை. திருமண பந்தத்தில் இணைவோர் இறுதிவரை ஒருவருக்கொருவர் தாமே உதவியென்றும், எச்சந்தர்ப்பத்திலும் இணைபிரியமாட் டோம் என்றும் உறுதிமொழி எடுக்கின்றனர். ஆனால், திருமணம் முடித்த சொற்ப நாள்களிலோ அல்லது காலப்போக்கிலோ தம் இணைகளுக்குத் துரோகம் செய்து வேறு நபர்களுடன் கள்ளத் தொடர்புகளை ஏற்படுத்தி, நிரந்தரமாகவே தம் இணை களைப் பிரிகின்ற துயரம் அரங்கேறுகிறது.

(தொடரும்)

11

போகாதே போகாதே
நீ இருந்தால் நான் இருப்பேன்
போகாதே போகாதே
நீ பிரிந்தால்
நான் இறப்பேன்...



# ஒளிந்திருக்கும் இருமக் குறியீடுகள்



மின் சாதனங்கள் அனைத்திலும் நீங்கள் இந்தக் குறியீட்டைப் பார்த்திருப்பீர்கள். மிகப் பிரபலமான இந்தக் குறியீட்டை இந்தக் காலத்தில் தெரிந்திருக்காதவர்கள் குறைவு. தோரிந்திருக்காதவர்கள், நீங்கள் இயக்குவதற்காக கைபேசி, தொலைக்காட்சி, கணிணி, சலவை இயந்திரம் உள்ளிட்ட மின்சாதனப் பொருள்களின் பட்டன்களை அழுத்தும் போது அவற்றை உன்னிப்பாகக் கவனித்துப் பாருங்கள் அதன் மீது இந்தக் குறியீடு இருக்கும்.

இவ்வாறு அனைத்து சாதனங்களிலும் இடம்பிடத்திருக்கும் இந்தக் குறியீட்டுக்கான அர்த்தம் என்னவென்று உங்களுக்கு தெரியுமா?

சரி படிப்பதை நிறுத்தி விட்டு நாம் காட்டியுள்ள படத்தை நன்றாக உற்றுப்பாருங்கள். நீங்கள் சுவாரசியமாகப் படித்துக்கொண்டிருப்பதால், முன்னேயிருக்கும் அந்தப் படத்தைச் சரியாக பார்த்திருக்கமாட்டீர்கள் அதுதான்.

இப்போது படத்தை நன்றாக உற்றுப் பாருங்கள். அதில் 1 மற்றும் O என்ற எண்கள் உள்ளமை தெரியும். ஆம் அவை 1 மற்றும் 0 என்ற இருமக் குறியீட்டிலக்கங்களே. இரண்டாவது உலகப்போரின் போதுதான் இந்த இருமக் குறியீட்டிலக்கங்களை இந்த பட்டனுக்குரிய குறியீடுகளாகப் பயன்படுத்தினார்கள்.

இருமக்குறியீடுகளின் படி 1 என்றால் 'on' என்றும் O என்றால் off என்றும் அர்த்தம். இறுதியாக 1973ம் ஆண்டு சர்வதேச இலத்திரனியல் ஆணைக்குழு (IEC), இந்தக் குறியீட்டைத் தான் பயன்படுத்த வேண்டும் என்று வரைமுறை வகுத்தது. அன்றிலிருந்து இந்தக் குறியீடு அனைத்து மின்சாதனங்களிலும் இடம்பிடிக்கத் தொடங்கியது. அது on மற்றும் off என்ற செயற்பாடுகளுக்குரியவை. அதனால் தான் அவை 1 மற்றும் 0 என்று பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்தக் குறியீட்டில் இவ்வளவு விடயங்கள் உள்ளமை இப்போது தெரிகிறதா? நாம் கற்பனை செய்து பார்த்திருக்க முடியாத இது தான் அந்தக் குறியீட்டின் அர்த்தம்.



# கடவுள் தரிசனம்

திருவிழாக் காலம் ஆலயம் போனேன்
எதற்கு வந்தோம்
இறைவனைத் தரிசிக்கவா?

நாகரீக ஆடைகள்
நகை அலங்காரங்கள்
பலநாள் காணாமலிருந்தோரின்
கதைபேச்சுக்கள்
வியாபாரக் கூக்குரல்கள்
என நிறைந்த சனத்திரளுள்
கடவுகளைக் காணமுடியா

கவலையில் நான் இருக்க
என்னைக் கடந்து சென்றவரின்
நடை உடை மொழி கேட்டு
நடுங்கிப் போனேன்

எம் உறவுகள் தானா?
நம்பமுடியவில்லை
அங்கே கையிழந்த பிச்சைக்காரனுக்கு
தர்மம் இட்டே வீடு சேர்ந்தேன்
கடவுள் தரிசனம் முடித்த மனநிறைவில்

சி.ஞானாம்பிகா



# சின்னச் சின்ன மழைத்துளிகள் சேர்த்து வைப்போமா..?

ஜெ.காயா

மத்திய கோட்டை அண்மித்த எமது நாட்டின் வடக்கு- கிழக்குப் பிரதேசங்களுக்கு வடகீழ் பருவப் பெயர்ச்சிக் காற்றின் மூலம் மழை கிடைக்கும் காலம் ஐப்பசி-மார்கழி மாதங்களை உள்ளடக்கியது. ஆகையால் இம்முறை மழைக்காலம் நெருங்குகின்றது. யாழ்ப்பாண மக்களாகிய எமக்குத் தரையின் கீழே வழிந்து ஊறும் மழைநீரே பின்னர் வரும் கோடை காலங்களில் குடிநீராகின்றது. மயேசின் காலச் சுண்ணக்கற்படைகளைக் கொண்ட நாமிருக்கும் நிலப்பகுதி மழை நீரைச் சேமிப்பதில் ஒரு கொள்கலன்போல செயற்படுகின்றது. இவ்வாறு மழைநீரைச் சேமிப்பதால் சுண்ணாம்புப் படை சிதை வடைந்தும் வருகின்றது. இதைவிட, இங்கே மழைநீரைச் சேமித்து வைக்கக் குளங்களில்லை, மழைநீரில் பெரும் பகுதி எந்தவொரு பயனுமற்றதாய் வழிந்தோடிக் கடலைச் சென்று சேர்ந்து விடுகின்றன. இதனால் உவர் நீரைக் கொண்ட கடல் மட்டம் அதிகரிக்குமே தவிர தரைக்கீழ் நீரின் அளவு அதிகரிக்கப்போவதில்லை. இவற்றுடன் என்றுமில்லாத அளவுக்கு இங்கே கட்டடங்கள் தரையை மூடிப் பரப்பப்பட்டுள்ளன. இதனால் இதுவரை மழை நீரை உள்ளிழுத்து வந்த தரைப்பரப்பும் குறைவடைந்து வருகின்றது. தரைகள் மூடப்பட்டு வருவதாலும் கடல்நீர் தரைப் புகுந்து வருவதாலும் குடிநீர் குறைவது மட்டுமன்றி மாசடைந்தும் வருகின்றது. நாம் குடிப்பது மழை நீராயினும் தரையுடன் கலந்து வடிந்த பின்னரே கிணறுகள் மூலமாக அவற்றைப் பெற்றுக் கொள்கிறோம். அவைதான் குடாநாட்டு மக்களின் குடிநீர்த் தேவையின் முழுப்பகுதியையும் பூர்த்தி செய்கின்றன.

கிணறுகளில் தேங்கியுள்ள நீரைப் பயன்படுத்துவதைவிட மழைநீரை நேரடியாகப் பாத்திரங்களில் சேகரித்துப் பயன்படுத்தலாமா? அப்படிப் பயன்படுத்தும் மழைநீர் சுத்தமானதா? ஆரோக்கியமானதா? என்ற கேள்விகளும் சிலரிடையே எழாமலில்லை.

நம்மில் சிலர் பயன்படுத்தும் போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீரைவிட மழை நீர் பன்மடங்கு சுத்தமானது. அதைத் தாராளமாகக் குடிப்பதற்கும் சமைப்பதற்கும் பயன்படுத்தலாம். ஆகையால் மழை நீரைச் சேமிக்கப் பாத்திரங்களைத் தயாராக வைத்திருங்கள்.

மழைநீரைப் பெற்றுக்கொள்ளப்போகிறீர்கள் எனில் வெளிகொண்ட நிலப்பகுதியில் தூய்மையான சதுரவடிவான துணியின் நான்கு மூலைகளிலும் தடிகளைக் கட்டி துணியின் நடுப்பகுதியைக் குழிவாகத் தொய்வாக விட்டு நான்கு திசைகளாகவும் தடிகளை ஊன்றிக் கட்டிவிடுங்கள். அதற்குக் கீழே நீர்கொள்ளும் பாத்திரத்தை வைத்தால் மழையின்போது அது நீரை ஏந்திக் கொள்ளும். மழை பெய்ய ஆரம்பித்த சில மணி நேரத்திற்குப் பிறகுதான் மழை நீரைச் சேமிக்கவேண்டும். ஏனெனில் மழை பெய்ய ஆரம்பித்ததும் தரையைத் தொடும் முதல் மழைத்துளிகளில் காற்றில் இருக்கும் தூசிகள் கலந்திருக்கும். அதனால் அது மாசடைந்ததாகவே தரையை அடையும் என்பதால் சிறிது நேரம் மழை பெய்த பிறகு சேமிப்பது நல்லது.

இதனைவிட வீட்டுக் கூரையிலிருந்து வழிகின்ற .மழைநீரையும் சேமித்துக் கொள்ளலாம். அதிலிருந்து சேமிப்பதானாலும், மழை பெய்யத் தொடங்கிச் சில மணி நேரங்களின் பின்பே சேமிக்கத் தொடங்க வேண்டும். ஏனெனில் வீட்டின் ஓடுகள், குழாய்களில் படிந்திருக்கும் தூசிகள் மழை நீரில் அடித்துச் செல்லப்படும்.அதன் பிறகு சேமித்துப் பயன்படுத்தும்போது தண்ணீர் சுத்தமாக இருக்கும்.

இவ்வாறு சிறிதளவாகப் பாத்திரங்களில் சேமிப்பவை குடிப்பதற்குப் பயன்படுத்த ஏற்றவை. மழைநீரைச் சேமித்து அதனைத் தினசரித் தேவைகளுக்குப் பயன்படுத்தப் போகிறீர்கள் எனில், உங்கள் வீட்டில் கட்டப்பட்டு இருக்கும் பிரத்தியேகத் தொட்டியைப் பாசி இல்லாமல் துப்புரவாக்கிக்கொள்ளுங்கள். அதிலும் இவ்வாறு சேமித்துக் கொள்ளுங்கள். மேலும் அந்தத் தண்ணீரைக் குளிக்க, சமைக்க, கழுவப் பயன்படுத்துகிறீர்கள் எனில், குளோரின் இட்டுச் சுத்தம் செய்த பின் பயன்படுத்துவது நல்லது. அத்துடன் நீரை வீண்விரயம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். நீர் இயற்கை தந்த அமுதம். உயிர் காக்கும் தன்மை கொண்ட அது பொன்னைவிட உயர்வானது. ஒரு லீற்றர் பாலின் விலையையும் நீரின் விலையையும் ஒப்பிட்டுப் பார்த்தீர்களானால் எதிர்வரும் காலங்களில் அதற்கு ஏற்படப்போகும் மதிப்பை உணர முடியும். சேமித்த மழைநீரில் ஐந்து நாள்களுக்குப் பிறகு நுண்ணுயிரிகள் வளர ஆரம்பிக்கும் என்பதால் ஐந்து நாள்களுக்கு மேல் வைத்திருந்து பயன்படுத்தக் கூடாது. அத்துடன் தண்ணீர் வைக்கும் பாத்திரத்தையும் தினமும் சுத்தம் செய்துகொண்டே இருக்க வேண்டும். நிலத்தில் இருந்து கிடைக்கும் நிலத்தடி நீரைப் பருகிப் பழக்கப்பட்ட எமக்கு நேரடியாகக் கிடைக்கும் மழை நீரைப் பருகும்போது அதன் சுவை குறைவாக இருக்கும். ஏனெனில் அது தூய்மையானது. ஆயினும் மழைநீரைக் கொதிக்க வைத்துப் பருகுவது இன்னும் நல்லது. அமில மழையின்போது கிடைக்கும் நீர் குடிப்பதற்கு ஏற்றதன்று. அவ்வாறான அமில மழை எமது நாட்டில் பெய்வது குறைவு. எனவே மழை நீரைச் சேமித்து வளங்களைக் காப்போம்.






## வாருங்கோ அமருங்கோ...!

வாருங்கோ அமருங்கோ
வந்தனம் நமஸ்காரம்
பாலுக்கும், கள்ளுக்கும்
பனை மரம் சாட்சி எதற்கோ
கழக புதுமுக அறிமுகத்தில்
அறிவின் புரிதல்கள் எதுவரைக்கும்
படிப்பது வேதம் இடிப்பது ஆலயம்
பயனற்றதே யாவும் இது சிங்கள நாடு
நீங்க இங்கடித்தால்
நாங்க அங்கடிப்போம்
அடிப்படை அரிவரியறியாதோரிடம் அறிவுப் பஞ்சம்
எள்ளுக்குள்ளே எலியின் எச்சம்
எடுப்பதுவா நஷ்டம்
கந்தனின் கோயில் விழா அதில்
கண்டி நடனத்தின் தேவை என்ன
பெரகர முழங்கட்டும் பேராதனையில்
அதற்கென்றுமே எமக்குள்ளே பேதமில்லை
முப்பதா அறுபதா முடிவின் எல்லை இன்னும்
முட்களின் அறுவடை முடியவில்லை
முன்னுக்கு பின்னே முரண்பாடு
முதுகதன் கூனல்கள் நிமிரவில்லை
பயில்கின்ற கலைக் கென்று கூடம்
அதில் பகிடிவதை போர்வைக்குள்
பதுங்கிடும் இனவாத பூதம்
யாழிசை மீட்டும் தமிழ்
வாழ்வதை ஏற்றிட
ஆதியில் அரியனை அமர்ந்த குடி
வாளதன் வீச்சுக்கும்
வாய்மையின் பேச்சுக்கும்
அளவில்லை உதிரத்தில் உறைந்தன
சம்பிரதாயங்களும்
கலை, கலாசாரங்களும்
அந்தந்த இனத்துவ தனித்துவங்கள்
இணைபிரியாத மகத்துவங்கள்
நடந்தவை மறந்து வடம் இழுப்போம்
வாழ்வின் சாதனை என்ற தடம் பதிப்போம்
மனிதனின் ஊனங்கள் மறையட்டுமே
மகிழ்வென்ற மழையில் நனையட்டுமே

தண்ணீரூற்று-க.விஜயன்.













# போர் தந்த வலி

## கூறும் ஒளிப்படங்கள்

தவபாரதி

மத்திய கிழக்கு நாடுகளில் வழமையாக நடக்கும் ஒரு சண்டை என்றுதான் இந்த உலகம் முதலில் சிரியப் போரை நினைத்தது. 2010 அரபுலக மக்கள் புரட்சிக்குப் பின்னர் வளைகுடாவில் அடிக்கடி ஏற்படும் அரசியல் சண்டைகளில் ஒன்றாகச் சிரியாவையும் பரிதாபமாகப் பார்த்துவிட்டு தனது வேலையில் மூழ்கிப் போனது ஒட்டுமொத்த உலகம்.

சில காலங்களின் பின்னர் திட்டுத்திட்டாக அமிலம் ஊற்றி கொல்லப்பட்டு அடுக்கி வைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பிஞ்சுக் குழந்தைகளின் புகைப்படங்களைக் கண்டு மனித சமூகம் வெட்கித்தலைகுனிந்து போனது. இந்த நூற்றாண்டு இதுவரை கண்டிராத படுகொலைகள்தான் அவை.

யார் செய்தார்கள்? அமெரிக்கா? ஆசாத்? தீவிரவாதிகள் ? நீ , நான் ? ஒரு பதிலுமில்லை ஒட்டுமொத்த உலகமும் குற்றவாளிக்கூண்டில் ஏற்றப்பட்டது . அன்றைய நள்ளிரவில் விமானங்கள் வந்து கொட்டிவிட்டுப்போன அத்தனை வகையான அமிலங்களாலும் அதில் இறந்து போனது பால்வடியும் பிஞ்சுக் குழந்தைகள் என்பதற்கு ஆதாரமாக இன்று வரை இருக்கும் ஒரே சாட்சி அவர்களுடைய சாவைப் பதிவு செய்த அந்த ஒளிப்படங்கள் மட்டுமே.

மறதி ஒரு உலக வியாதி என்று கேள்விப்பட்டிருப்பீர்களே! உண்மைதான் உலகம் மீண்டும் சிரியாவை மறந்துபோனது.

சிறிது காலம் கடந்து வெடித்துச்சிதறிய கட்டடங்கள், மேலெழும்பும் வெடிகுண்டு புகைகள், இடித்துத் தூளாக்கப்பட்ட பாரம் பரியமிக்க மசூதிகள், கைப்பற்றப்பட்ட நகரங்கள், நீண்ட ராணுவ அணி வகுப்புகள் என்று பயங்கரமும், துக்கமும்கலந்தஒளிப்படங்களும் அவற்றை ஞாபகமூட்டுபவையாக இருந்தாலும், கழுத்து அறுக்கப்பட்டு துடிதுடித்துச் சாகும் துறவி, அவருக்கு அருகாமையில் கத்தியுடன் நிற்கும் ஒரு கறுப்பு உருவம், உயிருடன் எரியூட்டப்பட்ட ஊடகவியலாளர், வரிசையாய் அமர்த்தி வைக்கப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்ட ராணுவத்தினர் என்று மீண்டும் ஒளிப் படங்களாக வெளிப்பட்டன.

பல கொடூரங்கள் , ஒவ்வொரு காட்சிகளும் வெளியிடப்படும் தருணங்களையும், அதன் பின்னால் உள்ள அரசியலையும் மறந்துவிட முடியாது, அந்த ஒளிப்படங்கள் எல்லோருடைய நெஞ்சத்தையும் கவலைக்குள்ளாக்கின என்பது உறுதியாகவே உண்மையானது. போர் ஏற்படுத்தும் கொடூரங்களிலேயே மிகவும் வேதனையானது எதுவுமறியாத குழந்தைகளைக் காவு கொள்ளும் சாவுகள்தான். அதன் வலிகளும் துன்பங்களும் பாரதூரமானவை. ஒட்டுமொத்தமாக ஒரு தேசத்தின் அடுத்த தலைமுறையை இல்லாமல் செய்தவையே இந்தப் போர்கள். பிஞ்சுக் குழந்தைகளுக்குத் தந்த உளவியல் ரீதியான வேதனைகளையும் இந்த உலகம் சிரியப் போரின் வழியாகக் கண்டது.

போர்க் காட்சிகளை ஒளிப்படம் எடுக்கச் சென்ற ஒரு செய்தியாளர் ஒரு சிறுமியின் முன்பாக ஒளிப்படம் எடுப்பதற்காகக் கமராவை நீட்டும்போது, தன்னை நோக்கி துப்பாக்கியை நீட்டுவதாக நினைத்து அந்தக் குழந்தை இரண்டு கைகளையும் தூக்கியது. போரின் ஒட்டுமொத்த வலிகளையும் உதடுகளில் தேக்கி வைத்தபடி நின்ற அந்தச் சிறுமியின் ஒளிப்படம்

ஈழப்போரில் உணவு உட் கொள்ளக் கொடுத்துப் பின்னர் கொல்லப்பட்ட பாலச்சந்திரனின் காணொளி, சிரியாவில் கையில் ஒரு ரொட்டித்துண்டுடன் தன் மகனுக்கு முன்னால் இயலாமையில் அழுது கொண்டிருக்கும் ஒரு தந்தையையும் அந்த அழுகையின் அர்த்தம் கூடப் புரியாமல் தன் தந்தைக்கு ஆறுதல் சொல்லும் பச்சிளம் பாலகனுடைய சோகம் அப்பிய முகமும் யாரைத்தான் பரிதாபத்தின் உச்சிக்கு அழைத்துச் செல்லாமலிருக்கும்!



எத்தனை பேரின் உறக்கத்தைக் கெடுத்திருக்கும். ஆனால் அதெல்லாம் மனசாட்சியும், இரக்கமும் உடைய சாதாரண மனிதர்களுக்கானதுதான் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு இல்லை.

சொந்த நாடு என்ற அதிகார வெறிமிக்க அரசுக்கும் பைத்தியம் பிடித்த தீவிரவாதிகளுக்கும் உலகைக் கட்டுப்படுத்த நினைக்கும் காட்டு மிராண்டிகளுக்கும் பயந்து உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பிறந்து வளர்ந்த நாட்டை விட்டு வெளியேறும் அவலம் மிக்க அகதிகளின் துயரம் எல்லாம் அந்த உடல்கள் உயிரிழந்து கரை ஒதுங்கியதைக் காட்சிப்படுத்தும் அந்த ஒளிப்படங்கள் மூலம் இன்றுவரை வெளிப்படுத்தப்படுகின்றன.

**அய்லான் குர்தி**

சிவப்பு நிற மேலாடை, ஊதா நிறக் காற்சட்டை, காலில் செருப்புடன் கவிழ்ந்து கரை ஒதுங்கிய அய்லான் என்ற பிஞ்சுக் குழந்தையின் இறப்பு ஒட்டுமொத்த உலகத்தின் உறக்கத்தையும் கெடுத்திருந்தது.

அது ஓர் உணர்வு! யாரும் சொல்லித் தரவில்லை! எத்தனையோ இறப்புகள் நிகழ்ந்திருக்கின்றன. உலகம் இப்படி ஒன்றும் துடிக்கவில்லை.

ஊடகங்களால் தாங்க முடியவில்லை. அது தன்னெழுச்சியாக நடந்தது. அய்லான் இறந்த பின் கிடைத்த அந்த ஒளிப்படத்தில் அந்த உணர்வு இருந்தது. அது எல்லோரையும் ஓர் இயலாமையை, அழுகையை நோக்கித் தள்ளியது.







வியட்நாம் போர், உலகப்போர்கள், குவாண்டனாமோ போர் வதை கூடங்கள், ஈழப்போர் என்று போர்களின் கொடுமைகளை உலகறியச் செய்யப் பெரும் பங்காற்றியிருப்பதில் ஒளிப்படங்களின் பங்களிப்பு மிக அதிகம், ஆனால் அப்பொழுதெல்லாம் ஊடகங்கள் மூலம் வெளிப்பட்ட, அதன் வலிகள் இப்பொழுது இணைய வழி பரவிவிட்டது.

பிரான்ஸ் குண்டுவெடிப்பையும் அதைத் தொடர்ந்த ஐரோப்பிய நாடுகளிலிருந்து அகதிகள் வெளியேற்றப்பட வேண்டும் என்ற நிலையும் மீண்டும் அகதிகளின் வலியைப் பேசுபவையாக ஒளிப்படங்கள் மூலம் பதிவு செய்யப்படுகின்றன.

ஈழப்போரில் உணவு உட்கொள்ளக் கொடுத்துப் பின்னர் கொல்லப்பட்ட பாலச்சந்திரனின் காணொலி, சிரியாவில் கையில் ஒரு றொட்டித்துண்டுடன் தன் மகனுக்கு முன்னாள் இயலாமையில் அழுது கொண்டிருக்கும் ஒரு தந்தையையும் அந்த அழுகையின் அர்த்தம்கூடப் புரியாமல் தன் தந்தைக்கு ஆறுதல் சொல்லும் பச்சிளம் பாலகனுடைய சோகம் அப்பிய முகமும் யாரைத்தான் பரிதாபத்தின் உச்சிக்கு அழைத்து செல்லாமலிருக்கும்!

இது கடைசி ஒளிப்படமில்லை, இந்த துயரங்களும் முடிந்துவிடப்போவதில்லை இந்த ஒளிப்படங்கள் எதையும் மாற்றி விடப்போவதுமில்லை!.

அது எல்லாவற்றையும் மௌனமாகப் பதிவு செய்து கொண்டிருக்கிறது! போர்களும் மனிதக் கொலைகளும் நிரம்பி வழியும் இந்த உலகையும், அதை மௌனமாகப் பார்த்துக்கொண்டிருக்கும் இந்த மனித சமூகத்தையும் சேர்த்தே பதிவு செய்து கொண்டிருக்கிறது.

# பாலைவனம், சோலைவனமாகிய அதிசயம்!



எகிப்து தலைநகர் கெய்ரோவில் இருந்து 2 மணித்தியாலயங்கள் வரையான பயணத்தூரத்தைக் கொண்டது செரபியம் காடு. 340 ஹெக்டேரில் பரந்துவிரிந்துள்ளது அந்தக் காடு. அது சுற்றுச்சூழலின் அதிசயம். ஏனெனில் இது பாலைவனத்தின் நடுவே அமைந்துள்ளது. இந்தக் காட்டில் அந்த மண்ணுக்குரிய மரங்களுடன் அந்நிய மரங்களும் செழித்து வளர்ந்துள்ளன.

இங்கு ஜேர்மனி மற்றும் எகிப்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் பாலைவனமாதலைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். வருடக் கணக்கில் மழை இல்லாத இடங்கள் காலப் போக்கில் பாலை நிலங்களாக மாறிவிடுகின்றன. ஆபிரிக்காவில் இப்படிப்பட்ட நிலங்கள் அதிகம். அதைத் தடுக்கும் ஒரு சாராரின் முயற்சிதான் இந்தக் காடுகள்.

ஆராய்ச்சியாளர்கள் பாலை நிலங்களை மீண்டும் தாவரம் நிறைந்த நிலங்களாக மாற்றும் முயற்சியில் இறங்கி, வெற்றியும் பெற்றுவிட்டனர். நகரங்களில் இருக்கும் கழிவு நீரை, குறிப்பிட்ட அளவுக்குச் சுத்திகரிக்கிறார்கள். இந்த நீரை நீண்ட குழாய்கள் மூலம், பாலைவனத்துக்கு அனுப்புகிறார்கள். விதைகள், மரங்கள், செடிகள் அங்கே நடப்பட்டுக் குழாய் மூலம் கழிவு நீர் வந்து சேர்கிறது.

மழையை எதிர்பார்த்து இந்தத் தாவரங்கள் வாழ வேண்டிய அவசியம் இல்லை. கழிவு நீரை ஓரளவு சுத்தம் செய்து பயன்படுத்துவதால் செடிகளுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. ஆனால், இந்த நீரை மனிதர்கள் பயன்படுத்த முடியாது. மனிதர்கள் பயன்படுத்தும் அளவுக்குச் சுத்திகரிக்க வேண்டும் என்றால் ஏராளமாகச் செலவாகும்.

இங்குள்ள மரங்களில் இருந்து பெறப்படும் காய், கனிகள் நூறு சதவீதம் ஆரோக்கியமானவை. கழிவு நீரில் இருக்கும் சத்துக்களும் சூரிய ஒளியும் செரபியம் காடுகளை வேகமாக வளர வைக்கின்றன. 15 ஆண்டுகளில் அங்குள்ள மரங்கள் பெரிதாக வளர்ந்து விடுகிறது. பின்னர் அவை வெட்டப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. மனிதர்களுக்கு வேலைவாய்ப்புக்களும் அதிகரிக்கின்றன. செரபியம் காடு மனிதர்களால் ஆக்கபூர்வமான விடயங்களையும் செய்ய முடியும் என்பதை எடுத்துக் காட்டுகிறது என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.



# கசப்பான பாகற்காயின் இனிப்பான நன்மைகள்




கசப்புச் சுவையுள்ள பாகற்காய் எல்லோரும் விரும்பாத ஒரு காய்கறி. ஆனால், ஆரோக்கியத்தில் அக்கறையுள்ளவர்கள் விருப்பத்துடன் பாகற்காயை உணவில் அதிகம் சேர்த்துக்கொள்கிறார்கள். கொடி வகைத் தாவரமான பாகற்காயில் கல்சியம், பொஸ்பரஸ், புரதம், இரும்புச்சத்து, தாது உப்புகள், நார்ச்சத்து, காபோ வைதரேற்று மற்றும் சிறிதளவில் விற்றமின் ஆகியவை நிறைந்துள்ளன.

இன்சுலின் வேதிப்பொருள் பாகற்காயில் உள்ளதால், குருதியில் உள்ள இனிப்பின் அளவைக் குறைத்து நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துகிறது.

சிறுநீரகத்தில் உள்ள கற்களை நீக்குவதற்கும் பாகற்காய் பயன்படுகிறது.

பாகற்காய்ச் சாறை தினந்தோறும் குடித்துவந்தால் கல்லீரல் வலுப்பட்டு ஈரல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நீங்கும்.

பாகற்காயில் நார்ச்சத்து மிகுந்துள்ளதால் செரிமானத்துக்கு உதவுகிறது, இதனால் மலச்சிக்கல் வராமல் தடுக்கிறது. அத்துடன் வேகமாக உடல் எடையை குறைக்க உதவுகிறது. நம் உடம்பில் புற்றுநோய்ச் செல்கள் பெருகுவதை பாகற்காய் தடுக்கிறது. மாதவிடாய் ஒழுங்கின்மையைச் சரிப்படுத்த பாகற்காய் உதவுகிறது. பாகற்காயை சமையலில் சேர்த்துக்கொண்டால், சருமத்தில் உள்ள பருக்கள், கறுப்புத் தழும்புகள், சருமத் தொற்றுகள் போன்றவை கூட நீங்கும்.



# கற்றாழைப் பால்கறி

வறண்ட பிரதேசங்களில் வளரும் தாவரங்களில் ஒன்றுதான் கற்றாழை. குறைவான நீரை உறிஞ்சி சதைப்பிடிப்பாக வளரும் இதனைப் பல வகை நேய்களுக்கு மருந்தாக நமது மூதாதையர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். ஊடலின் வெளிப்புறக் காயங்கள், நோவுகளுக்கும் உள்ளக நோய்களுக்கும் பயன்பட்டு வந்த கற்றாழையை சமைத் துண்ணும் முறையொன்றைப் பார்ப்போம்.

**தேவையானவை**
கற்றாழை 2 இதழ்.
சின்ன வெங்காயங்கள் - 10
தக்காளி - 2
தேங்காய்ப் பால் - 4 கரண்டி
மஞ்சள் தூள் - சிறிதளவு
உப்பு - தேவையான அளவு

**வறுத்து தூளாக்கப்பட்டவை:**
காய்ந்த மிளகாய் - 6
சோம்பு - 1/4 கரண்டி
தனியா, கடலைப் பருப்பு - 1/2 கரண்டி
வறுத்த வேர்க்கடலை - 1 கரண்டி

**தாளிக்க:**
நல்லெண்ணெய் - 2 கரண்டி
கடுகு, உளுந்து - தலா 1/2 கரண்டி
கறிவேப்பிலை, மல்லித்தழை - சிறிதளவு

செய்முறை:

கற்றாழையைத் தோல்சீவி, சதைப் பகுதியைத் தனியே எடுத்து, சிறு சிறு துண்டுகளாக்குங்கள். அவற்றைத் தண்ணீரில் நன்றாகப் பல முறை அலசுங்கள். சட்டியில் எண்ணெய் விட்டு கடுகு, உளுந்து , சின்ன வெங்காயம், கறிவேப்பிலை சேர்த்து வதக்குங்கள். பிறகு தக்காளியையும் சேர்த்து வதக்கி, தூளாக்கி வைத்துள்ளவற்றுடன் கற்றாழைத் துண்டுகளைச் சேர்த்து வதக்குங்கள். தேவையான அளவு தண்ணீர், உப்புச் சேர்த்து கற்றாழையின் வாசனை போகும்வரை கொதிக்கவையுங்கள். எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து வந்ததும் தேங்காய்ப் பால் ஊற்றி இறக்கிவையுங்கள். மல்லித்தழையைத் தூவிப் பரிமாறுங்கள்.



# தர்பூசணி

- தர்பூசணியில் விட்டமின் ஏ, பி6, சி மற்றும் லைகோபீன் சத்து போன்றவை உள்ளதால் ஆஸ்துமா, ஹைபர் டென்ஷன், இதயப் படபடப்பு போன்றவற்றிலிருந்து பாதுகாக்கும் எல்லாவற்றையும்விட, இதில் 92 சதவிகிதம் நீர்ச்சத்து இருப்பதால் வெயில் காலங்களில் ஏற்படும் பாதிப்பிலிருந்து காக்கும்.
- தர்பூசணியில் இருக்கும் தையாமின், ரிபோப்ளோவின் போன்ற மருத்துவச் சத்துகள் வெயில் காலத்தில் ஏற்படும் அக்கி, வாய்ப் புண், குடல்புண், மூலம், அம்மை போன்றவற்றிலிருந்து காக்கும்.
- தர்பூசணி சாப்பிடுவதால் ஒபிசிட்டி, இதய நோய், சர்க்கரை வியாதி போன்றவற்றின் தீவிரம் குறையும்.
- சரும வறட்சி, மலச்சிக்கல், தசை வீக்கம் போன்றவற்றுக்கு தர்பூசணி கைகண்ட மருந்தாக உதவும். தொடர்ந்து தர்பூசணி சாப்பிடுபவர்களுக்கு வயோதிகம் தள்ளிப்போகும்.

# இருமல், சளியைத் துரத்தும் அதிமதுரம்!



குன்றிமணி என்னும் செடியின் வேரே அதிமதுரம். இனிப்புச் சுவையுள்ள இந்த அதிமதுரம், ஏராளமான நோய், குறைபாடுகளைச் சரி செய்யக்கூடியது. உடற் சூட்டினால் வரும் இருமலுக்கு அதிமதுரம், கடுக்காய், மிளகு மூன்றையும் சம அளவு எடுத்து இளம் வறுப்பாக வறுத்துப் பொடியாக்கி, தேனுடன் கலந்து சாப்பிட்டு வந்தால் இருமல் குணமாகும். சாதாரணமாகவே அதிமதுரத் துண்டு ஒன்றை வாயில் போட்டுமென்று அதன் சாற்றை சுவைத்து விழுங்கினாலே இருமல் குறையும். அதிமதுரச் சூரணத்தை (பொடி) 2 கிராம் அளவு தேனில் குழைத்து, தினமும் மூன்றுவேளை சாப்பிட்டால், தொண்டைக் கட்டு, இருமல், சளி குணமாகும். இதேபோல் அதிமதுரம், கடுக்காய், திப்பிலி, மிளகு சேர்த்து வறுத்து பொடி செய்து நெய்யில் கலந்து சாப்பிட கண் எரிச்சல் நீங்கும். கண் ஒளி பெறும். அதிமதுரத்தைத் தூளாக்கிப் பசும்பாலில் ஒரு மணி நேரம் ஊறவைத்து தலையில் அழுத்தித் தேய்த்து, அரைமணி நேரம் கழித்துக் குளித்து வந்தால் இளநரை நீங்குவதோடுதலைமுடிமினுமினுப்பாக மாறும்.

# தனியாகப் பயணம் செய்யும் பெண்களுக்கு....

பெண்கள் தனியாகப் பயணம் செய்யும்போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும். தற்போதைய காலத்தில் எந்த இடத்திலும் எந்தச் சூழ்நிலையிலும் பெண்களுக்கு ஆபத்துக்கள் காத்திருக்கின்றன. ஏனெனில் எமது ஊர் பழைய மாதிரி இல்லை. எமக்குள்ளிருக்கும் கயவர்களுடன் பல புது முகங்களும் ஏமாற்றுக்காரர்களும் உலாவத் தொடங்கி விட்டதால், பயணங்களில் பெண்களின் உடைமைகளுக்கும், உயிருக்கும் பல வழிகளிலும் ஆபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பெண்கள் பயணங்களின்போது மிகவும் கவனமாகவும், விழிப்புடனும் செயற்பட வேண்டும். ஆண் துணையின்றி பயணம் செய்வதை இயன்றவரை தவிர்க்க வேண்டும். தனியாகச் செல்ல வேண்டியிருந்தால் இரவுப் பயணத்தைத் தவிர்க்க வேண்டும். பயணத்தின்போது தங்க ஆபரணங்கள் அணிவதைத் தவிர்த்து கவரிங் நகைகளை அணிந்து கொள்ளலாம்.




கைபேசி, வங்கி அட்டைகள், பணம், ஆபரணங்கள் போன்றவற்றைக் கைப்பையில் வைத்திருந்தால் மிகுந்த அவதானம் தேவை.

முச்சக்கர வண்டி அல்லது வாடகை வாகனங்களில் ஏறும் முன் அதன் ஓட்டுநர் சந்தேகப்படும் வகையில் இருந்தால் அந்த வாகனத்தில் ஏறுவதைத் தவிர்த்து விடுவது நல்லது. பயணம் செய்யும் வாகன இலக்கத்தைக் குறித்து வைத்துக் கொள்ளவது நல்லது.

அறிமுகமில்லாத எந்த நபரையும் எளிதில் நம்பாதீர்கள். அறிமுகமற்றவர்களைச் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதில் தவறில்லை. தனியாகப் பயணம் செய்ய ஏற்படின் எப்போதும் பெற்றோர்களுடன் தொடர்பிலிருப்பது நல்லது.

மானிப்பாய் சுதன்



# கல்யாண வீடு

ஞாயிற்றுக்கிழமை காலையிலேயே உறவினர் ஒருவரின் திருமண வீட்டுக்குச் செல்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தோம். மணமகனும் மணமகளும் உத்தியோகத்தர்கள். திருமணம் காலை பத்து மணிக்கும் பதினொருமணிக்கும் இடைப்பட்ட நல்லநேரத்தில். அதனால் வழமையாக வார இறுதியில் செய்யும் வேலைகளை முடித்துக் கொண்டு திருமணத்துக்குப் போவது இலகுவாக இருந்தது. திருமண மண்டபத்தை அடைந்ததும் மோட்டார் சைக்கிளை நிறுத்துவதற்குச் சரியான இடம்தேடிக் கண்கள் சுழன்றபோது "அண்ணை இங்கே கொண்டாங்க. இந்தச் சைக்கிளுக்கு பின்னால நெருக்கமாக விடுங்க. கெல்மெற்றை கொண்டுபோங்க. கான்டில் லொக் போடவேண்டாம்" மண்டப செக்கியூரிட்டியின் குரலில் தென்படுவது வேண்டுதலா? அல்லது கட்டளையா? என்பதை உணரமுடியாமலேயே அவரின் கட்டளைக்குப் பணிந்து பவ்வியமாக மோட்டார்சைக்கிளை அவர்சொன்னபடி நிறுத்தினேன். ஏனென்றால் நான் கொஞ்சம் நாகரிகமானவன் பாருங்கோ!!!

மோட்டார் சைக்கிளை மற்றவர் வண்டிகளுடன் அடுக்கியபின் மலங்க முழித்த எனக்குச் செக்கியூரிட்டியின் அடுத்த கட்டளை குறிப்பும் கிடைத்தது. "புங்குடுதீவுக் கலியாணம் முதல் மண்டபத்தில், கோப்பாய்க் கலியாணம் இரண்டாம் மண்டபத்தில்" இப்பொழுது நான் ரொம்பவும் குழம்பி விட்டேன். நான் வந்த உறவினர் சுதுமலை, அவர்கள் மாப்பிள்ளை வீடு. அவர்களின் பொம்பிளை யாழ்ப்பாணம் என்றல்லவோ சொன்னவர்கள்? எனக்குக் குழப்பம் முகத்தில் தெரிய."பொம்பிளை ஆக்கள் புங்குடுதீவு ஆக்கள் தான் இப்ப யாழ்ப்பாணத்தில் இருக்கினம், குழம்பாமல் வாங்கோ" என்ற மனைவியைப் பின்தொடர்ந் தேன். மண்டபத்துள் நுழையும் போதே என்னுடைய குழப்பம் பலரைத் தாக்கியிருப்பதை உணர்ந்தேன், பொம் பிளை புங்குடுதீவு தான். "வாங்கோ வாங்கோ" என்று வாயிலில் நின்றோர் வரவேற்க மண்டபத்துள் நுழைந்தோம். மண்டபத்தில் உறவினர்கள் உத்தியோகத்தர்கள் எனப்பலரை எதிர்பார்த்த எனக்கு ஏமாற்றமாயிருந்தது. மண்டபம் எதிர் பார்த்த அளவு நிரம்பி இருக்காததையிட்டு.

"என்னப்பா நிறையப்பேரை எதிர்பார்த்தேன், ஆள்கள் குறைவாக இருக்கினம். இப்பதானே பத்தரை மணி எப்படியும் கலியாண வீட்டுச்சாப்பாட்டுக்கு பன்னிரண்டு மணியாகும் தானே?" என்ற மனைவியைப் பார்த்து "கலியாண வீடு பத்துக்கும் பதினொன்றுக்கும் இடையில் தானே?" என்ற என்னை ஏளனமாகப்பார்த்த மனைவி. "எல்லோரும் கணக்கான நேரத்துக்கு வருவினம் அட்சதையைப் போட்டுச் சாப்பிடபோகும் போது பாருங்கோவன்" என்றாள். "அப்ப மாப்பிள்ளை ஊரறிய தாலிகட்ட மாட்டாரோ? அது சரி அவை இனி ஊரறியத் தாலிகட்டினால் தான் என்ன? இல்லாட்டி.. வேண்டாம், நமக் கேன் ஊர்வம்பு!" என மனதுள்ளேயே எண்ணிக் கொண்டேன். குளிரூட்டப்பட்ட மண்டபத்தில் ஒரேமாதிரி உடை அணிந்த இரண்டு பையன்கள் குளிர் பானம் வழங்கிக் கொண்டு வந்தார்கள் "என்னப்பா இது புது ஸ்ரைலா இருக்கு. இப்ப மாப்பிள்ளையின் நண்பர்கள் எல்லோரும் ஒரேமாதிரி உடை அணிகிறது என்ன?" என்ற எனது குதர்க்கத்துக்கு "ஐயோ அது கோல்க்காரன் களப்பா வரவர உங்களுக்கு மூளை மக்கிப்போகுது" என்றாள். நானும் கபாலி பட ஸ்ரைலில் "மகிழ்ச்சி" என்றேன். மாப்பிள்ளை வீடியோக்காரன், போட்டோக்காரன், அழகுக்கலை நிபுணி எனப் பல வில்லன்களைப் பொறுமையுடன் சமாளித்து பிரதான வில்லனான குருக்களிடம் இருந்து தாலியைப் பெற்று வளைந்து மணமகளின் கழுத்தில் பிடித்துக் கொண்டு நிற்கப் பின்னால் நின்ற பெண்கள் தாலியை கட்டினார்கள். ம்ம்ம்... இல்லை சுரையைப் பூட்டினார்கள். என்னால் வீடியோ எடுப்பவர்களினதும் போட்டோ எடுப்பவர்களினதும் பின்புறங்களைத்தான் பார்க்க முடிந்தது. ஆனாலும் எனக்கு வந்த சந்தேகத்தை மனைவியிடம் கேட்டேன் "ஏனப்பா தாலிச் சுரை பூட்டுறதை கோல்க்காரர்கள் செய்யமாட்டினமோ?" மனைவி முறைத்தாள். "ஓ!!! அப்படிச் செய்ய வீடியோக்கார அண்ணை விடமாட்டார் போல? என்று மனதுள் நினைத்துக் கொண்டேன். தற்செயலாகப் பின்னால் திரும்பிப் பார்த்தேன்! மனைவியின் கருத்துக்கமைவாக நீண்ட இரண்டு லைன்கள் உருவாகியிருந்தன. ஒன்று அட்சதை போட்டு வரவை உறுதிப்படுத்த, மற்றையது சாப்பாட்டுக்காக. "இப்ப நான் எந்த லைனுக்குப் போக?"

ஒரு முடிவுடன் அட்சதை லைனின் முடிவிடத்தில் இணைந்துகொண்டோம். மிகவும் மெதுவாக பொறுமையுடன் மணமக்களை நோக்கி அடிமேல் அடிவைத்து முன்னேறிக் கொண்டிருந்தோம். திடீரென லைன் ஸ்தம்பித்து நின்றது. எட்டிப்பார்த்தேன். பெண்ணின் அலுவலக நண்பர்கள் குழுப்போட் டோவுக்காக மணமக்களின் கரையோ ரங்களிலும் முன்னுமாக அடுக்கப் பட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்த இடத்தில் உங்கள் குழப்பம் எனக்கு விளங்குகின்றது. உங்களுக்கு வேண்டாம் குழப்பம் நான் நிற்பது எனது மனைவிக்கு பின்னால் தான், இப்ப உங்களுக்கு திருப்தி தானே. எனக்குப் பின்னால் நின்றவர் சொன்னார் "நல்லகாலம் அலுவல உத்தியோகத்தர்கள் முழுப்பேரும் வரவில்லை."

"ஏன் அண்ணை ஏதேனும் பிரச்சினையோ. இல்லை இல்லை இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை அலுவலக நாள்கள் என்றால் அலுவலக நேரத்தில் நடந்தால் எல்லோரும் வருவினம். விடுமுறை என்றால் வீட்டு வேலைகள் அதுதான்" நான் மீண்டும் "மகிழ்ச்சி" என்று மனதுள் நினைத்தவாறு மணமேடையை நோக்கினேன். பாவம் வீடியோக்காரர், சினிமாப்பட ஒளிப்பதிவாளர்கள் கூட இப்படி மினக்கெட மாட்டார்கள். வீடியோக் கமரா வின் டிஸ்பிளேயின் ஊடாக யாரைத் தேடுகின்றான் என்றுதான் தெரியவில்லை. நீண்ட நேரமாகத் தேடுகின்றான். அவனது தேடலில், எனது பொறுமை கட்டுடைத்து வெளியேற எத்தனிக்கின்றது. (43 ஆம் பக்கம் பார்க்க)



**கோப்பையில் உணவைப் போட்ட பின் மனைவியைத் தேடிச் செல்ல வெளிக்கிட இடையில் "தம்பி நீ மணியத்தின்ர பெடி தானே? இஞ்ச வா இதில பக்கத்தில் இருந்து சாப்பிடு" என்று வலுக்கட்டாயமா அமரவைத்தது ஒரு பெரிசு. வேறவழி..? அப்பாவின் பெயர் சொல்லி அமரச்சொல்லும் போது அமராது சென்றால் மரியாதை இல்லையே.**



# இனிவரும் இளையோருக்கு...!



மனங்கள் இணைந்த பிறகு உடல்கள் இணைவது தான் சிறந்த கணவன்-மனைவி உறவாக இருக்க முடியும். கட்டுப்பாடுகள் இன்றி இவை சாத்திய மற்றவை என்பதால்தான் உறவை வலுப்படுத்த திருமணம் என்ற கட்டுப்பாடு வரையறுக்கப்பட்டுள்ளது.

சந்திரவதனா

இன்றைய யாழ்ப்பாணத்தைப் பற்றியுள்ள சீர்கேடுகள் அனைத்துக்குமே பழையோரை மூடிப் படர்ந்து விட்ட புதியவர்களே காரணகர்த்தாக்கள். ஏனெனில் இளையோர் தாம் நாகரிகவான்கள் என்று தம்மைப் முன்னிறுத்திக் கொள்வதும், பழையோரை மூடர் என்று பின்னிறுத்திக் கொள்வதும் தற்காலத்தில் இயல்பாகி விட்டது. தனியாக இருக்கும் வரை எவரையும் பாதிக்காத இவர்களின் எண்ணங்கள், குடும்பம் என்று வந்தவுடன் பாதகத்தை ஏற்படுத்தத் தொடங்கி விடுகின்றன. ஆனாலும் இவற்றைத் தாண்டிச் சீர்ழியும் இளையோர் சமூகம் அதற்குப் பல காரணங்களைக் கொண்டுள்ளது.

மணங்கள் இணைந்த பிறகு உடல்கள் இணைவது தான் சிறந்த கணவன்-மனைவி உறவாக இருக்க முடியும். கட்டுப்பாடுகள் இன்றி இவை சாத்தியமற்றவை என்பதால்தான் உறவை வலுப்படுத்த திருமணம் என்ற கட்டுப்பாடு வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இன்றைய தலைமுறையினர், திருமணத்துக்கு முன்பே அவசரமாக அனைத்தையும் அனுபவித்து விட்டு, திருமணத்திற்கு பிறகு விவாகரத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். இதற்கான காரணங்கள் என்ன? காதல் என்ற போர்வையில் இவர்கள் உடலுறவில் ஈடுபடுவதேயாகும்.

வாழ்வியல் மாற்றம் என ஒற்றைச் சொல்லில் இதை அடக்கிவிட முடியாது இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன

**பெற்றோரின் கவனக் குறைவு**

இன்றைய இணைய யுகம் உலகில் நடக்கும் எந்தச் செயலையும், நடந்த அடுத்த வினாடியில் அறிந்து கொள்ளும் வகையில் வளர்ந்திருக்கிறது. இதனால் இன்றைய சந்ததியினர் பதின்ம வயதை எட்டும் போதே உடலுறவைப் பற்றி அதன் மூலம் அறிந்து கொள்கின்றனர். எமது குழந்தை இணையத்தில் எதைத் தெரிந்துக் கொள்கின்றது என்பதை கூடுதலான பெற்றோர்கள் கவனித்துக் கொள்வதில்லை.

**உறவுகளில் நெருக்கமின்மை**

இன்றைய வீடுகளில் மூதாதையர்கள் இருப்பது அரிது அவர்கள் அனைவரும் முதியோர் இல்லத்தில் இருப்பதால் பாட்டி, தாத்தா என்ற உறவு பதின்ம வயதைஎட்டும்போது அவர்களுக்குக்கிடைப்பதில்லை. அவர்களது அரவணைப்பில்லாததால் அறிவுரைகளும் வழிகாட்டல்களும். இல்லாதமை தவறுகளில் ஈடுபட சர்ந்தர்ப்பங்களை ஏற்படுத்தலாம்.

**மேலைத்தேய மோகம்**

அம்மாக்கள் வாணி ராணி பார்த்து கொண்டிருக்கும் அதே நேரத்தில், பிள்ளைகள் ஆங்கில ஆபாசங்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். தொடர்களைப் பார்ப்பது தவறல்ல. பிள்ளைகள் என்ன பார்க்கின்றார்கள் என்பதையும் கவனித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், பல ஆங்கிலத் தொடர்கள் மற்றும் படங்களில் அதிக அளவிலான ஆபாசக் காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. இவை, இவர்களை எதிர்பாலினத்தோடு உறவு கொள்ளத் தூண்டுகிறது.

**காமத்தைப் போக்கக் காதல் கொள்வோர்**

இவ்வாறான தெலைக்காட்சி, இணையத்தளம் போன்றவற்றில் ஆபாசங்கள் அதிகரித்துள்ளதால் இன்றைய பதின்ம வயதினருக்கு உடலுறவில் நாட்டம் அதிகரிக்கிறது. காமத்தைப் போக்கக் காதலைக் கருவியாக பயன்படுத்த அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

**நண்பர்களின் தூண்டுதல்**

காதலிக்கும்போதே உடலுறவில் ஈடுபடுவது தவறல்ல என்பதாகச் சில நண்பர்கள் தூண்டிவிடுகின்றனர். "இது கூடப் பண்ணாட்டி நீயெல்லாம் என்னடா" என்று கூறும் இளையவர்கள் ஒன்றித்திருக்கும்போது கதைத்துக்கொள்பவை அவர்களிடத்தே ஒருவிதமான தூண்டுதலை அளித்து உற்சாகமளிக்கின்றது.

**கற்பின் மதிப்பு அறியாமை**

ஏற்றுக்கொள்ளக் கசப்பாக இருப்பினும், உண்மை இதுதான். இன்றை பெண் பிள்ளைகளிடத்தே கற்பின் மதிப்பு அறியாமை நிலவுகிறது. இதற்கு காரணமாக இருப்பது அவர்களின் நடை யுடை, பேசும் முறை போன்றனவும், கூச்சம் மறந்து சிறுவயதிலிருந்தே உடை அணிந்து பழக்கிய பெற்றோரும்தான்.

நம் முன்னோர்கள் மொழிக்கு இலக்கணம் வகுத்தது போலவே, வாழ்வியலுக்கும் இலக்கணம் வகுத்தவர்கள். இப்போது தான் மேலைத்தேயவர்கள் அது என்ன என்று கற்றுக் கொண்டு வருகிறார்கள். எனவே, நாகரிகம் பழகுகிறேன் என்று நமது முன்னோர் வாழ்ந்த நல்வாழ்வின் மரியாதையை இழந்துவிட வேண்டாம். இனிவரும் சமூகம் நாகரிகம் தெரியாதிருந்தாலும் சீரழிவு கொள்ளாமலிருந்தால் நன்று.



# களைகட்டும் வியாபாரம்



ஜெ.றியா

பல வடிவங்களில் உலாவும் மக்களை ஏமாற்றும் பேர்வழிகளைப் பார்த்தாலும், இந்தப் படித்த புத்திஜீவிகள் இவ்வாறு செய்கிறார்களே என்ற ஆதங்கத்தைத் தான் மனதால் தாங்கிக் கொள்ள முடியாமலிருக்கின்றது.

"பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததைப் போல" நோய் என்று அவதிப்பட்டுக் கொண்டு டாக்குத்தரிட்டப் போனவனுக்கு, கள்ளங் கபடம் பிடிபடாமல் வெட்க துக்கமின்றி வைத்தியம் என்ற போர்வையுள் அங்கு நடக்கும் பணப்பறிப்பால் பற்றிக்கொள்ளும் வறுமைச் சாபம் அவன் கொண்ட நோய் தீர்ந்த பின்னும் தொடர்கின்றதே!

வெறுமனே வாங்கின் அந்த மருந்து மாத்திரைகளின் விலை வெறும் சதங்களில்தானே உள்ளது. அதைவிட அவை தற்போது விலை குறைந்தும் விட்டனவே! அப்படியானால், பரிசோதித்து வழங்க ஏனிந்த டாக்குத்தர்கள் யானை விலை கேட்கின்றார்கள்? இனிவரும் காலங்களில் இவர்கள் செய்யும் இந்த வகை வியாபாரத்துக்கு விலைப்பட்டியல் வகுத்தாலும் வியப்பதற்கில்லை.

# காட்டிக் கொடுத்த தடிக்குச்சி



ஓர் அடர்ந்த காட்டின் அருகே சலசலத்து ஓடும் ஆறும் அந்த ஆற்றங்கரையோர மரங்களில் கூடுகட்டிவாழ்ந்த பறவை யினங்களின் ஒலியும் அழகுசேர்க்க ஆற்றை அண்மித்ததாக இருந்தது முனிவர் ஒருவரது ஆசிரமம். அந்த முனிவருக்குப் பணிவிடைகள் செய்து அவரிடம் கல்வி கேள்விகளைப் பயில வேண்டும் என்று 5 இளைஞர்கள் சீடர்களாக இருந்துவந்தனர். இவ்வாறு நிகழ்ந்துவருகையில் ஒரு நாள், முனிவர் சீடர்களுக்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்தவேளை, குதிரை ஒன்றின் மீது மர்ந்து களைப்படைந்தவராக வந்த ஒரு மனிதர் ஆச்சிரம வாசலை வந்தடைந்ததும், குதிரையிலிருந்து மயங்கிச் சரிந்து விழுந்தார். அவரைச் சுமந்து வந்த குதிரையும் தனது எஜமானைப் பாதுகாப்பான இடத்துக்குக் கொண்டுவந்து விடேடன் என்பதுபோல் களைத்துக் கொண்டு அமைதியாக நின்றது.

முனிவரும் சில மூலிகைகளின் சாற்றைப் பிழிந்து அவருக்குப் பருக்கிவிட்டு, "இவர் நன்றாகக் களைத்து விட்டிருப்பதுடன் பயந்து போயுமிருக்கிறார். மயக்கம் தெளியச் சற்றுநேரமாகும்" எனத் தெரிவித்துவிட்டு அவ்விடத்தை விட்டு நீங்கினார்.

சீடர்களும் மயங்கிக்கிடப்பவரை விட்டு நீங்கித் தத்தமக்கென ஒதுக்கப்பட்ட பணிகளில் கவனம் செலுத்தலாயினர். ஒருவன் மட்டும் மெதுவாக மயங்கிக்கிடப்பவருக்கு அருகில் சென்று அவரை நோட்டமிட்டான். பின்னர், சுற்றுமுற்றும் பார்த்து விட்டு வழிப்போக்கனின் மடியைத்தடவிப் பார்த்தான். ஒன்றும் தென் படவில்லை. ஆனால் அவரது கைவிரலில் இருந்த இரத்தினக்கல் பதித்த மோதிரம் அவனது கண்ணில் பட்டது.

மெதுவாக வழிப்போக்கனது கைவிரலில் இருந்த மோதிரத்தைக் கழற்றிக் கொண்டு நழுவ முயன்றான். அந்தநேரம் பார்த்து மயக் கம் தெளிந்து கொண்ட வழிப்போக்கன் முனகினார். இவனும் மோதி ரத்தை மடியில் முடிச்சுப் போட்டுக்கட்டிக் கொண்டு ஏனையோரை அழைத்தான். மாலையாகி விட்டதால் இந்தக்காட்டு வழியே போகா மல் இரவு தங்கி விழித்ததும் புறப்படுமாறு முனிவர் தெரிவித்தார். அப்போது வழிப்போக்கரானவர், தான் இந்த நாட்டு அரசனது உளவுப் படையைச்சேர்ந்தவரென்றும், அயல் நாட்டுப் போர்வீரர்கள் தம்மைத் துரத்திவரும் போது இந்தக் காட்டில் பாதையைத்தவற விட்டதாகவும், தனது குதிரை இங்கு கொண்டு வந்த சேர்த்ததாகவும் தெரிவித் தார்.

இரவு உணவுக்காகக் கைகளை அலம்பும் போதுதான் மோதிரம் இல்லாததை அவர் கண்டுகொண்டார். இதனை ஒரு சீடன், முனிவரிடம் சென்று தெரிவித்தான். அப்போது அங்குவந்த இன்னொரு சீடன் "குருவே நீங்கள் அவ னைக் காப்பாற்றிவிட மோதிரத்தை எங்கேயோ தவற விட்டுவிட்டு இந்த ஆச்சிரமத்தைப் பற்றி குறைவாகச் சொல்கிறானே! நன்றி கெட்டவன்" எனக் கோபப்பட்டான். அவன்தான் மோதிரத்தை அபகரித்தவன்; விடயத்தில் முந்திவிட்டான். ஏனைய சீடர்கள் வழிப் போக்கன் மயங்கிச் சரிந்த இடத்திலும், அவர் படுத்திருந்த இடத்திலும் தொலைந்த மோதிரத்தைத் தேடிக் கொண்டிருந்தனர். முனிவருக்கு சீடர்கள் மீது சந்தேகமாகத்தான் இருந்தது. "காலையில் பார்த்துக்கொள்வோம், நீங்கள் சென்று உறங்குங்கள்" என ஒற்றரிடம் தெரிவித்துவிட்டு, பூசை அறைக்குள் சென்று விட்டார். சீடர்களை அழைத்து சாயம் பூசிய ஐந்து தடிக்குச்சிகளைக் கொடுத்து "இவை மந்திரிக்கப்பட்டவை. ஐந்தும் ஒரே அளவைக் கொண்டவை. நீங்கள் ஒவ் வொருவரும் இரவு ஆளுக் கொன்றை வைத்துக் கொண்டு உறங்குங்கள். உங்களில் எவராவது மோதிரத்தை எடுத்திருப்பின் அவரிடம் இருக்கும் தடிக்குச்சி ஓர் அங்குலம் வளர்ந்திருக்கும்" என்று சொல்லி மந்திரம் ஜெபிப்பவர்போல் பாவனை பண்ணி விட்டுக் அவற்றைக் கொடுத்தார்.

மறுநாள் காலையில் சீடர்களிடமிருந்த தடிக்குச்சி களை வாங்கி ஒன்று சேர்த்த போது ஐந்தில், ஒன்று மட்டும் ஓர் அங்குலம் குறைவாக இருந்தது. அந் தத் தடிக்குச்சியை வைத்திருந்த சீடன் தான் வழிப்போக்கரை ஏசியவன்.

தான் மோதிரத்தைத் திருடிவைத்திருப்பதால் தன்னிடம் முனிவர் மந்திரித்துத் தந்த தடிக்குச்சி ஓர் அங்குலம் வளரும் எனப் பயந்து விட்ட அவன் இரவோடு இரவாக தன்னிடமிருந்த குச்சியில் ஓர் அங்குலத்தை (வளர்ந்த ஓர் அங்குலத்தை நறுக் குவதாக எண்ணி) நறுக்கிவிட்டான். ஐந்து குச்சி களையும் ஒன்றாகச் சேர்க்கும்போது வளர்ந்த பகு தியை நறுக்கிவிட்டால் ஏற்கனவே இருந்த அளவில் தானே தடிக்குச்சி இருக்கும், தனது திருட்டுப் பிடி படாது என நினைத்து, நறுக்கினான். மாட்டிக் கொண்டான். முனிவரின் தந்திரம் ஒற்றனின் மோதிரத்தைப் பெற்றுக் கொடுத்தது.

அடுத்தவர் பொருளுக்கு ஆசைப்படும் சீடனைப் போல் இல்லாமல் என்றும் உண்மையும், நேர்மை யும் கொண்ட சிறுவர்களாக வாழக் கற்றுக் கொள் வோம்.

- லோகி



# வரலாற்றில் இன்றைய தினம்

1541 - சிலி நாட்டின் சந்தியகோ நகர் பழங்குடியின் வீரர்களால் மிச்சி மலோன்கோ தலைமையில் தாக்கியழிக்கப்பட்டது.

1609 - மான் ஹட்டன் தீவையும் அங்கு பழங்குடி மக்கள் வாழ்வதையும் ஹென்றி ஹட்சன் கண்டு பிடித்தார்.

1709 - பிரான்சுக்கு எதிரான போரில் பெரிய பிரித்தானியா, நெதர்லாந்து மற்றும் ஒஸ்ரியா ஆகியன ஈடுபட்டன.

1758 - செயின் காஸ்ற் போரில் பிரான்ஸ், பிரிட்டிஷ் ஆக் கிரமிப்பைத் தகர்த்தது.

1789 - அமெரிக்கத் திறைசேரியின் செயலாளராக முதன் முதலாக அலெக்ஸாண்டர்ஹமில்ரன் நியமிக்கப்பட் டார்.

1921 - பாரதி இவ்வுலகை விட்டு நீங்கினார்.

1940 - முதன் முதலாக தொலைக் கட்டுப்பாட்டு முறை மூலம் ஜோர்ஜ் ஸ்ரிபிஷால் கணினி இயக்கப்பட்டது.

1941 - பென்டகனின் நிர்மாணப் பணிகளுக்கு அத்திவார மிடப்பட்டது.

1965 - இந்திய பாகிஸ்தான் போரில் லாகூருக்கு தென் கிழக் கேயுள்ள புர்கி நகரை இந்தியப் படைகள் கைப் பற்றின.

1971 - முறைப்படி எகிப்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.

1974 - ஈஸ்டர்ன் விமான சேவை விமானம் 212 விபத் துக்குள்ளாகியதில் 69 பயணிகளும் இரண்டு விமா னிகளும் உயிரிழந்தனர்.

2002 - இட நெருக்கடி காரணமாக நோய்களுக்கு ஆளாகும் நிலையில் களுத்துறைச் சிறைக் கைதிகள்; கைதிகள் நலன்புரிச் சங்கம் அபாய அறிவிப்பு.

2003 - கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் புலிகள் - படை யினர் அக்கரைப்பற்றில் சந்தித்தனர்.

- 9 மாதங்களில் 33 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப் புக்கள் வழங்கப்பட்டதாக அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு.
- சுவீடன் வெளியுறவு அமைச்சருக்குக் கத்திக்குத்து. சிகிச்சை பலனளிக்காமல் சாவு.
- பெண்களின் முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்குத் தமிழ் தெரிந்த பொலிஸார் தேவை; பொது அமைப் புக்கள் கோரிக்கை.

2001 - கடத்திச் செல்லப்பட்ட இரண்டு விமானங்களால் நியூ யோர்க் நகரில் உள்ள உலக வர்த்தக மையத்தில் மோதச் செய்யப்பட்ட அதே வேளை மூன்றாவது விமா னம் பென்டகனில் மோதியது. அல் கெய்தா இயக் கத்தைச் சேர்ந்த 19 தற்கொலைத் தாக்குதலாளி களால் இது இணைப்புச் செய்யப்பட்டது. இதில் 2996 பேர் உயிரிழந்தனர்.

# பொது அறிவு

1. எல்லாக் காலங்களிலும் பூக்கும் பூ எது?
   வில்லிப்பூ
2. சைக்கிளைக் கண்டு பிடித்தவர் யார்?
   பிரான்ஸ் பின்தேசன்
3. பன்னிரண்டு வருடத்துக்கு ஒரு முறை பூக்கும் பூ எது?
   குறிஞ்சிப்பூ
4. பூமியின் கூரை எது?
   பமீர் பீடபூமி
5. ஈரான் நாட்டின் தலைநகரம் எது?
   தெகிரான்
6. தக்காளிப் பழத்தில் எவ்வகை அமிலம் காணப்படுகின்றது?
   யூரிக்கமிலம்
7. பாலில் அடங்கியுள்ள அமிலம் எது?
   லாக்டிக் அமிலம்
8. நம் உடலில் எவ்வளவு இரத்தம் உள்ளது?
   6 லீற்றர்
9. குரலில்லாத மிருகம் எது?
   ஒட்டகச் சிவிங்கி
10. புவியோட்டுக்கு அண்மையில் காணப்படும் மண்டலம் எது?
    மாறன் மண்டலம்

நேவிநாதன் மிதுனா,
தரம் 9 ஏ,
யா/கச்சாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.



## காந்தி அண்ணல்

காந்தி என்றொரு தனி மனிதர் - உயர்
கதரைக் கட்டிய பெருமனிதர்!
மாந்தர் உலகில் நலம்பெறவே - இம்
மண்ணில் பிறந்த பொது மனிதர்

சொன்னதை வாழ்வில் செய்தாரே - இன்பச்
சுதந்திரம் வாங்கித் தந்தாரே
இன்னல்கள் யாவையும் சுமந்தாரே - அவர்
என்றென்றும் ஏழைக்காய் உழைத்தாரே

உள்ளத்தில் தூய்மை உள்ளவரே! - தினம்
உண்மையாய் உரைத்த நல்லவரே
பள்ளத்தில் வீழ்ந்த மானிடரை - நல்ல
பாதையில் மாற்ற முயன்றாரே

அன்பினை மட்டும் ஆயுதமாய் - இந்த
அகிலத்தை அவரும் வென்றாரே
என்பையும் கொடுத்து விடுதலைக்கு - நம்
இதயத்தில் நிலைத்து நின்றாரே!



H.சிந்துஷா,
தரம் - 1,
தமிழ் கலவன் பாடசாலை



பி.லோஜினி,
தரம் - 2,
யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை.



# செப் - 11 இலக்கமல்ல கலக்கம்

# உலகையே உலுக்கிய தாக்குதல்

செ.உமாசுதன்

உலக வல்லரசான அமெரிக்காவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த உலக வர்த்தக மையத்தின் மீது கடத்தப் பட்ட விமானங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்களை யாரும் எளிதில் மறந்துவிட முடியாது.

2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் அமெரிக்காவை நிலைகுலைய வைத்திருந்தது. அந்த நாட்டின் பயணிகள் விமானத்தை நன்கு திட்டமிட்ட முறையிலே கடத்தி மேற்கொள்ளப்பட்ட இந்த விமானத் தற்கொலைத் தாக்குதல், உலகின் பொலிஸ்காரனாகத் தன்னை தற்போதும் வெளிக்காட்டி வரும், அமெரிக்காவின் சுயநலப்போக்குக்குவந்த நல்லதொருபடிப்பினை என்றுதான் சொல்ல வேண் டும்.

அமெரிக்க விமானங்களைக் கடத்தி மேற்கொள்ளப்பட்ட அடுத்தடுத்த அதிரடித் தாக்குதல்கள் அமெரிக்காவைஅதிரவைத்த தோடு முழு உலகையுமே வியப்பில் ஆழ்த்தியிருந்தது. ஏனெனில் உலகத்தின் மிக வலுவான பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கொண்ட நாடு என்று கருதப்படுவது அமெரிக்கா, அத்தகைய உயர் பாதுகாப்பு வலயத்தின், மையத்தினுள் புகுந்து கண்ணுக்குள் விர லைவிட்டு ஆட்டுவதுபோல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அத்துடன் உலகின் அதிஉயர் பாதுகாப்பு வலயங்களுள் மிக முக்கியமான பங்கைக் கொண்டது பென்டகன் நகரம். பாதுகாப்பான இயங்குநிலை வரையறைகளின் இதயம் என்று சொல்லப்பட்ட இந்தநகரில்மிக இலகுவில், மிகப்பெரிய தாக்குதலைமேற்கொண்டு அங்கு கடமையில் இருந்த 800 பேரை பலியெடுத்து அதன் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தகர்த்தெறியுமளவுக்கு இந்தத் தாக்குதல் பின்னணி அமைந்திருந்தது. பாதுகாப்பு என்ற பெரு அரணையே சிதைத்திருந்தது.

அமெரிக்காவின் பொருளாதார மையமான நியூயோர்க்கில் அமெரிக்க நேரப்படி காலை 8.35 மணிக்கு முதலாவது தாக்குதல் நடத்தப்பட்டது. மன்ஹட்டன் நகரில் உள்ள பிரசித்திபெற்ற உலக வர்த்தக மையத்தின் இரட்டை அடுக்குமாடிக் கோபுரங்களில் ஒன்றின் மீது கடத்தப்பட்ட போயிங் - 767'ரகவிமானம் மோதிவெடித்துச் சிதறியது. கட்டடத்தின் உச்சிப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதலினால் அங்கு நெருப்புப்பற்றி தீப்பிழம்பு எழுந்தது.

சற்று நேரத்தில் அதே திசையில் வந்த மற்றைய பயணிகள் விமானம் அருகில் இருந்த மற்றைய கட்டடத்தின் நடுப்பகுதியில் மோதி அதை ஊடறுத்து வெடித்துச் சிதறி தீப்பிழம்பாக மறுபுறத்தில் வெளியேறியது.

தாக்குதலில் தீப்பற்றி எரிந்த இந்த இரண்டு கட்டடங்களும் ஒரு சில மணி நேரத்துக்குள் முற்றாக சரிந்து விழுந்தன. இந்தத் தாக்குதல்களினால் நியூயோர்க் நகரமே புகை மண்டலங்களின் ஆளுகைக்குள் அகப்பட்டுக் கொண்டது. 110 அடுக்கு மாடிகளைக் கொண்ட இரண்டு கட்டடங்களும் முற்றாகத் தகர்ந்தன. பாதுகாப்புத் தலைமையகமான பென்டகனும் முற்றாக எரிந்தது. இந்தத்தாக்குதல் சம்பவங்களால் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

அதேசமயம்அமெரிக்க இராஜாங்கஅமைச்சுக் கட்டடம் மற்றும் காங்கிரஸ் கட்டடம் ஆகியவற்றுக்கு வெளியேயும் சில குண்டுவெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன. கடத்தப்பட்ட நான்கு விமானங்களிலும் பயணித்த 266 பயணிகள் விமானங்கள் நொறுங்கியதால் உடல் சிதறிப் பலியான்தாகவும் சொல்லப்பட்டது.சுமார் 50 ஆயிரம் பேர் பணியாற்றும் உலக வர்த்தக மையத்தின் மீது நடத்தப்பட்ட விமானத்தற்கொலைத் தாக்குதல்கள் உலக பொருளாதாரத்தில் அமெரிக்கா செலுத்தும் எதேச்சதிகாரப் போக்குக்கு எதிராக இடப்பட்ட இலக்கணக் குறியீடாகக் கருதப்பட்டது.

இதற்கு மிகப் பிரதானமான விடயங்களாக சிலவற்றைக் கருத முடியும் சர்வதேச மேலாதிக்கத்தைப் பயன்படுத்தி, பிறநாடுகளின் இறையாண்மையை உதாசீனப்படுத்தி அவற்றைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருகின்ற அமெரிக்காவின் முயற்சிகளுக்கான முதல் அடியாக இதனைக் கொள்ளலாம். அதுதவிர, பயங்கரவாதத்தை எதிர்ப்பதாகக் கூறி, சுயஉரிமைகளுக்காகப் போராடும் இன விடுதலைப் போராட்டங்களை நசுக்கும் அமெரிக்காவின் செயல்களுக்கு விழுந்த இரண்டாவது அடியாகவும் இது இருந்தது.

இதேபோன்று அமெரிக்கா இராஜாங்க அமைச்சுக்களுக்கு அருகே வெடித்த குண்டுகள் அமெரிக்கா ஏனைய நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடும் போக்குக்கு எழுப்பப்பட்ட எச்சரிக்கை மணியாகவும் இருந்தது.

இந்த விடயங்களுக்கு மேலதிகமாக இன விடுதலைப் போராட்டங்களை வன்முறை கொண்டு அடக்க முயற்சிக்கும் ஆதரவு நாடுகள் மற்றும் தீவிரவாத இயக்கங்களுக்கு பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்ற பெயரில் உதவிகளை அள்ளி வழங்கும் செயற்பாடுகள் நியாயமான கோரிக்கைகளையும், வேண்டுதல்களையும் அடக்குமுறை அரசுகளிடம் முன்வைக்கும் இனவிடுதலை அமைப்புக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தியிருந்தது. இதனை எவரும் மறுப்பதற்கில்லை. அமெரிக்காவின் மேற்சொன்ன தாற்பரியங்கள் இலங்கையையும் விட்டு வைக்கவில்லை. இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் வாழ்கின்ற தங்களுடைய பூர்வீக நிலங்களில் சுதந்திரமின்றி வாழ்ந்த, வாழ்ந்துவருகின்ற தமிழ்மக்களின் வாழ்விலும் திட்டமிட்ட முறையிலே கடந்த 2009 இல் இனப்படுகொலைச் செயற்றிட்டம் ஈவிரக்கமின்றி மேற்கொள்ளப்பட்டது. இது மனிதகுலம் மறவாத இரத்த சரித்திரம்.

இனவிடுதலை வேண்டிய தமிழ்ச் சமூகம் தங்களது நியாயமான அரசியல் உரிமைகளையும், வேண்டுதல்களையும், அபிலாசைகளையும் இனவாத இலங்கை அரசிடம் வேண்டி கடந்த 60 வருடங்களுக்கு மேலாக அகிம்சை வழியிலும் அதனைத் தொடர்ந்து ஆயுத வழியிலும் போராடினர். ஆனால் அதற்கான ஆசியும், ஆசிர்வாதமும் தமிழ் மக்களுக்கு வழங்கப்படவில்லை. தமிழினப்படுகொலையைத் திட்டமிட்டு செய்து தமிழ் ஈழத்திலே இரத்த ஆறைப் பெருக்கெடுக்க உறுதுணையாக இருந்ததே ஒழிய அதற்கான பாவமன்னிப்பை இதுவரை தன் மனச்சாட்சியின் பால் இருந்து கேட்கவில்லை. அதற்கான பிரதி உபகாரங்களையும் இதுவரை செய்யவில்லை.

மாறாகப் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்ற பெயரில் தமிழனின் நியாயமான வேண்டுதலைப் புரிந்து கொள்ளாமல் இலங்கை அரசிற்கு மறைமுகமாக உதவிகளை அள்ளி வழங்கி மிகப்பெரிய மனிதப்படுகொலையை மேற்கொள்ளக் காரணமாக அமெரிக்கா இருந்ததை யாரும் மறந்துவிட முடியாது. இலங்கையில் இடம்பெற்றது. மனிதப் படுகொலை தான், மிகப்பெரிய மனித உரிமை மீறல்கள் அங்கு இடம்பெற்றுள்ளன. அதனை நியாயமாக விசாரிக்க வேண்டும் என்று கூறிவந்தது. தற்போது அவ்விதமே சொல்லி வருகிறது. இது தமிழ் மக்கள் மீது இனப்படுகொலையை செய்ததன் பின்னான ஒரு கழிவிரக்கமா கத் தான் கருத முடிந் தது. ஆரம்பத்தில் சர்வ தேச விசாரணை வேண்டுமென்றதமிழரின் கோரிக்கைக்கு வலுச்சேர்த்த அமெரிக்கா, இலங்கை யில் இந்த வருடம் புதுமாற்றம் ஏற்பட்டிருக் கிறது. அவர்கள் தமிழருக்கு நியாயமான தீர்வைத் தர முயற்சிப்பர் எனகூறி மேல் இருந்து கீழிறங்கி உள் ளக விசாரணை என்று நியாயத்தின் எதிர்ப் பக்கம் சாய்ந்திருப்பது போல தோன்றுகிறது.

தீர்வு என்பதன் உண்மையான தோற்றத்தையும், அதன் உருவத்தையும் தமிழ் மக்கள் பார்ப்பதற்கு, பொறுமைக்கும் காத்திருப்பிற்கும் இலக்கணமாக தமிழர் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டிய நிலை தற்போது தோன்றியி ருக்கிறது.

உண்மையிலே அமெரிக்காவில் இடம்பெற்ற தற்கொலை தாக்குதலில் 10 ஆயிரம் பேர் கொல்லப்பட்ட சம்பவம் என்பது மிகப்பரிதாபத்துக்குரிய வேதனைக்குரிய விடயம். மனித உயிர்களை மதிக்கத் தெரியாதவர்களின் செயல் இது என்பதில் தப்பில்லை என பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் குறிப்பிட்டிருந்தார்.

ஆக, இத்தகைய சம்பவங்களின் வலிகளைப் புரிந்துகொண்ட ஒரு நாடே, நியாயமான கோரிக்கைகளை முன் வைத்த தமிழர்களை பயங்கரவாதம் என்ற நாமம் சூட்டி இலங்கை அரசுக்கு உதவி பல்லாயிரக்கணக்கில் கொன்று குவித்ததை மறக்க முடியாது. மறந்துவிட முடியாது. இத்தகைய கோரச் சமப்வங்கள் மனித வரலாற்றில் என்றுமே நிகழக் கூடாது.

இவ்வாறான அடக்குமுறைகளையும், தாக்குதல்களையும் கைகொட்டி வரவேற்காமல் ஆரவாரித்து மகிழாமல் தமிழர் மீது கரிசனையோடு உலகின் மிகப் பெரும் வல்லரசாக இருக்கின்ற அமெரிக்காவும், ஏனைய உலக நாடுகளும் தமிழர்களுக்கான தீர்வை மிக விரைவிலே பெற்றுத் தரக் கடமையாற்ற வேண்டும். உலகின் பொலிஸ்காரன், சர்வதேச காவல்காரன் என்ற நினைப்பிலிருந்து கீழிறங்கி சிறுபான்மை இனங்கள் மீதான ஆக்கிரமிப்பு, அட்டூழியங்களுக்கு இனியும் துணைபோகாமல் இருக்க வேண்டும்.

ஏனைய நாடுகளில் உள்ள இனங்களும், அந்த இனங்களின் மக்களும் அமைதியாகவும், நீதி கிடைக்கப்பெற்றவர்களாகவும் வாழ வழிசெய்ய வேண்டும். தன் வினை தன்னைச் சுடும் என்பதைப் புரிந்து கொண்டு பணி செய்ய வேண்டும்.



# 16 வருடங்களாகப் போராடிய பெண்

சமஸ்

உலகின் நீண்ட, 16 வருட காலமாகத் தொடர்ந்து வந்த தனது உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து, மருத்துவமனையிலிருந்து இரோம் ஷர்மிளா வீடுதிரும்பிய மறுநாள் அவரைச் சந்திக்கப் போயிருந்தேன். அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஆயுதப் படையினருக்கான சிறப்பு அதிகாரச் சட்டம் நடைமுறையில் உள்ள மாநிலம் மணிப்பூர்.

30இற்கும் மேற்பட்ட இனக் குழுக்கள் தமக்குள் நிகழ்த்திக்கொண்டிருக்கும் குழு மோதல்கள் என மணிப்பூர் கொந்தளிப்பில் இருந்த 1958இல், இங்கு மத்திய அரசால் ஆயுதப் படைகளுக்கான சிறப்பு அதிகாரச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. ராணுவப் படையினர் எந்த வீட்டுக்குள்ளும் புகுந்து எவரையும் விசாரிக்கவும், கைதுசெய்யவும், சுட்டுக் கொல்லவும், எந்த விசாரணையும் இன்றி வருடக்கணக்கில் சிறையில் அடைத்து வைக்கவும் உதவும் சட்டம். பிரிவினைவாதிகளையும் எல்லைக்கு வெளியிலிருந்து ஊக்கம் பெறும் தீவிரவாதக் குழுக்களையும் ஒடுக்க இந்தச் சட்டம் தேவை என்கிறது இந்திய ராணுவம். மணிப்பூரிகள் இந்தச் சட்டத்தால் நிறையப் பலி இழந்துவிட்டார்கள். அதனால் ஆரம்பத்திலிருந்து, இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வலியுறுத்திப் போராடிவருகிறார்கள். மணிப்பூரில், ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்தவர் இரோம் ஷர்மிளா. 2000 ஆம் ஆண்டில் நடந்த இளம்பெண் மெர்ஸி காபோயின் பாலியல் படுகொலை ஏற்கனவே ஷர்மிளாவை நிலைகுலைய வைத்திருந்தது. தொடர்ந்து அதே ஆண்டு நவம்பர் 2 ஆம் திகதி நடந்த மாலோம் படுகொலை அவரைக் காலவரையறையற்ற உணவு தவிர்ப்புப் போராட்டத்தை நோக்கித் தள்ளியது. ராணுவத்தினரால் நடத்தப்பட்டது என்று கூறப்படும் அந்தப் படுகொலைச் சம்பவத்தில், மலோம் பேருந்து நிறுத்தத்தில் காத்திருந்த பொதுமக்கள் 10 பேர் கொல்லப்பட்டார்கள். இந்தச் சம்பவத்துக்கு எதிரான கண்டனப் பேரணி ஏற்பாட்டுக் கூட்டத்தில் பங்கேற்க வந்தார் ஷர்மிளா. ஆயுதப் படைகளுக்கான சிறப்பு அதிகாரச் சட்டத்தை இந்திய அரசு திரும்பப் பெறும் வரை உண்ணாவிரதம் எனும் முடிவை எடுத்தார்.

போராட்டத்தில் ஈடுபட்ட ஷர்மிளா வைக் கைதுசெய்து மருத்துவமனையில் அடைத்தது அரசு. அங்கே மூக்கு வழியாகத் திரவ உணவுகளையும், மருந்துகளையும் உட்செலுத்தியது. தற்கொலைக்கு முயன்றதாக அவர் மீது வழக்கு. ஓராண்டு சிறைத் தண்டனை. ஒரு வருடம் முடிந்ததும், ஷர்மிளா பெயரளவில் விடுவிக்கப்படுவார். விடுவிக்கப்பட்ட மறுநாள், உண்ணாவிரதம் என்ற பெயரில் தற்கொலைக்கு முயற்சித்ததாகச் சொல்லி, மீண்டும் அவரைக் கைதுசெய்து உள்ளே அடைத்துவிடுவார்கள். அவருடைய இளமைக் காலத்தின் பெரும் பகுதி இப்படியே கழிந்தது. இவ்வாறு 16 ஆண்டுகளாக ஒரு துளி தண்ணீர் அவர் நாவை நனைக்கவில்லை.

ஷர்மிளா தன்னுடைய கோரிக்கையைப் பிரதமருக்கும், குடியரசுத் தலைவருக்கும் மட்டுமின்றி, சர்வதேச மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுக்கும் தொடர்ந்து அனுப்பிக்கொண்டே இருந்தார். அதிகரித்த அழுத்தங்கள் காரணமாக இடையில் பிரதமர் மன்மோகன் சிங் ஆட்சிக் காலத்தில், இந்தச் சட்டத்தை மறுபரிசீலனை செய்வதற்காக ஆணையங்களை அமைத்தது இந்திய அரசு. மனிதத்தன்மையற்ற செயற்பாடுகளுக்கு வழிவகுக்கும் இந்தச்சட்டத்தின் மோசமான கூறுகளை அரசுக்குச் சுட்டிக்காட்டினர், அதை ஆராய்ந்தவர்கள். எனினும், ராணுவத்தின் எதிர்ப்பை மீறி சட்டத்தைத் திரும்பப் பெறும் முடிவை எடுக்க அரசால் முடியவில்லை.

புவியியல்ரீதியாக வெகு தூரத்தில் இருக்கும் மணிப்பூரில் என்ன நடந்தாலும் பெரும்பான்மை இந்தியா அதைப் பற்றி அலட்டிக்கொள்வதில்லை. இரோம் ஷர்மிளாவின் போராட்டம் ஆண்டுகள் பல கடந்த நிலையில், அவர் மீதான கவனம் மணிப்பூரைத் தாண்டி இந்தியா முழுவதும் பரவியது. ஆகவே, மணிப்பூர் மக்கள் தங்கள் போராட்டத்தின் அடையாளமாக அவரைப் பார்த்தனர். போராட்ட காலத்தில், நேரில் சென்று பார்க்கும்போது அழ நேர்ந்தால், அது தன் மகளின் போராட்டத்தைப் பலவீனப்படுத்திவிடுமோ என்று கருதி ஷர்மிளாவைச் சந்திப்பதை தவிர்த்தார் அவருடைய தாய். ஷர்மிளாவை உந்துசக்தியாகக் கொண்டு உருவான போராட்டக் குழுவினரே அவருடைய ஒரே ஆறுதலாகவும் ஊக்கமாகவும் இருந்துவந்தனர். ஷர்மிளா 15 நாட்களுக்கு ஒருமுறை காவல் நீடிப்புக்காக நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்படும் நாள்களில் அவர்கள் அங்கே வருவார்கள். ஷர்மிளாவையும் மணிப்பூரையும் உயர்த்திப்பிடிக்கும் பாடல்களைப் பாடுவார்கள். முழக்கமிடுவார்கள். ஷர்மிளாவை மையப் பாத்திரமாகக் கொண்ட நாடகங்களை நாடெங்கும் மேடையேற்றுவார்கள். ஒரு சின்னக் கூட்டம் என்றாலும், துடிப்பான கூட்டம்தான் அது.

இன்றைக்கு அந்தக் கூட்டம் மிகப் பெரிய தர்மசங்கடமாக ஷர்மிளா முன் நிற்கிறது. சில ஆண்டுகளுக்கு முன், கடிதம் வழியே அறிமுகமான பிரிட்டன் இளைஞர் டெஸ்மண்ட் கொட்சி, உறைந்திருந்த ஷர்மிளா வாழ்வில் மின்னலென ஊடுருவினார். இந்தக் காதல், ஷர்மிளாவைச் சுற்றியிருந்தவர்களைப் பெரும் பதற்றத்தில் தள்ளியது. ஷர்மிளாவைச் சந்திக்க அவர் வந்தபோது அவரை அனுமதிக்க மறுத்தார்கள். டெஸ்மண்ட் கொட்சி தன் காதலியின் வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தில் உட்கார்ந்தார். பிரச்சினை பெரிதான பின் அவரை அனுமதித்தார்கள். ஷர்மிளாவின் போராட்டத்தில் பெரும் பிளவை அவர் உண்டாக்குவார் என்றும் அவர் இந்திய அரசின் உளவாளி என்றும் பேச ஆரம்பித்தார்கள். ஷர்மிளாவோ போராட்டத்துக்கு இணையான ஆர்வத்தைக் காதலிலும் கொண்டிருந்தார். டெஸ்மண்ட் கொட்சி அவருக்கு அளித்த, கரடி பொம்மை அவருக்கு உற்ற துணையானது. அதேசமயம், வாழ்நாள் முழுமையும் தன் சமூகத்துக்கானது என்றும் தன்னுடைய காதலரும் போராட்டத்தில் இணைந்துகொள்வார் என்றும் அவர் சொல்லிவந்தார். 2016 ஆகஸ்ட் 9 ஆம் திகதி தன்னுடைய போராட்டத்தைக் கைவிட்டு, அரசியலில் இறங்கும் முடிவை அவர் அறிவித்த பின்னர், பல்வேறு திருப்பங்கள் ஏற்பட்டன. போராட்டத்தைப் பாதியில் கைவிட்ட அவர் தங்கள் வீட்டுக்கு வரக் கூடாது என்றார் அவருடைய அண்ணன். ஆதரவாளர்கள் குழு பிளந்தது. மருத்துவமனையிலிருந்து புறப்படும்போது எங்கே செல்வதென்று தெரியாத நிலை ஷர்மிளாவுக்கு உருவானது.

தன்னுடைய நண்பர் ஒருவரின் வீட்டுக்கு அவர் செல்லத் திட்டமிட்டபோது, அங்கே அவர் தங்கக் கூடாது என்று அந்தப் பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து மருத்துவமனையில் இருந்த அவர், இப்போது ஒரு ஆசிரமத்தில் தங்கியிருக்கிறார்.

நாங்கள் உள்ளே நுழைந்தோம்.

**“ இந்தியாவின் மணிப்பூரைச் சேர்ந்தவரான ஷர்மிளா, அங்கு மக்களுக்கு எதிராகச் செயற்படும் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை நீக்கக் கோரி கடந்த 16 வருடங்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார். அவரது போராட்டத்தைப் பற்றி அவரைச் சந்தித்து உரையாடியமை இங்கே தரப்படுகின்றது.**

ஷர்மிளா மேலே மாடியில் இருக்கிறார் என்றார் எதிரே தென்பட்ட ஒரு பெண். மாடியில் ஒரு அறையில் நான்கைந்து இரும்புக் கட்டில்கள். அவற்றில் சீரமைக்கப்பட்ட ஒன்று, ஷர்மிளாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. கட்டிலில் தலையணையின் அருகிலேயே அந்தக் கரடி பொம்மை உட்கார்ந்திருந்தது. மணிப்பூரிகளின் இயல்பான உடையில் எங்களை வரவேற்றார் ஷர்மிளா.

உண்ணாவிரதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டாலும்கூட, இரோம் ஷர்மிளா தலைமுடியை இன்னும் பின்னிப்போடவில்லை. நகங்களை வெட்டிக்கொள்ளவில்லை. ஒப்பனையற்ற முகம். வாஞ்சையான பார்வை. இடையிடையே அவருடைய நினைவு எங்கோ செல்வதையும் சடாரென்று பழைய இடம் நோக்கித் திரும்புவதையும் அவருடைய பார்வைகளின் போக்கினூடே ஊகிக்க முடிகிறது. அரசியலைக் காட்டிலும் ஆன்மிகமே அவரை வழிநடத்துவதாகத் தோன்றியது.

*எப்படி இருக்கிறீர்கள்?*

கூண்டிலிருந்து வெளியே வந்த மாதிரி. மருத்துவமனையில், அந்தச் சிறையில் யாரும் என்னை எளிதாகச் சந்திக்க முடியாது. அனுமதி வாங்க வேண்டும். நான் பெரிய இழப்பாக நினைத்தது மக்களைச் சந்திக்க முடியாததைத்தான். இப்போது யாரையும் சந்திக்கலாம். எங்கேயும் போகலாம்.

*வழக்கமான ஆகாரம் எடுத்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டீர்களா?*

பிரத்தியேகமான ஆகாரமெல்லாம் இல்லை. நண்பர்கள் கொடுப்பதைச் சாப்பிடுகிறேன்.

*16 வருடங்கள் உணவைத் தொடாமலேயே இருந்திருக்கிறீர்கள். இந்த உண்ணாவிரதத்தைத் தொடங்குவதற்கு முன்பு, நீங்கள் சாப்பிட்டபோது இருந்த உணவின் சுவைக்கும், இப்போதைய சுவைக்கும் வித்தியாசம் ஏதும் தெரிகிறதா?*

மிகமி சுவையாக இருக்கிறது (சத்தமாக வாய்விட்டுச் சிரிக்கிறார்)

*எந்த மாதிரியான தருணத்தில், உணவைத் தவிர்த்தல் எனும் முடிவை எடுத்தீர்கள்?*

என்னால் சமூகத்துக்கு என்ன செய்ய முடியும் என்று கேட்டுக்கொண்டபோது, அஹிம்சை வழியில் அது ஒன்றே வழியாகத் தெரிந்தது. பொதுவாக, நாங்கள் வியாழக்கிழமைகளில் விரதம் இருப்பது வழக்கம். அப்படியொரு வியாழக்கிழமை விரதத்தின் தொடர்ச்சியானதே இந்தப் போராட்டம் .

*இந்த 16 ஆண்டு காலத்தில் சாப்பிட்டாக வேண்டும் என்ற வேட்கையைத் தூண்டிய, உணவு எது? அதுபோன்ற தருணங்களில் எப்படி அந்தச் சவாலை எதிர்கொண்டீர்கள்?*

எந்த உணவையும் பார்த்து அப்படி ஒரு வேட்கைக்கு ஆளானதில்லை. ஆனால், சில சமயங்களில் தண்ணீரைப் பார்த்து அலாதியான தாகம் ஏற்படும். அப்படியே அதை நினைத்துக்கொண்டே தூங்கிப் போவேன். ஓரிரு முறை தண்ணீர் குடிப்பதுபோலக் கனவு வந்திருக்கிறது. கனவில் அம்மா கொண்டுவந்து தண்ணீர் கொடுப்பார்.

*என்னைப் போன்றவர்களால் ஒரு முழு நாள்கூட விரதமிருக்க முடிவதில்லை. சில பொழுதுகள் விரதத்தின்போதும்கூட மனம் உணவின் மீதே வட்டமடித்துக்கொண்டிருக்கும். எப்படி இந்த 16 ஆண்டுகளை எதிர்கொண்டீர்கள். எது உங்களுக்குப் பலத்தைத் தந்தது?*

ஆன்மப் பரிசோதனைக்கு முகம் கொடுக்கத் தயாராக இருந்தால், அது எல்லோராலும் சாத்தியம் என்றே நினைக்கிறேன்.

*உலகில் உள்ள உயிர்களின் இயக்கத்துக்கு உந்துசக்தி தாகமும் பசியும் பாலுறவு வேட்கையும். சந்நியாசிகள் பாலுறவு வேட்கையைக் கடந்துவிட முடியும் என்கிறார்கள். அவர்களாலும் கூட தாகம், பசியைக் கடக்க முடியும் என்று தோன்றவில்லை. தாகம், பசியை எதிர்கொள்ளும் உங்கள் உணவு ஒறுத்தலுக்கான மைய நோக்கமாகத் தனிப்பட்ட வகையில் எதைக் கொண்டிருந்தீர்கள்?*

என்னுடைய நிலைமை கொஞ்சம் வித்தியாசமானது. சந்நியாசிகள் விரதம் இருந்தால்கூட, குறைந்தபட்சம் தாகம் - பசி அவர்கள்கூட இருக்கும். ஒருவகையில் விரதம் இருப்பவர்களுக்குத் தாகமும் பசியும் ஒரு துணை. எனக்கு அந்தத் துணைகளைக்கூட யாரும் கொடுக்கவில்லை. செயற்கையான முறையில் தொடர்ந்து என் வயிற்றை அவர்கள் நிரப்பிக்கொண்டே இருப்பார்கள். மூக்கு வழியாக ஆகாரத்தையும் மருந்துகளையும் புகட்டிக்கொண்டே இருப்பார்கள். வருடக்கணக்காக இப்படி நடக்கும். (ஆழ்ந்து போகிறார்) நான் அதைத் தண்டனையாகவோ, சுமையாகவோ பார்க்கவில்லை. அது என் சமூகத்துக்காக நான் ஏற்றுக்கொண்ட கடமை, பொறுப்பு. அது ஒரு தனி மனுஷியின் வலி அல்ல. ஒரு சமூகம் அன்றாடம் எதிர்கொள்ளும் வலியின் ஒரு பகுதி. எனக்குத் தாங்கும் சக்தி இருந்தது. நான் எடுத்துக்கொண்ட லட்சியமும் மன வலிமையும் அதை எனக்குத் தந்தன. யோகப் பயிற்சி என்னை ஒருமுகப்படுத்திக்கொள்ளப் பெரிய அளவில் உதவியது என்று நினைக்கிறேன்.

*உங்களுடைய போராட்டம் கணிசமாக வென்றிருக்கிறது. இன்றைக்கு நாடு முழுவதும் மணிப்பூர் மக்களின் துயரங்கள் தெரிகிறது. ஆயுதப் படையினருக்கான சிறப்பு அதிகாரச் சட்டத்துக்கு எதிரான குரல்கள் நாடெங்கும் ஒலிக்கின்றன என்றால், அதற்கு உங்களுடைய உண்ணாவிரதப் போராட்டம் முக்கியமான காரணம். எனினும், உங்கள் போராட்டம் அதன் முழு இலக்கை எட்டிவிடவில்லை. உங்களுடைய கோரிக்கையை இன்றுவரை இந்திய அரசு ஏற்கவில்லை. இந்தச் சூழலில், உங்களுடைய மனநிலை என்ன? அடுத்து என்ன செய்யப் போகிறீர்கள்?*

(கீழே குனிந்துகொள்கிறார் மௌனம்) என் வாழ்க்கையில் நான் எடுத்த கஷ்டமான முடிவு இது. போராட்டத்தைத் தொடங்கும்போதுகூட நான் இவ்வளவு சிரமப்படவில்லை. அரசு என்னுடைய குரலுக்குச் செவிசாய்த்திருக்கலாம். வன்முறை வழியில் போராடிக்கொண்டிருப்ப வர்கள் மத்தியில் அது ஒரு புது நம்பிக்கையை விதைத்திருக்கும். நான் என் உயிரையும் கொடுக்க எப்போதும் தயாராக இருந்தேன். ஆனால், எந்த மாற்றத்தையும் என் போராட்டம் ஏற்படுத்தவில்லை. என் வலிகளுக்கு எந்த மதிப்பும் இங்கு இல்லை. இப்போது அரசியலில் பங்கேற்கும் முடிவை போராட்டத்தின் இன்னொரு வடிவமாகவே நினைக்கிறேன்.

*நீண்ட காலத் திட்டத்துடன், சமூகச் சீர்திருத்தத்தில் ஈடுபடுவதற்கும், அரசியலுக்கும் இடையே பெரிய இடைவெளி இருப்பதாகத் தோன்றுகிறது. கிட்டத்தட்ட இரண்டும் இருவேறு பாதைகளாகத் தெரிகின்றன. வெறுமனே பதவிகளைக் கைப்பற்றுவதன் மூலம் என்ன மாற்றத்தை ஏற்படுத்திவிட முடியும் என்று நம்புகிறீர்கள்?*

முதல்வரை எதிர்த்துப் போட்டியிட நினைக்கிறேன். நேர்மையான மனிதர்கள் மாநிலம் முழுவதும் இப்படிப் போட்டியிடுவார்கள். எங்கள் சமூகத்தின் பெரிய துயரம் ஒற்றுமையின்மை. அரசியலை அரசியல்வாதிகள் மட்டும் கெடுக்கவில்லை. நம் எல்லோருக்குமே அதில் பங்கிருக்கிறது. நம்முடைய மனங்களில் உள்ள ஊழலின் ஒரு பகுதியே அரசியல் வழியே நம் கண்கள் முன் வருகிறது. நமக்குள்ளிருக்கும் அசிங்கத்திலிருந்து விடுபடுவதையே நான் பேசுவேன்.

*ஆயுதப் படைகளுக்கான சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை. இப்படியான சூழலில் மக்கள் உங்களைத் தேர்ந்தெடுப்பார்கள் என்று நினைக்கிறீர்களா?*

மணிப்பூரிகளின் இன்றைய தேவைகளை உணர்ந்திருப்பதாலேயே இந்த முடிவை எடுத்தேன். தொலைநோக்குள்ள, ஊழலற்ற, வெளிப்படையான நிர்வாகத்தைத் தரும் ஒரு அரசு இன்றைய அவசியத் தேவையாக உருவெடுத்திருக்கிறது. நான் தேர்தலில் நிற்பது அதை வெளிப்படுத்தும் ஒரு அடையாளம். மாற்றத்துக்கான தார்மீக அறைகூவல். ஒருவேளை நான் தோற்றால், அது என்னுடைய தோல்வி அல்ல.

*பல இனக் குழுக்கள் இங்கே ஆயுதங்கள் ஏந்தி நிற்கின்றன. இந்தக் குழுக்கள் எல்லாம் இந்திய அரசாங்கத்தை மட்டும் எதிர்க்கவில்லை. மாறாக, மேலாதிக்க மனநிலையில் தங்களுக்குள் ளும் மோதிக்கொள்கின்றன. இந்நிலையில், ஒரு அரசாங்கத்தின் தரப்பிலிருக்கும் நியாயங்களை நீங்கள் எந்த அளவுக்குக் கருத்தில் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள்? மாற்றுத்தரப்புடனான உரையாடலுக்கு எந்த அளவுக்கு நெகிழ்வுத்தன்மையோடு இருந்தீர்கள்?*

மணிப்பூரில் வீடுகள்தோறும் போய்க் கேளுங்கள். இதுவரை எவ்வளவு பேர் காணாமல் போயிருக்கிறார்கள், பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள், கொடூரமாகக் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்று ராணுவப்படைகள் செய்த அட்டூழியங்கள் ஒவ்வொன்றையும் அவர்கள் நாள் முழுக்கச் சொல்வார்கள். ஊழல், வறுமை, வளர்ச்சி இவையெல்லாம் பணம் சம்பந்தப்பட்ட விடயம் அல்ல இது. உயிர்வதை. நான் ராணுவமே இங்கு கூடாது என்று சொல்லவில்லை. ராணுவம் தவறிழைக்கும்போது அதை எதிர்க் கேள்வி கேட்க வாய்ப்பில்லாமல் செய்யும் சிறப்பு அதிகாரச் சட்டத்தையே திரும்பப் பெறக் கேட்டேன். இந்திய அரசு என்னுடைய குரலுக்குச் செவி கொடுத்திருந்தால், அதை ஒரு நியாயமாக முன்வைத்து நான் என் மக்கள் மத்தியில் அரசுக்கு எதிரான தரப்புகளின் வன்முறை எதிராகப் பேசியிருக்க முடியும். அவர்களின் போக்கையும் மாற்ற என்னால் ஒரு முயற்சி எடுத்திருக்க முடியும். இந்தியா தன்னுடைய ஜனநாயக பலத்தை சுயசோதனை செய்துகொள்ள ஒரு வாய்ப்பாகவும் அது அமைந்திருக்கும். இப்போதும் நான் நம்பிக்கையை இழக்கவில்லை. பேச்சுவார்த்தையே எல்லாவற்றுக்கும் தீர்வு.

*இப்போது அஹிம்சா வழிப் போராட்டத்தின் மீதான உங்களது நம்பிக்கை எந்த அளவில் இருக்கிறது?*

அஹிம்சாவழிப் போராட்டத்தில் நான் துளியும் நம்பிக்கை இழக்கவில்லை. இந்த நவீன வாழ்க்கையில் பெரும் சக்திகளை எதிர்த்துப் போராட, சாதாரணமானவர்களுக்கு உள்ள ஒரே வழி அதுதான். ஆனால், அறிவியலும் தொழில்நுட்பமும் தரும் வளர்ச்சியானது நம்முடைய மனங்களின் காதுகளைச் செவிடாக்கிக் கொண்டிருக் கிறது. அவற்றுக்கு கொடுக்கும் முக்கியத்துவம் நம்மு டைய ஏனைய எல்லா உணர்வு நரம்புகளின் துவாரங் களையும் அடைத்துவிடுகின்றன.

*தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பாக ஒரே ஒரு கேள்வி. உங்களுடைய காதலர் எந்த வகையில் உங்களுக்கு உதவியாக இருக்கிறார்? உங்களுடைய திருமணத் திட்டம் என்ன?*

மிகவும் சிக்கலான விடயம் இது. உண்மையாகவே எனக்குத் தெரியவில்லை. இந்தப் பிரபஞ்சத்தில் பிறந்த ஒவ்வொரு உயிரினத்துக்கும் காதல் இயல்பானது. அந்தரங்கத்தைப் பேச வேண்டாம் என்று நினைக்கிறேன். விதிப்படி எல்லாம் நடக்கும்.

*இந்திய சகோதரர்களுக்கு நீங்கள் சொல்ல விரும்பும் செய்தி என்ன?*

அன்பு ஒன்றுதான் என்னிடமுள்ள ஒரே செய்தி. அன்பின் வழி அரசியலை அணுகி ஒரு பெரும் ஏகாதிபத்திய அரசை வெளியேற்றிய தந்தையின் வழித்தோன்றல்கள் நாம். அந்த வழியை நாம் என்றும் மறந்துவிடக் கூடாது!

# பிரபாகரன் என்னும்...

*(22 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

வென்றெடுக்கப்படக்கூடிய சண்டைக் களங்களுக்கும் அனுப்பப்பட்டனர். 'ஜெயசிக்குறு' நடவடிக்கை மாங்குளத்தில் இடம்பெற்றபோது 90 கொமாண்டோக்களை உள்ளடக்கிய இரண்டாவது கொமாண்டோப் படையணி முழுமையாகக் களத்தில் நிறுத்தப்பட்டதால் முற்றாக அழிந்தது. இந்தக் களத்தை காலாற்படையினர் மிக இலகுவாகக் கையாண்டிருக்கமுடியும். திறமையற்ற இராணுவத் தலைமைத்துவத்தின் திட்டமிடலின்மையே இவ்வாறான தோல்விகளுக்குக் காரணம்."

*"முன்னாள் இராணுவக் கட்டளைத் தளபதிகளின் தீர்மானங்களை நீங்கள் தவறு எனக் கூறுகிறீர்களா?"*

"இல்லை. சரியான தீர்மானம் எடுத்தல் என்கின்ற விடயத்தில் இவர்கள் தவறு விட்டிருக்கலாம். அதாவது சரியான தருணத்தில் எடுத்திருக்க வேண்டிய தீர்மானத்தை இவர்கள் எடுக்கவில்லை எனக் கூறுகிறேன்."

*"சமாதான காலத்தில் புலிகள் அமைப்பின் நடத்தை எவ்வாறாக இருந்தது?"*

"எமது படையினர் சமாதான காலத்தில் தமது கடமைகளை மிகவும் பொறுமையுடன் மேற்கொண்டனர். புலிகள் அமைப்பின் உள்நோக்கத்தை அறியாத எமது அரச தலைவர்கள், புலிகள் பேச்சுக்குத் தயாராகின்ற போதெல்லாம் அதற்குச் சம்மதித்தார்கள். சமாதான காலத்தில் எமது வீரர்களை எவ்வாறு புலிகள் குழப்பினர் என்பதை நான் எனது நூலில் விளக்கியுள்ளேன். புலிகளின் ஏற்பாட்டில் இராணுவத்தினரின் முகாம்களின் முன்னால் கிராம மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர். ஆனால் படையினர் தொடர்ந்தும் பொறுமை காத்தனர்.

குழப்பமான சமாதானத்தைவிட மதிப்பான போரை நடத்துவதென நாங்கள் தீர்மானித்தோம். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் தம்மைத் தயார்ப்படுத்தத் தொடங்கினர். பயிற்சிகள் வழங்கப்பட்டன. எமது பலவீனங்கள் கண்டறியப்பட்டன. பலங்களை மேலும் முன்னேற்றினோம். இரவு வேளைகளில் எம்மீது புலிகள் தாக்குதல் நடத்தி பயத்தை ஏற்படுத்தினர். இதை முறியடிப்பதற்காக இரவில் பயிற்சிகளை வழங்கினோம். இறுதியாக இவர்கள் சிறப்பான இரவு நேரப் போர்ப் படையினராக மாறினர்.

இராணுவத்தினர் மேலும் பலம்பெற்ற பின்னர், நாங்கள் நான்காம் கட்ட ஈழப்போரை ஆரம்பிப்பதற்கு அரசு எப்போது வாய்ப்பு வழங்கும் எனக் காத்திருந்தோம். புலிகளும் எம் மீது தாக்குதலை மேற்கொள்வதற்கான தயார்ப்படுத்தலில் ஈடுபடுவார்கள் என்பது எமக்குத் தெரியும்."

*"ஓட்டமெடுத்த இராணுவத்தில் நீங்கள் போரிட்டபோது புலிகள் மற்றும் பிரபாகரன் தொடர்பாக என்ன நினைத்தீர்கள்?"*

"ஓட்டமெடுத்த இராணுவம் எனக் கூறுவது கசப்பான உண்மை. எனினும், இராணுவத்தில் கடமையாற்றிய பல மூத்த இராணுவ அதிகாரிகள் இதனை மறுப்பார்கள். இரண்டரை நாள்களில் நாங்கள் தாண்டிக்குளத்திற்கு ஓட்டமெடுத்ததிலிருந்து இதனை நான் ஓட்டம்பிடித்த இராணுவம் எனக் கூற விரும்பினேன். கடந்த காலத்தில் நாங்கள் எவ்வாறு போர் புரிந்தோம் என்பதை வெளிப்படுத்துவதற்கு இப்படிப் பிழையான சொல்லைப் பாவித்தமைக்காக நான் மன்னிப்புக் கோருகிறேன். இறுதியாக இடம்பெற்ற ஈழப் போரில் இராணுவத்தினர் வெற்றி பெறும் வரை இவர்கள் போரை வெற்றி கொள்வார்கள் என மக்கள் நினைக்கவில்லை. புலிகள் அமைப்புடனான போரை உங்களால் வெற்றி கொள்ள முடியாது என சமாதான காலத்தில் முன்னாள் அரசைச் சேர்ந்த மூத்த அமைச்சர் ஒருவர் என்னிடம் தெரிவித்தார். இல்லை எங்களால் போரை வெற்றி கொள்ள முடியும் என நான் பதிலளித்தேன். கேணல், நீண்ட காலமாக உங்களது படையினர் புலிகளுடன் சண்டையிடுகிறார்கள். ஒரு களத்தில் கூட உங்களால் அவர்களை வெற்றி கொள்ள முடியவில்லை. இதனாலேயே நாங்கள் பேச்சுக்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது என்று அந்த அமைச்சர் என்னிடம் கூறினார். இதனை நான் எனது நூலில் குறிப்பிட்டுள்ளேன். புலிகள்தான் மிகப் பலமான போர்ப் படையைக் கொண்டிருப்பதாக இந்த நாட்டு மக்களும், அரசுகளும் எமது படையினரும்கூட நினைத்தனர். ஆனால் 2009இல் நாங்கள் இந்தக் கருத்தியலை மாற்றினோம்.

பிரபாகரன் படிக்காதவராக இருக்கலாம், ஆனால் அவர் தனக்குள்ளேயும் தன்னைச் சுற்றியும் கடுமையான ஒழுக்கத்தைப் பேணினார். பிரபாகரன்தான் தற்கொலைத் தாக்குதல் கலையை முதலில் கட்டியமைத்தவர். அல்குவைதாவின் முதலாவது தற்கொலைக் குண்டுதாரிக்கு முன்பாகவே பிரபாகரன் 200 தற்கொலைக் குண்டுதாரிகளை வைத்திருந்தார்.

பெரும்பாலான தற்கொலைக் குண்டுதாரிகள் பெண்களாகவே இருந்தனர். தமது தலைமையின் கட்டளைக்கு பணிந்து தமது உயிரைக் கொடுக்கவும் அவர்கள் தயாராக இருந்தனர். விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அவர் பெண் போராளிகளை தவறாகப் பயன் படுத்தியமைக்கு எந்தச் சான்றுமே கிடையாது. அவர் ஓர் அன்பான குடும்ப மனிதராக இருந்தார். இராணுவத்தினர், பிரபாகரனினதும் அவரது குடும்பத்தினரதும் விடுதலைப் புலிகளின் நிகழ்வுகளினதும் 10 ஆயிரம் ஒளிப்படங்களைக் கைப்பற்றினர். ஆனால் ஒரு படத்தில் கூட மதுபான குவளையுடன் பிரபாகரனைக் காணமுடியவில்லை.

அவர் ஒரு ஒழுக்கமான தலைவராக இருந்தார். ஷரியா சட்டத்தை விடவும் மேலான சட்டத்தைப் பேணுபவராக அவர் இருந்தார். நீங்கள் திருடியிருந்தால் ஷரியா சட்டத்தின்படி கையைத்தான் இழக்க நேரிடும். ஆனால் பிரபாகரனின் சட்டத்தின் கீழ் வாழ்க்கையை இழப்பீர்கள்.

அவர் ஒரு இந்துவாக இருந்தாலும் கடவுளை நம்பவில்லை. கடவுள் சக்தி வாய்ந்த நாடுகளில்தான் இருக்கிறார் என்று அவர் ஒருமுறை கூறியிருந்தார். அவர் ஒரு வித்தியாசமான தலைவர். பலரும் கற்க வேண்டிய பல நல்ல பண்புகள் அவரிடம் இருந்தன.

அவர் ஓர் உறுதியான முடிவை எடுப்பவராக இருந்தார். எடுக்கும் முடிவு சரியோ தவறோ அதையிட்டு கவலைப் படமாட்டார். அந்த முடிவை நடைமுறைப்படுத்துவார்.

ராஜீவ்காந்தியைக் கொலை செய்தது அவரது விவேகமற்ற ஒரு முடிவுகளில் ஒன்று. ராஜீவ்காந்தியைக் கொல்வதன் மூலம் இந்தியா முழுமையாகவும் உலகமும் தனக்கு எதிராகத் திரும்பும் என்று அவருக்கு தெரியும். ஆனால் விடுதலைப் புலிகளை அழிக்க சிறிலங்கா வில் இந்திய அமைதிப்படையை நிறுத்தியதற்குப் பழிவாங்க அவர் விரும்பினார். எனவே அவரைக் கொலை செய்தார். அவர் இரக்கமற்றவர்.

அவரிடம் பொறுமை நிறையவே இருந்தது. தனது பயணங்களுக்கு அவர் அவசரப்படவில்லை. தாக்குதலுக்கு சரியான தருணம்வரும் வரை காத்திருந்தார். தன்னை அர்ப்பணித்த, தியாகம் செய்த, ஒழுக்கமுள்ள ஒரு பயங்கரவாதத் தலைவரான பிரபாகரன் போன்ற இன்னொரு தலைவர் உருவாகும் வரை புலிகள் அமைப்புக்கு மீண்டும் புத்துயிர் அளிக்கப்படும் என நான் கருதவில்லை.

*(மிகுதி நாளை வரும்)*

# ஆதரவற்றோரின் அன்னையானார் புனித தெரேசா

அதிரன்



அன்னைதெரேசா 1997 செப்ரெம்பர் 5 இல் இயற்கை எய்திய பிறகு, குறைந்த கால அவகாசத்தில், அதாவது 19 ஆண்டுகால இடைவெளியில், கடந்த 4ஆம் திகதி அவருக்குப் புனிதர் பட்டம் வழங்கப் பட்டிருக்கிறது. குணப்படுத்தவே முடியாத அளவுக்கு மூளையில் ஏற்பட்டிருந்த தொற்றால் பாதிக்கப்பட்டு, அறுவைச் சிகிச்சையை எதிர்நோக்கிக் காத்திருந்த பிரேசிலைச் சேர்ந்த நோயாளி ஒருவரைத் தனது பிரார்த்தனையின் மூலம் அன்னை தெரேசா குணப்படுத்தினார் என்று சொல்லி, அதை அவரது இரண்டாவது அற்புதச் செயலாகப் பாப்பரசர் பிரான்சிஸ் அண்மையில் அங்கீகரித்தார். 2003 ஒக்ரோபர் 19இல் அன்னை தெரேசாவுக்கு ஆசீர்வதிக்கப்பட்டவர் என்ற பட்டம் வழங்கப்பட்டு, 13 ஆண்டுகாலத்துக்குப் பிறகு, வத்திக்கான் நகரின் சென். பீற்றர்ஸ் சதுக்கத்தில் அவருக்குப் புனிதர் பட்டம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அன்னை தெரேசாவின் குழந்தைப் பருவம் முதல் இறப்பு வரை அவரிடம் இருந்த தெய்வீகத்தன்மையின் இழை ஒருபோதும் குன்றாமல் இருந்தது. வெளிப்படையான நற்பண்பும், பரிவும் கொண்ட அன்னை தெரேசா, தனது வாழ்நாளில் ஒரு புனிதராகவே வழிபடப் பட்டார் என்றே உலகில் உள்ள கோடிக் கணக்கான மக்கள் நம்புகிறார்கள்.

எங்கோ வெகு தொலைவில் உள்ள இந்தியாவில் தொண்டாற்றுவதுதான் தனது வாழ்வின் பணி என்று முடிவெடுத்தபோது, அவருக்கு 18 வயது. 1910 ஓகஸ்ட் 26 இல் அன்னை தெரேசா பிறந்தார். இந்தியாவில் தொண்டாற்றுவது தொடர்பாக இளம் வயதில் அவரது ஆர்வத்தைத் தூண்டிய சில யூகோஸ்லோவிய" கத்தோலிக்கர்களைத் தவிர, இந்தியா எந்தப் பக்கம் இருக்கிறது என்று அங்கிருந்த யாருக்கும் தெரியாது.

எனினும், அவரது நம்பிக்கையின் ஆரம்ப விதைகளும், தீர்மானமான முடிவும் நெருங்கிய பாசப்பிணைப்பு கொண்ட தனது குடும்பத்தை விட்டு வெளியேற அவரைத் தூண்டின. அருட்சகோதரிகளுக்குப் பயிற்சி அளிக்கும் லொரேட்டோ ஆர்டர் எனும் மத நிறுவனத்தில் சேர்ந்த பின்னர், இந்தியாவுக்குச் செல்லும் வழியை அவர் கண்டடைந்தார். அந்த அருட்சகோதரிகளின் தலைமையகம் கொல்கத்தாவில் இருந்தது.

அங்கு சுமார் 20 ஆண்டுகள் ஆசிரியையாகப் பணியாற்றிய அவருக்கு, தெருக்களிலும் குடிசைப் பகுதிகளிலும் வாழும் ஏழைகளுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை அவரது உள்ளுணர்வு தூண்டியது. ஒரு கடைநிலை சேவகராக அல்லாமல், மதரீதியிலான உணர்வுகளுடனேயே, மினரிஸ் ஒப் சரிட்டி எனும் அறக்கட்டளையை அன்னை தெரேசா உருவாக்கிக் கொள்ள வத்திகான் அனுமதியளித்தது.

1948 இல் கொல்கத்தாவின் நடைபாதைகள் முழுவதும், தேசப் பிரிவினை காரணமாக வீடிழந்த லட்சக்கணக்கான மக்களால் நிரம்பி வழிந்தன. ஏற்கெனவே, பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருந்த பரிதாபத்துக்குரிய மக்கள் கொல்கத்தாவில் இருந்தனர். வசிக்க வீடில்லாமல், நோய், விரக்தியில் தத்தளித்துக் கொண்டிருந்த அம்மக்களின் துயரக் கடலில், 38 வயதான அந்த அருட்சகோதரி காலடி எடுத்துவைத்தார். வழக்கமான அருட்சகோதரிபாணிஉடையை அல்ல, நகராட்சித் துப்புரவாளர்கள் அணியும் உடையைப் போன்று சேலை அணிந்திருந்தார் அன்னை தெரேசா. துணைக்குஉதவியாளர் இல்லை. பணமும் இல்லை. லோரெட்டோ மடத்தின் பாதுகாப்பை விட்டு வெளியேறி, பரம ஏழைகள், கைவிடப்பட்ட கைக்குழந்தைகள், சமூகத்தால் விலக்கிவைக்கப்பட்டு ஆதரவற்ற நிலையில் செத்துக்கொண்டிருக்கும் தொழுநோயாளிகளின் வடிவில் உள்ள இறைவனுக்குச் சேவை செய்யுமாறு இறைவன் தன்னைப் பணித்திருக்கும் ரகசிய அழைப்பு மட்டுமே அவரிடம் இருந்தது.

தெருவில் மரணத்துடன் போராடிக்கொண்டிருந்த ஒரு மனிதரைக் கண்ட அன்னை தெரேசா, அரசு மருத்துவமனைக்கு அவரைக் கொண்டு சென்றார். இறக்கப்போகும் ஒரு மனிதனுக்காக மருத்துவமனைப் படுக்கையை வீணாக்க முடியாது என்று சொல்லி, அம்மனிதரை அனுமதிக்க மறுத்துவிட்டது மருத்துவமனை. மருத்துவமனைக்கு முன்னர் அமர்ந்து அன்னை தெரேசா போராட்டம் நடத்திய பின்னரே, மருத்துவமனை நிர்வாகம் இறங்கிவந்தது. சில மணி நேரங்களிலேயே அந்த மனிதர் இறந்துபோனார். அதன் பிறகுதான், மருத்துவமனைகளால் நிராகரிக்கப்படும் நோயாளிகளைக் கொண்டு சென்று மருத்துவ உதவிகள் செய்யவும், இறக்கும் தறுவாயிலாவது சற்றே இளைப்பாறி, கொஞ்சமேனும் மரியாதையுடன் அவர்கள் இறப்பதற்கு வழிசெய்யவும் தேவையான ஓர் இடத்தை அவர் தேடத் தொடங்கினார். அதிகார மையங்கள் பலவற்றிடம் சென்று கெஞ்சினார்.

இறுதியாக, கொல்கத்தா நகராட்சி அதிகாரி ஒருவர், காளி கோயிலுக்கு அருகில் உள்ள யாத்திரிகர்களுக்கான கூடத்தை அவருக்கு வழங்கினார். மருத்துவமனைகளால் கைவிடப்பட்டு இறக்கும் தறுவாயில் உள்ளவர்களை அங்கு கொண்டுவருமாறு, பொலிஸாரிடமும் நகராட்சி அதிகாரிகளிடமும் கேட்டுக் கொண்டார் அன்னை தெரேசா. அந்தக் கொள்கை இன்றும் தொடர்கிறது.

தெருவில் அநாதையாகக் கைவிடப்பட்ட குழந்தை, வீட்டை விட்டு வெளியேற்றப்பட்ட நோயாளிகள், முதியவர்கள், அருகில் வருவதற்கோ தொடுவதற்கோகூட யாரும் விரும்பாத தொழுநோயாளிகள், எயிட்ஸ் நோயாளிகளை யார் கவனிப்பார்கள்? தெருக்களில் நாம் காணும் ஏழைகளுக்கு ஏதேனும் செய்ய நம்மில் எத்தனை பேர் நமது காரிலிருந்து இறங்குகிறோம்? அன்னை தெரேசாவை அவசரப்பட்டு விமர்சிப்பவர்கள், தங்கள் சொந்தக் கைகளால் யாருக்குமே எந்த உதவியும் செய்ய விரும்பாதவர்கள் என்பதுதான் நாம் உணர்ந்துகொள்ள வேண்டிய விடயம்.

மத ரீதியான ஏகாதிபத்தியவாதி என்று அழைக்கப்பட்ட, பொதுவாகவே புனிதர் என்று கருதப்பட்ட அன்னை தெரேசா, பல தருணங்களில் மிகச் சாதாரணமான பெண்ணாகவே இருந்தாலும், தனது காலகட்டத்தில் அசாதாரணமான வாழ்க்கை வாழ்ந்தவர். அபரிமிதமான நம்பிக்கையை மட்டுமே ஆயுதமாகத் தரித்துக்கொண்ட அவர், சிறிய ஆனால் உறுதியான நடவடிக்கையில் காலடி எடுத்துவைத்தார். 19 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் இறந்தபோது, 123 நாடுகளில் கிளை பரப்பியிருக்கும் ஒரு பன்னாட்டு நிறுவனத்தை அவர் உருவாக்கியிருந்தார். பரம ஏழைகளுக்கு அந்த நிறுவனம் சேவை செய்துவருகிறது. தனது வாழ்நாள் முழுவதும் கத்தோலிக்க விசுவாசத்துடனேயே இருந்தார் என்றாலும், பிற மதத்தினரை விலக்கிவைக்கும் பாணி அல்ல அவரது மத நம்பிக்கை. தான் சேவை செய்யும் எவரையும், துன்பத்தில் இருக்கும் இயேசுவாகவே கருதிய அன்னை தெரேசா, எல்லா வித மத நம்பிக்கை கொண்டவர்களையும் ஒன்றாக அணுகியவர். அவரைக் குறை சொல்பவர்கள், அவரை வலது சாரிச் சதித் திட்டங்களின் வடிவமாகக் கருதினர்.

கருக்கலைப்புக்கு எதிராகவும், கருத்தடைக்கு எதிராகவும் வத்திக்கான் கொண்டிருக்கும் கருத்துகளின் முதன்மையான பிரசாரகர் என்றெல்லாம்கூடச் சொன்னார்கள். இறுதியில், வத்திக்கானின் இதயத்தில் அவர் தனது முத்திரையை மென்மையாக அதேசமயம் மிகச் சரியாகப் பதித் துச் சென்றிருக்கிறார்.

அவர் இப்போது புனிதையாகி அனைவரது மனங்களிலும் நிறைந்து நிற்கிறார்.



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?







**மேடம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், சுமாரான வருமானம் கிடைக்கும். பெண்கள், ஆடம்பர நோக்கில் செலவு செய்வர். வாகனப் பயணத்தில், மிதவேகம் பின்பற்றவும்.



**இடபம்:** சுய கௌரவத்துக்காகச் செலவு செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில், மந்த நிலை நிலவும். இலாபம் சுமார். பெண்கள், பிள்ளைகளின் வழியில் செலவழிப்பர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.



**மிதுனம்:** மனதில் உற்சாகம் மேலோங்கும். திட்டமிட்ட பணியை, ஆர்வத்துடன் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வியத்தகு வளர்ச்சி உண்டாகும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.



**கடகம்:** மதிநுட்பம் கொண்டவராகத் திகழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், தாராள வருமானம் கிடைக்கும். பணியாளர்களுக்கு, விரும்பிய சலுகை கிடைக்கும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை தரும்.



**சிங்கம்:** பொறுமையுடன் செயற்படுவது நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில், சுமாரான ஆதாயம் வரும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். உடல் நலனுக்கான மருத்துவச் செலவு அதிகரிக்கும்.



**கன்னி:** லட்சிய நோக்கில் பணியாற்றி முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முன்னேற, கூடுதல் மூலதனம் தேவைப்படும். இலாபம் உயரும். இயந்திரப் பிரிவுப்பணியாளர்கள், விழிப்புடன் இருப்பது நல்லது.



**துலாம்:** தாமதம் ஏற்படுத்திய பணி, தற்போது நிறைவேறும். தொழில், வியாபாரத்தில், தாராள பணவரவு கிடைக்கும். சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்று மகிழ்வீர்கள். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்கி மகிழ்வர்.



**விருச்சிகம்:** நிதானித்துப் பேசுவது நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்ததைவிட இலாபம் சற்றுக் குறையும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். மாணவர்கள், படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.



**தனுசு:** மனதில் இருந்த தயக்கம் விலகும். நண்பரின் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் படிப்படியாக உயரும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும்.



**மகரம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில், தடை ஏற்பட்டு விலகும். இலாபம் சுமாராக இருக்கும். பிள்ளைகளின் நற்செயல், மனதை மகிழ்விக்கும்.



**கும்பம்:** உறவினர்களின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், சேமிக்கும் விதத்தில் ஆதாயம் கிடைக்கும். குடும்பத்தில் சுப விடயம் குறித்த பேச்சு நடந்தேறும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.



**மீனம்:** சவால்களை, திறமையுடன் எதிர்கொள்வீர்கள். தொழில், வியாபார விடயமாக, வெளியூர் செல்ல நேரிடலாம். பெண்கள், ஆடை ஆபரணம் வாங்குவர். அரசியல்வாதிகள் பதவிபெற யோகம் உண்டாகும்.



பெண்கள் அணிந்தால் அது பிங் கலராம்; ஆண்கள் அணிந்தால் அது பஞ்சுமிட்டாய்க் கலராம்...



“கடவுளே! நாட்டு மக்களை நீதான் காப்பாத்த வேணும் என்று வேண்டிக்கிட்டு வெளிய வந்தா... செருப்பக் காணோம்; என் செருப்பப் போட்டுக்கிட்டு காப்பாத்த கிளம்பிட்டாரு போல...”







# இருமுகன்

## முதல் நாள் வசூல் சென்னையில் 60 லட்சம்

ஆனந்த் சங்கர் இயக்கத்தில் விக்ரம், நயன்தாரா, நித்யா மேனன் நடித்த ‘இருமுகன்’ கடந்த வியாழக்கிழமை வெளியானது.

நீண்ட நாள்களுக்குப் பிறகு விக்ரமின் படம் வருவதாலும், இருவேடங்களில் அவர் நடித்துள்ளதாலும் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டது. இந்தப் படம் ரசிகர்களிடையே கலவையான விமர்சனங்களைச் சந்தித்தாலும் விக்ரமின் நடிப்பு அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது.

இந்த நிலையில் முதல் நாளில் மட்டும் சென்னையில் 60 லட்சத்தை வசூலித்துள்ளதாம். தமிழக அளவில் ரூ 5.6 கோடியை வசூலித்துள்ளது என சினிமா வட்டாரங்கள் தெரிவித்தன.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | 9 | | | 7 | | |
| 7 | 4 | | 1 | | | | | |
| | | | | 3 | | | | 4 |
| 2 | 3 | | | | 9 | | 7 | |
| | | 5 | | 7 | | 3 | | |
| | 1 | | 4 | | | | 5 | 2 |
| 1 | | | | 9 | | | | |
| | | | | | 1 | | 4 | 3 |
| | | 8 | | | 6 | | | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 8 | 6 | 1 | 2 | 3 | 7 | 4 |
| 1 | 3 | 4 | 8 | 9 | 7 | 6 | 2 | 5 |
| 2 | 6 | 7 | 4 | 5 | 3 | 1 | 8 | 9 |
| 7 | 2 | 6 | 5 | 3 | 8 | 4 | 9 | 1 |
| 4 | 8 | 1 | 2 | 6 | 9 | 5 | 3 | 7 |
| 5 | 9 | 3 | 1 | 7 | 4 | 2 | 6 | 8 |
| 3 | 1 | 9 | 7 | 4 | 6 | 8 | 5 | 2 |
| 8 | 7 | 5 | 3 | 2 | 1 | 9 | 4 | 6 |
| 6 | 4 | 2 | 9 | 8 | 5 | 7 | 1 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண் டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக் கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண் டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



பொண்ணுங்க, நான் “தூங்கப் போறேன்” என ஸ்டேட்டஸ் போட்டால்... 65 கமெண்ட்ஸ் ... 98 லைக்... விழுது.
ஆம்பிளைங்க, நான் “தொங்கப் போறேன்” என ஸ்டேட்டஸ் போட்டால் கூட... “கயிறு இருக்கா?” .. இல்லை வாங்கித் தரவா” என்று பதில் வருது... என்ன கொடுமை சரவணா...?



**திரு.பாமரன்**

பெண்ணின் பிரசவநேரத்தில் அவளுடன் இருக்கும் எந்தக் கணவனுக்கும், மனைவிக்குத் துரோகம் செய்யும் எண்ணம் வராது.

32 19

# வேக வைத்து சாப்பிடவேண்டிய உணவுப் பண்டங்கள்

**முட்டை:** முட்டையில் அதிக புரோட்டின், அனைத்து விட்டமின், மினரல்கல் உள்ளன. அவற்றைப் பச்சையாகக் குடிக்கும்போது அதன் முழு சத்துக்களும் முழுமை பெறுவதில்லை. ஆம்லெட் சாப்பிடும்போது அவை கலோரியாக அதிகரித்து, உடல் பருமனை உண்டாக்குகின்றன. அதனை வேக வைத்துச் சாப்பிடும்போது அதன் சத்துக்கள் இரட்டிப்பாகிறது. சரிவிகிதத்தில் அனைத்துச் சத்துக்களும் கிடைக்கின்றன.

**பீன்ஸ்:** பீன்ஸிலுள்ள நார்ச்சத்து மற்றும் புரோட்டின் வேக வைக்கும்போது முழுமை பெறுகின்றன. குறிப்பாக நீரிழிவு வியாதி உள்ளவர்கள் வேக வைத்த பீன்ஸ் சாப்பிடுவது நல்லது. 6 நிமிடங்கள் வேக வைத்தால் போதுமானது.

**பசலைக் கீரை:** பசலைக் கீரை மற்றும் வேறு கீரை வகைகளையும் வேக வைத்து சாப்பிடுவதால்தான் அவற்றின் பயன்கள் கிடைக்கின்றன. அதிலுள்ள பீட்டா கரோட்டின் வேக வைத்து நாம் சாப்பிடும்போது உடலில் விட்டமின் ஏ யாக மாறுகிறது.

**முட்டைக் கோவா:** முட்டைக் கோவா அதிக சத்துக்கள் மற்றும் ஆன்டி ஆக்ஸிடென்ட் உள்ளது. இதனை ஆவியில் அவித்துச் சாப்பிட்டால் முழு சத்துக்களையும் அனுபவிக்கலாம். எண்ணெயில் பொரித்து சாப்பிடுவதும் பச்சையாக சாப்பிடுவதும் நல்லதல்ல.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்



| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 40 | 60 | 40 | 40 | 30 | 30 |
| கத்தரி | 60 | 50 | 80 | 60 | 40 | 40 | 90 | 30 |
| கரட் | 100 | 100 | 120 | 100 | 100 | 100 | 110 | 90 |
| மரவள்ளி | 80 | 90 | 100 | 80 | 70 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 60 | 50 | 80 | 40 | 40 | 40 | 100 | 50 |
| பாகல் | 100 | 70 | 150 | 100 | 100 | 120 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | 120 | 160 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 70 | 80 | 80 | 80 | 70 | 120 | 90 | 90 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 | 30 | 60 | 70 | 20 |
| தக்காளி | 40 | 40 | 50 | 50 | 40 | 80 | 120 | 35 |
| வாழைக்காய் | 60 | 70 | 80 | 100 | 70–80 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 20 | 20–30 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 30 | 20–30 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 100 | 80 | 80 | 70 | 100 | 200 | 80 |
| புடோல் | 40 | 40 | 40 | 60 | 40 | 40 | 70 | 30 |
| கோவா | 80 | 90 | 80 | 100 | 80 | 100 | 90 | 40 |
| வெண்டி | 80 | 60 | 80 | 80 | 40 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 180 | 180 | 160 | 140–160 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 170 | 100 | 120 | 100 | 100 | 100 | 90 | 90 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 160 | 200 | 300 | 220 | 240 | 200 | 120 | 180 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 80 | 120 | 120 | 100 | 100 | 200 | 80 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 160 | 20 | 260 | 160 | 140 | 200 | 80 | 100 |





# தக்காளி ஊறுகாய்

**தேவையான பொருள்கள்**

- தக்காளி - 1/4 கிலோ
- காய்ந்த மிளகாய் - 2
- மிளகாய்த் தூள் - 2 தேக்கரண்டி
- மஞ்சள் தூள் - 1/2 தேக்கரண்டி
- உப்பு - தேவையான அளவு
- எண்ணெய் - 1 குழிக்கரண்டி
- பெருங்காயம் - 1/2 தேக்கரண்டி
- கறிவேப்பிலை - 1 கொத்து

**செய்முறை:**

தக்காளியை வேகவைத்து நன்றாக மசித்துக் கொள்ளுங்கள். ஒரு சட்டியில் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும் கடுகு, காய்ந்த மிளகாய், கறிவேப்பிலை போட்டு தாளியுங்கள். பிறகு, இதில் மசித்த தக்காளியுடன், மஞ்சள் தூள், மிளகாய்த் தூள், உப்பு, பெருங்காயம் போட்டு நன்றாக வதக்குங்கள். இந்தக் கலவை கொதித்து நன்றாகத் தடித்து எண்ணெய் பிரிந்து வரும் சமயத்தில் அடுப்பிலிருந்து இறக்குங்கள். இந்தத் தக்காளி ஊறுகாய் பத்து நாள்கள் வரை கெடாமல் இருக்கும்.

# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்



| | [illegible] | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 800 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 300 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 800 | 700 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 600 | 700 | – |
| சுறா | 500 | 650 | 500 | 800 | 800 | 800 | – |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 400 | 500 | 450 |
| விளை | 650 | 500 | 300 | 600 | 450 | – | 500 |
| முரல் | 300 | 500 | 300 | 500 | 400 | 300 | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 600 | – | – |
| ஒரா | 400 | 400 | 300 | – | 450 | 300 | 400 |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 300 | 200 | 300 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 400 | 700 | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 400 | 400 | 170 |
| மதனம் | 150 | 250 | – | 400 | 300 | – | 300 |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 300 | 400 | – |



## இது புதுசு


சொப்ட் டெனிம் அறிமுகமாகியுள்ளது. மென்மையான நன்கு ஈயக் கூடிய டெனிம் ஜீன்ஸ்கள் இவை. பொதுவாக டெனிம் கடினமாக, இறுக்கமாக இருக்கும். உடல் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு இவ்வாறான டெனிம்கள் அறிமுகமாகியுள்ளன. பெண்களுக்கும் ஆண்களுக்கும் இந்த ஜீன்ஸ்கள் உருவாகியுள்ளன. இவை 2 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## நாளை

**ஆவணி-27**

திங்கட்கிழமை -12.09.2016
திதி: ஏகாதசி பி.இ.05.28
நட்சத்திரம்: பூராடம் மு.ப.08.13
ராகுகாலம்: 07.33-09.03 வரை
சுபநேரம்:12.03-01.33 வரை
ஏகாதசி விரதம்

# பன்னாட்டுத் தரப்படுத்தல்; பின்தள்ளப்பட்டார் சேரீனா



பன்னாட்டு ரென்னிஸ் ஆட்டத்தில் பெண்கள் ஒற்றையர் பிரிவு தரப்படுத்தலில் முதலிடத்தில் நீடித்து அசைக்க முடியாத சக்தியாக விளங்கி வரும் செரீனா வில்லியம்ஸ், இன்று வெளியாகும் புதிய தரப்படுத்தலில் இரண்டாவது இடத்துக்கு பின்தள்ளப்படும் நிலை ஏற்பட்டது.

நடப்பு வருடத்தின் கடைசி பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடரான அமெரிக்க ரென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் வெளியான தரப்படுத்தலில் முதலிடத்தில் இருந்த செரீனாவுக்கும், இரண்டாம் இடத்திலிருந்த கெர்பருக்கும் இடையே வெறும் 190 புள்ளிகள் வித்தியாசமே இருந்தது. எனவே கடந்த மூன்று வருடங்களாக முதலிடத்தில் இருந்த ஆதிக்கத்தை செரீனா நீடிக்க வேண்டுமாயின் அமெரிக்கக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற கட்டாய நிலை அவருக்கு ஏற்பட்டது.

ஆனால் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பிளிஸ்கோவாவிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார் செரீனா. அதேநேரம் இரண்டாம் நிலை வீராங்கனையான கெர்பர் இறுதிக்கு முன்னேறினார். கெர்பர் கிண்ணத்தை வெல்லாவிட்டாலும், இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்ற வீராங்கனை என்ற அடிப்படையில் கெர்பருக்கு வழங்கப்படும் புள்ளிகளை வைத்து அவர் செரீனாவை பின்தள்ளி விடலாம். மொத்தத்தில் இன்று வெளியாகும் புதிய தரப்படுத்தலில் செரீனாவின் மூன்று வருடகால ஆதிக்கம் முடிவுக்கு வரும்.



# அதே குருதி அப்படித்தான் இருக்கும்

பார்சிலோனாவின் குழந்தைகள் கால்பந்தாட்ட பயிற்சி அக்கடமியின் முதல் குழந்தையாக மெஸ்ஸியின் மகன் இணைக்கப்பட்டார்.


உலகில் உள்ள பிரபலமான கால்பந்தாட்ட கழகங்களில் பார்சிலோனாவும் ஒன்று.

பார்சிலோனாவின் நட்சத்திர வீரராக ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரான மெஸ்ஸி உள்ளார். மெஸ்ஸியை வார்த்தெடுத்தது பார்சிலோனா என்றால் மிகையில்லை. இந்தக் கழகம் குழந்தைகளுக்கு கால்பந்தாட்டப் பயிற்சிகளை வழங்க முடிவு செய்தது. முதல் கட்டமாக 50 குழந்தைகள் உள்வாங்கப்பட்டனர். இவர்களில் முதலாவதாக மெஸ்ஸியின் ஆறு வயது மகன் பதிவுசெய்யப்பட்டார். மொத்தத்தில் மெஸ்ஸியை பன்னிரண்டு வயதிலிருந்து வளர்த்தெடுத்த பார்சிலோனா அவரது மகனை ஆறு வயதிலிருந்து வளர்க்கெடுக்கவுள்ளது. இன்னும் பத்து வருடங்களில் ஆர்ஜென்ரீனா அணியின் நட்சத்திர வீரராக மெஸ்ஸியின் மகன் மாறுவார் என்றாலும் வியப்பில்லை. ஏனெனில் அதே குருதி அப்படித்தான் இருக்கும்.

# பரா ஒலிம்பிக் தொடரில் தங்கம் வென்ற தமிழன்

பரா ஒலிம்பிக் தொடரில் இந்தியத் தமிழன் ஒருவர் தங்கம் வென்று ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் பெருமை சேர்த்தார்.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் மாற்றுத்திறனாளிகளுக்கான பரா ஒலிம்பிக் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் இந்தியாவைப் பிரதிநிதித்துவம் செய்து தங்கவேலு மாரியப்பன் என்ற தமிழர் கலந்து கொண்டார். மாரியப்பன் கால் ஊன முடையவர். இவர் வென்ற தங்கப் பதக்கமே இந்தத் தொடரில் இந்தியா வென்ற முதல் தங்கப் பதக்கமாக இது அமைந்தது.



# திறமையைவிட நிறமே முக்கியம் இது தென்னாபிரிக்க கிரிக்கெட்டில்

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்கான வீரர்களின் தெரிவு இனிவரும் தொடர்களில் நிறத்தின் அடிப்படையிலும் அமையும் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

தென்னாபிரிக்காவில் கறுப்பினத்தவர்கள், வெள்ளையினத்தவர்கள், வெள்ளையினத்தவர்கள் அல்லாத ஏனையோர் என மூன்று வகையான நிறப்பாகுபாடு இன்றளவும் தலைவிரித்தாடுகிறது. கறுப்பினத்தவர்களும், வெள்ளையினத்தவர்கள் அல்லாத ஏனையோரும் அரச வேலைகளிலும், வெவ்வேறு பட்ட துறைகளிலும் புறக்கணிக்கப்படுகின்றனர். இதை எதிர்த்துப் போராட்டங்களும் நடத்தப்படுகின்றன. தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியும் இதற்கு விதிவிலக்கல்ல. ஓய்வுபெற்ற வேகப்பந்து வீச்சாளரான நிட்னியைத் தவிர்த்து, வேறெந்த கறுப்பின வீரர்களும் தென்னாபிரிக்க அணியில் நிலையாக விளையாடியதாக நினைவிலில்லை. தற்போது ரபாடா, கவிஸ்கோ அணியில் நிலைபெற்று நிற்கின்றனர். இவர்களது இடமும் இன்றோ அல்லது நாளையோ என்றே இருந்தது. இந்த நிலையில் கறுப்பினத்தவர்களின், வெள்ளையினத்தவர்கள் அல்லாத ஏனையோரின் இருப்பை உறுதிப்படுத்த தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை வீரர்களின் தெரிவில் நிறத்தை கட்டாயமாக்கியது. இதன்படி விளையாடும் பதினொருவரில் வெள்ளையினத்தவர்கள் 5 பேர் கட்டாயம் இடம்பெறவேண்டும். ஏனைய 6 பேரில் இரு கறுப்பினத்தவர்கள் கட்டாயம் விளையாட வேண்டும். ஏனையோர் வெள்ளையினத்தவர்கள் அல்லாதவர்களாக இருக்கலாம் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்தது.



# கல்யாண வீடு

(33ஆம் பக்கத் தொடர்ச்சி)
இருந்தும் பொறுமையுடன் இருந்தேன். ஏனென்றால் நான் கொஞ்சம் நாகரிகமானவன்!!! உதென்னப்பா முன்னுக்கு இருந்ததுகள் இடைக்கால பூருதுகள் என்று எனக்குப் பக்கத்தில் நின்றவர் சொன்னார். அவைக்குப் பதிலா ஒருவர் லைனில் வந்தவர். அவையின்ர ஆள்கள் ஒன்றாப் படமெடுக்க வேணுமாம். பக்கத்தில் நின்றவரின் பதிலை விட, இவர் எப்ப எனக்கு பக்கத்தில வந்தவர் என்ற கேள்வி மண்டையைக் குடையும் போதே எனக்கும் மனைவிக்கும் இடையில் புகுந்து எமது லைனில் சங்கமமாகி விட்டிருந்தார்.

எமது லைனில் இப்போது எந்த முன்னேற்றமும் இல்லை. நான் மட்டும் ஒரு அடி பின்நகர்ந்திருந்தேன். அவை படம் எடுத்து முடிய, லைன் நகருந்தானே என்ற என் நினைவில், இடி விழுந்தது. இவை யாரப்பா மற்றப்பக்கத்தால கொஞ்சப்பேர் மாப்பிள்ளைத் தோழனுடன் மண மேடையில் ஏறுகினம் என்று தலையை நீட்டி எட்டிக் கேட்ட எனக்கு சலிப்புடன் பதிலிறுத்தாள் மனைவி. "அவை பொம்பிளை வீட்டுக்காரர். சாப்பிட்டு விட்டு வந்தவை, போட்டோ எடுக்கப்போகினம் போல?" என்றவளை, பத்துப்பேர் கண்களால் என் இயலாமையைத் தெரிவித்துக் கோப்பையை கையில் எடுத்துக் கொண்டு லைனில் நின்றிருந்தேன். இடையிடையே குணாபட கமல்ஹாசன் மாதிரி வலது இடமாக ஆடி ஆடி மனைவியையும் பார்த்துக்கொண்டிருந்த போதுதான் ஞாபகத்துக்கு வந்தது பழைய நிகழ்வொன்று. மணமகனின் சித்தப்பா ஒருவரின் திருமணத்துக்குச் சிறுவனாக அப்பாவுடன் சென்ற போது. அப்பாவுக்கு முறையாக கைகழுவ செம்புடன் தண்ணீர் கொடுக்கவில்லை என்ற ஒரே

அப்ப இந்த லைன்? மனைவியின் மௌனம் என்னையும் மௌனிக்கச் செய்தது. ஆனாலும் மனம் கபாலி ஸ்ரைலில், நெருப்புடா... இவங்களைக் கொளுத்துடா... என்றது. பல தான்தோன்றித்தனமான இடைச் செருகல்கள், மாப்பிள்ளை, பொம்பிள்ளை, வீட்டாரின் உட்புகுத்தல்கள் மத்தியில் ஒருவாறாக அட்சதை போட்டு மணமக்களை வாழ்த்தி வரவை உறுதிப்படுத்த கைலாகு கொடுத்து இரண்டாம் கட்டமான சாப்பாட்டு லைனுக்கு மனைவிக்குப் பின்னால் ஓடி வந்திருந்தும், எனக்கும் மனைவிகக்கும் இடையில்

காரணத்துக்காக திருமண வீட்டில் சாப்பிடாமலேயே அப்பா என்னைக் கூட்டிக் கொண்டு வீட்டுக்கு போனது. ஆனால் இன்று கை கழுவாமல்? இதுதான் காலக்கொடுமை என்பது மனம் சோர பசியோ மனதை பார்த்து அடங்குடா முதலில் விழுங்குடா என்றது.

கோப்பையில் உணவைப் போட்டபின், மனைவியை தேடிச் செல்ல இடையில் தம்பி நீ மணியத்தின்ர பெடிதானே? இஞ்ச வா இதில பக்கத்தில் இருந்து சாப்பிடு என்று வலுக்கட்டாயமாக அமரவைத்தது ஒரு பெரிசு. வேறுவழி அப்பாவின் பெயர் சொல்லி அமரச்சொல்லும்போது அமராது சென்றால் மரியாதை இல்லையே. ஏக்கத்துடன் அமர்ந்து சோற்றை வாயில் வைக்க, "தம்பி கொப்பர் என்ன செய்கிறார்?" என்ற அவரது கேள்வி எனக்கு பிரக்கேற வைக்க... கொப்பர் நினைக்கிறார் போல! என்ற பெரிசைப் பார்த்துச் சொன்னேன். அப்பா காலமாகி ஐந்து வருசம் ஆயிற்றுது ஐயா! என்று.

என்ன? மணியம் செத்துப் போனானோ? என்ற கேள்வியில் அவர் வாயில் இருந்த பயற்றங்காய் என் கோப்பையில் விழ, எனது சாப்பாட்டை நிறைவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகிய பரிதாபத்துக்குரிய ஜந்துவாய், மனதுள் போங்கடா நீங்களும் உங்கட கல்யாணமும் என நினைத்தவாறு மண்டபத்தை விட்டு வெளியேறி மேட்டார் சைக்கிள் விட்ட இடத்துக்கு வர, மனைவி பீடாவை மென்று கொண்டு "எப்படிக் கல்யாண (வீடு) கோல்?" என்றாள். நான் மேட்டார் சைக்கிளின் கிக்கரை ஓங்கி உதைத்தவாறு மகிழ்ச்சி என்றேன் பல்லை நெரும்பியபடி.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 437

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ | 4 | 5 |
| | ■ | 6 | | ■ | 7 | | |
| 8 | 9 | ■ | 10 | | | | ■ |
| 11 | | 12 | | ■ | 13 | | 14 |
| | ■ | | ■ | 15 | | ■ | |
| ■ | 16 | | 17 | | ■ | 18 | |
| 19 | | | | ■ | 20 | | |
| 21 | | ■ | 22 | | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

பூரணமான தபால் விலாசம்: ........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. ,இடையூறு
4. கண் மடல்
6. சேர்
7. கெண்டை மீன்
8. உயர இருந்து கீழே பாய்
10. படியாதவன்
11. வயலும் வயல் சார்ந்த இடமும்
13. புள்
15. சம்மதச் சொல்
16. இழிவுபடுத்து
18. தலையெழுத்து
19. விசாலித்த
20. கருமையான
21. போற்று
22. மருந்து

### மேலிருந்து கீழ்

1. செஞ்சாந்து
2. அமைய
3. களேபரம்
4. இயலுமான
5. தூர அளவீட்டு அலகு
7. மயில்
9. செல்வம்
12. தலைமை தாங்குபவன்
14. மருத்துவம்
15. மிகப் பழைமை வாய்ந்த
16. ஏதிலி
17. ஞாபகமின்மை
18. மலர
19. உன்றைச் சுட்டும் சொல்
20. பாடல் இயற்றும் திறன் மிக்கவன்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 435 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1) அகவல் (4) கதலி (6) மலர் (7) அரண் (8) ரவிக்கை (10) கடுகு (12) கப்பம் (14) சம்பல் (15) ஒளி (16) சரி (17) புழு (18) மாதவி (20) குரங்கு (22) தில்லானா (23) விகுதி

### மேலிருந்து கீழ்

(1) அமரர் (2) கலவி (3) வர்க்கம் (4) கரகம் (5) தண்டு (9) கைப்பணி (11) குறளி (13) பல் (14) சரிதல் (15) ஒழுங்கு (16) சமாதி (17) புரவி (19) விலா (21) குதி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.437 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (21.09.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 435 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
பா.பாலாஜினி,
வண்ணாங்கேணி தெற்கு,
பளை.

**2 ஆம் பரிசு**
ஜெ.மாதங்கி,
இல. 57, இரண்டாம் குறுக்குத் தெரு,
வவுனியா.

**3 ஆம் பரிசு**
பு.ஹென்லி நிறோன்,
இல.186 ஜம்பட்டா வீதி,
கொழும்பு 13.

**4 ஆம் பரிசு**
முகுந்தன் மதுவந்தி,
புலவர் வீதி, நலாலி வடக்கு,
மானிப்பாய்.

**5 ஆம் பரிசு**
க.பிரமதீஸ்வரி,
முதலாம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

### பாராட்டுப் பெறுவோர்

பா.தர்ஷிகா,
இல.73/7 காட்டுப்பள்ளி வாசல் வீதி
மூர்வீதி, மன்னார்.

ஏ.மூர்த்தி,
வைத்தியசாலை விடுதி,
பளை.

எஸ். டெனீஸ்,
ஆஸ்பத்திரி முன் ஒழுங்கை,
நாயன்மார்கட்டு

சொற்சிலம்பம் போட்டி இல.437இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 25.09.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சொற்சிலம்பம் போட்டி 435இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

# இந்த வாரம்

11.09.2016 முதல்
17.09.2016 வரை

உங்களுக்கு எப்படி?

## மேடம்

கேது, சந்திரன் ஓரளவு
நற்பலன் தருவர். பொறுப்
பான செயல்களால் மட்டுமே
நன்மை கிடைக்கும். தம்பி,
தங்கைகள் பண உதவி கேட்பர்.
பயணத்தின்போது, உரிய பாதுகாப்பு
வேண்டும். புத்திரர்களின் அறிவுத்திறன் வளர
ஆலோசனை சொல்வீர்கள். அக்கம் பக்கத்தவர்
அன்பு கொள்வர். உடல் நிலைக்காக செலவழிக்க
வேண்டிய நிலை வரலாம். விட்டுக்கொடுத்து
செல்லவும். தொழில், வியாபாரத்தில் ஓரளவு
இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் இருக்கிற
நற்பெயரை பாதுகாக்க, பணியிடத்தில்
பேச்சைக் குறைப்பது நல்லது.
பெண்களுக்கு வீட்டுச் செல
வுக்கு சற்று, சிரமமான
சூழல் ஏற்பட
லாம்.

## இடபம்

புதன், குரு, சுக்கிரனால்
நன்மை ஏற்படும். வாழ்
வில் முன்னேற உதவியவர்
களுக்கு நன்றி சொல்வீர்கள்.
பணிகளை பொறுப்புணர்வுடன்
நிறைவேற்றுவீர்கள். பயணங்கள் இனிய அனுபவம் தரும்.
புத்திரர்கள், உங்கள் சொல்லை மதித்து செயற்படுவர். புதிய சொத்து
வாங்க அனுகூலம் ஏற்படும். கணவன் – மனைவி இடையே ஒற்றுமை
ஓங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். விருந்து,
விழாவில் கலந்து கொள்வீர்கள். சுபச்செய்தி வந்து சேரும்.
கடின உழைப்பால் தொழில், வியாபாரத்தில் பணவரவு
சீராகும். பணியாளர்கள் கூடுதல் வேலை
வாய்ப்பை ஏற்பது நல்லது. மாணவர்
கள் படிப்பைத் தவிர பிற விவாதம்
பேச வேண்டாம்.

## மிதுனம்

குரு, கேது, புதன் தவிர
மற்றக் கிரகங்கள், அதிக நன்மை
தருவர். முன்யோசனையுடன் செயற்
படுவீர்கள். இனிய நிகழ்வுகள், மனதில் நல்ல
மாற்றம் தரும். வாகனப் பயன்பாடு சராசரி அள
வில் இருக்கும். புத்திரர்கள், உங்கள் எண்ணங்களுக்
கேற்பசெயல்படுவர். பகைவரால் உருவான தொல்லை
விலகும். கணவன், மனைவி அன்புடன் இருப்பர்.
குடும்பத்தினர் விரும்பிய பொருள் வாங்கிக்
கொடுப்பீர்கள். உறவினர்களின் வருகை
மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில்
போட்டி குறைந்து லாபம் அதிகரிக்கும்.
பணியாளர்கள் பணித்திறனில் மேம்
படுவர். சலுகை, பாராட்டுக்கிடைக்
கும். மாணவர்கள் படிப்
பில்ஆர்வம்கொள்
வர்.

## கடகம்

சுக்கிரன், சந்
திரன் நன்மை தருவர்.
நல்ல செயல்களால் புகழ்
பெறுவீர்கள். திட்டங்கள் நிறைவேற
குடும்பத்தினர் ஆதரவாக இருப்பர். வாக
னத்தில் மிதவேகம் நல்லது. புத்திரர்கள் விரும்பிய
பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். உடல்நிலை நன்றாக இருக்
கும். கணவன் –மனைவி இடையே ஒற்றுமை பலப்படும். தொழில்,
வியாபாரம் வளர்ச்சி பெற தேவையான மாற்று ஏற்பாடு
களைச் செய்வீர்கள். பணியாளர்களுக்கு வேலைப்
பளு அதிகரித்தாலும், சலுகையும் பெறுவர்.
பெண்கள் தாய் வீட்டு உதவி கிடைத்து
மகிழ்வர். மாணவர்களுக்கு
புதிய நண்பர்களால்
பலன் ஏற்படும்.

## சிங்கம்

குரு, சுக்கிரன், சந்திரன்
நற்பலன் தருவர். உறவினர்களின்
பாசம் மகிழ்ச்சி தரும். பணிகளை ஆர்வ
முடன் நிறைவேற்றுவீர்கள். வாகனப்
பராமரிப்புச் செலவு கூடும். புத்திரர்கள் கல்வி,
பணி யில் சிறந்து பெருமை தேடித்தருவர். பூர்வ
சொத்தில் பணவரவு அதிகரிக்கும். கடந்த காலத்
தில் ஏற்பட்ட சிரமங்களை சமயோசிதமாக சரி செய்
வீர்கள். பயணங்களின் எண்ணிக்கை குறை
யும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்
பனை கூடும். பணியாளர்கள் அதிக சலுகை
பெற்று சேமிப்பை உயர்த்துவர். பெண்
கள் வீட்டு உபயோகப் பொருள்
வாங்குவர். மாணவர்
கள் சுமாராகப்
படிப்பர்.

## கன்னி

செவ்வாய், சுக்கிரன்,
சனி, கேது தாராள நன்மை
தருவர். உடன்பிறந்தவர் கள் ஆதர
வாக செயல்படுவர். உங்கள் செயல்களில்,
சரியான திட்டமிடல் காரணமாக வளர்ச்சி கூடும்.
பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள், உங்கள் சொல்
கேட்டு செயல்படுவர். நோய் தொந்த ரவு விலகி ஆரோக்கியம் பலம்
பெறும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.
தொழில், வியாபாரம் செழித்து பணவரவு அதிகரிக்கும்.
பணியாளர்கள் சுறுசுறுப் பாக பணியுரிந்து, புதிய
சலுகைகளைப் பெறுவர். பெண்கள் சுற்றுலா
சென்று வர யோக முண்டு. மாண
வர்கள் படிப்புடன் சமூகப்
பணியிலும் பிரகாசிப்
பர்.

## துலாம்

ராகு, புதன் சுக்கிரனால்
நன்மை அதிகரிக்கும். புத்தி
சாலித்தனமான செயற்பாடுகளால்,
வாழ்வில் வளர்ச்சி உருவாகும். அன்பானவர்
களின் உதவி கிடைக்கும். ஆன்மிக சுற்றுலாத் திட்டம்
சிறப்பாக நிறைவேறும். புத்திரர்கள், புதிய விடயங்களில்
ஆர்வம் கொள்வர். உடல்நிலை மேம்பட சத்து நிறைந்த உணவு
உண்டு மகிழ்வீர்கள். நண்பர்களுக்குக் கடனாக கொடுத்த பணம் திரும்ப
கிடைக்கும். கணவன் – மனைவி இடையே ஒற்றுமை ஓங்கும்.
தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணிகளை திறம்பட
செய்வீர்கள். இலாபம் நன்றாக இருக்கும். பணியாளர்
கள் சிறப்பாகப் பணிபுரிந்து சலுகை பெறுவர்.
பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர்.
மாணவர்கள் நன்றாகப் படித்து
பரிசு பெறுவர்.

## விருச்சிகம்

பெரும்பான்மை கிரகங்
கள், அதிக நன்மை தருவர்.
தேங்கிக் கிடந்த சில பணிகள் நிறை
வேறும். நண்பர்களின் உதவி கிடைக்கும். புதிய
வீடு, வாகனம் வாங்க அனுகூல சூழல் ஏற்படும்.
புத்திரர்களை ஆர்வமு டன் வழிநடத்துவீர்கள். குடும்பத்தில்
ஒற்றுமையும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும். உடல்நிலைக்காக
செலவழிக்க வேண்டி வரலாம். மனைவி வழி உறவினர்கள் பாசத்து
டன் நடந்து கொள்வர். பயணங்களால் ஆதாயம் உண்டு.
தொழில், வியாபாரம் மிகச் சிறப்பாக வளரும். நல்ல
இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு பதவி
உயர்வு, சலுகை கிடைக்கும். பெண்கள்
வீட்டு உபயோகப்பொருள் வாங்
குவர். மாணவர்கள் படிப்
பில் முன்னேற்றம்
அடைவர்.

## தனுசு

கேது, சந்திரனால் ஓர
ளவு நன்மை கிடைக்கும். பணி
களில் சிறு தொய்வு ஏற்பட்டாலும்,
உங்கள் சமயோசித செயலால் வெற்றி பெறு
வீர்கள். உறவினர்களுடன் கருத்து வேறுபாடு
ஏற்பட்டு விலகும். வாகனம் இயக்கும் போது கவன
மாக இருக்கவும். புத்திரர்கள் விரும்பிய பொருள்
வாங்கித்தரக் கேட்டு பிடிவாதம் செய்வர். உடல்
நிலையில் கவனம் வேண்டும். கணவன், மனைவி இடையே சிறு
பிரச்னை வரலாம். குடும்ப ஒற்றுமை நன்றாக இருக்கும்.
தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற தேவையான உதவி
கிடைக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு
வெகுவாகக் குறையும். பெண்கள் வீட்
டுச்செலவுக்கு சற்று சிரமப்பட நேரி
டலாம். மாணவர்கள் நண்
பரின் உதவியால் படிப்
பில் முன்னேறு
வர்.

## மகரம்

பெரும்பான்மை கிரகங்களால்
நன்மை ஏற்படும். பணிகளை ஆர்வமு
டன் செய்வீர்கள். வளர்ச்சிக்கான வழி
உருவாகும். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்களின்
கல்வி, பணி தொடர்பாக பெருமை ஏற்படும். குடும்பத்தில் மங்
கல நிகழ்வு உருவாகும். கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள்.
கணவன் – மனைவி கருத்து ஒற்றுமையாக இருப்பர். தொழில்,
வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை முன்னேற்றம்
பெறும். பணியாளர்கள் அதிக பணவரவில்
மகிழ்ச்சி காண்பர். பெண்கள் நகை, புத்
தாடை வாங்குவர். மாணவர்கள்
நன்றாகப் படித்து அதிக மதிப்
பெண் பெறுவர்.

## கும்பம்

சந்திரன், சுக்கிர
னால் ஓரளவு நன்மை
கிடைக்கும். உடன்பிறந்தவர்கள்
உதவி கேட்டு அணுகுவர். வீட்டில்
மகிழ்ச்சி நிறைந்திருக்கும். பயணங்களின்
எண்ணிக்கை குறையும். புத்திரர்களின் உடல்
நிலைக்கு சிகிச்சை தேவைப்படலாம். கணவன் –
மனைவி இடையே ஒற்றுமை பலப்படும். தொழில், வியா
பாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும்.
பணியாளர்கள், அலுவலகத்தில் விண்ணப்பித்த
கடன் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். பெண்
கள் சிக்கனத்தைக் கடைபிடித்து சேமிப்பை
உயர்த்துவர். மாணவர்கள்
சுற்றுலா சென்று வர
வாய்ப்புண்டு.

## மீனம்

சூரியன், ராகு, புதன், குரு
அனுகூல பலன் தருவர். உழைப்
பிற்கான நன்மை அதிகம் கிடைக்கும்.
சமூகத்தில் நற்பெயர் பெறுவீர்கள். பயணங்
கள் இனிய அனுபவம் தரும். புத்திரர்கள் படிப்பு,
வேலையில் முன்னேற்றம் காண்பர். உடல்நிலை
பலம்பெறும். கடனில் ஒரு பகுதியை செலுத்து
வீர்கள். மனைவியின் மனதில் நம்பிக்கை
வளர உதவுங்கள். தொழில், வியாபாரத்தில்
கூடுதல் உழைப்பால் வளர்ச்சி கூடும். பணி
யாளர்கள் பொறுப்புடன் பணியுரிவர். பெண்கள்
குடும்ப நலனில் அக்கறை கொள்வர்.
மாணவர்கள் நண்பர்களிடம் நற்
பெயர் பெறுவர். மாணவர்
கள், சிறப்பாகப்
படிப்பர்.

# யாழ். மறைமாவட்டத்தின் பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலமாக மாறிவரும் சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தலம்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்



சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தல பெருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி கொண்டாடப் படுவதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.
ஊர்காவற்றுறையில் இருந்து சுமார் ஆறு மைல் தொலைவில் லைடன் தீவின் பழம்பெரும் கிராமங்களில் ஒன்றாகிய வேலணையில் – கடல் அலைகள் தாலாட்டும் சாட்டிக் கிராமம் நெய்தலும் பாலையும் இணைந்த இயற்கை வளமுடைய ஒரு கிராமமாக அமைந்துள்ளது. இங்கு சாட்டி மாதா என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்படும் பிரசித்தி பெற்ற சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தலம் அமைந்துள்ளது.

## வற்றாத நன்னீர் ஊற்று சாட்டியில் கிடைப்பது ஒரு பெரும் வரப்பிரசாதமே

வற்றாத நன்னீர் ஊற்று சாட்டி மாதாவின் திருச்சொரூபம் இங்குள்ள கிணற்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டமையால் இங்கு வற்றாத நன்னீர் ஊற்று இருக்கின்றது என்ற ஒரு பாரம்பரியம் உண்டு. இயற்கை அழகு கொண்ட பனம் கூடல்களின் அருகே அமைந்துள்ள சாட்டி கடற்கரை மக்கள் எல்லோரையும் கவர்ந்திழுத்து தமது இனிமையான பொழுதுகளைக் கழிக்க அழைப்பு விடுக்கும் ஒரு கடற்கரையாகும். சாட்டி அன்னையின் பதியைச் சுற்றி பல இந்துக் கோவில்கள் அமைந்துள்ளன. இங்கு வாழ்கின்ற இந்து மக்களுக்கும் கத்தோலிக்க மக்களுக்கும் இடையில் ஒரு நெருங்கிய அன்புறவு உண்டு. சாட்டிக் கடற்கரைக்கு வருகின்ற இந்து சமய மக்கள் சாட்டி மண்ணை விட்டு வெளியேற முன் சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தலத்துக்குச் சென்று அன்னையை தரிசிக்காமல் வெளியேறுவதே இல்லை. அதேபோல சாட்டி அன்னையை தரிசிக்க வருகின்ற கத்தோலிக்க மக்கள் அன்னையின் பதியைவிட்டு வெளியேற முன்பு சாட்டி கடற்கரைக்கு சென்று நீராடாமலோ – சில மணிப் பொழுதுகளை சாட்டி கடற்கரையில் செலவிடாமலோ வெளியேறுவதே இல்லை. தீவுப்பகுதியானது ஊர்காவற்றுறை, கரம்பொன், நாரந்தனை, மண்டைதீவு, புங்குடுதீவு, நெடுந்தீவு, சாட்டி ஆகிய 7 பங்குகளையும் ஏறக்குறைய 34 ஆலயங்களையும் கொண்ட ஒரு கத்தோலிக்கத் தின் விளை நிலம் ஆகும். யாழ். மறைமாவட்டத்தின் மிகப் பிரசித்தி பெற்ற மூன்று யாத்திரைத் தலங்களான சரவணை சின்னமடு செபமாலை அன்னை யாத்திரைத்தலம், சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத் தலம், கரம்பொன் வேளாங்கண்ணி அன்னை யாத்திரைத்தலம் ஆகிய யாத்திரைத்தலங்கள் இங்கே அமைந்துள்ளன. யாழ், மன்னார், திருமலை, மட்டக்களப்பு ஆகிய நான்குதமிழ் மறைமாவட்டங்களின் ஆயர்களான மேதகு ஜெ.எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி ஆண்டகை, மேதகு வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை, மேதகு எல். ஆர்.அன்ரனி ஆண்டகை, மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை , மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை, மேதகு யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆகிய அனைத்து ஆயர்களுமே தீவுப்பகுதி மண்ணின் மைந்தர்களே.

> சாட்டி சிந்தாத்திரை அன்னை யாத்திரைத்தலம் யாழ். மறைமாவட்டத்தின் மேலும் பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலமாகி வர அன்னை மேலும் அருள் பொழிவாராக.

## மன்னார் மறைமாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர் சாட்டி பிரபல்யமாகியது

1981 ஆம் ஆண்டு யாழ். மறைமாவட்டத்தில் இருந்து மன்னார் மறைமாவட்டம் பிரிக்கப்பட்டபோது மருதமடு அன்னையின் யாத்திரைத்தலம் மன்னார் மறைமாவட்டத்தோடு இணைந்தது. அப்போதே யாழ். மறைமாவட்டத்துக்கு மடுப்பதியைப் போன்ற ஒரு பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. சின்னமடு – மன்னார் மடுப்பதியின் ஒரு சிறிய பதிபோன்றது என்று சின்னமடுவை பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலமாக அமைக்க முற்பட்டனர். இருப்பினும் சாட்டியின் இயற்கையான கடல் வளம், நீண்ட கால சரித்திரப் பின்னணி, மக்கள் மத்தியில் பிரபல்யம், இயற்கை அழகு , இட அமைப்பு என்பன சாட்டியைப் பிரபல்யமான யாத்திரைத்தலமாக்கியது.

16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் யாழ் குடாநாட்டுக்கு வந்த போது சாட்டித்துறையிலேயே வந்து இறங்கினர். யாழ். நகரை அண்மித்த பிரதேசத்தில் சாட்டி அமைந்திருந்தமையால் இங்கு போர்த்துக்கேயர் ஒரு கோட்டை அமைத்து அரண் செய்து தமது கடற்பயணத்தின் போது தம்மைப் பாதுகாத்த சிந்தாத்திரை அன்னை சொரூபத்தை வைத்து வேண்டுதல் செய்தனர். ஒல்லாந்தர் கைகளுக்கு யாழ்ப்பாணம் மாறிய போது சாட்டியில் இருந்த இந்தக் கோட்டை அவர்களால் தகர்த்தெறியப்பட்டது. ஏறக்குறைய 200 வருடங்களின் பின்னர் ஒல்லாந்தரால் தகர்க்கப்பட்ட மேற்படி கோட்டையின் இடிபாடுகளுக்கு இடையே போர்த்துக்கேயரால் வைத்து செபிக்கப்பட்டு வந்த அன்னையின் சொரூபம் புதுமையாக சிதைவுறாமல் கண்டெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஊர் மக்கள் அந்த சிந்தாத்திரை மாதா சொரூபத்தை ஓர் ஓலைக் கொட்டிலில் வைத்து வேண்டுதல் செய்து வந்தனர். இதுவே சாட்டி சிந்தாத்திரை அன்னையின் ஆரம்ப வரலாறு என அறியவருகின்றது. சாட்டியின் பூர்வீகக்குடிகள் கமண்டலர் எனவும் குயவர் எனவும் அழைக்கப்பட்டனர். மன்னாரிலும் மாதோட்டத்திலும் கத்தோலிக்க மறையைத் தழுவி திருமுழுக்குப் பெற்ற சிலரும் சாட்டியில் வந்து குடியேறி வாழ்ந்தனர் என நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் ஆய்வுகள் கூறுகின்றன. அவர்களோடு வாழ்ந்த இடும்பன் குடும்பத்தைச் சேர்ந்த முத்தவி என்ற உத்தம கத்தோலிக்கர் ஓர் உயர்ந்த தடிக்கம்பத்தை நிறுவி அதன் நுனியிலே மணி ஒன்றைக் கட்டி அம்மணியினை அடித்து மக்களை ஆலயத்திற்கு அழைத்து வழிபாடு செய்து வந்துள்ளார். ஒவ்வொரு வருடமும் சாட்டியில் அமைந்துள்ள இக் கோவிலுக்கு அவர் ஊர்மக்கள் எல்லோரையும் அழைத்து மூன்று நாள் அங்கு தங்க வைத்து வழிபாடுகள் நடத்தி வந்தார் என்று அறியவருகின்றது. இக்கொட்டில் கோவிலை சிறப்பான ஆலயமாக அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடையே உருவானது. அந்த எண்ணக்கருவுக்கு உருக்கொடுக்கும் வகையில் 1789 ஆம் ஆண்டு கல்லினாலான ஒரு சிறிய ஆலயத்தை அங்கு கட்டியமைத்தார்கள். 1886இல் இவ்வாலயம் தீப்பற்றி எரிந்ததாக அறியவருகிறது.

## மேதகு ஜே.ஏ.கியோமர் அ.ம.தி ஆண்டகை காலத்தில் சாட்டி

யாழ் ஆயர் ஜே.ஏ.கியோமர் அ.ம.தி ஆண்டகை காலத் தில் மண்டைதீவு அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் பணியாற்றிய அந்தோனி அடிகளாரின் மேற்பார்வையில் 1928 ஆம் ஆண்டு இப்போது நாம் காணுகின்ற ஆலய கட்டடத்துக்கான கட்டுமாணப்பணிகள் ஆரம்பமாகின. 1946 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை கரம்பொனைச் சேர்ந்த எஸ்.எஸ்.பஸ்ரியன் என்பவருடைய அன்பளிப்பில் ஆலய முகப்பில் நாம் இன்று காணுகின்ற திறந்த மண்டபம் கட்டியெழுப்பப்பட்டது. 1974 இல் கரம்பொன் சுருவிலைச் சேர்ந்த எஸ்.எம்.மந்திரி என்பவரால் ஆலயத்துக்குத் தேவையான மின்சார இணைப்பும் மின் விளக்குகளும் அமைத்துக் கொடுக்கப்பட்ட போது ஆலயம் ஜெகஜோதியாக இரவு வேளைகளில் காட்சி தந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகை காலத்தில் சாட்டி யாத்திரைத்தலம் பெரிதும் வளர்ச்சி கண்டது. 1990களில் யாழ்ப்பாணக் கோட்டையைப் பிடிப்பதற்காக ஊர்காவற்றுறையில் தரையிறங்கிய படையினருடைய இராணுவ நடவடிக்கை காரணமாக ஊர்காவற்றுறை, கரம்பொன், சுருவில், நாரந்தனை ஆகிய இடங்களில் இருந்து மக்கள் சாட்டி அன்னையின் யாத்திரைத்தலத்தில் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர். மத வேறுபாடு இன்றி மக்கள் எல்லோரும் சாட்டி அன்னையின் வளாகத்திலும் ஆலயத்திலும் குழுமியிருந்த போது இலங்கை விமானப்படை கெலிகொப்டர் ஒன்று ஆலயத்தின் மேல் றொக்கட் தாக்குதலை மேற்கொண்டது. குருக்களின் தங்குமிடப்பகுதியிலும் ஆலயத்தின் மேலும் மேற்கொள் ளப்பட்ட தாக்குதலால் இரண்டு உயிர்கள் ஆலயத்தின் உள்ளேயே பறிக்கப்பட்டன. ஆலயம் சேதத்துக்கு உள்ளானது. இராணுவத்தினர் யாழ் கோட்டையைக் கைப்பற்றி திரும்பவும் ஊர்காவற்றுறை நோக்கி நகர்ந்த பின்னர் மக்கள் சிறிது காலம் அங்கு வாழ்ந்திருந்தாலும் தீவுப்பகுதியை விட்டு எல்லோரும் வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. சில ஆண்டுகள் தீவுப் பகுதி வெறிச்சோடிப்போய் மனித சஞ்சாரம் அற்ற பகுதியாக மாறியபோது சாட்டி அன்னையின் திருவிழாக்களும் தடைப்பட்டன.

## மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் காலத்தில் சாட்டி


மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் காலத்தில் சாட்டி சிந்தாத்திரை அன்னை யாத்திரைத் தலம் பல கஷ்டங்கள் மத்தியில் பல குருக்களின் ஆளுமையிலும் பாரமரிப்பிலும் சிறப்பாக வளர்த்தெடுக்கப்பட்டது. இக்காலத்தில் ஏற்பட்ட மாற்றம் அதன் நிர்வாகம் அமலமரித்தியாகிகள் கைக்கு மாறியமையாகும். 2013 முதல் பிரபல்யம் வாய்ந்த பிரசங்கியாரான ஜெறோம் லம்பேட் அ.ம.தி அடிகளார் பரிபாலகராக பணியாற்றி வருகிறார். அவரிடம் சாட்டிப்பதி பற்றி வினாவியபோது கத்தோலிக்க மக்கள், இந்து மக்கள் எனப்பலரும் இப்பதிக்கு வருகிறார்கள். அண்மைக் காலங்களில் சாட்டி ஒரு சுற்றுலாத் தலமாகவும் மாறி வருவதை யாரும் தடுக்க முடியாது. ஆனால் சுற்றுலாவையே மட்டும் நோக்காகக்கொண்டு இப்பதிக்கு வருவது முற்றுமுழுதாக ஏற்புடையதல்ல. கடலில் குளித்துவிட்டு அதே ஆடை யுடன் அன்னையின் பதிக்கு உணவு உண்ண மட்டும் வருவது ஏற்புடையதல்ல. அன்னையின் பதிக்கு வந்து அமைதியாக வேண்டி வழிபாடு செய்து பின்னர் குளிப்பையும் இணைத்துக் கொள்வதில் தவறிருக்க முடியாது. சாட்டி சிந்தாத்திரை அன்னையின் பதியில் குடிவெறி, கேளிக்கைகள், கொண்டாட்டங்கள் என்பன திருநாள் காலங்களில் மட்டுமல்ல எல்லாக்காலங்களிலும் தவிர்க்கப்பட்டு அன்னையின் பதியின் புனிதம் எப்போதும் பேணப்படவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம் என்றார்.

மேலும் அவர் தெரிவித்த ஒரு விடயத்தை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அவர் சொன்னார் அண்மைக் காலங்களில் ஒரு புதிய முறையாக ஆள் அளவு உயர மெழுகு வர்த்திகளை நேர்த்தியாகக்கொண்டு வந்து அன்னையின் பதியில் ஏற்றி அது எரிந்து முடியும் வரை பல மணித்தியாலங்கள் பக்தர்கள் காத்திருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. நீண்ட மணி நேரம் கிட்டத்தட்ட 6 மணித்தியாலங்கள்வரை பக்தர்கள் பக்தியோடும் பொறுமையோடும் அன்னையின் பதியில் காத்திருப்பதைக்காண அன்னையின் புதுமைகளும் பெயரும் இன்னும் பரவக்கூடிய [illegible]களே தெரிகின்றன எனலாம் என்றார். தீவுப்பகுதிக்கான வீதிகள் சிறப்புற அமைக்கப்பட்டு மிக விரைவாக அங்கு செல்லக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளமையால் இனிவரும் காலங்களில் சாட்டிப் பதியை நோக்கி வரும் யாத்திரிகர்கள் தொகை மிக அதிகரிக்கும் என்றே நம்பலாம். சாட்டி சிந்தாத்திரை மாதா யாத்திரைத்தலத்தில் இன்னும் அதிக கவனமும் விசேட வசதிகளும் வழிபாடுகளும் [illegible] திருநாள்களும் கொண்டாடப்பட்டால் இதனை யாழ். மறைமாவட்டத்தில் முதன்மையான மிகப்பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலமாக மாற்றலாம் என்பதில் ஐயமில்லை. சாட்டி சிந்தாத்திரை அன்னை யாத்திரைத்தலம் யாழ். மறைமாவட்டத்தின் மேலும் பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலமாகி வர அன்னை மேலும் அருள் பொழிவாராக.



# நீரிழிவு நோய் தொடர்பான பிரச்சினைகளும் தீர்வுகளும்

மருத்துவர் எம்.அரவிந்தன்




**கேள்வி:** எனது வயது 56 ஆகும். நான் மெற்போமின் மருந்தை (500 mg) நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த கடந்த 5வருடங்களாகப் பயன்படுத்தி வருகின்றேன். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட குருதிப்பரிசோதனைகளின்படி எனது நீரிழிவு நோய்க்கட்டுப்பாடானது சிறந்த முறையில் உள்ளதாக மருத்துவர் கூறியிருந்தார். எனது உறவினர்கள் சிலர் மெற்போமின் பயன்படுத்தினால் சிறுநீரகம் பாதிக்கப்படுமெனக் கூறுகின்றனர். இதுபற்றி விளக்கிக் கூறவும்?

**பதில்:** இது மிகவும் அவசியமானதொரு வினாவாகும். எமது மக்களிடையே நீரிழிவு நோய் தொடர்பான பல பிழையான எண்ணக்கருக்கள் உள்ளன. அவற்றில் இது மிக முக்கியமானதொன்றாகும்.

உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முதற்படியாக பாவிக்கின்ற (First line) நீரிழிவைக் கட்டுப்படுத்தும் மருந்து மெற்போமினே ஆகும். இந்த மருந்தானது நீரிழிவு நோயைச் சிறந்த முறையில் கட்டுப்படுத்துவதோடு, அதனால் ஏற்படுகின்ற நீண்டகாலப் பிரச்சினைகளையும் குறைக்கின்றதென்பதை பல ஆய்வுகள் காட்டியிருக்கின்றன.

இந்த மருந்தானது நீரிழிவு நோய் கட்டுப்பாடின்றிப் போகும் போது ஏற்படுகின்ற சிறுநீரகப்பாதிப்பை உண்மையில் குறைக்கின்றது. நீரிழிவு நோயாளியொருவருக்கு குறிப்பிட்ட காலத்துக்கொரு முறை குருதிப்பரிசோதனை (Serum Creatinine) மேற்கொண்டு சிறுநீரகப் பாதிப்பு உள்ளதா இல்லையா எனக் கண்டறியப்படுவது வழமையாகும். இவ்வாறு சிறுநீரகப் பாதிப்பு குறிப்பிட்ட அளவில் இருக்கும் போது மாத்திரமே மருத்துவரானவர் மெற்போமின் மருந்தைக் குறைக்கவோ, நிறுத்தவோ வேண்டியேற்படுகின்றது. எனவே மெற்போமின் பற்றிய தப்பபிப்பிராயத்தைக் களைவது மிகவும் அவசியமானதொன்றாகும்.

**கேள்வி:** எனது மகனின் வயது 16 ஆகும். அவரது உடல் நிறையானது கூடுதலாக இருப்பதோடு கழுத்துப் பகுதியிலும் கறுப்பு நிறமான படை போன்று இருக்கிறது. எனக்கும் எனது கணவருக்கும் நீரிழிவு நோயானது உள்ளது. இது பற்றி ஆலோசனை கூறவும்?

**பதில்:** கழுத்துப் பகுதியில் கறுப்பு நிறமான படையானது காணப்படுவதை Acanthosis nigricans என்று கூறுவார்கள். இது உடலில் இன்சுலினுக்கு எதிர்ப்பு நிலை (Insulin resistance) ஏற்படுவதன் அறிகுறியாகும். தவறான உணவு மற்றும் அப்பியாசமற்ற வாழ்க்கை முறை என்பவற்றால் உடற்பருமன் அதிகரித்துச் செல்லும் போது இவ்வாறான நிலமை ஏற்படுவது வழமையாகும். இவ்வாறு ஏற்படுபவர்களுக்கு நீரிழிவு நோய் மற்றும் metabolic syndrome எனப்படுகின்ற குருதி அழுத்தம், கொலஸ்திரோல் என்பன அதிகரிக்கும் நிலையும் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. பெற்றோருக்கு நீரிழிவு நோய் இருக்கும்போது குழந்தைகளுக்கு அது ஏற்படும் வாய்ப்பும் அதிகமாகும். எனவே, உங்கள் மகனானவர் இன்று முதல் உணவுக்கட்டுப்பாடு மற்றும் உடற்பயிற்சி என்பவற்றை மேற்கொண்டு உடற்பருமனைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியமாகும். இதைவிட வைத்திய ஆலோசனையைப் பெற்று மேலதிக பரிசோதனைகளை (குருதியிலுள்ள குளுக்கோஸின் அளவு,குருதி அமுக்கம், கொழுப்பின் அளவு , ஹோர்மோன்கள்) மேற்கொள்வதும் அவசியமானதாகும்.

**கேள்வி:** எனது வயது 36 ஆகும். எனக்கு நீரிழிவு, கொலஸ்திரோல் என்பன உள்ளன. எனது நீரிழிவானது கட்டுப்பாடற்று இருப்பதாக மருத்துவர் கூறுகின்றார். எனக்கு சில காலமாக தாம்பத்திய உறவில் பிரச்சினை இருக்கின்றது. எனது ஆண்குறி விறைப்படைவது குறைவாக இருப்பதை சில காலமாக உணர்ந்து வருகின்றேன். இதுபற்றி விளக்கம் தரவும்?

**பதில்:** நீரிழிவு நோயானது கட்டுப்பாடற்றுச் செல்லும் போது உடலின் பல அங்கங்கள் சிறிது சிறிதாக செயலிழக்க நேரிடுகின்றன. உடலின் பெரிய குருதிப் குழாய்களில் ஏற்படுகின்ற மாரடைப்பு, பக்கவாதம் போன்றவையும் சிறிய குருதிக் குழாய்களில் ஏற்படுகின்ற கண்பார்வை குறைதல், சிறுநீரக செயலிழப்பு, நரம்புகள் பாதிப்பு போன்றவையும் இதற்கு உதாரணங்களாகும்.

ஆண்குறி விறைப்படையாமைக்கு பல காரணங்கள் இருக்கின்றன. உங்களைப் போன்ற நீரிழிவு நோய் அந்த நோயானது கட்டுப்பாடின்றி இருக்கும்போது இந்தப் பிரச்சினையானது ஏற்படுகின்றது. இதே போல கொலஸ்திரோல், குருதியமுக்கம் அதிகரிப்பு உள்ளவர்களுக்கும் இது ஏற்படுகின்றது. அதிகரித்த மது, புகை, போதைப் பாவனையும் இதற்குக் காரணமாக அமைகின்றது. சில வகையான ஹோர்மோன் குறைபாடுகளும் உளவியல் தாக்கங்களும் சில மருந்து வகைகளும் கூட இதற்குக் காரணமாக அமைகின்றன.

எனவே, உங்களுடைய நீரிழிவு நோயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது மிக அவசியமாகும். உங்களின் பிரச்சினைக்கு பலவகையான சிகிச்சை முறைகள் உள்ளபடியால் தயக்கமின்றி உங்கள் குடும்ப மருத்துவ்ரை சந்தித்து தகுந்த ஆலோசனைகளையும் சிகிச்சை வழிமுறைகளையும் பெற்றுக் கொள்ளவும்.

**கேள்வி:** எனது வயது 60 ஆகும். எனக்கு நீரழிவு நோய் ஏற்பட்டு 15 வருடங்கள் ஆகின்றன. நான் மூன்று வகையான குளிசைகளை நீரிழிவு நோய்க்காக எடுத்து வருகின்றேன். (மெற்போமின், கிளிக்கிளசயிட் மற்றும் சிற்றகிளிப்ரின்) நான் சிறந்த முறையில் உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி என்பவற்றை செய்து வருகின்றேன். எனினும் சிறிது காலமாக நீரிழிவு நோயானது கட்டுப்பாடற்று இருப்பதாக மருத்துவர் கூறுகின்றார். இன்சுலின் மருந்தை ஆரம்பிப்பது தான் நல்லதென எனது குடும்ப மருத்துவர் கூறுகின்றார். எனக்கோ இதனை ஆரம்பிக்க சிறிது தயக்கமாக உள்ளது. இது பற்றி ஆலோசனை வழங்கவும்?

**பதில்:** உங்களைப் போன்ற நீரிழிவு வகை 2 (Type 2 Diabetes) நோயாளரிலும் சிறிது காலத்தின் பின்னர் குளிசை மருந்துகளால் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த முடியாத நிலை (Oral hypoglycaemic failure) ஏற்படுகின்றது. அதாவது உங்களைப் போன்ற நீரிழிவு வகை 2 நோயாளரிலும் காலப் போக்கில் இன்சுலின் அளவானது படிப்படியாகக் குறைவடைய நேரிடுகின்றது. எனவே அந்தச்சந்தர்ப்பத்தில் குளிசைகள் மூலம் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த முடியாமற் போய்விடுகின்றது. எனவே, உங்கள் குடும்ப மருத்துவர் கூறியதைப் போன்று இன்சுலின் மருந்தை ஆரம்பிப்பதே சிறந்தாகும். இப்போது பல வகையான இன்சுலின் மருந்துகள் பயன்பாட்டில் உள்ளன. ஆரம்பத்தில் ஒரு நாளைக்கு ஒரு முறை அல்லது இருமுறை பயன்படுத்தும் இன்சுலின் மருந்தை உங்களுக்கு மருத்துவரானவர் பரிந்துரை செய்வார். இன்சுலின் ஆரம்பித்த பின்னர் மெற்போமின் தவிர்ந்த மற்றைய நீரிழிவு நோய்க்கான குளிசைகளை நிறுத்த வேண்டியிருக்கும். இது தொடர்பான மேலதிக விளக்கங்களையும் ஆலோசனைகளையும் உங்கள் குடும்ப மருத்துவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**கேள்வி:** எனது வயது 28 ஆகும். எனக்கு நீரிழிவு நோய் உள்ளதென இரண்டு வருடங்களுக்கு முன்னர் கண்டறியப்பட்டது. எனக்குத் திருமணமாகி 6 மாதங்கள் கழிந்துள்ளன. நான் Metformin மற்றும் Gliclazide ஆகிய குளிசைகளைப் பயன்படுத்தி வருகின்றேன். எனது அண்மைய FBS அளவு 210 mg/dl ஆகவும் HbAic ஆனது 8.2 ஆகவும் உள்ளது. எனது நீரிழிவு நோயானது கட்டுப்பாட்டுக்குள் வந்தபின்னரே கர்ப்பம் தரிக்க வேண்டுமென்று குடும்ப மருத்துவர் கூறியிருந்தார். இது பற்றிய விளக்கத்தைக் கூறவும்?

**பதில்:** கர்ப்பம் தரிக்க விரும்புகின்ற பெண்ணொருவரின் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவானது மிகவும் கட்டுப்பாடாக இருப்பது மிகவும் அவசியமானதாகும். உங்களுடைய குருதியிலுள்ள குளுக்கோசின் அளவானது அதிகமாக இருப்பதை இரண்டு பரிசோதனை முடிவுகளும் (FBS, HbAic) எடுத்துக் காட்டுகின்றன. ஒருவரது நீரிழிவு நோயின் கட்டுப்பாட்டை (இறுதி மூன்று மாத சராசரி அளவு) எடுத்துக் காட்டுகின்ற சிறந்த பரிசோதனையானது HbAic ஆகும். கர்ப்பம் தரிக்க விரும்புகின்ற பெண்ணொருவரின் HbAic ஆனது 6.5 க்கும் 7.0 க்குமிடையில் இருப்பதே மிகச் சிறந்ததாகும்.

குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு அதிகமாக இருக்கும்போது அதாவது நீரிழிவு நோயானது கட்டுப்பாடற்ற நிலையில் இருக்கும்போது பெண்ணொருவர் கர்ப்பம் தரித்தால் அவருக்கும் கருவிலுள்ள சிசுவுக்கும் பலவிதமான பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்பு அதிகமாகும்.

எனவே, ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளைக் கடைப்பிடித்து மருந்துகளைக் கிரமமாக உள்ளெடுத்து உங்கள் நீரிழிவைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருதல் மிகவும் அவசியமாகும். உங்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி தேவையேற்படின் மருந்துகளை அதிகரிக்கவோ, மாற்றவோ வேண்டி ஏற்படலாம். உங்கள் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்து வதற்கு சில வேளைகளில் இன்சுலின் என்ற ஊசி மருந்தையும் பயன்படுத்த வேண்டி நேரிடலாம். கர்ப்பம் தரித்த பின்னர் நீரிழிவுக்கான குளிசைகளைப் பயன்படுத்த முடியாது. தேவையேற்படின் வைத்திய ஆலோசனைக்கேற்ப மெற்போமின் மருந்தை மட்டுமே தொடரமுடியும். எனினும் அநேகமான சந்தரப்பங்களின் இன்சுலின் மூலமே நீரிழிவு நோயைக்கட்டுப்படுத்த வேண்டியிருக்கும்.

நீரிழிவு அக்ஞ்சுரக்கும் தொகுதி
(ஹோர்மோன்)
சிறப்பு வைத்திய நிபுணர்,
யாழ் போதனா வைத்தியசாலை.







இந்து கலாசார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் கற்சிலைமடு சிறி சித்திவிநாயகர் ஆலயத்தில் அமைக்கப்பட்ட அன்னதான மண்டபம் கடந்த புதன்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளரால் திறக்கப்பட்டது. ஆலய நிர்வாக சபைத் தலைவர் மு. சிவனேசன் தலைமை நடைபெற்ற நிகழ்வில் முல்லை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் இ. மோகன்ராஜ், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய. அனுரத்தனன், கிராம மக்கள் என பலர் கலந்துகொண்டனர். (ற-500)






பருத்தியூர் இளந்தளிர் விளையாட்டுக் கழகம் வன்னி பிரதேசத்திலுள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை விருத்தி செய்யும்வகையில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்குகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள கொக்குத்தொடுவாய் அ.த.க பாடசாலை மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ற-108)




பருத்தித்துறை நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திய குருதிக்கொடை முகாம்.மீண்டும் எழுவோம் செயற்றிட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது. அதில் 82 பேர் பங்குகொண்டு குருதிக்கொடை வழங்கினர். (ற-422)



புதிதாக அமைக்கப்பட்ட மன்னார் நொச்சிக்குளம் புனித அடைக்கல அன்னை ஆலயம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் அபிசேகம் செய்யப்பட்டு, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் நொச்சிக்குளம் பங்குத்தந்தை, அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், வடமாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன்,வடமாகாண சபை உறுப்பினர்களான மருத்துவர் ஜீ.குணசீலன்,சட்டத்தரணி எஸ்.பிரீமூஸ் சிறாய்வா,நகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ் மற்றும் கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். முதல் திருப்பலியை மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் அதி வணக்கத்துக்கு உரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து, கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். (ற-56)



கிளிநொச்சி பொலிஸ் நிலையம் மற்றும் கிளிநொச்சி போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் ஏற்பாட்டில், போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான கருத்தரங்கு நேற்று நடைபெற்றது. மு.ப. 10 மணியளவில் ஆரம்பமான கருத்தரங்கில், விபத்துக்களை எவ்வாறு தடுப்பது, விபத்துக்களைத் தடுப்பதில் பொலிஸாரின் பங்கு என்ன? மக்களின் பங்கு என்ன? என்பது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது. கருத்தரங்கில் கிளிநொச்சி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி , கிளிநொச்சி பொலிஸ் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி, பாதசாரிகள், முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மற்றும் மோட்டார் வண்டிச் சாரதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(ற)



யாழ்.பிறவுண் வீதியிலுள்ள சுகதாமம் மண்டபத்தின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடன் பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினர் நடத்திய 'விழுமியங்களில்' விவாதப் போட்டியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கௌரவ அமைச்சர் த.குருகுலராசா பரிசில்கள் வழங்கினார். இலங்கை பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்களின் இணைப்பாளர் பிரம்மகுமார் கணேஷ் கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரனுக்கு நினைவுப் பரிசு வழங்கினார். (ற)





சில்லாலை சிந்திக்கும் சிறுவர் கழகத்தினரின் கலாசார விழா - 2016 அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், மங்கல விளக்கேற்றுவதையும் மற்றும் சிறுவர்களின் கலை நிகழ்வுகளையும், பார்வையாளரில் ஒரு பகுதியினரையும் காணலாம். (ரி)







யாழ். வட்டு இந்துக் கல்லூரியின் பழையமாணவர் ஒன்றுகூடலும் மதியபோசன விருந்தும் அண்மையில் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் பழைய மாணவர் சங்கத்திற்கான இணையத்தளம் பிரதம விருந்தினரால் ஆரம்பித்து வைக்கப்படுவதையும், பங்குபற்றிய பழைய மாணவர்களில் ஒரு பகுதியினரையும் விருந்தினர்களையும் காணலாம். (ரி)

காவிரி விவகாரம்:

# கர்நாடகாவில் தமிழர்கள் பெரும் அச்சத்தில்



காவிரியில் இருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விட்டதை கண்டித்து கர்நாடகாவின் பல்வேறு நகரங்களிலும் போராட்டம் வெடித்தது. இதனால் கர்நாடகாவில் உள்ள தமிழர்கள் அச்சத்தின் மத்தியில் வாழும் நிலை ஏற்பட்டது.

தமிழ் நாட்டின் விவசாய மாவட்டங்களில் கிட்டத்தட்ட 40 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சம்பா பயிரிடப்பட்டுள்ளது. போதிய நீர் இல்லாததால் நெற்செய்கை பாதிக்கப்பட்டது. இதனையடுத்து இந்த விவகாரம் இந்திய உச்ச நீதிமன்றத்திடம் எடுத்துச் செல்லப்பட்டது. வழக்கை விசாரித்த மன்று வினாடிக்கு 15 ஆயிரம் கனஅடி வீதம் 10 நாள்கள் தண்ணீர் வழங்குமாறு உத்தரவிட்டது.

முதல் கட்டமாக கடந்த செவ்வாய்க்கிழமை தண்ணீர் வழங்கப்பட்டது. இதற்கு கடந்த சில தினங்களாக கர்நாடகாவில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. நேற்றைய தினமும் கர்நாடகாவில் போராட்டம் தொடர்கிறது. அங்குள்ள தமிழ் தொலைக்காட்சிகள் முடக்கப்பட்டன. தமிழ் திரைப் படங்கள் காட்சிப்படுத்தப்படுவது நிறுத்தப்பட்டது. தமிழ் நாட்டிலிருந்து கர்நாடகாவுக்குச் செல்லும் பேருந்துகள் எல்லையில் மறிக்கப்பட்டு தாக்கப்பட்டன. தமிழ்நாட்டு முதலமைச்சரின் படங்கள் கொளுத்தப்பட்டன. ஒரு கண்டனப் போராட்டமாக ஆரம்பிக்கப்பட்ட இந்தப் போராட்டம் படிப்படியாக தமிழர்களுக்கு எதிரான போராட்டமாக உக்கிரமடைகிறது. இதனால் கர்நாடகாவில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளுக்கு உயர் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் கர்நாடகாவில் உள்ள தமிழர்கள் அச்சத்தின் மத்தியில் வாழக்கூடிய பதற்ற நிலை ஏற்பட்டது. (ம)




## குண்டுத் துகள்களைச் சுமக்கும் மக்களைக் காப்பாற்றவேண்டும்

அரசிடம் கோருகிறார் அடைக்கலநாதன் எம்.பி.

கொழும்பு , செப். 11

காலநிலை தொடர்பான பரிஸ் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தும் திட்டத்தின் முதல் கட்டமாகப் போரால் பாதிக்கப்பட்டுக் குண்டுத் துகள்களை உடலில் சுமந்துகொண்டிருக்கும் வடக்கு, கிழக்கு மக்களைக் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் நேற்று முன்தினம் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காலநிலை மாற்றம் தொடர்பான பரிஸ் உடன்படிக்கைக்கு ஒப்புதல் அளிப்பதற்கான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எனக்கு முன்னர் உரையாற்றிய பிரதமர், உலக நாடுகளில் போரால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து குறிப்பிட்டார். எமது நாட்டிலும் போர் நடந்தது. எமது வடக்கு, கிழக்கு மக்கள் இப்போதும் போரின் தாக்கத்தில் உள்ளனர்.

போரில் பயன்படுத்தப்பட்ட கொத்துக் குண்டுகள், தடை செய்யப்பட்ட குண்டுகள், இரசாயனப் பொருள்கள் போன்றவற்றால் எமது மக்கள் இன்னும் துன்பம் அனுபவிக்கின்றனர். பிறக்கின்ற குழந்தைகள் அங்கவீனர்களாகவும் குறைமாதக் குழந்தைகளாகவும் பிறக்கின்றன. இது எமது வடக்கு, கிழக்கில் மிகவும் வேதனை தரக்கூடிய விடயமாக உள்ளது.

வன்னி மாவட்டத்தில் போரின் எச்சம் இன்னுமுள்ளது. கல்வி கற்றுக் கொண்டிருக்கும்போது மாணவர்கள் மயங்கி விழுகின்றனர். குண்டுத்துகள்களை உடலில் சுமந்த மக்கள், மாணவர்கள் உள்ளனர். இவர்களைக் காப்பாற்ற அரசு ஒரு வேலைத் திட்டத்தை உருவாக்க வேண்டும். இதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பரிஸ் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தும் திட்டத்தின் முதல் கட்டமாகப் போரின் எச்சங்களைக் கண்டுபிடித்துப் போரால் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இறுதிப் போரின்போது கொத்துக் குண்டுகள், இரசாயனப் பொருள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனால் எமது மக்கள் இன்றும் துன்பங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். அதன் விளைவுகள் தற்போது பிரதிபலிக்கின்றன. தற்போது பிறக்கின்ற குழந்தைகள் கூட பாதிப்புக்குள்ளாகிய நிலையில் காணப்படுகின்றன. இவ்வாறிருக்கின்ற நிலையில் போர் நிறைவடைந்து 7 வருடங்களாகின்றன.

இந்தக் காலப் பகுதியில் பல பாடசாலை மாணவர்கள், இளைஞர், யுவதிகள், பொதுமக்கள் அவ்வப்போது மயங்கிவிழும்நிலைகள்காணப்பட்டுள்ளன. இவர்கள் உடலில் குண்டுத் துகள்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்குரிய மருத்துவச் சிகிச்சை வழங்கப் படவேண்டும். இவர்களைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும். நல்லிணக்கம் தொடர்பாகக் கவனம் செலுத்தும் அரச உடனடியாக இவ்விடயம் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். இயற்கை வளங்கள் நிறைந்த வன்னிப்பிரதேசம் போர் காரணமாக முற்றாக அழிவடைந்துள்ளது. இதனால் அங்கு வெப்ப நிலை அதிகரித்துள்ளது. இதன் காரணமாகப் பல்வேறு பிரச்சினைகளுக்கு பொதுமக்கள் முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது- என்றார். (த-4)

## குறை நிரப்புப் பிரேரணை நாடாளுமன்றில் சமர்ப்பிப்பு

கொழும்பு, செப். 11

4 ஆயிரத்து 161 கோடியே 47 இலட்சத்து 23 ஆயிரத்து 527 ரூபாவுக்கான குறைநிரப்புப் பிரேரணையை அரசு நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது.

2016ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ள நிதிக்கு மேலதிகமாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்தப் பிரேரணையில், பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புடைய முப்படைகளுக்கும் 165 கோடியே 30 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாவும், சட்டம், ஒழுங்கு மற்றும் தென்மாகாண அபிவிருத்தி அமைச்சுக்கு ஒரு கோடியே 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அமைச்சர்கள், திணைக்களங்களின் வாகனக் கொள்வனவுக்காக 20 கோடியே 40 இலட்சத்து 87 ஆயிரத்து 750 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்றத்தைத் துரிதப்படுத்துவதற்காக 100 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்துக்காக 32 கோடியே 33 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாவும், பிரதமர் அலுவலகத்துக்காக 12 கோடியே 36 இலட்சத்து 27 ஆயிரத்து 418 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதோடு மிகுதி ஏனைய அமைச்சுகள், திணைக்களங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

## ஜனாதிபதி யாழ். வருகைக்கு பத்து இலட்சம் ரூபா செலவு

யாழ்ப்பாணம், செப். 11

'போதையிலிருந்து விடுபட்ட நாடு' நிகழ்வுக்கு பத்து லட்சம் ரூபா வரையில் செலவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதற்குரிய நிதி ஜனாதிபதி செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், 'போதையிலிருந்து விடுபட்ட நாடு' நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.பொது நூலகத்துக்கு அருகில் உள்ள திறந்த வெளி அரங்கில் இடம்பெற்றது.

போதைத் தடுப்புத் தொடர்பான ஜனாதிபதி செயலணி, யாழ். மாவட்டச் செயலகத் திட்டமிடல் பிரிவுடன் இணைந்து இந்த நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தது. இதற்காக பத்து லட்சம் ரூபா வரையில் செலவு செய்யப்பட்டுள்ளது. அதில் 8 லட்சம் ரூபா ஜனாதிபதி செயலகத்தினால் முற்பணமாக மாவட்டச் செயலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் நிகழ்வுக்கான பிரமாண்ட கொட்டகை, கதிரை, ஒலி ஒளி அமைப்புக்கள் அனைத்தும் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முன்னைய ஆட்சிக் காலத்தில் நிகழ்வுகள் இடம்பெறும்போது கோடிக் கணக்கான பணம் செலவு செய்யப்படுவதுடன், அந்தப் பணம் பெரும்பாலும் வடக்கு மாகாண அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்தே செலவு செய்யப்படுவது வழமை. (த-5)

### காணி தேவை

நல்லூர் Temple Road அல்லது ஆலயத்தை அண்டிய பகுதியில் 3 பரப்பிற்குட்பட்ட காணி தேவை.

தொடர்பு - 077 6095604

### வீடு வாடகைக்கு (For Rent)

மந்திகை ஆஸ்பத்திரிக்குப் பக்கத்திலுள்ள புலோலி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில் உள்ள (கொடிகாமம் றோட்டில், சகல வசதியும் கொண்ட வீடு விசேடமாக நிறுவனத்துக்கு மிகவும் உகந்த முறையில் உள்ளக அமைப்புடன் 02 Bed Rooms, 02 Living Rooms (01 very Big), 01 Seperate Meeting Room, Kitchen, Dining Room, Front open Veranda, Back open veranda. attached bath Room, Outer toilet, including Carpark

P.Theepan - 077 736 0387

### பணிப்பெண் தேவை

சுதுமலையிலுள்ள வீட்டில் தங்கி இருந்து அனைத்து வேலைகளையும் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

தொடர்பு - 077 0250339

### வீடு வாடகைக்குத்தேவை

நான்கு பேர் அடங்கிய குடும்பம் ஒன்றிற்கு யாழ்ப்பாணத்தில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு - 077 0250339

### ஆசிரியை தேவை

வீட்டிற்கு வந்து கற்பிப்பதற்கு தேவை
தரம் - ஒன்று
நேரம் - 3.00Pm- 5.00Pm

T.P : 075 2278733

### அறை வாடகைக்கு

சிவன் அம்மன் வீதி, அரசடி, நல்லூர் பிரதேசத்தில் அமைந்துள்ள வீடு ஒன்றில் பெண்களுக்கு மட்டும் அறைகள் வாடகைக்குக் கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 223 8422

### பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.

077 7437162, 077 3276502

### வேலை வாய்ப்பு

விமான நிலையம் லோன்றி, கிளீன்ங், கேட்டறிங், கார்கோ வேலைவாய்ப்புக்கு 35,000/= - 75,000/= சம்பளத்திற்கு வேலை வாய்ப்பு. சாப்பாடு, தங்குமிடம் இலவசம். 15 வேலைவாய்ப்புக்கள் உள்ளன.

தொடர்புகளுக்கு:
072 2231518, 071 9215892

ஐஸ்கிறீம், பிஸ்கட், ஜாம் ஆகிய தொழிற்சாலைகளில் சகல பிரிவுகளுக்கும் நாள் சம்பளம் 1600/- (With O.T)

072 2467943, 072 2467945
077 6363156, 076 9305146

சாப்பாடு, தங்குமிடம் இலவசம் நாள் சம்பளம் 1600/- (With O.T) வரும் நாளிலே வேலைவாய்ப்பு

076 6235152, 076 6567150
076 5587807, 076 5715255

### Power Gym

Power Gym - jaffna

13 வது வருட நிறைவில்

Power Gym
Body Care & Fitness Center

இன்றுவரை எம்மோடு இணைந்துள்ள 6,512 அங்கத்தவர்களுக்கும் நன்றி...

புதிய உடற்பயிற்சி உபகரணங்களுடன் மெருகூட்டப்பட்டுள்ளது எமது உடற்பயிற்சி நிலையம்.

13 வது வருட நிறைவை முன்னிட்டு 10.09.2016 முதல் 24.09.2016 வரை இணைந்து கொள்ளும் புதிய அங்கத்தவர்களுக்கு 50% கட்டண கழிவினை வழங்குகின்றோம்.

நீங்கள் தினமும் ஒரு மணி நேரத்தை உடற்பயிற்சிக்காக ஒதுக்கி எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

இயந்திரமான இந்த உலகத்தில் இந்த ஒரு மணி நேரம் மகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்துவதாக அமையும் என நம்புகின்றோம்.

நோய் நொடியற்ற மகிழ்ச்சியான வாழ்க்கையை தொடங்குங்கள்.

மன அழுத்தத்திலிருந்து விடுதலை பெறுங்கள்.



0776070685

230A, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (Ladies Only)

218, கோவில் வீதி. (Gents Only)

### விற்பனைக்கு

4 மாதங்கள் நிரம்பிய தடுப்பு ஊசி போடப்பட்ட ஜேர்மன் செப்பேட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: 077 9462841

### அறைகள் வாடகைக்கு உண்டு

தளபாடங்களுடன் படிக்கும், வேலை பார்க்கும் பெண்களுக்கு அறைகள் வாடகைக்கு உண்டு.

077 5218995, 077 6946274

### வேலையாள் தேவை

சிறிய குடும்பத்திற்கு சமையல் வேலைக்கு ஒரு பெண் தேவை.

தொடர்பு: 076 7011645

### தேவை

கெயார் சர்வதேச நிறுவனத்தினால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் பிற்பகுதியில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ள 3 நாள் கலாசார கலைவிழாவில் இலங்கையின் பாரம்பரிய உணவு வகைகளைத் தயாரித்து விற்பனை செய்யக்கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் பின்வரும் கையடக்கத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 305 3004, 077 168 9360

### விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், குளிர்சாதன பெட்டி, Washing Machine என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 0577063

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், பருத்தித்துறைவீதி, கல்வியங்காடு 3ஆம் கட்டையில் இலங்கை நாயகி அம்மன் கோயில் முன்பாக மூன்று பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 515 1349/ 077 697 4653/ 077 172 7083

### Vacancies

முன்னணி ஆங்கில கல்வி நிறுவனமான BCE இன் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு கிளைகளுக்கு கீழ்வரும் வேலை வாய்ப்புக்கான விண்ணப்பங்களை வரவேற்கின்றோம்.

1. English Teachers
Basic Salary 25000/= to 47500/=

2. Computer Teachers
Basic Salary 12000/= to 25000/=

3. Receptionist
Basic Salary 12000/= - 20000/=

ஒரு வாரத்தினுள் email மூலம் விண்ணப்பிக்கவும்

BRITISH COLLEGE
email : britishcollegekandy @gmail
23, Kachcherinallur Rd, Jaffna.
Tel : 077-6844016

### நீதிமானுடைய பெயர் புகழ் பெற்று விளங்கும்

## ஞாபகார்த்த ஆராதனை

கடந்த 08.08.2016 திங்கட்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்த **எங்கள் குடும்பத்தலைவர் அமரர்**



**பற்குணராஜா பாலமுருகன் (குகன்)**

**(அல்பா மிக்சர் உரிமையாளர்)**

அவர்களின் நினைவாக நாளை (12.09.2016) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நண்பகல் 12 மணியளவில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்பாய் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட அனைவரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அல்பா மிக்சர்
பக்கஸ் லேன், உடுவில் வீதி, மானிப்பாய்.

குடும்பத்தினர்.

### British College of Education

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவில் முழு / பகுதி நேரப் பாடநெறிகள்

**Diploma in Spoken English**

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மாணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேர வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறும்

Duration : Spoken - Full time - 3 Months
Diploma - Full time - 4 Months

சகல கணனிப் பாடநெறிகளுக்கும் 75% கட்டணக் கழிவு

| | | |
|---|---|---|
| MS- Office | ~~12000/=~~ | 3000/= |
| Dip. in Computer Studies | ~~16000/=~~ | 4000/= |
| Graphic Designing | ~~30000/=~~ | 7500/= |
| Computer Hardware | ~~12000/=~~ | 3000/= |
| Computerized Accounting | ~~26000/=~~ | 6500/= |
| Web Designing | ~~28000/=~~ | 7000/= |

Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

IELTS Life Skills A1 B1 தகைமைப் பரீட்சைகள்

மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

German & Swiss மொழிப் பாடநெறி — Deutsch

Netherlands மொழிப் பாடநெறி — Dutch

French மொழிப் பாடநெறி — FRENCH

BRITISH COUNCIL IELTS Registration Centre

இக் கல்வி நிறுவனமானது 3ம் நிலைக்கல்வி, தொழில் கல்வி, தொழிற்பயிற்சி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது

BRITISH COLLEGE of Education

Hot line 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street Mullaithivu Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124
565, Peradeniya Rd, Kandy. Tel : 081-4949590
13, 1st Chapel Rd, Colombo-06. Tel : 011-2362775

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா தம்பிப்பிள்ளை

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், இல. 111, ஸ்கந்தபுரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா தம்பிப்பிள்ளை நேற்று (10.09. 2016) சனிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - கண்மணி தம்பதியரின் அன்பு மக ளும், காலஞ்சென்றவர்களான பசுபதி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமக ளும், ஓய்வுபெற்ற நீர்ப்பாசன அலுவலரான பசுபதி தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும், உதயமூர்த்தியின் (கிளி/ஸ்கந்தபுரம், இல. 2, அ.த.க. பாடசாலை) அன்புத் தாயாரும், புஸ்பலதாவின் (கிளி/ கோணாவில் ம.வி) அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான நாகேந் திரம், தியாகராஜா, அருமைத்துரை, கோமளம், கருணாநிதி, குழந்தை, புனிதவதி (நெடுந்தீவு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, பாலுப்பிள்ளை, சேதுபதி, பராசக்தி, அபிராமி (உருத்திரபுரம்), மலர் (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக ஸ்கந்தபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொ.பே: 077 3036801**

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி யோகேஸ்வரி இரத்தினசிங்கம்

**( வாசித்தா யோகேஸ்வரி)**



**பிறப்பு 26.08.1947** **இறப்பு 09.09.2016**

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி இரத்தினசிங்கம் (09.09.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினசிங்கத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தெய்வானை தம்பதியரின் அருமை மகளும் காலஞ் சென்ற வர்களான செல்லத்துரை - நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தர்ம ரோஜினி (லண்டன்), சுரேஸ்குமார், சுபாஸ்குமார், ஜீவாஜினி, ஹரிகரன் ஆகியோரின அன்புத்தாயும் ஜெயராசா (லண்டன்) கஜநந்தினி மாங்கையற் கரசி, கோகுலன், டான்சி (கொலண்ட்) ஆகியோரின் அன்புமாமியும் கபிலாஸ் (லண்டன்), திரிபர்ணா, கிசானியா, தேனுசன், கரீஸ், சரிதா, யசிந்தா, தேனுசா, தர்சன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், தம்பிராசா மற்றும் துரைராசா, காலஞ்சென்ற குலசேகரம்பிள்ளை மற்றும் செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் துரைசிங்கம் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் பாலாமணி, சொர்ணாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2016) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைநகர் தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துரைராஜா வீதி, (முருகமூர்த்தி கோயிலடி)
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்.
076 7354401

## புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப். 11

இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. (த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி குமுதினி விநாயகமூர்த்தி



யாழ். கரும்பனையைப் பிறப்பிடமாகவும் Canada Toronto வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமுதினி விநாயகமூர்த்தி கடந்த (08.09. 2016) வியாழக்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான நன்னித்தம்பி - சின்னத் தங்கம் ஆகியோரின் அன்பு மருமகளும், விநாயக மூர்த்தியின் அன்பு மனைவியும், தனுஜா, யோகன் ஆகியோரின் பாசமிகு தாயாரும்; சுபோதினி (கொழும்பு), நந் தினி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சிவனேஸ்வரி, செல்வராணி, தேவதாஸ், காலஞ் சென்றவர்களான கிருஸ்ண மூர்த்தி, விக்னேஸ் வரமூர்த்தி, சிவமூர்த்தி மற்றும் கிருபாகரன் (கனடா), கிருபானி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கே.கே.எஸ். வீதி,
பெரியமதவடி,
சுன்னாகம்.**

**தகவல்: குடும்பத்தினர்.
சர்வேஸ்வரன் - (சகோதரர் - ஐயக்கோன்)
077 812 4280**

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா பொன்னுத்துரை



தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா பொன்னுத்துரை நேற்று (10.09.2016) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான பொன்னையா-தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் நாகம்மா (ராசாத்தி-தாவடி), பரமசிவம்(இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நாகேந்திரம், அஜந்தா(இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியும் சின்னக்கிளி, சுப்பிரமணியம் (சுவிஸ்), சண்முகநாதன்(சுவிஸ்), பத்மாவதி ஆகியோரின் சகோதரியும் தெய்வேந்திரம், சுதாமதி, பிறேமமலர், சந்திரகுமார் ஆகியோரின் மைத்துனியும் லிசாலினி, கெஜதாஸ், துர்க்காலினி, கோவைக்குமரன் (யாழ் போதனா வைத்திய சாலை), கௌஷிக், ஆயினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் லதுஷா (இத்தாலி), ஆராதனா ஆகியோரின் பூட்டியும் ஷமிரா, ஹரிஸன் ஆகியோரின் அத்தையும் வானுஜா.பிரணவன் ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.09.2016 புதன் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாவடி.**

**தகவல்: குடும்பத்தினர்
(நாகேந்திரம் ராசாத்தி).**

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி தங்கராசா



காரைநகர் பலகாட்டைப் பிறப்பிடமாகவும் இல.15, பொன்னப்பா லேன், ஒட்டுமடம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி தங்கராசா நேற்று (10.09.2016) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற குழந்தைவேலு தங்கராசாவின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற கனகசபை-பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குழந்தைவேலு-நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சசிகலா, சதீஸ்குமார் (அப்பன்), குகநேசன் (கண்ணன்), சூரியகலா ஆகியோரின் பாசமிகு தாயாரும் மோகனதாசன் (மோகன் பல்பொருள் வாணிபம் யாழ்ப்பாணம்), யசோதா, சுகந்தன் ஆகியோரின் அன்பு மாமியும் கோபிநாத், சுகாசினி, கோபி ராம், சகானா, ரம்மியா,சந்தோஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கமலாதேவி, பத்மநாதன், நவரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி தவம் யோகலிங்கம்

**பிறப்பு 1946 . 03 . 10**



**இறப்பு 2016 . 09 . 09**

அந்தணத்திடலைப் பிறப்பிடமாகவும், கரணவாய் அண்ணாசிலையடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவம் யோக லிங்கம் கடந்த (09.09.2016) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - மீனாட்சி தம் பதியரின் ஏகபுத்திரியும் இராசு - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற யோகலிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான பிரபாகரன், கருணாகரன் மற்றும் பிரபாகரன் (லண்டன்), வத்சலா (சுவிஸ்), பிரமிலா (யா/குடத்தனை கரையூர், அ.மி.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் வாசுகி (லண்டன்), விவேகானந்தராசா (சுவிஸ்), யோகேந்திரன் (பிரதம கணக்காளர் மாநகர சபை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புமாமியும் சௌமியா (லண்டன்), வினுஜா (சுவிஸ்), வருண் (சுவிஸ்), அகல்யன் (யா/ஹாட்லிக்கல்லூரி), ஆர்நிகன் (யா/ஹாட்லிக் கல் லூரி), அபிவர்சி (யா/நெல்லியடி மெ.மி. த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் இராசையா காலஞ்சென்ற பாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும் இராசமலர் கமலா தேவி சுலக்சனா காலஞ்சென்ற தியாகராசா மற்றும் யோகராணி, லலிதாராணி, லோகராணி, ஜெயராணி, காலஞ்சென்ற துரைராசா, லோகேஸ்வரி ஆகி யோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2016) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அண்ணாசிலையடி,
கரணவாய் கரவெட்டி**

**தகவல் :
குடும்பத்தினர்**

## கொழும்பில்...

தமது இனத்தைச் சேர்ந்த மக்கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டதைக் கண்டு எந்த இள இரத்தமும் பார்த்துக் கொண்டு இருக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கு இடையிலான 28 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது அடிப்படை எதிர்பார்ப்பையும் நாம் இங்கு நினைவுறுத்திக்கொள்ளவேண்டும். வடக்கு–கிழக்கு மாகாண மக்களின் தனித்துவத்தைப் பேணும் வகையில் அரசமைப்பு அமைய வேண்டும். நாட்டின் சகல மக்களும், இளைஞர் யுவதிகளும் சம உரிமைகளையும் அந்தஸ்தையும் பெற்றுக் கொண்டால் தான் 'நாம் இந்த நாட்டின் பெருமைமிக்க குடிமக்களே' என்ற எண்ணத்துடன் சகல நடவடிக்கைகளிலும் பங்கேற்கலாம். இங்குள்ள அனைவரும் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் சிறைப்பட்டுள்ளவர்களே என்ற கருத்து மேலோங்கி நிற்கின்றது.

வடக்கு – கிழக்குப் பகுதிகள் 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழர்களின் வாழ்விட பூமியாக இருந்தது. ஒரு காலத்தில் தமிழர்கள் பலர் பௌத்தர்களாக இங்கு வாழ்ந்து பின்னர் இந்து மதத்துக்கு மாறியுள்ளார்கள். அண்மைக் காலங்களில் ஏற்பட்ட அரசியல் குழப்ப நிலைகளினால் மக்களின் வாழும் உரித்து கேள்விக் குறியாக மாற்றப்பட்டது. இங்குள்ள இளைஞர், யுவதிகள் கொழும்பில் இருந்த அரசியல் தலைமைகளினதும் அவர்களின் இங்கிருந்த முகவர்களினதும் அடக்கு முறைகளுக்கு எதிராக வெகுண்டெழுந்தனர். அதன் விளைவாகவே கொடிய நீண்டகால போர் வலுப்பெற்று ஆயிரக் கணக்கான உயிர்களைக்காவு கொண்டது.

தம் கண்களுக்கு முன்பே தம் இனவயோதிபத் தாய், தந்தையர், சகோதர சகோதரிகள் இன்னல்படுத்தப்பட்டதை அவர்கள் பல கலவரங்களின்போதும் கண்ணுற்றார்கள். பல்கலைக்கழகங்களில் தரப்படுத்தலைக் கொண்டுவந்து எமது மாணவர்கள் பெருவாரியாகப் பல்கலைக்கழகங்களினுள் நுழைவதைத் தடைப்படுத்தினார்கள். இவற்றைக் கண்டு மௌனிகளாக நிற்க இயலாத சந்தர்ப்பத்திலேயே போர் புரியவேண்டும் என்ற ஒரு கடுமையான முடிவுக்கு அவர்கள் தள்ளப்பட்டார்கள். அவை இப்போது முடிந்துபோன கதைகள் என இன்றைய அரசியல் தலைமைகள் கூறுகின்றன.

ஒவ்வொரு வீட்டிலும் ஒன்று இரண்டு என தமது பிள்ளைகளைப் பறிகொடுத்த தாய் தந்தையர் இதனை எவ்வாறு முடிந்து போன கதைகள் என ஏற்றுக் கொள்வது? அவர்களின் உயிர்களின் இழப்புக்கான பரிகாரங்கள் என்ன? தம் அன்புக்குரியோரைப் பறிகொடுத்தவர்கள் நீதியையும் நியாயத்தையும் வேண்டி நிற்பதில் பிழை என்ன? தமிழ் மக்களுக்கு ஏதாவது விமோசனம் இதுவரையில் கிடைக்கப் பெற்றதா? இவை அனைத்தும் கேள்விக் குறிகளாகவே இருக்கின்றன.

உங்கள் உறவுகளாக நண்பர்களாக உடன் பிறவா சகோதரர்களாக – சகோதரிகளாக விளங்கக்கூடிய இப்பகுதி இளைஞர் யுவதிகளைக் கௌரவத்துடனும் சுதந்திரமாகவும் தங்கள் பிரதேசங்களில் சுயமாக வாழ அனுமதிப்பதில் தென் பகுதி மக்களுக்கு என்ன பிரச்சினைகள் இருக்கின்றன?

அடக்கி ஆள வேண்டும் என்ற மனோநிலையில் தென்பகுதித் தலைவர்கள் இன்னமும் இருப்பதன் சூட்சுமம் என்ன? பல வெளிநாட்டுத் தலைவர்களும் அவர்களின் பிரதிநிதிகளும் இங்கு வருகின்றார்கள். எமது பிரச்சினைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்கின்றார்கள். நாம் பிரிவினை பற்றிப் பேசவில்லை. ஐக்கிய இலங்கைக்குள் எமது பகுதியில் சுயமாக–சுதந்திரமாகச் சொந்த அடையாளங்களுடன் வாழ்வதற்கு ஏற்ற ஒரு நிலையை ஏற்படுத்தித் தருமாறு தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

பன்னாட்டு அரங்கத்தில் நடைபெற்றுள்ள வேறு நாடுகள் சம்பந்தமான நிகழ்வுகளை மனதில் வைத்து எமது கோரிக்கை நியாயமானதே என்று கூறுகின்றார்கள். நாம் சொந்த மண்ணில் சுயமாகச் சுய கௌரவத்துடன் வாழ்வதற்கு அனுமதியுங்கள் எனக் கேட்டால் தென் பகுதித் தலைவர்கள் நாம் பிரிவினையை கோருகின்றோம் என்ற தவறான தகவல்களைத் பரப்புகின்றார்கள். எம்மைத் தீவிரப் போக்குடையவர்களெனக் கூறுகின்றார்கள். அப்பாவிச் சிங்கள மக்களும் ஆத்திரப்படுகின்றார்கள். எனவே தான் எமது நிலைப்பாடு என்ன என்பதைப் பற்றி தென் பகுதிச் சிங்கள இளைஞர், யுவதிகளிடம் நேரடியாக எமது கருத்தைத் தெரிவிக்க விரும்புகின்றோம்.

தென்னாபிரிக்காவில் அரசமைப்பு பற்றிய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டே நல்லிணக்கத்தில் இறங்கினார்கள். இங்கு இராணுவத்தை எம் மத்தியில் வைத்துக் கொண்டு எமது அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்காமல் நல்லிணக்கத்தில் இறங்கப் பார்க்கின்றார்கள். ஒரு நாட்டின் முதுகெலும்பாக விளங்கக் கூடிய இளைஞர் யுவதிகளும் மாணவர்களும் மனது வைத்தால் ஆகாதது ஒன்றும் இல்லை – என்றார். (த-4-21)

## கோத்தா...

நிலத்தில் கடற்படைத் தளம் அமைக்கப் பட்டுள்ளது.

காணி உரிமையாளர்களும், இந்தப் பகுதியில் பரம்பரையாக மீன்பிடித் தொழில் மூலம் வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்திய குடும்பங்களும் வாழ வழியின்றித் தவிக்கும் நிலையில் குறித்த முகாமின் 7 ஆவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டங்கள் அங்கு நடைபெற்று வருகின்றன.

இதன் ஆரம்ப நிகழ்வுக்காக நேற்றுச் சுமார் 400 வரையான கடற்படையினர் முகாமுக்கு வருகை தந்தனர். அத்துடன் வீதியோரத்தில் மரம் நடும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இதன் இறுதி நிகழ்வை எதிர்வரும் 14 ஆம் திகதி குறித்த முகாமில் பெரும் எடுப்பில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (த-10)

## பிரதிப் பொலிஸ்மா...

பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். பிராந்தியக் கிளைக்கு மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைவாக, யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம், மனித உரிமைகள் ஆணைக்குழு விளக்கம் கோரிக் கடிதம் அனுப்பியுள்ளது.

சுன்னாகம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பொலிஸார் ஒருவர் பாடசாலை மாணவிகளைத் தனது கையடக்கத் தொலைபேசியில் ஒளிப்படம் எடுத்திருந்தார். இது தொடர்பான செய்தி ஊடகங்களிலும் வெளியாகியிருந்தது.

ஆசிரியர்களால் மாணவிகள் தாக்கப்பட்டதாகவும், பொலிஸார் முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றது. இதனடிப் படையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு அவரது அலுவலக கையடக்கத் தொலைபேசிக்கு மூன்று தடவைகள் அறிவுறுத்தல் வழங்கியும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இரவு நேரம் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவிகளின் பாதுகாப்புத் தொடர்பிலும் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பிரசன்னம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இருப்பினும் இதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த விடயங்கள் தொடர்பில் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அறிக்கையை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (த-5)

## வடக்கு...

இவற்றுக்கு அங்கீகரிக் கப்பட்ட ஆளணியாக 2 ஆயிரம் காணப்படும் நிலையில் இதுவரை ஆயிரத்து 524 பேரே கடமையாற்றுகின்றனர். எஞ்சிய 476 வெற்றிடங்களும் நிரப்பப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன.

இதில் கொழும்பு அரசின் கீழான வெற்றிடங்களும் உள்ளடங்கியுள்ளன. கொழும்பு அரசுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதனாலேயே, அந்த வெற்றிடங்களைக் கொழும்பு அரசு நிரப்பவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

மாகாண அரசு நிரப்பக் கூடிய வெற்றிடங்களில், விவசாயப் போதனாசிரியர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் மற்றும் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர் போன்றவற்றுக்கு வடக்கில் தகுதியான விண்ணப்பதாரிகள் இல்லை என்று அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவற்றுக்குத் தகுதியாக விவசாய டிப்ளோமா கோரப்படுகின்றது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடத்திய நேர்முகத் தேர்வில் 3 பேர் மாத்திரமே உரிய தகுதியைக் கொண்டிருந்தாகவும் அமைச்சு வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

சிற்றூழியர் நியமனம் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (த-5)

## கண்டறிவுகளை...

உள்ளடக்கப்பட வில்லை.

ஆயினும், இலங்கையின் மனித உரிமைகள் நிலமைகள் தொடர் பான கண்டறிவுகளை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் – ஹுசேன் தனது ஆரம்ப நாள் உரையில் தெரிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டுக் கேள்விகளை எழுப்ப வாய்ப்புக்கள் இருக்கின்றன.

இந்தக் கேள்விகளுக்கு கூட்டத் தொடரில் கலந்துகொள்ளவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க பதிலளிப்பார் எனத் தெரியவருகின்றது.

இந்தக் கூட்டத்தொடரில் இலங்கையில் இருந்து உயர்மட்டக் குழுவினர் எவரும் பங்கேற்கவில்லை எனக் கூறப்படுகின்றது. (த-4)

## வடக்கு அரசுக்கு...

மாதம் வரை 22 சத வீதமே செலவு செய்யப்பட்டுள்ளது.

2017 ஆம் ஆண்டுக்குரிய கொழும்பு அரசின் பாதீடு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. அதற்கு முன்னதாக, ஒவ்வொரு மாகாணங்களுக்குமான ஒதுக்கீடுகள் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் கடந்த வார இறுதியில் நிதி அமைச்சு அதிகாரிகளுடன், மாகாணங்களின் தலைமைச் செயலாளர்கள் அழைக்கப்பட்டுக் கலந்துரையாடல் நடத்தப்பட்டது. இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண அரசுக்கு அடுத்த ஆண்டுக்கு 32 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பீட்டு அறிக்கை கொழும்பு அரசிடம் கையளிக்கப்பட்டது. இதில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி மற்றும் குறித்தொதுக்கப்பட்ட நன்கொடைக்காக 10 ஆயிரத்து 200 மில்லியனும், மீண்டெழும் செலவுக்காக 22 ஆயிரம் மில்லியனும் கோரப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டுக்கு 8 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி கொழும்பு அரசிடம் கோரப்பட்டிருந்தது. கொழும்பு அரசினால் 4 ஆயிரத்து 695 மில்லியன் ரூபா நிதியே ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த நிதியில், ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரை ஆயிரத்து நூறு மில்லியன் ரூபாவே செலவு செய்யப்பட்டுள்ளது. நல்லாட்சி அரசினால் பூச்சிய வரவு – செலவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிலையில், ஒதுக்கிய நிதி ஆண்டு இறுதிக்குள் செலவு செய்து முடிக்கப்படாவிட்டால் எஞ்சிய நிதி திறைசேரிக்குத் திரும்பும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## சிறுபான்மை...

பல் தொகுதி ஆசன ஒதுக்கீடு தொடர்பில் தமிழ், முஸ்லிம் கட்சிகள் முன்வைத்த கோரிக்கைகளுக்கும் அரசுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் தோன்றியுள்ளன என்று நம்பத்தகுந்த அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அண்மையில் கலந்துரையாடியுள்ளன.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் தேசிய சகவாழ்வு மற்றும் அரச கரும மொழி அமைச்சர் மனோ கணேசனிடம் வினவிய போது,

தேர்தல் முறைமை மறுசீரமைப்புத் தொடர் பில் நடவடிக்கை எடுத்துவரப்படும் சூழலில் சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் இந்தக் கலந் துரையாடல் இடம்பெற்றது. வடக்கு–கிழக் கில் தமிழ், மக்கள் வாழும் பிரதேசங்களைத் தவிர ஏனைய இடங்களில் ஆசன ஒதுக்கீடு தொடர்பில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

இது தொடர்பில் அரசிடம் எமது யோசனைகளை முன்வைத்துள்ளோம். கூடிய விரைவில் இது தொடர்பில் சாதகமான சமிக்ஞைகள் கிடைக்கும். இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்குக் கூட்டணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய நான்கு கட்சிகளும் உறுதியாக இருக்கும் என்பதுடன், உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வடக்கு–கிழக்குக்கு வெளியில் தமிழ் மக்கள் வாழும் அனைத்துப் பிரதேசங்களிலும் தமிழ் முற்போக்குக் கூட்டணி போட்டியிடும்– என்றார். (த-4)

## புனே...

திகதி லொஹே கான் வானூர்தித் தளத்தில் கைது செய்யப்பட்ட சுதன் சுப்பையா, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளை வைத்திருந்தவர் என்று விசாரணைகளில் தெரிய வந்ததாக இந்திய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

தமிழ்நாடு, ஆலங்கொட்டல் என்ற இடத்தைச் சேர்ந்த மாரிமுத்து ராஜு என்பவரின் கடவுச்சீட்டில் தனது ஒளிப்படத்தை ஒட்டி, இவர் ஜேர்மனி செல்ல முயன்றபோது, உள்ளகப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.

வானூர்தித் தளப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் யாழ்ப்பாணம், திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்தவர் என்பதை இலங்கைத் தூதரகம் உறுதிப்படுத்தியதுடன் அவருக்கு தற்காலிகக் கடவுச்சீட்டையும் பெற்றுக் கொடுத்தது.

இதையடுத்து வியாழக்கிழமை இரவு பொலிஸாரால் மும்பை சகர் வானூர்தித் தளக் குடிவரவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட சுதன் சுப்பையா, நேற்றைய தினம் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். (த-5)


## தனியார்...

தூர்வாரப்பட்டது. இதன்போது சந்தேகத்துக்கிடமான பொருள் காணப்பட்டது. அது தொடர்பில் காணி உரிமையாளர் பொலிஸாருக்கு நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார்.

நேற்று அங்கு சென்ற சிறப்பு அதிரடிப் படையினர் ஆயுதங்களை மீட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-4)

### மரண அறிவித்தல்

### கனகசபை அமரசிங்கம்



வசாவிளானைப் பிறப்பிடமாகவும் பன்னாலை தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட **கனகசபை அமரசிங்கம்** நேற்று (10.09.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - ராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தபுஸ்பதேவியின் அன்புக் கணவரும், சர்மிளா, பிரதீபன், சயந்தன், சுயனன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருச்செல்வம், யாழினி, ராஜீ ஆகியோரின் அன்பு மாமனும், லக்சாயினி, காநிலா, புரந்தரி ஆகியோரின் அன்புப் பேரனும், கேதர்ரசிங்கம், காலஞ்சென்ற ஏலேலசிங்கம், சிவராசசிங்கம், குகதாசசிங்கம், இந்துமதி, காராளசிங்கம், தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 074 3064

தகவல்:
குடும்பத்தினர்.

## சென்.பற்றிக்ஸ் சென்.ஹென்றிஸ் சென்.லூட்சியா வெளியேற்றம்

யாழ்ப்பாணம், செப். 11

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கால்பந்தாட்டத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் வடமாகாணத்தின் சார்பாகக் களமிறங்கிய இளவாலை சென். ஹென்றிஸ் மன்னார் சென். லூட்சியா, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிகள் காலிறுதியுடன் தோல்வியடைந்து வெளியேறின.

ரஜரட்டைப் பல்கலைக் கழக மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணிக்கும் காலி அலோசியஸ் கல்லூரிக்கும் இடையிலான காலிறுதியாட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பதிவுசெய்யவில்லை. சமநிலைத் தவிர்ப்பில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் அலோசியஸ் கல்லூரி வெற்றிபெற ஹென்றிஸின் ஆட்டம் காலிறுதியுடன் முடிவுகண்டது.

பிறிதொரு காலிறுதியில் மன்னார் சென். லூட்சியா மகா வித்தியாலய அணியை எதிர்த்து ஹமிற் அலி உசைன் கல்லூரி அணி மோதியது. சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை நீடித்துச் சென்ற இந்த ஆட்டத்தில் முடிவில் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றது ஹமிற் அலி உசைன் கல்லூரி அணி.

வடக்கின் பலம்வாய்ந்த அணிகளில் ஒன்றான சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி, தனது காலிறுதியில் கொழும்பு சாகிராக் கல்லூரி அணியை எதிர்த்து மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் கோல்கள் எவையும் பதிவாகாத நிலையில் இந்த ஆட்டமும் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை நீடித்துச் சென்றது. முடிவில் 4:2 என்ற கோல் கணக்கில் சாகிராக் கல்லூரி வெற்றிபெற பற்றிக்ஸ் வெளியேறியது. (ம-23)



## மெதடிஸ்த பெண்கள் தேசியத்தில் சம்பியன்

கரணவாய், செப். 11

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டக் கபடித் தொடரில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி சம்பியனானது. மாத்தறை நகரசபை மைதானத்தில் நேற்று இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும் மட்டக்களப்பு பளுத்துகம மகா வித்தியாலயமும் மோதின. ஆரம்பம் முதல் சீரான ஆதிக்கம் செலுத்தி வந்த பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி முடிவில் 36:22 என்ற புள்ளிகளின்அடிப்படையில்வெற்றிபெற்று தேசியமட்டத்தில் மகுடம் சூடியது. (ம-422-108)

## மீண்டும் வந்தார் உமர் அக்மல்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான ரி-20 தொடருக்கான பாகிஸ்தான் அணியில் உமர் அக்மல் இடம் பிடித்துள்ளார்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இந்த மாதத்தின் இறுதியில் நடைபெறவுள்ளது இந்தத் தொடருக்கான பாகிஸ்தான் அணியே அறிவிக்கப்பட்டது.

அண்மையில் பாகிஸ்தான் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டது. இந்தத் தொடருக்கான பயிற்சி முகாமில் உமர் அக்மல் கலந்துகொள்ளவில்லை. இதனால் அவர் பாகிஸ்தான் அணியிலிருந்து தூக்கி எறியப்பட்டார். பின்னர் அவர் தனது செயலுக்காக வருத்தம் தெரிவித்ததையடுத்து மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டார்.

பாகிஸ்தான் அணி விவரம் - சர்பராஸ் அகமட் (தலைவர்), சர்ஜீல்கான், காலித் லத்தீப், பாபர் அசாம், உமர் அக்மல், மலிக், மொகமட் ரிஸ்வான், இமாத் வாசிம், ஹசன் அலி, ரியாஸ், ஆமீர், சொகைல் தன்வீர், மொகமட் நவாஸ், ருமான் ரயிஸ், சாத் நசீம். (ம)

## முல்லைத்தீவு இளைஞர் கழகம் முதல் சுற்றுடன் வெளியேறியது

யாழ்ப்பாணம், செப். 11

இளைஞர் கழகங்களுக்கு இடையிலான தேசியமட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் முல்லைத்தீவு இளைஞர் கழகத்தின் இருபால் அணிகளும் முதல் சுற்றுடன் வெளியேறின. யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நேற்று இந்த ஆட்டங்கள் இடம்பெற்றன. ஆண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக அணியை எதிர்த்து காலி மாவட்ட இளைஞர் கழக அணி மோதியது. இதில் காலி மாவட்ட அணி 22:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வென்றது. பெண்களுக்கான ஆட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் கழக அணியை எதிர்த்து இரத்தினபுரி மாவட்ட இளைஞர் கழக அணி மோதியது. இதில் இரத்தினபுரி மாவட்ட இளைஞர் கழக அணி 21:8 என்றபுள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றதையடுத்து முல்லை மாவட்ட இளைஞர் கழகத்தின் இரு வலைப்பந்தாட்ட அணிகளும் முதல் சுற்றுடன் வெளியேறின. (ம-23)

### வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி வெண்கலத்துக்காக மோதல்

பாடசாலைகளுக்குஇடையிலான தேசிய மட்ட ஹொக்கித் தொடரில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் வெண்கலப் பதக்கத்துக்காக மோதவுள்ளது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி. கொழும்பு செயற்கை புற்தரை ஹொக்கி மைதானத்தில், பாணந்துறை சிறி சுமங்கல பாலிக மகா வித்தியாலயத்துக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலேயே இன்று காலை வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டம் நடைபெறவுள்ளது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தனது அரையிறுதி ஆட்டத்தில் பாலித்த மகா வித்தியாலய அணியிடம் 4:0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்து இறுதியாட்டத்தைத் தவறவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-23)



## மெஸ்ஸியின் விலகலால் ஆர்ஜென்ரீனாவில் சர்ச்சை

உலகக்கிண்ணத் தகுதிச் சுற்றில் வெனிசுலாவுக்கு எதிரான ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரான மெஸ்ஸி விலகியமை தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியது.

ஆர்ஜென்ரீனாவின் பத்திரிகையொன்று குறித்த சர்ச்சையை ஏற்படுத்தியது. மெஸ்ஸி தனது விலகலுக்கு காயமே காரணம் எனக் குறிப்பிட்டார். ஆனால் அவரது காயம் ஆட்டமொன்றிலிருந்து விலகும் அளவுக்கு இல்லை எனக் குறிப்பிட்ட குறித்த பத்திரிகை தனது வாதத்துக்கு ஆதாரமாக, மெஸ்ஸி அண்மையின் எனது காயம் மிகவும் சிறியதே எனவே ரசிகர்களே அச்சம் வேண்டாம் என்று முகப்புத்தகத்தில் பதிவிட்டமையை குறிப்பிட்டது. (ம)

## வல்வை அணி முன்னேற்றம்

கரணவாய், செப். 11

வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் முன்னேற்றம் கண்டது வல்வை வி.கழகம்.

நெடியகாடு விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்திலேயே இடம்பெற்று வருகின்றன. நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வல்வை அணியும் வரணியுத் அணியும் மோதின. கோல்கள் எவையும் பதிவாகாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 12ஆவது நிமிடத்தில் வல்வை அணியின் முன்கள வீரர் பிரசாந் கோலொன்றைப் பதிவு செய்தார். இந்தக் கோலே ஆட்டத்தின் ஒரே கோலாகவும் அமைந்தது. (ம-108)



## இன்றைய மோதல்கள்

கரணவாய், செப். 11

**நெடியகாடு இளைஞர் வி.கழகத் தொடர்**


பருத்தித்துறைக் கால்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழக ஏ அணியை எதிர்த்து வட்டக்கச்சி இளங்கதிர் விளையாட்டுக் கழகமும் மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் இரண்டாவது ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து முல்லைத்தீவு சுப்பர்ராங் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

**இளைஞர் கழகங்களின் வலைப்பந்தாட்டத் தொடர்**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்படும் இளைஞர் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் ஆட்டங்களில் ஆண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து பதுளை மாவட்ட அணியும், வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து திருகோணமலை மாவட்ட அணியும் மோதவுள்ளன. பெண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணியை எதிர்த்து காலி மாவட்ட அணி மோதவுள்ளது.

**நவசக்தி வி.க. தொடர்**

நவசக்தி வி.கழகம் 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இடையில் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ், வல்வை ஆதிசக்தி அணிகள் இன்று மோதவுள்ளன. நவசக்தியின் மைதானத்தில் பிற்பகல் 7 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும். (ம-108-422-23)



யாழ்.இந்து, றோயல் கல்லூரி அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின் போது...

# தேசியமட்ட கூடைப்பந்தாட்டத்தில் வடக்கின் அணிகள் வெளியேற்றம்

யாழ்ப்பாணம்; செப். 11

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் வடக்கு மாகாணத்திலிருந்து பங்குபற்றிய அத்தனை அணிகளும் வெளியேற்றப்பட்டன.

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டப் போட்டிகளின் இரண்டாம் கட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. கூடைப் பந்தாட்டத் தொடர்கள் யாழ். மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன. பழக்கப்பட்ட திடல்கள், சாதகமான சூழ்நிலை என்பவற்றால் வடமாகாண அணிகள் ஆதிக்கம் செலுத்தும் என்ற எதிர்பார்ப்பு நிலவிய போதிலும் அனைத்து அணிகளும் தொடரிலிருந்து பாதியில் வெளியேறியமை அதிருப்தியை ஏற்படுத்தியது.

ஆண்கள் பிரிவில் மல்லாவி மத்திய கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி என்பன தேசியத்துக்கு தகுதி பெற்றன. நேற்றுநடைபெற்ற ஆட்டமொன்றில் மல்லாவி மத்திய கல்லூரி அணி, அம்பலாங்கொடை குலரத்தினா கல்லூரி அணியிடம் 54:56 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தோல்வியடைந்து வெளியேறியது. இந்த ஆட்டம் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வென்னப்புவ ஜோசவாஸ் கல்லூரி அணி மோதியது. இதில் 68:76 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தோல்வியடைந்து வெளியேறியது யாழ். மத்திய கல்லூரி அணி.

யாழ். இந்துக் கல்லூரி அணி காலிறுதியாட்டம் வரை முன்னேறியது. காலிறுதியில் கொழும்பு றோயல் கல்லூரி அணியை எதிர்த்து பலப்பரீட்சை நடத்தியது. 53:90 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ். இந்து நடையைக் கட்டியது.

பெண்கள் பிரிவில் இராமநாதன் மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மட அணி, உடுவில் மகளிர் கல்லூரி என்பன தேசியத்துக்குத் தகுதி பெற்றன. இராமநாதன் மகளிர் கல்லூரி நேற்றைய தனது ஆட்டத்தில் தர்மசோக கல்லூரி அணியை எதிர்த்து மோதியது. இதில் 35:41என்ற புள்ளிகளின் அடிப்படையில் இராமநாதன் மகளிரின் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

திருக்குடும்ப கன்னியர்மட அணி லைசியம் சர்வதேச பாடசாலை அணியிடம் 48:68 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சுருண்டது. இந்த ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

உடுவில் மகளிர் கல்லூரிக்குத் தேசியமட்ட கூடைப்பந்தாட்டத்தில் வாய்ப்புக் கிடைத்தும் அந்தப் பாடசாலையின் அணி போட்டிக்காக சமுகம் தரவில்லை.

(ம-23)

தேசியமட்ட கபடி

## அரையிறுதிக்கு தகுதி பெற்றது சாவகச்சேரி இந்துக் கல்லூரி

கரணவாய், செப். 11

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கபடித் தொடரில் 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.


மாத்தறை நகரசபை மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுநடைபெற்ற காலிறுதி ஆட்டமொன்றில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணியும் மகாவலிபுர தேசிய பாடசாலையும் பலப்பரீட்சை நடத்தின. முதல் பாதியின் நிறைவில் 21:16 என்று முன்னிலை வகித்தது சாவகச்சேரி இந்து. இரண்டாவது பாதியில் சாவகச்சேரி இந்துவின் ஆதிக்கம் சிறிது மேலோங்கியது. முடிவில் அந்த அணி 49:28 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-108)

## துடுப்பாட்டத் தொடர்

கரணவாய், செப். 11

கொம்பந்தறை இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக துடுப்பாட்டத்தொடர் ஒன்றை இன்றும் நாளையும் முன்னெடுக்கவுள்ளது.

குறித்த கழகத்தின் மைதானத்திலேயே தொடர் நடைபெறும். அணிக்கு ஐந்து பந்துப்பரிமாற்றங்கள் உடையதாக நடைபெறவுள்ள இந்தத் தொடரில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் காலை 8.30 மணிக்கு மைதானத்துக்கு வருகைதருவதன் மூலம் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ம-108)



## இந்திய டெஸ்ட் அணி நாளை அறிவிக்கப்படும்

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணி, நாளை அறிவிக்கப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்தது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்யவுள்ள நியூசிலாந்து அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள் ஆட்டங்கள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது. முதலாவது டெஸ்ட் ஆட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆட்டம் இந்திய அணியின் 500 ஆவது டெஸ்ட் ஆட்டமாகும். குறித்த தொடருக்கான நியூசிலாந்து அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில் இந்திய அணி நாளை அறிவிக்கப்படும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்தது. (ம)



## மகிபன் ஹற்றிக் படைக்க வென்றது யாழ். பல்கலை

யாழ்ப்பாணம், செப். 11

பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் பேராதனை பல்கலைக்கழகத்தை பந்தாடியது யாழ். பல்கலைக்கழகம்.

வயம்ப பல்கலைக்கழக மைதானத்தில் நேற்று இந்த லீக் ஆட்டம் நடைபெற்றது. ஆட்டத்தின் மூன்றாவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தார் யாழ். பல்கலையின் நிதர்சன். 20ஆவது நிமிடத்தில் மகிபன் யாழ். பல்கலையின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவு 2:0 என்று யாழ்ப்பாணம் பல்கலைக்குச் சாதகமாக அமைந்தது.

ஆட்டத்தில் 55 ஆவது, 65 ஆவது நிமிடங்கள் மகிபன் யாழ். பல்கலையின் மூன்றாவது, நான்காவது கோல்களைப் பதிவு செய்ததுடன் ஹற்றிக்கையும் படைத்தார். முடிவில் யாழ். பல்கலைக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் பேராதனையை பந்தாடியது. இன்று காலை 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். பல்கலை, றுகுணு பல்கலைக் கழக அணியுடன் மோதவுள்ளது. (ம-23)

# மீண்டும் வந்தார் ரொனால்டோ ரியல் மட்றிட் அபார ஆட்டம்



லா லிகா தொடரில், ஸ்பெய்னில் நேற்று (இலங்கை நேரப்படி இரவு 9 மணி) நடைபெற்ற ஆட்டத்தில் ரியல் மட்றிட்டிடம் முறையாக வாங்கிக் கட்டியது அத்லெட்டிக்கோ.

கடந்த சில மாதங்களாக காயத்தால் அவதிப்பட்டுவந்த நட்சத்திர வீரரான ரொனால்டோ நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் இந்த ஆட்டத்தில் களமிறங்கினார். பென்சிமாவும் ரியல் மட்றிட் அணியுடன் இணைந்ததால் அந்த அணிக்கு இரட்டிப்புப் பலம் கிடைத்ததாக கருதப்பட்டது.

ஆட்டம் ஆரம்பித்து ஆறாவது நிமிடத்திலேயே ரொனால்டோ முதல் கோலைப் பதிவு செய்தார். லுயிஸ் 40 ஆவது நிமிடத்திலும் ரியல் மட்றிட் அணியின் தலைவர் ராமோஸ் 45 ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்து கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 3:0 என்று முன்னிலையிலிருந்தது ரியல் மட்றிட். ஆட்டத்தின் 52 ஆவது நிமிடத்தில் பெப்பியும், 62 ஆவது நிமிடத்தில் லூக்காவும் கோல்களை அடுக்க ரியல் மட்றிட் 5:0 என்று முன்னிலையிலிருந்தது. ரைசியா, கிரேசியா அல்லெட்டிக்கோவின் சார்பாக 64, 78 ஆவது நிமிடங்களில் கோல்களைப் பதிவுசெய்த போதிலும் மட்ரிட்டின் வெற்றியைத் தகர்த்துவிட முடியவில்லை. முடிவில் 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்றிட். மட்ரிட்டின் சார்பாக பதிவான ஐந்து கோல்களில் இரு கோல்களைப் பதிவுசெய்ய ரொனால்டோ உதவியமை குறிப்பிடத்தக்கது. (ம)

PERSONAL CLASS
இரசாயனவியல்
சி.அங்கதன் B.Sc(Chem.Spl)
37 வருட வினாத்தாள்கள்
கற்பிக்கப்படும்.
தொடர்பு 0776189610

வேலை வாய்ப்பு
யாழ். நகரில் வெற்றிகரமாக இயங்கிக்கொண்டிருக்கும் Golden Group Advertising Marketting நிறுவனத்தில் 4 வகையான பதவி வெற்றிடங்கள்
* வெளிக்கள உத்தியோகத்தர்கள் * விநியோகஸ்தர்கள்
* நிதி வசூலிப்பாளர் * நிர்வாக அலுவலர் (பெண்)
(அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை)
குறிப்பு: வயதெல்லை 18-38 தகைமை: G.C.E (O/L) குறைந்தபட்சம்
அடிப்படைச் சம்பளம் 18500+கொமிசன் + உணவுப்படி வழங்கப்படும்.
முன்பதிவு செய்யும் 10 பேருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 998 7699 077 621 9536

IDM
Creating Opprtunities Nurturing Achievers Since 1974
யாழ் மண்ணில் தற்பொழுது
மானிப்பாயில் மட்டுமே...
www.idm.lk IDM Jaffna Campus
IDM Computer Studies
IDM Jaffna Campus - Manipay
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் (12,14,17 September)
2016 October மாதம் 15ம் திகதிக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு 20% கட்டண சலுகையுடன் T Shirt அல்லது 8GB Pendrive ஒன்று இலவசமாக வழங்கப்படும்.(*)
20% Offer
IDM Diploma in Computing
IDM Diploma in Business Mgt.
IDM Diploma in Hardware & Net.
IDM Diploma in English
முதல் முறையாக இலங்கை அரசாலும் UK NCC இனாலும் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ்கள்
021 225 6200 | 077 290 8584
இல 248, யாழ் வீதி, மானிப்பாய்

கணித வகுப்புக்கள்
A/L Com.Maths
O/L Maths
Personal or Group Class
077 993 2843, 077 459 8339

கொள்வனவு செய்யப்படும்
சொட்டு நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்தப்படும் 16mm pipe கொள்வனவு செய்யப்படும்.
077 990 6466, 077 285 0408

புதிய பிரிவுகள்
ஆரம்பம் 24.09.2016
வங்கியில் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு
வங்கியியல் கற்கை நெறிகள்
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification:- G.C.E.O/L 6 Passes with 5 credits.
இலங்கைப் பட்டயக்கணக்காளர் ஆவதற்கு
Chartered Accountants of Sri Lanka
Executive Level I & II (Tamil & English Medium)
Business Level ( English Medium)
Qualification:- G.C.E.A/L 3 Passes
தொழிற்றுறைக் கணக்காளர் ஆவதற்கு
aat {Sri Lanka}
[AA1, AA2, AA3]
Medium - Tamil & English
Qualification:- G.C.E.O/L 6 Passes
CERTIFICATE COURSE IN ENGLISH
வெளிவாரிப் பட்டதாரி ஆவதற்கு
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
BBA, BCom, BA
Note: 2015ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் ஒரே தடவையில் A/L 3 Pass சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
பதிவுகளை 30.09.2016இற்கு முன்னர் மேற்கொள்ளவும்.
Further Details:
JAFFNA COLLEGE
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
021 222 3382/ 021 222 9149
FB:- Jcud Jaffna.

# காணவில்லை



இந்த நிழற்படத்தில் காணப்படும் கடற்கரை வீதி, கொட்டடி, பருத்தித்துறையை வசிப்பிடமாகக் கொண்ட

**திருமதி லக்சுமி நாகராஜன்**

என்பவர் 08.09.2016 வியாழக்கிழமை காலை முதல் காணவில்லை. இறுதியாகக் கறுப்பு பாவாடை, றோஸ் கறுப்பு கலந்த மேல் சட்டையுடன் காணப்பட்டார்.

இவர் பற்றிய தகவல் அறிந்தால் கீழ் கண்ட தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

**076 9260301**
**077 4921096**



## கனவு நிறைவேறியது: கெர்பர் பெருமிதம்

பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் முதலிடம் பிடிக்க வேண்டும் என்ற தனது கனவு நிறைவேறியது என கெர்பர் தெரிவித்தார்.

நடைபெற்று வரும் அமெரிக்க ரென்னிஸ் தொடரிலிருந்து செரீனா வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து கெர்பர் முதலிடம் பிடிப்பது உறுதியானது. இன்று வெளியாகும் புதிய தரப்படுத்தலில் அவர் முதலிடத்துக்கு முன்னேறும் அதே நேரம் செரீனா பின்தள்ளப்படுவார். இந்த நிலையிலேயே கெர்பர் இவ்வாறு தெரிவித்தார்.

பன்னாட்டு அந்தஸ்துப் பெற்ற கிண்ணமொன்றைக் கைப்பற்ற வேண்டும் என்பது ரென்னிஸை தேர்ந்தெடுத்தபோது எனது பெரிய கனவாக இருந்தது. இந்த வருடத்தின் ஆஸ்திரேலியத் தொடரைக் கைப்பற்றியதன் பின்னர் அது சாத்தியமானது. ஆஸ்திரேலிக் கிண்ணத்தை வென்றதன் பின்னர் பன்னாட்டு தரப்படுத்தலில் முதலிடத்துக்கு முன்னேற வேண்டும் என்று எண்ணினேன். தற்போது அது சாத்தியமாகியுள்ளது. தொடர்ந்தும் தரப்படுத்தலில் முதலிடத்தைத் தக்கவைக்க முனைப்புக் காட்டுவேன் என கெர்பர் மேலும் தெரிவித்தார். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.